சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும்

[இந்தியாவின் சுதந்திரப் போராட்ட காலத்திலும் அதற்குப் பின்னும் நிகழ்த்திய சொற்பொழிவுகள்]

கோவை. அ. அய்யாமுத்து

விற்பனை உரிமை :

வானதி பதிப்பகம்

தி.நகர் · சென்னை-17

முதற்பதிப்பு : 1975.

விலை ரூ. 8-00

வெளியிட்டோர் :

கோவை. அ. அய்யாமுத்து

சிங்காரம்பாளையம், கிணத்துக்கடவு

கோவை மாவட்டம்

அச்சிட்டோர் :

மூவேந்தர் அச்சகம்

சென்னை-14.

முன்னுரை

பிரிட்டிசார் இந்தியாவை அடிமைப்படுத்தி ஆண்டிருந்த காலத்தில், அவர்களை இந்நாட்டை விட்டுக் கப்பலேற்றித் துரத்த மகாத்மா காந்தியடிகளின் தலைமையின் கீழ் ஒத்துழை யாமையெனும் சாத்வீக அறப்போர் 1919ல் தொடங்கி நடை பெற்ற காலத்தில், நான் அந்த அறப்போரில் பங்கு கொண்டு பல்லாயிரக்கணக்கான பொதுக்கூட்டங்களிலும், மகாநாடு களில் தலைமை வகித்தும் பேசினேன். அவை யாவும் காற்றில் கலந்து போயின.

ஏதோ எழுத்துவடிவில் என் இல்லத்தில் ஒளிந்து கொண் டிருந்த பத்தோ பனிரண்டோ சொற்பொழிவுகளைத் தேடி யெடுத்தேன். அவை எதிர்காலச் சந்ததியார்கட்கு இன் சுவையூட்டும் என்ற எண்ணத்துடன், இதோ இப்புத்தக வடிவில் தமிழகமெங்கும் உலாவப் புறப்பட்டுள்ளது.

தஞ்சை, 801, வெங்கடேசப்பெருமாள் கோயில் தெருவில் வசித்திருந்த பண்டித மு. வேங்கடசாமி நாட்டார் எனும் தமிழ்ப்புலவர் இப்பிரசங்கத்தைப் படித்து, உள மகமிழந்து எனக்கு 2-9-1940 எழுதிய கடிதமொன்றும் என் வசமிருந்தது. அக்கடிதத்தில் அவர் எழுதியுள்ளதை அப் படியே இங்கு தருகிறேன்.

திருவாளர். அய்யாமுத்து அவர்கள்,
திருப்பூர்.

அன்புள்ள ஐயா,

தாங்கள் அன்புடன் விடுத்த அரசியல் மகா நாட்டுச் சொற்பொழிவினைப் படித்துப் பார்த்தேன். அரசியற்றுறையில் அடிவைத்தறியாத நான் அதன் கருத்துக்கள் பற்றி அபிப்பிராயம் கூறுதல் சிறிதும் தகாது.

ஆனால் இளைஞர்களுக்கு மனவெழுச்சியை உண் டாக்க வல்ல சிறந்த சொற்பொழிவாக அஃது இருக் கிறது என்பதும், அதன் நடை யாவரும் அறிந்து கொள்ளக்கூடிய தெளிவும், அதனோடு கம்பீரமும் உடையதாய் இருக்கிறது என்பதும் நான் மகிழ்ச்சி யுடன் தெரிவிக்கக் கூடியனவாகும்.

தங்கள் நல்லெண்ணமும், நன்முயற்சியும், நாட் டிற்கு நலம் பயப்பனவாகுக.

அன்புள்ள—ந. மு. வேங்கடசாமி.

நமக்குச் சுதந்திரம் எப்படி வந்தது என்ற புதிருக்கு இந் நூல் ஒரு திறவுகோலாயிருக்குமென்று நம்புகிறேன்.

—கோவை அ. அய்யாமுத்து.

பொருளடக்கம்

திருநெல்வேலி ஜில்லா

முதலாவது

விவசாயிகள்—தொழிலாளர்கள்

மகாநாடு

19-12-'31

முன்னுரை

அன்பர்களே!

நீர்வளம், நிலவளம் மற்றெல்லா இயற்கை வளமிகுந்த பாரதத் திருநாட்டின் தென் தேயமான திருநெல்வேலிப் பிராந்தியத்தில் வதியும் விவசாயிகள் தொழிலாளர்களுடைய இம் மகாநாட்டைத் திறந்துவைக்குமாறு கொங்குநாட்டின் புஞ்சைப் புளியம்பட்டியில் வதியும் சாமான்ய உழைப்பாளி யான அடியேனுக்குத் தோழர் சுந்தரம் உத்தரவு அனுப்பினர். இத்தகைய பணியாற்ற எனக்குத் திறமையில்லை, கல்வி அனுபவம் யாதுமில்லை. ஆனால் உரிமையுண்டு. ஏன்? யான் ஒரு சாமான்ய விவசாயி. எளிய உழைப்பாளி. எனது வாழ்க்கை நலன் இங்கு கூடியுள்ள உங்கள் நலனுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே இத் திறப்பு விழா நிகழ்த்துவதை ஒரு பெரும் பதவியென்றோ, புகழென்றோ, பெருமையென்றோ

எண்ணிக் கர்வங்கொள்ளாது, மிகச் சாதாரண கடன் எனவே மதித்துத் தோழர் ஆணைக்குக் கீழ்ப்படிந்து ஓடிவந்தேன்.

உலக நிலை

இங்கு கூடியுள்ள நமது நிலைபற்றி ஆராயுமுன் உலக நிலையைச் சற்றே ஆராய்வோம். உலகம் நாகரிகமெய்தியதாகக் கூறப்படுகிறது. அதற்குச் சான்றாக, நீராவிக்கப்பல், புகை வண்டி நிலையம், தந்தி, தபால், மோட்டார் போன்ற எண்ணிறந்த போக்குவரத்துச் சாதனங்கள், பற்பல தொழிலாற்றும் இயந்திரங்கள், நூதனக் கருவிகள் அவற்றைக் கையாளும் முறைகள் முதலியன எடுத்துக்காட்டப்படுகின்றன. சட்டங்கள், திட்டங்கள், ஆட்சி அமைப்புகள், பாராளு மன்றங்கள், கச்சேரிகள் எல்லாம் நவ நாகரிகம் பேசுகின்றன. பத்திரிகைகள், பிரசுரங்கள், பிரசங்க மேடைகள் எல்லாம் நவ நாகரிகத்தைப் பறைசாற்றுகின்றன. உயர்ந்த கலாசாலைகள், புத்தக நிலையங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள், பண்டிதர்கள், விஞ்ஞான சாஸ்திர விற்பனர்கள் எல்லோரும் இயற்கையை வென்றதாக முரசு கொட்டுகிறார்கள். ஆகாயக்கப்பல் கண்டு உலகெலாம் ஒரு நொடிப்பொழுதில் பறந்து செல்லுகிறார்கள். போட்டோ படங்கள், பேசும் கருவிகள், நகரும்படங்கள், கம்பியில்லாத்தந்தி, ஆகாசவசனி எல்லாம் அற்புதமாயிருக்கின்றன. இவையெலாம் உலக நாகரிகத்தின் ஒரு அம்சம்.

தேசங்களிடையே மாச்சரியம், ராணுவ முஸ்தீப்பு, விஷப்புகை, வெடிகுண்டு, போர்முரசு, ஒரு தேசத்தாரைப் பிறதேசத்தார் அடிமைகொண்டு ஆட்சி செய்தல், அடிமைப் பட்ட தேசத்தவரின் சுதந்திர தாகத்தையடக்க அவசரச் சட்டங்கள், ராணுவச் சட்டங்கள், வாக்குரிமை, எழுத்துரிமை முதலிய ஜீவாதார உரிமைகளை மறுத்தல், அடிமை நாட்டவரின் கைத்தொழில், கல்வி, வியாபாரம், இதர அபி விருத்தியாகியவைகளைத் தங்கள் தேசத்தவரின் நலன் கருதித் தடைபுரிதல், அநியாய வரி, அதிக வரி, தண்ட வரி,

கட்டாய வரியாகிய எண்ணிறந்த வரி விதித்துப் பணந் திரட்டிப் பெரிய ராணுவப் படைகளேயும், அதிகார வர்க்கத் தவரையும் கொழுக்கச் செய்தல் முதலிய காரியங்கள் உலக நிலேயின் பிறிதோர் அம்சமாகும்.

ஒருவரோடொருவர் போட்டி போட்டுப் பணம் சம் பாதிப்பதையே லட்சியமாகக்கொண்டு, அதற்கேற்ப பல அட்டூழியங்கள் செய்தும், மோசம் செய்தும், லஞ்சம் பெற்றும், வலியார் எளியாரைத் துன்புறுத்தியும், ஒருவன் சுகம்பெறப் பலபேர் துன்புற்றும் ஒருவன் பணக்காரனுக பல பேர் ஏழை வாழ்வு நடத்தி அவதிப்படுவதும் உலக நிலேயின் மற்ருேர் அம்சமாகும்.

நமது நிலே

இத்தகைய உலகிலே நமது நிலே எவ்வாறிருக்கிறது? மேலேடுத்துக் கூறிய நவநாகரிகச் சின்னங்களால் உழைப் பாளிகளான நாம் நலமடைந்துள்ளோமா? "நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப் புல்லுச்சுமை" என்பதே போல், உலகில் நாகரிகம் எவ்வளவு உயரினும் நாம் மேம் படச் சௌகரியங்களுண்டா? நாகரிக விளேவால் நாம் சாதக மடைவதற்குப் பதிலாக நமது நிலே நாளுக்கு நாள் பாதக மடைந்தே வருகிறது. விவசாயிகளான நாம் இன்று என்ன நிலேமையிலிருக்கிருேம்? கவலேயற்று ஒரு இரவேனும் நிம்மதி யாக உறங்கும் மனுேநிலே நம்மில் உண்டா? நம் நாட்டவர் பெரும்பாலோர் விவசாயிகளும் விவசாயத்தைச் சார்ந்த இதர சில்லரைத் தொழிலாளர்களுமேயாவர். நவ நாகரிகப் பட்டணங்களில் ஆகாயமளாவக் கட்டப்பட்டுள்ள புகைக் கூடுகளேக் கண்டு ஆசையுற்று, நமது கிராமங்களே விட்டுப் பிரிந்து, ஆங்குச் சென்று சிறைக்கூட்டிலடைபட்டது போல் அகப்பட்டுச் சகல உரிமைகளேயும் சுதந்திரத்தையும் மறந்து அல்லலுறும் நமது தோழர்களின் துயரங்களேச் செப்பத் தரமோ? நம்மவர்க்குப் படிப்பில்லே. வறுமைப் பிணி நமது பிள்ளேகளேப் பள்ளிகட்குச் செல்லவொட்டாமல் ஆடுமாடு

களை மேய்க்கவும், பண்ணை வேலைகளைச் செய்யவும் கட்டாயப் படுத்துகிறது. ஒருவன் ஆசைகொண்டு ஆங்கிலக் கல்வி பெறச் சென்றால் "காசைக் கொடுத்துக் கரியைப் பூசிக் கொண்டது" போல, அடிமைப் புத்தியும் அடிமைக் கல்வியும் பெற்று, அவன் சாதாரண காரியாலயச் சிப்பந்தி நிலைமை எய்தி கிராமத்துக்குத் திரும்புகிறான். நமது பண்டைத்தொழில் செய்ய அவனால் கூடுவதில்லை. நமது அறியாமை போக்கி நமது தொழில் முறைகளைச் சீர்ப்படுத்தவும் அவனால் ஆவதில்லை. புதிய தொழிலொன்றும் அவனுக்குப் புரிவதில்லை; கிராம வாழ்வும் அவனுக்குப் பிடிப்பதில்லை. அவன் திரும்பவும் பட்டணங்கட்கே சென்று ஆங்கு மாதம் இருபது அல்லது முப்பது ரூபாய் சம்பளத்திலமர்ந்து, குழந்தை குட்டிகள் பெற்றுக் "காப்பதற்கும் வகையறியீர், கைவிடவுமாட்டீர், ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போல அகப்பட்டீர்" என்று பட்டினத்தடிகள் சொன்னது போன்று அகப்பட்டு விழித்து நாட்டில் ஏழ்மைத்தனத்தைப் பரப்புகிறான்.

நம்மவர் மனத்தில் பண்டைக்காலந்தொட்டுப் பதிந்து கிடக்கும் எண்ணங்களையும் பழக்க வழக்கங்களையும் மாற்றுவது கடினமாயிருக்கிறது. பொல்லாத சாதி நெறி நம்மவரைப் பிரித்துப் பிரித்து வேற்றுமையும், விரோத மனப்பான்மையும், துவேஷமும் புகுத்தி நமது ஆண்மை வளர்ச்சியைக் குறைத்து, நமது ஒற்றுமை யுணர்ச்சியைத் தகர்த்து விட்டது. "எரியும் நெருப்பில் எண்ணெய் விட்டதுபோல்" மதவேற்றுமைகளும், இந்து முஸ்லிம் என்ற உணர்ச்சிப் பிணக்குகளும் நம்மவரைப் பற்றி எரித்து வருகிறது. "குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழிதோண்டிப் புதைத்தது" போல, தொழில் வளர்ச்சியை முன்னிட்டுப் பண்டைய நாளில் வகுக்கப்பட்ட சாதி முறைகள் தீண்டாமை யென்ற பாழுங்குழி யொன்று தோண்டி அதில் பலகோடிப் பாமரரை வீழ்த்தி ஆழ்த்தி விட்டது. வீண் சடங்குகள், உற்சவங்கள், ஊர்வலங்களாகிய வற்றில் நமது செல்வமும், திறனும், நேரமும் பாழாகி அதனால் இருண்டதொரு மனக்கசப்பும் ஏற்பட்டுவருகிறது.

நாம் மீளாக் கடன் என்ற ஆழ்ந்த சாகரத்தில் மூழ்கிக் கிடக்கிறோம். நமது வட்டிக் கடைக்காரர்களினுடைய படுமோசத்தால் நாம் கடனினின்றும் மீள வழியில்லாமல் நெஞ்சங்கலங்கி நிற்கிறோம். பருவ மழை குன்றி நமது பயிரெல்லாம் பாழாகி, நமது கால் நடைகள் சுருங்கி, நமது சப்தநாடிகளும் தளர்ந்து சோர்வுற்றுப் போனபோதிலும் நமது கணக்கர் மணியக்காரர்கள் வரிப்பணத்தின் நிமித்தம் நமது காட்டையும் வீட்டையும் ஏலம் போடுகிறார்கள். பெருமழை பெய்து, விளைவெல்லாம் நாசமாகி, நமது மாடு கன்றுகள் செத்து, நமது குடிசைகள் விழுந்து நாம் பரதவிக்கும் நிலையில் நம்மைக் கவனிப்பார் யாருமில்லை. நல்ல மழை பெய்து, நாடெல்லாம் செழித்து, நாம் உடலோய உழைத்து, உழுது, விதைத்து அறுத்தெடுக்கும் மகசூல்களை, பட்டணங்களிலிருந்து புற்றீசல் போன்று சில்லறை வியாபாரி, பெரிய வியாபாரியாகிய எண்ணிறந்த தரகர்கள் தோன்றிக் கட்டுப்பாடாய் நமது உழைப்பின் பலனைக் குறைந்த விலை கொடுத்துப் பெற்றுக்கொண்டுபோய் அதிக விலைக்கு விற்று அவர்கள் சுகம் பெற விட்டுக் கொண்டிருக்கிறோம். பொருளை உற்பத்தி செய்யும் விவசாயிகளும் அவற்றை வாங்கிப் புசிக்கும் மனிதர்களும் எப்போதும் கஷ்டப்படுகிறார்கள். இடையிலுள்ள தரகர்களே லாபமடைந்து விரைவில் பணக்காரர்களாகி வருகிறார்கள்.

நமது நிலச்சுவான்தார்கள், ஜமீன்தார்கள், மிராசுதார்கள், நம்மவரைப் படுத்தும்பாடு கொஞ்சமல்ல. குத்தகையை வருடந்தோறும் உயர்த்திக்கொண்டே போகிறார்கள். விளைந்தாலும் விளையாவிட்டாலும் அவர்களுக்கு அக்கறையில்லை. நிலையற்ற நாணயமற்ற விகிதத்தில் நமது விளைவுப் பொருட்களின் விலை திடீரெனக் குறைந்துவிடும்போது நமது மனம் குபீரெனப் பற்றி எரிகிறது. குத்தகை செலுத்தவும் பணம் போதாமல் நமது தாவர சங்கம சொத்துக்களை அடைவு வைத்துப் பணம் பெற்று அல்லற்படுகிறோம். "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கோல் தடிதான் மிச்சம்" என்ற

பழமொழி மிகவும் உண்மை வாய்ந்தது. நமது உழைப்பே நமது சொத்தும் ஆஸ்தியுமாகவிருக்கிறது. சரீர பலங்குறைந்தால் நமது உழைப்பு என்ற ஆஸ்தியும் அழிந்து போகிறது.

அந்நிய வாட்சிக் கொடுமைக்கு நாம் மற்றொரு புறம் ஆளாகி நிற்கின்றோம். நாம் செலுத்தும் வரிப்பணத்தில் 100-ல் ஒரு பாகங்கூட நமது நலனுக்காகச் செலவிடப் படுவதில்லை. நாம் உபயோகிக்கும் ஒவ்வொரு பொருளின் மீதும் வரி செலுத்தி வருகிறோம். வருடமொன்றுக்கு 300 கோடி ரூபாய் வரி செலுத்தி வருகிறோம். இவ்வளவு பணமும் போதாமல் நம்மெல்லோரையும் அடைவு வைத்துக் கருக்குழந்தை, சிசுக்குழந்தை, வாலிபர், முதியோராகிய எல்லோர் பேரிலும் தலைக்கு 45 ரூபாய் அந்நிய அரசாங்கத்தார் கடன் வாங்கி இருக்கிறார்கள். அக்கடனுக்காக நாம் வருடமொன்றுக்கு 20 கோடி ரூபாய் வட்டி கொடுத்து வருகிறோம். நம்மை அடக்கியாளும் ராணுவத்துக்கு வருடமொன்றுக்கு 60 கோடி ரூபாய் கொடுத்து வருகிறோம். நம்மை மிரட்டி வாழும் உத்தியோகஸ்தர்களுக்கு வருடம் 70 கோடி ரூபாய் சம்பளம் கொடுத்து வருகிறோம். அவர்கள் வாழும் மாளிகைகளுக்கு வருடம் பதினைந்து கோடி செலவு செய்து வருகிறோம். எவ்வளவு பெரிய கணக்குப் பாருங்கள்! ஆனால் நம்மவர் நாளொன்றுக்கு சராசரி சம்பாத்தியம் 0—1—7. நமது விவசாயமும், கைத்தொழிலும் அபிவிருத்தியடைந்து நமது வருமானம் உயரத்தக்க முயற்சிகளை இவ்வந்நிய ஆட்சி நாளது வரை செய்யவில்லை, செய்யப் போவதுமில்லை.

நமது கண்ணைத் துடைப்பதற்கு ஒரு விவசாயக் கல்லூரி வைத்திருக்கிறார்கள். அங்கு வாசிக்கும் மாணவர்களில் ஒருவனுக்கு இலையைப்பற்றித்தான் தெரியும். மற்றொருவனுக்கு வேரைப்பற்றித்தான் தெரியும். இந்த இலாகாவிற்கு நமது பணம் பெருவாரியாகச் செலவு செய்யப் பட்டு வருகிறது. இவர்கள் செய்யும் அட்டூழியங்கள்

கொஞ்ச நஞ்சமல்ல. நமது காடு, வயல், தோட்டந் தோப்புகளில் கால் நடைகள் புகுந்து அழிக்காமலும் கள்ளர்கள் புகுந்து கொள்ளையடிக்காமலும் பாதுகாக்க இலைக்கள்ளி எனப்படும் சப்பாத்துக்கள்ளி எவ்வளவோ பிரயோஜனமாயிருந்தது. அதன் இனிய கனிகளை பாம்பு, நரி, குரங்கு, காகம், ஆடு, மாடு முதலிய விலங்கினங்களும், ஆடு, மாடு மேய்க்கும் ஏழைப் பையன்களும், வழிப்பிரயாணிகளும், யாதொரு செலவுமின்றித் தின்று பசிதாபத்தைக் குறைத்து வந்தாாகள். 'கொச்சிலின்' என்ற ஒரு பூச்சி வர்க்கத்தை அயல் நாட்டிலிருந்து கப்பலில் கொண்டு வந்து நமது நாட்டில் இப்போது விட்டுவிட்டார்கள். அப்பூச்சிகள் ஆற்று மணல் போன்று கணக்கின்றிப் பெருகி நமது வேலிகளையெல்லாம் நாசஞ்செய்து விட்டு "அடங்காப் பிடாரி" போல் நாம் உண்ணும் உணவு வகைகள் மீதும் குடிக்கும் தண்ணீர் மீதும் பறந்து ஒட்டிக்கொள்ளுகிறது. சுவாசம் உட்கொள்ளும் போது நாசித்துவாரங்கள் வழியே உடம்பினுள்ளும் புகுந்து விடுகிறது. இது விவசாய இலாகாவால் விளைந்த நன்மை!

அடுத்தபடியாக செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் நமது பருத்திச் செடிகளைப் பிடுங்கு, பிடுங்கு என்று சட்டம் போட்டு வற்புறுத்தித் தண்டிக்கிறார்கள். அம் மாதங்களுக்குப் பின்னால் பருத்திச் செடியில் ஏதோ பூச்சி விழுந்து விடுமாம்! அது காட்டைவிட்டு வெளியே செல்லாதாம்! பருத்தி விளைவே கெட்டுப் பாழாகிவிடுமாம்! அது விவசாயிக்கு நஷ்டமாம்! ஆதலால் நமது நலன் கருதியே பருத்திச்செடியைப் பிடுங்கச் சொல்லுகிறார்களாம்! கார்ப் பருத்தியை நாம் இழப்பதால் ஏக்கர் ஒன்றுக்கு சராசரி முப்பது ரூபாய் இழந்துவிடுகிறோம். பருவத்துப் பருத்தியின் ஸ்டேப்பிளைவிடக் கார்ப்பருத்தியின் ஸ்டேப்பிள் சற்று குட்டையாகவும், பலக்குறைவாகவுமிருக்கும். அந்த சரக்கை வாங்கிச் சென்றால் லங்காஷயர் முதலாளிகளுக்கு இலாபம் கட்டுப்படியாவதில்லை. ஆதலால் அவர்கள் நலனை

உத்தேசித்து நம்மைப் பிடுங்குமாறு ஆங்கில சர்க்கார் உத்திரவு போடுகிறார்கள். இதுவே ரகசியம்.

உண்மையில் விவசாயிகள் நலனில் அரசாங்கத்துக்கு அக்கறையிருந்தால் மாசூல் கெட்டபோது வரி வஜா செய்கிறார்களா? கணக்குப் பிள்ளைகளும், மணியக்காரர்களும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களும் பொய்க் கணக்கு எழுதுவதில் மகா தீரர்கள். மழை பெய்யாதபோது பெய்ததாக எழுதுவார்கள், மாசூல் முழு மோசமாய்ப் போனபோது முக்காலே அரைக்கால் வீசம் நன்றாக விளைந்ததாக எழுதி விடுவார்கள். மழை பெய்து ஒரு பள்ளத்தில் நீர் தேங்கி, அதை நாம் ஒரு சிறு வாய்க்கால் பிடித்துப் பாய்ச்சினால் தண்ணீர் வரி போட்டுவிடுவார்கள். அத் தண்ணீர் சர்க்காருக்குச் சொந்தமாம்! தரிசாய்க் கிடக்கும் பூமிகளிலெல்லாம் விளைத்து, அறுத்தெடுத்ததாகக் கூறி கணக்கெழுதி விடுவார்கள். இத்தகைய கணக்குகள்தான் இந் நாட்டிலிருந்து பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்குப் போகின்றன.

நமது கிணறுகளில் தண்ணீர் வற்றிப்போனபோது சர்க்கார் வருவதில்லை. நமது ஏரிகள் மண்மூடிப் போகும்போது சர்க்கார் வருவதில்லை. நமது கடன்காரர்கள் நமது வீட்டையும் காட்டையும் பற்றிக்கொண்டு நம்மை நடுத்தெருவில் விடும்போது சர்க்கார் வருவதில்லை. நமது வேளாண்மையை துஷ்டமிருகங்கள் அழிக்கும்போது சர்க்கார் வருவதில்லை. நமது பட்டிகளில் கள்ளர் புகுந்து கொள்ளையடிக்கும்போது சர்க்கார் வருவதில்லை. (அவர்களினின்று நம்மைக் காப்பாற்றிக்கொள்ள நம்மிடம் ஆயுதங்கள் ஒன்றுமில்லை.) நமது நெல், கோதுமை, மணிலாச் செடி, புகையிலை, கரும்பு, சோளம், கம்பு ஆகிய பயிர்களில் பூச்சிகள் விழுந்து நாசம் செய்யும்போது சர்க்கார் வருவதில்லை. இன்னும் நமக்கு எத்தனையோ இடுக்கண்கள் நேரும்போது சர்ககார் வருவதில்லை. ஆனால் பருத்தியில் பூச்சி விழுமுன்னரே நமது "நலனில்" அக்கறை கொண்டு பிடுங்கு, பிடுங்கு

என்று சர்க்கார் வந்துவிடுகிறார்கள்! அவர்கள் நாட்டிய எல்லைக் கற்கள் (Survey Stones) பார்க்கும்போது பளிச்சென்று தெரிவதற்காக நமது வேலிகளை நாசம் செய்ய சர்க்கார் வருகிறார்கள்!

கூட்டுறவு நாணய பாங்கியென்று ஒன்றை ஏற்படுத்தி நம்மை ஏய்த்து வருகிறார்கள். அதில் வட்டிக் கடைக்காரர்களும், பாங்கர்களும் டைரெக்டர்களாகச் சூழ்ந்து வருகிறார்கள். எல்லா 'லோன்'களையும் தங்களுக்கும், தங்கள் வர்க்கத்தாருக்குமே 'சாங்ஷன்' செய்து, அதைப் பின்னர் 'கந்து' வட்டிக்குக் கொடுத்துப் பணந் திரட்டுகிறார்கள். இம்மாதிரியாகக் கொடுக்கப்பட்ட "சொந்த"க் கடன்களில் 'வாராக் கடன்கள்' ஏதாவதிருந்தால், அக்கடன்காரர்களைப் பாங்கியில் "ஷேர்" எடுக்கச் சொல்லி கடன் அனுமதித்துத் தங்கள் கடனை :வஜா செய்து கொள்கிறார்கள். கிராமாந்தரங்களில் கந்துக்கடைக்காரர்களும், வட்டிக்கடைப் பிரபுக்களுமே செல்வாக்குடையவர்களாகவிருப்பதால் "குமரியைத் தண்டுவன் வீட்டில் அடைவு வைத்தது" போல் கோவாப்பரேடிவ் சொஸைடிப் பிரமுகர்கள், இந்த 'அட்டை'களிடமே சொஸைடிகளை ஒப்படைக்கிறார்கள். சகாயம் வேண்டியவர்களுக்குச் சொஸைடி மூலம் சகாயம் ஏற்படுகிறதா? கூட்டுறவுச் சங்கத்தின் உத்தேசம் நிறைவேற்றப்படுகிறதா என்பதைக் கவனியாமல், எப்படியாவது தங்கள் யூனியனில் அநேக சொஸைடிகள் ஏற்படுத்தி நடத்திவிட்டோம் என்ற "கித்தாப்" சம்பாதிப்பதற்காகக் "கண்ணிருந்தும் குழியில் வீழும் கபோதிகள்" போல் காரியம் நடத்தி வருகிறார்கள்.

அந்நியவாட்சிமுறையால் விவசாயிகளுக்கேற்பட்டுள்ள கஷ்ட நஷ்டங்களையும் குறைகளையும் விஸ்தரிக்க முற்படின் அது இதிகாச புராணங்களைவிட அளவில் அதிகரித்துவிடும். தொட்டதற்கெல்லாம் லஞ்சம், அல்லது வரி, அல்லது ஸ்டாம்பு கட்டணம், அல்லது தண்டம்! லஞ்சம் கொடுக்காமல் எக்காரியமும் செய்ய நம்மால் முடிவதில்லை. நமது

கிராமத்தில் கள்ளு, சாராயக் கடைகள் வேண்டாமென எத்தனை மகஜர்கள் அனுப்பினாலும் சர்க்கார் வற்புறுத்தி அவைகளை வைக்கிறார்கள். கள்ளுக்கு மரம் கொடுப்பதில்லையென்றால் அதிகாரிகள் மிரட்டுகிறார்கள். மதுவிலக்கு நாடகமும் நடத்துகிறார்கள். கதர் கட்டினால் சர்க்காருக்கு விரோதம் என்று சொல்லுகிறார்கள். இதைக் கேட்டு நமது "பெரியார்கள்" லங்காஷயர் மல்துணி கட்டித் தங்கள் ராஜபக்தியை வெளிப்படுத்திக் காட்டுகிறார்கள். நமது குறைகளையும், அரசாங்கத்தார் அட்டூழியங்களையும் எடுத்துப் பகிரங்கமாகக் கூறினால் சட்டங்காட்டிச் சிறையிலடைக்கிறார்கள். நமது சொத்துக்களைப் பறிமுதல் செய்வதாகப் பயமுறுத்துகிறார்கள். நாம் எப்படிப் பிழைப்பது? எவ்விதம் உய்வது? காங்கிரஸ் ஆணையை ஏற்று நடவாது போனால் அதிகாரவர்க்க ஆட்சியெனும் அரக்கன் ஒருநாளும் நம்மை விடப்போவதில்லையென்பது திண்ணம். காந்தியின் ஆணை வாய்ப்பட்ட காங்கிரஸ் மகாசபையொன்றே நம்மை விடுவிக்க வல்ல ஸ்தாபனம். அதை விவசாயிகளாகிய நாம் பற்றிப் பயன்படுத்திக்கொள்ளல் அவசியம்.

நமது முன்னிற்கும் வேலை

தொழிலாளிகளாகிய நாம் பாடுபட்டு உழைத்து வருகிறோம். நமது பாட்டின் முழுப் பலனையும் யாதொரு பாடும் படாத முதலாளிகள், பணக்காரர்கள், ஜமீன்தாரர்களாகியோர் கொள்ளை கொண்டு வருகின்றனர். உலகத்தில் தொழில் புரிவதற்கு உழைப்பு ஒன்று மட்டுமே நம்மிடமிருக்கிறது. கருவிகளும் பணமும் பணக்காரர் வசமிருக்கிறது, எனவே அவர்கள் தரும் சொற்பக் கூலிக்காக நாம் நமது உழைப்பை மாற்றுக் கொடுத்து கஷ்டப்பட்டு வருகிறோம். காட்டை உழுது, விதைத்து, அறுத்தெடுப்போருக்குக் கஞ்சியில்லை. எழில் மிகுந்த ஆடை நெய்வோருக்குக் கந்தையுமில்லை, மாடமாளிகை கூடகோபுரங் கட்டித் தரும் தொழி

லாளருக்கு நிற்கக் குடிசையுமில்லை. இதுதான் நவநாகரிகத்தின் போக்கு! இதன் போக்கைத் தடைப்படுத்துவதே நம் முன்னிற்கும் வேலையாகும்.

உலகத் தொழில்கள் பூராவும் நாம் செய்து வருகிறோம். தச்சு வேலை, கொல்லு வேலை, நெசவு வேலை, உழவு வேலையாகிய ஜன சமூக வாழ்க்கைக்கு அத்யாவசியமான வேலைகள் பலவும் செய்து வருகிறோம். இவ்வாறு அரும்பாடு படும் நம்மவரைப் பிறமக்கள் இழிவாகவே எண்ணுகிறார்கள், நடத்துகிறார்கள். யாதொரு தொழிலும் செய்யாத பணக்காரர்களுக்கே எல்லா கௌரவமும் ஏற்படுகிறது. கனம், மகாகனம், சர், ராய்பகதூர், திவான்பகதூர் பட்டங்களெல்லாம் அவர்கட்கே. அவர்கட்கே மரியாதை. நம்மவர்க்கு ஏகவசனமும் அவமரியாதையுந்தான் எங்கும் கிடைக்கிறது. நாம் சதா உழைக்கிறோம். உழைத்து உலகச் செல்வத்தைப் பெருக்குகிறோம். எனினும் நாம் சுகப்படுவதில்லை. முதலாளியே சுகப்படுகிறான். அவர்கள் சதா போட்டியும் சண்டையுமிட்டு வியாஜ்யம் நடத்திக் கொண்டும், ராஜ்யங்களைப் பிடித்துக் கொண்டுமிருக்கிறார்கள்: தேவையற்ற சாமான்களையும் உபயோகமற்ற சாமான்களையும் அவர்கள் டாம்பீக வாழ்க்கைக்கேற்ப நம்மைச் செய்யச் சொல்லுகிறார்கள். கேவலம் கூலி கருதி இதைச் செய்கிறோம். தூண்டிலில் சிறு மீனைப் போட்டுப் பெருமீனைப் பிடிப்பது போல் கூலி என்னும் இரை போட்டு நமது உழைப்பென்னும் பெருமீனைப் பிடித்து அவர்கள் சுகப்படுகிறார்கள்.

நாம் அடிமைகளாக விருக்கிறோம். முதலாளிகளின் ஏகபோக உரிமையால் நசுக்கப் படுகிறோம். வீணருக் குழைத்துடலம் ஒய்ந்துவிட்டோம். பாரதியார் கூறியபடி வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்யும் காலம் நெருங்கிவிட்டது. பாரதியார் கூறியவாறு புதுவிதி செய்வோம். அதை எந்த நாளும் காப்போம். தனியொருவனுக்குணவில்லையெனில் சகத்தினையழித்திடுவோம்.

புதிய உலகம்

பாரதியார் கனவு கண்டபடி புதுவிதி செய்தால் புதியதொரு உலகம் ஏற்பட்டுவிடும். அப்புதிய உலகத்திலே பூமிக்குச் சொந்தக்காரர்கள் இருக்க மாட்டார்கள். பணக்காரர்கள் என்ற தனிக்கூட்ட மிருக்கமாட்டாது. புரோகிதர்கள். குருக்கள் என்ற ஜாலவித்தைக்காரர்களிருக்க மாட்டார்கள், அவ்வுலகத்திலே புத்திமான்களும், சரீர ஈனமற்றவர்களும் ஒன்று சேர்ந்து உழுபவர் உழுது, விதைப்பவர் விதைத்து, அறுப்பவர் அறுத்து, எடுப்பவர் எடுத்து உழைப்பவர் பலவிதத்தும் உழைத்து, பற்பல கருவிகளையும், இயந்திரங்களையும், இயற்கையின் சக்திகளையும் ஆக்ரமித்து, ஜனசமூக வாழ்க்கைக்கு அத்யாவசியமான சகல பொருட்செல்வங்களையும் சேகரித்து, எல்லோரும் இனிதே வாழ்வார்கள். அவ்வுலகத்திலே புத்தியுள்ளவர்களும், திடகாத்திரமுள்ள ஒவ்வொருவரும் உழைத்தே யாகவேண்டுமெனக் கண்டிப்பான விதி ஏற்படுத்திக்கொள்வார்கள். ஆனால் தேவைக்கதிகமாகவும் உழைக்க மாட்டார்கள். அவர்கள் உழைப்பில் இனிமை, சுதந்திரம், உற்சாகம், சங்கீதம், சந்தோஷம், சித்திரம் எல்லாம் ததும்பிநிற்கும். உழைப்பு அவர்களுக்கு ஒரு விளையாட்டாகவே யிருக்கும். எல்லாப் பிள்ளைகளுக்கும் தகுந்த கல்வியும், தொழிற் பயிற்சியும் அளிக்கவல்ல பாடசாலைகள் ஏற்படுத்திக் கொள்வார்கள். நாடகம், சங்கீதம், சிற்பம், சாஸ்திரம், கவியாகிய சகல கலைவளர்ச்சிக்கு வேண்டிய வசதியளிப்பார்கள். வேலையில்லையே! வீடில்லையே! உடையில்லையே! உணவில்லையே! பணமில்லையே! படிப்பில்லையே! என்ற ஏக்கம் யாருக்கும் ஏறபடாதவண்ணம் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வையும் "இன்ஷூர்" செய்துகொள்வார்கள்.

இப்புதிய உலகத்திலே எல்லோரும் உழைப்பாளிகள். முதலாளிகள் இல்லை. எனவே உழைப்புக்கு வேண்டிய சகல மூலப்பொருட்களையும், இயந்திர கருவிகளையும், இதர செல்வங்களையும் எல்லோருக்கும் பொதுவாகவே வைத்துக்கொள்

வார்கள். இப் பொதுவுடமை உலகிலே எவருக்கும் தனி உரிமையோ, விசேஷ உரிமையோ, தனித்தொகுதியோ, இந்து முஸ்லீம், பிராமணர் அல்லாதார், தீண்டாதார், கிறிஸ்தவர் என்ற வேறுபட்ட உணர்ச்சியோ கண்டிப்பாய் இருக்காது. எந்த வஸ்துவுக்கும் எவனும் எஜமானுக முடியாது. எஜமான் இல்லாத உலகில் அடிமையும் கிடையாது. இப்புதிய உலகிலே எல்லோரும் ஒரே நிறை, ஒரே விலே, ஒரே இனம், ஒரே குலம், ஒரே நாட்டு மக்கள் என்ற வீர உணர்ச்சியுடன் சரி நிகர் சமானமாக வாழ்வார்கள். இதுவே பாரதியின் "புது விதியால்" ஏற்படப்போகும் புதிய உலகம். இதை நமது வாழ்நாளிலே கண்டு களிப்பதற்கு நாமெல்லோரும் ஆசையும், ஆர்வமும் கொண்டு புத்திசிரத்தையுடன் உழைப்போமாக.

முடிவுரை

தோழர்களே!

எனது வழக்கத்துக்கும், இச்சமயத்துக்கும் விரோதமாக நீண்டவுரை நிகழ்த்தியதற்காக என்னே மன்னித்தருள்க. நீண்ட பேச்சுக்களே நாம் அதிகநாள் பேசிக்கொண்டிருக்க முடியாது. மக்கள் வாழ்வைப் புதுப்பிக்கப் பலமான கிளர்ச்சியும், புரட்சியும் தியாகமும் செய்யும் நாள் சமீபித்துவிட்டது. புரட்சி என்ருல் இருக்கும் தீமைகளே அடியில் தள்ளிவிட்டு நன்மையை மேலெழச்செய்தல் என்பதே பொருள். மக்கள் எவ்வளவு கொடுமைப்பட முடியுமோ அவ்வளவும் பட்டாகி விட்டது. இனி யொன்றும் பாக்கியில்லே. கொடுமைகள் எல்லே கண்டு விட்டன. இனி அவற்றை எல்லே விட்டுக் கடத்தவேண்டியதே எதிர்கால வேலே. இவ்வேலேயில் பலத்த கஷ்டங்களும், நஷ்டங்களும், சம்பவிக்கும். நம்மில் அநேகர் நாடு கடத்தப்படலாம். கொடுஞ்சிறையில் வீழ்த்தப்படலாம், துப்பாக்கி முனேயில் தாக்கப்படலாம். நாம் எதற்கும் அஞ்சாது லட்சியமே பெரிதென்றெண்ணி நம்முயிரைத் திரணமாய் மதித்து நம்முயிர் போமளவும் உழைத்தல் கடனு

கும். அக்காலத்தே நமது தோழர்களிற் பலர் நமக்கு எதிரிகளாகத் தோன்றுவர். விபீஷணர்களாக மாறுவர். வாய் வீச்சாளர்கள் பதுங்கியொழிவர். எனினும் நாம் சளைக்காது, மலைக்காது, செய்வது அல்லது சாவது இரண்டில் ஒன்றெனப் போர் புரிய ஆயத்தமாயிருக்க வேண்டும்.

அத்தகைய உயரிய சத்தியப் போருக்கு, சமத்துவப் போருக்கு, சமதர்மப் போருக்கு வேண்டிய புத்தியையும், சக்தியையும் இம்மகாநாடு எனக்கும், இங்கு கூடியுள்ள உங்கட்கும், இமய முதல் குமரி வரை பரந்துள்ள நமது நாட்டவர்க்கும் அளிக்கும் என்ற திடமான நம்பிக்கையின்பேரில் இம்மகாநாட்டை ஆவலுடன் திறந்துவைக்கிறேன்.

இதந்தரு மனையினீங்கி
இடர்மிகு சிறைபட்டாலும்
பதந்திரு விரண்டுமாறிப்
பழிமிகுத் திழிவுற்றாலும்
விதந்தரு கோடியின்னல்
விளைந்தெனை யழித்திட்டாலும்
சுதந்தரத்தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே.

—பாரதி

திருப்பூர்த் தாலூகா அரசியல் மகாநாடு

அநுப்பபட்டி 10-8-35

பெரியோர்களே!

கொடையிலும், குணத்திலும் குறைவிலாத் திறத்திலும், தீந்தமிழ் மொழியிலும், சீர்மிகும் உழவிலும் சிறப்புற்றோங்கும் கொங்கு மண்டலத்தின் நடுநாயகமாய் விளங்கும் அநுப்பபட்டியென்னு மிக்கிராமத்திலே, இப்பரந்த வெளியிலே, குளிர்ச்சி தரும் மரக் கூட்டங்களின் நிழலிலே கூடியுள்ள திருப்பூர்த்தாலூகா அரசியல் மகாநாட்டின் பிரதிநிதிகளாகிய உங்கள் எல்லோரையும், இம்மகாநாட்டைத் திறந்து வைக்கவும், தலைமை வகித்து நடத்தவும், தேசியக் கொடியேற்றவும், முறையே போந்துள்ள தமிழ் நாட்டின் சிறந்த தேசிய வாதிகளான மட்டப்பாரை வெங்கிட்டராமய்யர், இராஜபாளையம் குமாரசாமி ராஜா, கூகலூர் சுப்பண்ண கவுண்டராகியோரையும், மற்றும் நம் ஜில்லாவின் பல பாகங்களினின்றும் இங்கு விஜயம் செய்துள்ள பிரமுகர்களையும், வரவேற்கும் பாக்கியம் எனக்கு வாய்த்தமை குறித்துப் பெரிதும், பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நமது நாடு சுதந்திரமடைய வேண்டும் என்ற பரந்த நோக்கத்துடனே நாமனைவரும் இங்கு கூடியுள்ளோம். பல்லாண்டுகளாக நம்மவர் பலர், சுதந்தர வேட்கைகொண்டு பலவாறான தொண்டுகள் புரிந்து, சுதந்திரத் தேவியின் பாதார விந்தங்களிலே தம் உடல், பொருள், ஆவியனைத்தையும் தத்தம் செய்துள்ளனர். அவ்வாறாக ஈந்தவரிற் சிலர்

நமது தாலூகாவையும் சேர்ந்தவர்கள் என்றெண்ணும் போது நம்முள்ளம் பேருவகை அடைகின்றது. கடந்த சட்ட மறுப்புப் போரிலே, திருப்பூரின் நடுத்தெருவிலே தன்னுயிரைப் பலிகொடுத்த வீரன் குமாரசாமியின் திருவுருவக் காட்சி நம் மனத்தைவிட்டு என்றேனும் அகலுமோ? ஆஹா! 1932ம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் 11-ம் தேதியில், காலை யிளம் வேளையில், குமாரசாமியும், அவரோடு துணை சென்ற தோழர்களும் தேசியக்கொடி தாங்கி வந்தேமாதரமென வீதியெங்கு மொலித்துப் பவனி வருங்கோலத்தைக் கண்ட கிங்கரர் பலர், குமாரசாமியின் குழாத்தினரை வழிமறித்துப் பின்வாங்குமாறு கூறியதும், அவர்கள் அதற்குடன்பட மறுத்ததும், கிங்கரர் தலைவன் கோபமுற்றுக் குமாரசாமி சிரத்தைத் தாக்கியதும், அச்சிரம் சில்லுண்டு ரத்தம் தாரை தாரையாய்ப் பீறியதும், சுந்தரத்தின் முட்டி எலும்புகள் கட்டு விட்டோடியதும் மற்ற தொண்டர்கள் அடியும் உதை யும் ரணமும் தாளாமல் தேவி, தேவியெனக் கதறிக் கதறித் துடித்ததுமான காட்சிதனை எண்ணுந்தோறும் நம் உள்ளத் திலே சுதந்திர வெள்ளம் ஊற்றெடுத்துப் பாய்ந்து வழியா திருக்குமோ?

தேசத் தொண்டர்களின் உடல்கள் நடுத்தெருவிலே சோர்ந்து விழுதலைக் கண்டும் வாளாவிருந்த திருப்பூர் நகர மாந்தரின் நிலைக்கு ஒப்புவமை கூறச் சுப்ரமணிய பாரதி யாரின் "பாஞ்சாலி சபதம்" என்ற காப்பியத்தின் ஒருபாகம் என் ஞாபகத்துக்கு வருகிறது. அதாவது துச்சாதனன் திரௌபதையின் கூந்தலைப் பற்றி இழுத்துத் தெருவழியே செல்லுகையில் அந்நகரமாந்தர்,

"......வழிநெடுக மொய்த்தவராய்
என்ன கொடுமையிது என்று பார்த்திருந்தார்
ஊரவர்தங்கீழ்மை உரைக்குந்தரமாமோ
வீரமிலா நாய்கள் விலங்காமிளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே

பொன்னையவளந்தப் புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினர்
பொட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?

அந்தோ! அவர்தம் நிலைக்கு நாம் இரங்குகின்றோம். எனினும் நம் தாலூகாவிலே சுத்த வீரர்களும், தியாக மங்கையரும் இல்லாமற் போகவில்லை. காந்தி அடிகளின் ஆணையைச் சிரமேற்றாங்கி சாத்வீகப் போராட்டத்திலே ஈடுபட்டோர் எண்ணற்றோர். உயர்திருவாளர்கள் K. S. ராமசாமிக் கவுண்டர், K. V. வெங்கிடாசலம் பிள்ளை, B. S. சுந்தரம், R. M. குமாரசாமி, P. R. துரைசாமி அய்யர், T. P. ராமசாமி, S. முத்துசாமி செட்டியார். S. P. கிருஷ்ண சாமி, N. S. வரதாச்சாரி, K. சந்தானம், M. S. ரங்கசாமி, E. K. முத்துசாமி, K. ராமசாமி, அருணப்ப கவுண்டர், ராஜகோபால், சுப்பரத்தினம், சுவாமிநாதய்யர், சிதம்பர அய்யர், B. S. சக்ரபாணி, கிருஷ்ணமூர்த்தி, தியாகராஜன், விஸ்வநாதன், ரங்கநாதன், R. V. சர்மா. மாரப்பன். P. D. ஆஷர்சேட் நாச்சிமுத்து, நாச்சப்பன், நாராயணசாமி, அப்புக்குட்டி, விஸ்வநாதநாயர், ராமன்நாயர், பொங்காளி முதலி, வெள்ளியங்கிரி, நாராயணசாமி, G.R. சுப்ரமணியம், P. ராமசாமி, கண்ணம்பாளையம், வெங்கிடாசலக் கவுண்டர், K. V. ராமசாமி, அரசூர் சுப்பண்ண கவுண்டர், பீடம்பள்ளி பொன்னுசாமி நாயுடு, நடுப்பாளையம் பெத்தி செட்டியார், ராஜாமணி, தாய்மணிகளாம் பத்மாவதி ஆஷர், லக்ஷ்மி அம்மாள், கோவிந்தம்மாள், பாக்கியலக்ஷ்மி அம்மாள், சுபத்ரா அம்மாள் முதலாயினோர் வீரத்தியாகத்தை விவரிக்க வல்லோர் யாவர்? அன்று வாழ்ந்த கம்பரோ, ஒட்டக் கூத்தரோ, புகழேந்திப் புலவரோ இன்று உயிர் வாழ்ந்திருப் பரேல் தென்குமரி முதல் இமயமலை வரையும், வங்க முதல் காஷ்மீரம்வரையும் வீறுகொண்டெழுந்த ஆண் பெண் தொண்டர்களின் மாட்சியைப் பற்றிப் படலம் படலமாய்க் காப்பியங்கள் தொடுத்திருப்பார்கள். நம்மால் காப்பியம்

தொடுக்க இயலாவிடினும் தேசப்பணியில் ஈடுபட்ட மக்கள் அனைவரையும் சிரம் வணங்கிப் பணிவோமாக.

பணிதலோடு நங்கடன் முடிந்ததோ? பிறந்த வீட்டில் பிறருக்கடிமைப்பட்டுக்கிடத்தல் எங்கேனுமுண்டோ?

நமது பொழியில் அயலான் ஒருவன் ஒரு முழம் வெட்டிச் சேர்த்துக் கொண்டால், அடடா! என்ன பாடுபடுகிறோம்! அவன்மீது எத்தனை ஆத்திரங் கொண்டு போர் தொடுக்கிறோம்! கச்சேரிக்கலைகிறோம்! காசைக் காசெனப் பாராமல் அள்ளித் தொலைக்கிறோம்! ஏன் இவ்வளவும் செய்கிறோம்? அவன் ஆக்ரமித்துக்கொண்ட பொழி நமக்குச் சொந்தம் என்ற எண்ணத்தினால் அல்லவா?

நம்மைப் பெற்றெடுத்த தாய்மேல் பிறன் கரம் பட்டால் நாம் ஒப்பி உயிருடன் வாழ்வோமா?

''பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்த'' தென்றார், தேச பக்தியைத் தெருக்கள்தோறும வாரியிறைத்த சுப்ரமணிய பாரதியார். ஆம்! உண்மை! பெற்ற தாயினும் சிறந்தவள் வேறில்லை. பிறந்த நாட்டினும் பெரியது மற்றெங்குண்டு?

நமது நாடு! எத்துணை சிறந்தது! நமது முன்னோர்கள்! எத்துணை அறிஞர்! நமது நாகரீகம்! எத்துணை பழமையானது! நமது நாட்டுவளம்! எத்துணை மிக்கது!

ஆனால் இன்று?

நம்மை அடக்கி அரசாள ஆறாயிரம் மைலுக்கப்பாலுள்ள மக்கள் கப்பலேறி வந்துள்ளார்கள்! இதனினும் பெரிய அவமானம் நமக்கு வேறு ஏதேனும் உண்டா?

ஏன்?

நமக்கு அறிவில்லையா? ஆண்மை இல்லையா? நம்மை நாமாளத் திறமையில்லையா? அது என்ன பெருங் கஷ்டமா?

நம்மால் ஆகக்கூடாத காரியமா? பிறநாட்டார் தத்தம் நாட்டைத் தாமே அரசாளவில்லையா? நாம் பிறருக்கடிமை பட்டுக் கிடக்கக் காரணம்தான் என்ன?

நமக்கு இது நம்முடைய நாடு என்ற உணர்ச்சி இல்லையென்றுதான் சொல்லவேண்டும். ஆம். அது ஒன்றேதான் காரணம்.

தேசிய உணர்ச்சி-நம் தேசத்தின்மீது நமக்குள்ள பக்தி-காட்டுத் தீபோல் பற்றி எரிய வேண்டும். இல்லையேல் நாம் என்றென்றும் அடிமைகளாகவே வாழவேண்டியதாகிவிடும், நம்முள் இச்சீரிய உணர்ச்சியை உண்டு பண்ணவே இத்தகைய அரசியல் மகாநாடுகள் கிராமங்கள் தோறும் கூட்டப்பட்டு வருகின்றன. ஒற்றுமை உணர்ச்சியும், மனோ உறுதியும், தியாக புத்தியும் நம்முள் ஏற்பட்டுவிட்டால் நம்மை அடக்கி அரசாள இவ்வுலகில் நம்மையன்றிப் பிறர் எவராலும் முடியாதென்பது திண்ணம்.

இந்நாட்டை இந்நாட்டுப் பிரதிநிதிகளின் உதவியாலும், சம்மதத்தாலும் அரசாண்டு வருவதாகக் கூறப்படுகிறது. இத்தகைய கூற்றுக்குக் காரணஸ்தர்களாக நம் நாட்டில் சில சுயநலப் பேர்வழிகளும், வகுப்பு வாதிகளும், மதப்பித்தர்களும், பட்டம் பதவிவேட்டையாளர்களும், சட்டசபைகளிலும், வெளியிலும் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் கொட்டத்தை அடக்கி அரசாங்கத்தின் கூற்றினைப் பொய்யாக்கவே நம் தேசத்தின் மாபெருஞ் சபையான காங்கிரஸ் கடந்த தேர்தலிலே போட்டியிட்டதையும், தேசியத்தை எதிர்த்த எல்லோரையும் விரட்டி அடித்ததையும் நீங்கள் அறிவீர்கள்.

தென்னாட்டைப் பொறுத்தவரை நம்மை எதிர்த்தவர்கள் "ஜஸ்டிஸ்" கட்சியெனக் கூறப்படும் சில சுயநலமிகளே யாவர். இவர்களே இன்று சென்னை அரசாங்கத்தின் மந்திரிகளாய் அமர்ந்திருக்கின்றனர். ஏழைகளின் இரத்தத்தை உறுஞ்சும் ஜமீன்தாரர்கள், வட்டிக் கடைக்காரர்கள்

முதலாளிகள் ஆகியோரே இக்கட்சியின் பிரமுகர்களாக விளங்குகின்றனர். பணமிருந்தும் பலமிருந்தும், அரசாங்கத்தின் ஆதரவும் அதிகாரமும் தங்கள் கைக்குள்ளிருந்தும் இக் கட்சியார் தேசீயத்துக் கெதிராக நின்றதால் கடந்த தேர்தலில் நிர்மூலமாக்கப்பட்டதை நாம் நேரிற்கண்டோம்.

பார்ப்பனரல்லாத மக்களின் மேம்பாட்டிற்காகவே இக்கட்சி தோற்றுவிக்கப்பட்டதாம்! ஆனால் இக்கட்சியில் இன்றுள்ளவரனைத்தும் பார்ப்பன தாஸர்களே அன்றி வேறல்ல. பார்ப்பனர் காற்றுக்கூட தம்மீது படலாகாதெனப் பேசிய இம்மேதாவிகள் இப்போது பார்ப்பனர்களும் தங்கட்சியில் சேரலாமெனத் தீர்மானம் செய்துகொண்டார்கள். கிடைத்தமட்டும் மக்களைச் சுரண்டலாம் என்பதே இக்கட்சியாரின் கொள்கை. இக்கட்சியில் கட்டுப்பாடில்லை. ஒழுங்கான முறைமை ஒன்றேனுமில்லை. உத்தியோக வேட்டைக்கெனவே தோன்றியுள்ள ஒரு கட்சி, தன்னை அரசியல் கட்சியென்றோ, அதில் உள்ளவர்கள் தங்களை அரசியல் திருஷ்டி உள்ளவர்கள் என்றோ சொல்லிக்கொள்ள முடியாது. சுருங்கக் கூறுமிடத்து இக்கட்சியாருக்கு இந்நாடு விடுதலை பெறவேண்டுமென்ற எண்ணமே கிடையாது. மந்திரிப் பதவிகளைப் போட்டியிட்டுப் பங்கிட்டுக்கொண்டிருப்பதே இக்கட்சியாரின் நீங்காக்கொள்கை. உள்ளதோ நான்கு பதவிகள்! இதனை எத்தனை பேர்தான் பங்கிட்டுக் கொள்ளமுடியும்? பனகால் துரத்தப்பட்டார், சுப்பராயன் விறட்டப்பட்டார், முனிசாமி கொல்லப்பட்டார். இன்று பொப்பிலி மன்னனுக்கும் செட்டிநாட்டு இளங்கோவுக்கும் லடாய். ஒருவரை யொருவர் ஏசுகிறார்கள், பேசுகிறார்கள்.

குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவது போலவும் கற்பிலா மூர்க்கரை மூர்க்கர் முகப்பதுபோலவும் "சுயமரியாதைக் கட்சி" யொன்று "ஜஸ்டிஸ்" கட்சிக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுகிறது. சுயமரியாதைக் கட்சி பேசுவது பொதுவுடைமை! சேர்ப்பது தனி உடைமை! காண்பது குச்சு! கட்டுவது மச்சு! எல்லோரும் சமம் என்

பார்கள். பொப்பிலிக்குத் தெண்டனிட்டுத் தொண்டுசெய்வார்கள். சாதிபேதம் ஒழிக என்பார்கள். சாதிக்கொரு நீதியாய் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்பார்கள். மதங்கள் ஒழிக எனத் தீர்மானம் செய்வார்கள். ஆதாயங் கிடைப்பதாயிருந்தால் இஸ்லாம் மதமே சிறந்ததென்பார்கள். கடவுள் எங்கே என்பார்கள், அம்மன் காசைக் கண்டாலுங் கற்பூர தீபங் காட்டித் தொழுவார்கள். விடுதலை என்பார்கள், அடி விழுந்தால் அந்நியராட்சிதான் சிறந்ததென்பார்கள். ஏகாதிபத்தியம் வீழ்க என்பார்கள், போலீஸ் சேவகனைக் கண்டதும் பிரிட்டிஷ் கொடி நீடூழி வாழ்க வென்பார்கள். சமதர்மம் என்பார்கள், ஆனால் பிறர் பணம் தம் கையில் கிடைத்தால் பேய்போல் பற்றிக் கொள்வார்கள். பகுத்தறிவு என்பார்கள், ஆனால் பொய்மையைப் போஜனத்திலுங் கலந்துண்பார்கள். மாதர் 'சுதந்திரம் என்பார்கள், ஆனால் கட்டிய பெண் வீட்டில் கதறக் கதற மற்றொரு பெண்ணை மணமுடித்துக்கொள்வார்கள். சகோதரத்துவம் என்பார்கள், ஆனால் தங்கள் கொள்கையில் மாறுபட்டோரை சண்டாளரென ஏசுவார்கள். புரட்சி புரட்சி என்பார்கள், சிறைவாயிலைக் கண்டதும் வாலைச் சுருட்டி ஓட்டமெடுப்பார்கள். அவர்கள் கண்களுக்கு இந்நாட்டில் நன்மை யாதொன்றுமே புலப்படாது. எல்லாவற்றையும் எல்லோரையும் பழிப்பார்கள். அவர்களால் இந்நாட்டில் உருவகமான ஒரு காரியமும் இதுவரை ஏற்பட்டதுமில்லை; ஏற்படப் போவதுமில்லை.

அரசாங்கத்திலே நான்கு உத்தியோகங்களைப் பெற்று விடுவதால் நாட்டுக்கு எத்தகைய நன்மையும் ஏற்பட்டு விடப் போவதில்லை. "ஜஸ்டிஸ்" கட்சியாரின் 15 வருட ஆதிக்கத்தால் நம் நாட்டில் வரி குறையவில்லை. ஏழ்மை யொழியவில்லை. கல்வி பெருகவில்லை. தொழில்கள் வளரவில்லை. காலணாக் கார்டு முக்காலணா ஆனதும், தீப்பெட்டிக்கு வரி விழுந்ததும், உபாத்தியாயர் சம்பளங் குறைந்ததும், எங்கும் லஞ்சமும் வழிப்பறிக் கொள்ளையுந்தான் நாம்

கண்ட பலன். மந்திரி ராஜனுக்கு மாதம் ஐயாயிரம் சம்பளம் கிடைத்தால் நம் மாதாரிச் சின்னனுக்கு என்ன நன்மை ஏற்பட்டுவிட்டது?

பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வந்தது வரப்பிரசாத மென்றும், அவர்கள் ஆட்சியின் கீழ் இந்தியா எவ்வளவோ முன்னேறியுள்ளதென்றும், அதற்குச் சான்றாகக் கப்பல்கள், ரயில்கள், தந்தித்தபால்கள், ரஸ்தாக்கள், கலாசாலைகள், ஆஸ்பத்திரிகள், நியாயமன்றங்கள் போன்றவைகள் ஜஸ்டிஸ், சுயமரியாதைக் கட்சியினரால் விமர்சனம் செய்யப்படுகிறது. இந்த இருபதாம் நூற்றாண்டிலே அரிசி குத்தும் "அல்லர்" முதல் ஆகாயக் கப்பல் வரை எல்லாத் தேசங்களிலும் செய் யப்படுகின்றன. ஆங்கிலேயருக்குப் பதிலாக ஔரங்கசீப் இன்று இந்தியாவில் அரசு புரிவதாயிருந்தால் நவீன போக்கு வரத்துச் சாதனங்களும், தொழிற்கருவிகளும் மற்றெல்லா நாடுகளையும் விடப் பன்மடங்கு மேன்மையாகவே இந் நாடெங்கும் மலிவுற்றுப் பொலிவுற்றுப் பரவியிருக்கும் என் பதில் யாருக்கும் ஐயப்பாடு வேண்டாம்.

இன்று எத்தனை கப்பல்கள் இந்திய சமுத்திரத்தில் மிதந் தாலும் ஒன்றாவது இந்தியாவில் இந்தியரின் பணத்தாலும் திரேக உழைப்பாலும் கட்டப்பட்டதன்று. எல்லாம் அயல் நாட்டவை. அந்நியர் பலர் இந்தியக் கப்பலோட்டிகளோடு அநியாயப் போட்டியிட்டுத் தொல்லை பல விளைத்து வருகின்றனர்.

புகைவண்டித் தொடர்கள் பல்லாயிரக் கணக்கான மைல்கள் பூட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒரு என்ஜினாவது இந்நாட்டில் இரும்பிருந்தும், நிலக்கரியிருந்தும், ஆளிருந்தும் பணமிருந்தும் செய்யப்படவில்லை. மூன்றாம் வகுப்பு வண்டி களிலே நம் நாட்டு மக்கள் ஆட்டுமந்தை அடைபடுவது போல் வேறென்னட்டிலும் அடைக்கப்படுவதில்லை. தந்திக் கம்பிகள் தரையெங்கும் நாட்டப்பட்டாலும் நமது நாட்டுப் பட்டறைகளில் ஒரு அங்குலம்கூட வார்க்கப்படவில்லை,

எத்தனை ஆஸ்பத்திரிகள் இருந்தாலும், அவற்றுக்கு வேண்டிய மருந்தும் சத்திரமிடுங் கருவிகளும் பிறநாட்டுக் கப்பல்களில்தான் வரவேண்டியிருக்கிறது. நோயாளிகளும், அங்கவீனர்களும் புற்றீசல்போல நாடெங்கும் அலைந்துகொண்டுதானிருக்கின்றனர். கலாசாலைகள் ஒவ்வொன்றும் பிரதி வருஷமும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் யாதொரு ஊக்கமும் ஆக்கமுமின்றித் தெருவெங்கும் அலைந்து திரிய ஒத்தாசை புரிந்து வருகின்றன.

100–க்குத் தொண்ணூறு பேர் கல்வியறிவில்லாமல் தானிருக்கிறோம். காசுள்ளவனே கச்சேரிகளில் வழக்குத் தொடரமுடிகிறது, சுள்ளாணிமுதல் எல்லாச் சாமான்களும் அந்நிய நாடுகளிலிருந்துதான் வந்துகொண்டிருக்கின்றன. கோடிக் கணக்கான மக்கள் கூலியும் வேலையுமின்றி இங்கு தள்ளாடித் தவித்திருந்தும் அவர்களின் திறத்தையும் உழைப்பையும் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் யாதொரு முயற்சியும் நாளாதுவரை செய்யவில்லை. தப்பித்தவறி ஏதேனும் ஒரு தொழில் நம் நாட்டு மக்களால் ஆரம்பிக்கப் பட்டால், அந்நியர் போட்டியின்றி தப்பித்துப் பிழைக்க அரசாங்கத்தின் ஆதரவோ, பாதுகாப்போ ஏற்படுவது முயற்கொம்பாய் இருக்கிறது. அதற்கு மாறாக உற்பத்தி வரிகள் விதிக்கப்படுகின்றன. இதற்கு உதாரணமாகத் தீப்பெட்டி வரி ஒன்றே போதுமானது. அந்நிய நாட்டுச் சாமான்கள் வெகுசரசமாக இருப்பதாகவும் சுதேசி சுயமரியாதை மேதாவிகள் கூச்சலிடுகின்றனர். அயல் நாடுகளில் எளிதான வட்டிக்குப் பணமும், குறைவான விகிதத்தில் ரயிலும், சர்க்கார் நிதியும் நீதியும் சகாயமாயிருக்கின்றன. ஆனல் இந்நாட்டில் புத்தியுள்ளவனிடம் பொருள் இருப்பதில்லை, பொருள் உள்ளவனிடம் புத்தியிருப்பதில்லை. இரண்டுமுள்ளவனுக்கு சர்க்காரின் கடைக்கண் பார்வை வாய்ப்பதில்லை. இப்படி இடைஞ்சல் பலவாறிருக்க எப்படி நம் நாட்டுத் தொழில்கள் பெருகும்? மக்கள் வயாற எப்படி உண்டு வாழ்வார் என்பதை இவ்வந்நிய நாட்டு மோகிகள் எடுத்துரைப்பதில்லை.

அரசாங்கத்தில் காலி விழும் குமஸ்தா வேலையொன்று தான் இந்நாட்டு மக்களுக்குக் கதி மோட்சமளிப்பதாயிருக் கிறது. அதற்குத்தான் பார்ப்பனர்கள் அல்லாதவர்களின் பேரால் ஜஸ்டிஸ் கட்சியார் கும்பிடு போடுகிறார்கள். இங்கி லாந்திலே வேலையில்லாதவர்களுக்கு அரசாங்கத்தார் உப காரச் சம்பளம் கொடுத்து வருகின்றார்கள். இந்தியாவிலே வேலையில்லாத மக்கள் நாள்தோறும் நூற்றுக்கணக்கில் தற் கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். ருஷியாவிலே ஐந்து வருடத் திட்டம் போட்டு நாட்டின் வறுமை நிலையைத் துடைத்து, ஏராளமான கோதுமையை விளைவித்தும், பெரிய தொழிற்சாலைகள் கட்டியும் மக்கள் சுபீட்சைமடைந்து வரு கிறார்கள். இந்தியாவிலே ஜஸ்டிஸ் கட்சியார் பத்து வருடத் திட்டமெனக்கூறி, நாடோறும் பசியாலும், மிதமிஞ்சிய கட னாலும், தாங்கொணாத வரிச்சுமையாலும், சகிக்கொணாத முதலாளிகளின் கொடுமையாலும் திண்டாடித் திரியும் மக்களை வாயளவில் ஏமாற்றி வாழ முற்பட்டிருக்கிறார்கள்.

இக்கட்சியார் தங்கள் மான ஈனத்தை விடுத்து மறுமுறை ஓட்டுக் கேட்க வருவார்களானால் நாம் அவர்கட்குச் சரியான பாடங் கற்பித்து அனுப்பவேண்டும்.

நமது இத்திக்கற்ற நிலையைப் போக்கவும் நாட்டில் திட மான அரசியலை நாட்டவும் காங்கிரஸ் துணிவுகொண்டுள்ளது. காங்கிரஸ் செய்துள்ள தீர்மானங்கள் யாதெனவும் கூறு கிறேன்.

இந்நாடு அந்நியர் ஆதிக்கத்தினின்றும் விடுபட்டுப் பரி பூரண சுயராஜ்யம் பெறவேண்டும். அச் சுயராஜ்யத்தின் கீழ் இந்நாட்டுமக்களுக்கும் பரிபூரண சுதந்திரம் இருக்கவேண்டும். சங்கங்கள்கூட உரிமை, மனோ எழுச்சிகளையும் கருத்துக் களையும் வெளியிட உரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, சாதி மத காரணங்கவனியாது எல்லோருக்கும் சமவுரிமை ஏற்பட வேண்டும். இராணுவம், பொக்கிஷம், அயல்நாட்டு சம்பந் தம் முதலிய சகல அரசியல் விவகாரங்களிலும், வரி விதிப்ப

திலும் குறைப்பதிலும் இந்நாட்டவர்க்குத் தனி உரிமை வாய்க்க வேண்டும். மற்றும் இந்நாட்டின் மீது சுமத்தப் பட்டிருக்கும் அநியாயக் கடன்களை நிராகரிப்பது, இராணு வத்தை இந்திய மயமாக்கி அதன் செலவுகளைக் குறைப்பது, கப்பல்கள், ரயில்கள், பெரிய தோட்டங்கள், பண்ணைகள், மில்லுகள், சுரங்கங்கள், தொழிற்சாலைகள், பாங்குகள் ஆகியவற்றைத் தனிப்பட்ட முதலாளிகளின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவது, எல்லோருக்கும் போதிய கல்வியும் வேலையும், கூலியும் கொடுத்துக் காப்பாற்றுவது, நல்ல வீடுகள் கட்டிக்கொடுப்பது, சுகாதார வசதிகள் ஏற்படுத்துவது, பற்பல தொழில்களையும் விவசாயத்தையும், அரசாங்க ஆதரவில் விருத்தி செய்து, உழுபவர்களுக்கும் உழைப்பவர் களுக்கும் நிலத்தைச் சொந்தமாக்குவது, ஐயாயிரம், பத்தா யிரம் என்றிருக்கும் சம்பளங்களையெல்லாம் மாதம் 500க்கு மேற்போகாமல் குறைத்துவிடுவது, ஆண் பெண் என்ற பேதமின்றி வயதுவந்த எல்லோருக்கும் வாக்குரிமை அளிப்பது, வயதானவர்களுக்கு உணவும், உடையும், குடிலும் கொடுத்து ஆதரிப்பது, மக்கள் அறிவைப் பாழாக்கும் குடியை நிறுத்துவது, அதிக வட்டி, உயர்ந்த குத்தகை, வீட்டு வாடகை முதலியவற்றை ஒழிப்பது, கடல்கடந்த இந்தியரின் கௌரவத்தைக் காப்பாற்றுவது, குற்றம் செய்தவரைக் கொடுந்தண்டனைக்கு ஆளாக்காமல் அவர்கள் சீர்திருத்த முறத்தக்க வகையில் நடத்துவது, பசுக்களை வளர்த்துப் பாலகரைப் போஷிப்பது, சுருங்கக்கூறுமிடத்து ஒருவன் வட்டி மேல் வட்டியும், பெட்டி மேல் பெட்டியும் சேர்த்து வைக் காமலும், மற்றொருவன் நிற்க நிழலும், பருக நீரும், உண்ண உணவும், உடுத்த உடையும் இன்றி அலையாமலும் தடுத்து, நாடெங்கும் வடலூர் இராமலிங்கசுவாமிகள் ஆசித்த சுத்தசி சமரச சன்மார்க்க நெறியைப் பரப்புவதே காங்கிரஸ் மகாசபையின் நிலையான கொள்கையாகும்.

இக்கொள்கைகள் சித்திபெற நாமெல்லோரும் காங் கிரஸில் அங்கத்தினர்களாய்ச் சேர்ந்து ஒன்றுபட்டு நின்று

உழைக்கக் கடமைப்பட்டுள்ளோம். நம் நாடு சுயராஜ்யம் பெற்று நம் மக்கள் க்ஷேமமாய் வாழும் வழியினை இம்மகா நாடு நமக்குக் காட்டுமாக. தங்கள் பல அலுவல்களையும் பொருட்படுத்தாது இங்கு எழுந்தருளியுள்ள ஸ்ரீமான் மட்டப்பாரை வெங்கிட்டராமய்யர் நல்லாசியுடன் இம்மகா நாட்டைத் திறந்து வைக்குமாறும், ஸ்ரீமான் குமாரசாமி ராஜா அவர்கள் இம்மகாநாட்டைத் தலைமை வகித்து நடத்திக் கொடுக்குமாறும் உங்கள் சார்பாக அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

நிற்க எங்கள் வரவேற்பு ஏற்பாடுகளில் உள்ள குற்றங் குறைகளை நீங்கள் எல்லோரும் மன்னிக்குமாறும் வேண்டிக் கொள்கிறேன்.

வந்தேமாதரம்!

அருப்புக்கோட்டை தாலூகா அரசியல் மகாநாடு

சோகில்பட்டி 22—8—1937

தேச பக்தர்களே!

இவ்வழகிய சோகில்பட்டியிலே இன்று கூடியிருக்கும் அருப்புக்கோட்டைத் தாலூகா அரசியல் மகாநாட்டில் என்னைத் தலைமை வகிக்குமாறு ஏவிய உங்கட்கு என் நன்றி செலுத்துகிறேன். உங்களது அன்பின் உதவியால் இம்மகா நாட்டைச் சிறப்புடன் நடத்திவைக்க முயல்வேனாகை.

அரசியல் மகாநாடு ஏன்?

இதை அரசியல் மகாநாடெனக் கூறுவானேன்? இதனால் அரசியல் அல்லாத மக்கள் "இயல்"களில் இம்மகா நாடு தொடர்பற்றதெனக் கருதுதல் தகுமோ? இல்லை என்க. இன்று நம்மையும் நமது பழம் பெரும் நாட்டையும் எவ்வகையிலும் மேம்படவொட்டாது தட்டி வீழ்த்திப் பிடித்திருப்பது இந்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள அரசியல் நெறியும் முறையுமேயாகும். வர்த்தகத்தை நாடிவந்த ஒரு சிறு கூட்டம் அந்நாளில் இந்நாடிருந்த பிளவுபட்ட நிலைமையை தங்கட்குச் சாதகமாக்கிக்கொண்டு சூழ்ச்சியாலும், வஞ்சனையாலும் மிருகத்தனத்தாலும் நம்முடைய நாட்டையும், நமது சொத்து சுகங்களையும், சுதந்தரத்தையும், இதர பிரஜா உரிமைகளையும் தட்டிப் பறித்துத் தங்கட்கே சொந்தமும் சாதகமும் ஆக்கிக் கொண்டு, அச் சொந்தம் அவர்கட்கே, அவர்களின் நாட்டவர்க்கே என்றென்றும் சாஸ்வதமாய்

நீடித்து வேர்பிடித்து நிலையாக நிற்பதற்கு ஏற்ற முறையில் ஒரு அரசியலமைப்பை ஏற்படுத்தி, நமது தலைமீது மீளாக் கடன், வறுமை, பிணி, அறியாமை, அவமானம் ஆகியவற்றுடன் சுமத்தி வைத்திருக்கிறபடியால், நமது பிறப்புரிமையாகிய சுயராஜ்யத்தை, நாம் இழந்த சுதந்தரத்தை மீண்டும் நம்மவர் கைகளிற் பெற்றாலொழிய நமது சமூகம், செல்வம், கல்வி, தொழில் வர்த்தகம், இராணுவம் நாகரீகம், கலை ஞானம் முதலிய இயல்புகள் முன்னேற வழியில்லை என்பதை உணர்ந்தே நாம் இன்று அரசியலை முன்னணியில் நிறுத்திப் போராடி வருகிறோம். அரசியல் விடுதலை பெறாத இதர முன்னேற்றங்கள் சாரமற்ற சக்கைக்கு ஒப்பாகும்.

நமதாட்சி முறை

நமக்குத் தேவையான ஆட்சிமுறையை நாமே அமைத்துக் கொள்ளும் உரிமை பெறுதலே அரசியல் விடுதலையாகும். அவ்வாட்சிமுறை எத்தகையதாய் இருக்கவேண்டும் என்பது பற்றி இன்றே நாம் சச்சரவு செய்து கொண்டிருத்தல் மதியீனமாகும். ஆங்கிலேயர்கள் தங்கள் நாட்டைத் தாங்களே ஆள்வதுபோன்று நமது நாட்டை நாமே ஆளும் சுய ஆட்சியே நாம் வேண்டுகிறோம். அத்தகைய சுதந்திரம் நமக்கு வாய்த்து விட்டால், பின்னர் நமது நாட்டு அமைப்பிற்கும், அனுபவத்துக்கும் மக்களின் மனோபக்குவ நிலைமைக்கும் ஏற்ற முறையில் ஆட்சி அமைத்துக்கொள்ளுதல் எளிது. அது குடியரசா, முடியரசா, ஜனநாயகமா, பொருப்பாட்சியா, பிரநிதித்துவ முறையா, தொழிலாளர் ராஜ்யமா, அபேதவாதமா என்ற சர்ச்சைகளும், அதன் காரணமான பிளவுகளும் நம்மில் இன்று வேண்டுவதில்லை.

நம்மில் வேண்டுவது என்ன?

சுயவாட்சி பெறுவதற்கு நம்மில் இன்று வேண்டுவது தேசபக்தியும் தியாக புத்தியம், தீவிர ஒற்றுமை உணர்ச்சியுமேயாகும். ஒற்றுமை அதாவது லட்சியத்தில் ஒற்றுமை ஏற்

பட்டுவிட்டால் ஒழுங்கும் கட்டுப்பாடும்தானே தோன்றி விடும். நம்மைப் பல மதஸ்தர்களாகவும், மொழியினராக வும், சாதியினராகவும் இதுகாறும் கூறிக்கூறிக் கூறுபடுத்தி ஊறுபட்டது போதும். நமது உயிரினும் அரிய சுதந்திரத் தைப் பறிகொடுத்து இவ்வுண்மை தெரிந்தும் நமக்குப் புத்தி யில்லையா? 1660 வருஷம் அற்ப மூலதனத்தைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனி என்ற ஒரு கைப் பிடி ஆங்கிலேய வர்த்தகச் சிப்பந்திகளால் அல்லவா, அக் காலத்தில் நமது நாட்டில் தலைவிரித்தாடிய மதப் பிணக் காலும் சிற்றரசர்களின் மதியீனத்தாலும், நமது வீரர்கள் மலிந்த நாட்டை வேரற வீழ்த்திப் பிடிக்க ஏதுவாயிற்று. இத னிலும் பெரிய அவமானம் உலகில் வேறு ஏதேனுமுண் டாமோ? சொந்த நாட்டினில் பிறர்க்கடிமை செய்து துஞ்சுதல் சரியாமோ? எச்சில் சோற்றுக்கு ஏங்குவதே போன்று மிகவும் துச்சமான பட்டம் பதவிகட்கு ஆசைப் பட்டு ஆண்மையை பறிகொடுத்து வரும் வகுப்புவாதிகள் மதி தெளிந்து விரைவில் காங்கிரசில் சேர்வார்களாக. கடந்த தேர்தலிலே இவர்கட்கு மிகவும் உயர்ந்த பாடங்களைக் கற்றுக் கொடுத்துவிட்டோம். பணமிருந்தும், பட்டம் பதவிக ளிருந்தும், அரசாங்க ஆதரவு இருந்தும், அடிபிடி ஆட்கள் மலிந்திருந்தும், மக்களின் தேசபக்தி என்ற சக்தியின்முன் அவை என்னுயின? உடலை ஊறு செய்யும் விஷக் கிருமிகள் போன்ற அவர்களது வகுப்புவாதம் கொல்லப்பட்டது. அவர் களது சரீரங்களில் தேசியம் என்ற சிவந்த ரத்தம் பாய்ந்து விட்டது. வகுப்பு வாதம் என்ற சனியன் காங்கிரஸ் தேவதைமுன் தவிடுபொடியாகிவிட்டான். சாகும் பூதம் சப்தமிடுவது போன்றும், அணையும் விளக்கு சற்றே சுடர் விட்டெரிவது போன்றும் சில வகுப்புவாத சுயநலப் பூதங்கள் பினுமி மந்திரிகளாகிச் சின்னுட்கள் அட்டகாசங்கள் செய் தொழிந்தன. ஆழ்ந்த குழிகளில் அவை இன்று புதைபட்டுக் கிடக்கின்றன. அவை காலக்கிரமத்தில் இத்துப் புழுத்துக் காட்டுக்கு நல்ல எருவாகும். அதனின்று தேசீயம் என்ற வித்துக்கள் கிளம்ப உதவும்.

எச்சரிக்கை!

எனினும் செத்ததுபோலக் குற்றுயிராய்க் கிடக்கும் சில பூத அணுக்கள் சாக்கடை ஓரங்களில் உட்கார்ந்து ஒப்பாரி வைத்துத் தொண்டைகிழியக் கத்திக் கொண்டிருக்கின்றன. அவைகள் தேசியத்துக்கு எதிராய் எழுதி எழுதி அவற்றின் பேனுமுனைகள் தேய்ந்துவிட்டன. மசியும் காலியாகிவிட்டது. அவற்றின் வெள்ளை எழுத்தைப் பத்திரிகைகளைப் புத்தியுள்ள வர்கள் வாங்கிப் படித்திருப்பார்களாக. அவற்றின் எழுத்திலும், பேச்சிலும், ஆர்ப்பாட்டத்திலும் அபார நம்பிக்கை கொண்டிருந்த ஜான்புல், இவ்வளவு காலமாக இந்தியாவுக்குத் தானே எஜமான், தர்மகர்த்தா முதலாளி, ஆசார்யன் என்றெல்லாம் ஏதேதோ பிதற்றிக்கொண்டிருந்தவன், இன்று, "ஐயா, உங்களுடன் நானும் ஒரு பங்காளி" என்று பல்லைக்காட்ட ஆரம்பித்துவிட்டான். கோவணாண்டியைக் கூப்பிட்டனுப்பி நேசமொழிகள் பேசுகின்றான். நம்மைச் சுரண்ட வந்த திருடனுக்கும் நமக்கும் பங்காளித்துவம் எப்படி ஏற்படுமோ தெரியவில்லை. இங்கிலாந்திலும் இதர பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலும் நமக்குப் பாதி பங்கு கிடைக்குமா, அல்லது இந்தியாவில் மட்டும் நாம் பாதிப் பங்கு கொடுக்க வேண்டுமா? ஒன்றும் விளங்கவில்லை. அடிமைத்தனத்தில் இருநூறு ஆண்டுகளாய் உழன்றுழன்று உருக்குலைந்திருந்த இந்நாட்டவர், உலகோர் கண்டு வியக்கத் தக்கவாறு மஹாத்மா காந்தியடிகளின் நல்லருளால் ஒன்றென எழுந்து, கட்டுப்பாடாய் நின்றதைக் கண்டல்லவா இன்று ஜான்புல் நம்மை அடிமை நிலையிலிருந்து பங்காளி நிலைமைக்கு உயர்த்திவிட்டான்.

கிராமங்களில் மகாநாடு கூட்டுவதேன்?

கடந்த ஓராண்டாக மகாநாடுகளனைத்தும் கிராமங்களிலே கூட்டப்படுகின்றன. கிராமங்களில் அரசியல் விழிப்பு

ஏற்பட வேண்டுமென்பதே இதன் காரணமாகும். நாம் காணவிரும்பும் சுயராஜ்யக் கட்டிடத்திற்கு கிராமங்களே அஸ்திவாரங்களாகும். நமது தேசத்தவரில் 100-க்கு 90 பேர் கிராமங்களிலே வசித்துவருகிறுர்கள். அவர்களுடைய ஊக்கமும் உத்வேகமுமின்றி சுயராஜ்யப் போரைத் திறம்பட நடத்துதல் அரிதெனக் கருதியே மஹாத்மா தமது முழுக் கவனத்தையும் கிராமங்களிலே செலுத்தலாஞர். தம்மையும் ஒரு கிராமவாசியாகக் கருதியே சில கிராமத்தில் குடிசை அமைத்து வாழ்ந்து வருகிறுர். அண்ணலைக் காணச் செல்பவரனைவரும் இன்று சிவகிராமக் குடிலுக்கே ஏகவேண்டியிருக்கிறது. அங்கே அவர்கள் உண்மை இந்தியாவைக் காணுதல் கூடும். கிராமங்களில் அரசியல் அறிவு பெருகவேண்டியதே போல் கிராமத்தின் செல்வம், தொழில், சுகாதாரம், கல்வி, போக்குவரத்துச் சாதனங்கள் முதலியன பெருகவேண்டுதல் அவஸ்யமாகிறது. கிராமத்தவர்களின் உழைப்பே அவர்களின் செல்வமாகும். அவர்களுக்குத் தக்க உழைப்பும் உழைப்புக்குத்தக்க பலனும் ஏற்படுத்திஞலொழிய அவர்கள் வறுமையைப் போக்க இயலாது. பண்டைய காலங்களில் நமது கிராமங்களில் உள்ள பண்டங்களை விலை கொடுத்து வாங்கிச் செல்லப் பலர் கிராமங்கட்குச் செல்வது வழக்கமாயிருந்தது. ஆஞல் இன்ருே, பல தேச வாசிகளும், பற்பல பிறநாட்டுப் பண்டங்களைக் கொண்டு சென்று கிராமங்கள் தோறும் குவித்து கிராமத்தவர்களின் மூலப் பொருட்களை அள்ளிக்கொண்டுபோகிறுர்கள். இன்று ஒரு குடியானவன் தனது இடுப்புக்கு ஒரு நான்கு முழ வேட்டிவாங்குவதென்ருல் அவன் தனது நான்கு வேளை உணவை அதற்கு விலையாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவன் இவ்வாறு பணம் கொடுத்து வங்கும் ஒவ்வொரு பொருளும் அவனது உழைப்பையும், உணவையும் பறித்துப் பறித்து அவனை வறுமைக் குழியில் ஆழ்த்திய வண்ணமாய் இருக்கிறது. இந்த உண்மையை கிராமத்தவர்கள் நன்கு உணரச் செய்வதற்கு இத்தகைய மகாநாடுகள் உதவுமென்பது மகாத்மாவின் துணிபாம்.

குடிசைத் தொழில்கள்

கிராமவாசிகளின் உழைப்பே அவர்களின் செல்வமெனச் சொன்னோம். எனவே அவர்கள் செல்வம் பெருக அவர்கள் உழைத்தாகவேண்டும். அவ் வுழைப்பு அவர்களின் குடிசைகளிலே, அவர்கட்கு விவசாய வேலைகள் இல்லாத காலங்களிலே, அவரவர்கட்கு வசதியான நேரங்களிலே நடைபெறக்கூடியதாய் இருத்தல் வேண்டும். அவ்வாறு நடைபெறும் தொழிலே குடிசைத் தொழிலாம். அத்தகைய தொழிலால் ஆகும் பண்டங்கள் அந்தந்த இடங்களில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு செய்யப்பட்டதாயும், அவை அவர்கட்கும் இந்நாட்டிலுள்ள மற்றவர் தேவைகட்கும் ஏற்றதாகவும், நமது தேவை போக மிகுதியைப் பிறநாட்டினர்க்கு ஏற்றுமதி செய்யக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

ஏனைய நாடுகள் மிகப் பெரிய இயந்திர சாலைகள் அமைத்து நவீன முறையில் மக்கள் உழைப்பைக் குறைத்துச் சரசமான சாமான்களை உற்பத்தி செய்து உலகனைத்துக்கும் அனுப்பிவருகையில் நாம் மாண்டுபோன குடிசைத் தொழில்களை உயிர்ப்பிக்க எண்ணுவது சிலருக்கு வியப்பூட்டுவதாய் இருக்கிறது. பென்னம் பெரிய இயந்திரத் தொழிலாகட்டும் சின்னஞ்சிறிய குடிசைப் பொருளாகட்டும் எதுவாயினும் அது மக்களின் வறுமைப் பிணியை போக்குவதற்கு உதவக் கூடியதாய் இருக்கவேண்டும். எல்லோரும் உண்டுகளித்து உவந்திருத்தலே தொழிலின் உத்தேசமேயல்லாமல் பலர் ஏங்கவும் சிலர் வீங்கவும் எண்ணித் தொழில் புரிதல் கூடுமோ? மற்றும் தொழில்கள் மக்கள் இருப்பிடத்தை நாடிச்செல்லும் வகை காணுதலே அறிவுடைமையாகும். தொழிலை நாடி மக்கள் தெருக்கள் தெருக்களாய்ப் புழுக்கள் போல அலைந்து திரிதல் மதியற்ற செயலாகும். நூறுமைல் விஸ்தீரணமுள்ள நாற்பது கிராமங்களில் உள்ள நாலாயிரம் பேர்கள் செய்து வாழும் ஒரு குடிசைத் தொழிலை நான்கு மைல் அகலமுள்ள ஒரு பட்டணத்தில் ஒரு இயந்திரச்சாலை

அமைத்து அதில் நாற்பது பேர்களை கொண்டு அத்தொழிலை திறம்பட நடத்திவிடலாம். ஆனால், அந்த 40 கிராமங்களும், 4000 மக்களும் தொழிலின்றிச் சோர்வுற்று உணவும் உணர்வு மற்றுப் போவார்கள் அல்லவா? எனவே மக்களின் தொழிலைக் கெடுத்து உணவைப் பிடுங்கும் இயந்திர அபிவிருத்தி நமது நாட்டுக்கு ஏற்றதல்ல.

பிறநாடுகளில் நடப்பதேபோன்று இங்கும் யாவையும் நடைபெறவேண்டுமெனக் கருதுதல் ஒருவித அடிமைப் புத்தியேயாகும். பிறநாட்டில் உள்ளவர்கள் சொல்லுவது போலெல்லாம் நாமும் இங்கு கூத்தாடிக் கொண்டிருக்க எண்ணுவதும் பிசகாகும். நமது தவப்பயனால் நமது மத்தியில் இன்று வாழும் மஹாத்மாகாந்தி அடிகளே நமக்கு கார்ல் மார்க்சும், லெனினும், ஸ்டாலினுமாவார். அவரே நமது மொழி, நமது நிலை, நமது கலை, நமது அபிலாஷை அறிந்தவர். அவரே நமது சிறுமை பெருமையறிந்து செயலாற்றுந்திறனும், மனத்தூய்மையும் உடையவர். அவர் நம்மை ஆட்டுவிக்கிறபடியே நாம் மனமுவந்து ஆடினால் நமக்கு விமோசனம் எளிதில் ஏற்படும். இன்று மஹாத்மா காந்தியடிகள் குடிசைப் பொருட்களைப்பற்றி சிலாக்கித்துப் பேசி அவற்றிற்குப் புத்துயிர் கொடுக்க எண்ணினால், அவர் உண்மை நிலைமை தெரிந்து பேசுகிறார் என்றே நாம் கருத வேண்டும். பெரிய பெரிய இயந்திரங்களைத் தாங்களே கட்டவும், பூட்டவும், ஓட்டவும், அவற்றின் உற்பத்திப் பொருட்களை கடல்கடந்து நாற்றிசையும் விலை பேசி விற்கவும் ஆற்றல் படைத்த மேனாடுகள் பலவற்றில் இன்றும் குடிசைத் தொழில்கள் பல இன்றியமையாதவைகளாக வளம்பெற்று மிளிர்கின்றன. ஜப்பானிலிருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பெருவாரியான பொருட்கள் குடிசைகளிலே செய்யப்பட்டவையாகும். அங்கே அவற்றிற்கு அரசாங்க ஆதரவும், சரசமான மின்சார சக்தியும், எளிதான வட்டிக்கு முதலும், முன்பணமும், கட்டுப்பாடான வியாபார

முறையும், போக்குவரத்துச் சாதனங்களும் அமைந்திருப்ப தால் அவை இயந்திரப் பொருட்களைவிட எழிலாகவும், எளி தாகவும் உலகிலே ஓங்கி விற்பனையாகின்றன. நமது நாடெங்கும் எதை எடுத்தாலும் காலணு, அரையணு என்று விற்கப்படுகிறதே அந்த ஜம் ஜம் பொருள்களெல்லாம் ஜப்பானியக் குடிசைகளில் செய்யப்பட்டவை என்பதை அறிக.

ஏழுலட்சம் கிராமங்கள் படைத்த நமது தேசத்திலே எண்ணிறந்த குடிசைப் பொருள்கள் செய்யமுடியும். குடிசை வளம்பெருகத் தேசவளம் பெருகும் என்பதைக் கருதியே மகாத்மா காந்தியடிகள் அகில பாரத சர்க்கா சங்கத்தை யும், அகில இந்திய கிராமப் புனருத்தாரண சபையையும் ஏற்படுத்தியிருக்கிறார். நமது நாட்டைப் பிடித்த ஆங்கிலே யர்கள் அவர்கள் நாட்டுப் பொருட்களை இங்கு கொண்டு வந்து விற்று முதலாக்க எண்ணியதாலேயே நமது நாட்டுத் தொழில்களை அழித்து நம்மையும் ஏழ்மை நிலையிலாழ்த்தி விட்டார்கள். அவர்கள் மட்டும் நமது கைத்தொழில்கள் அழியாமல் செழித்தோங்க விட்டிருப்பரேல் மலைபோன்ற இயந்திர அபிவிருத்தியின் மத்தியில் நமது நாடு ஒரு தனிப் பொலிவுடன் உன்னத நாகரீகத்தின் உறைவிடமாய் இன்று இருந்திருக்கும். அந்நிலையில் மகாத்மா இவ்வரசாங்கத்தை சைத்தான் என்றும், இதை விரைவினில் நமது நாடுவிட்டுக் கடத்தியே தீரவேண்டுமென்றும் சொல்லியிருக்கவுமாட்டார். நம்மீது புகுத்தப்பட்டிருக்கும் அந்த 1935-ம் வருடத்து அற்புத சட்டங்கள் இருக்கின்றனவே அவற்றில் அநேக விசேஷப் பொறுப்புகள், பாதுகாப்புகள் என்று வரையப் பட்டுள்ளவைகள் எல்லாம் நம்மைப் பொருளாதாரத்துறை யில் தலைதூக்கவிடாமல் அழுத்திவைக்கச் செய்துள்ள ஏற்பாடுகளாகும். நாம் பலமான கிளர்ச்சி செய்து அச் சட்டங்களை ஒழிக்காவிடில் நாம் என்றென்றும் தரித்திர அடிமைகளாய் வாழவேண்டியதேயாகும். பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தின் பிடிப்பிலிருந்து நாம் விலகாதிருக்கும் வரையில்

நம் நாடு நித்ய தரித்திர திசையில் கிடந்தேதீரும். ஜின்னுக் களுக்கும், பொப்பிலிகளுக்கும், இராமசாமி நாயக்கர்களுக் கும் எத்தனை நீளம் மீசையும் தாடியும் முளைத்திருந்தாலும். அவர்கள் அந்நியர் காலடியில் வீழ்ந்துகிடக்கும் மானங் கெட்ட, சுயமரியாதைகெட்ட அடிமைகளே ஆவார்கள்.

நமது மாகாணத்தில்

ஏராளமான கைத்தொழில் வசதிகள் இருக்கின்றன. இங்கு பல்வேறு ஜாதி மதத்தினர்களால் செய்யப்பட்டுவரும் தொழில்களில் சிலவற்றைக் குறிப்பிடுதல் மிகையாகாது.

கதர்

இது கைராட்டின நூலைக்கொண்டு கைத்தறிகளில் நெசவு செய்யப்படும் குடிசைப்பொருள். இன்று தின மொன்றுக்கு மூன்றணா கூலிபெறும் 50,000 பெண்மணிகள் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் அரைக்கண்பார்வை வாய்க்குமானல் இத்தொழிலைக் குறைந் தது ஐந்துலட்சம் பேர்கள் செய்வார்கள். அவர்களால் வருட மொன்றில் ஐந்துகோடி ரூபாய் விலைமதிப்புள்ள குடி நூல் தயாரிக்க முடியும். இப்போதுள்ள ராட்டினங்கள் மிகப்பழை யவை. அதன் வேகத்தையும், நூலின் முறுக்கையும் அதிகப்படுத்த புத்தம் புதிய ராட்டினங்கள் செய்து விநியோகிக்கவேண்டும். பஞ்சு அறைத்தல், கொட்டுதல் முதலிய சாதனங்களையும் அபிவிருத்தி செய்யவேண்டும்.

நெசவு

இங்கு இரண்டு லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன இவற்றால் நெசவு செய்யப்படும் தினுசுகளும் பெரும் பகுதி உள் நாட்டிலேயே செலவாகின்றன. அவையன்றி கை குட்டைகள், லுங்கிகள், ஜமக்காளங்கள், தலைப்பாகைகள். சரிகை ரகங்கள் முதலியன வருடத்தில் நான்கு கோடி ரூபாய்

மதிப்புள்ளவைகள் இங்கிலாந்து, மலேயா, பர்மா, சிலோன், சுமாத்ரா முதலிய வெளிநாடுகட்கும் இதர இந்திய மாகாணங்கட்கும் அனுப்பப்படுகின்றன. இவைகளோடு பெரிய பெரிய இயந்திர முதலாளிகள் போட்டிபோட முடியாமல் அசட்டுவிழி விழிக்கிறார்கள். அரசாங்க ஆதரவும் பாதுகாப்பும் மட்டும் கிடைத்துவிட்டால் இத்தறிகளால் பிரதிவருடமும் இருபதுகோடி கெஜம் நீளமுள்ள துணிகளை நெசவு செய்து குவித்துவிடமுடியும்.

பட்டு

வருடத்தில் ஒரு கோடி ரூபாயுக்கு இம்மாகாணத்தில் பட்டு தயாராகிறது. இவற்றை நெசவு செய்ய பத்தாயிரம் தறிகள் இருக்கின்றன. சீன தேசத்துப் பட்டும், பிறநாட்டுப் பட்டாடைகளும் இறக்குமதியாவது தடுக்கப்படுமாகில் இந்தியா தனது பட்டாடைகளைத் தானே தயாரித்துப் பூர்த்தி செய்து கொள்ளமுடியும்.

கம்பளம்

இந்தியா பூராவிலும் எவ்வளவு ஆடுகள் இருக்கின்றனவோ அவற்றில் சரிபகுதி நமது மாகாணத்தில் இருக்கின்றன. இதன் ரோமங்களிலிருந்து வருடத்தில் குறைந்தது இரண்டு கோடி ரூபாயுக்கு கம்பளங்களும் இரத்தினக் கம்பளங்களும் தயாரிக்கமுடியும்.

சாயமும் அச்சும்

கண்ணைக் கவர்ந்து உள்ளத்திலே உவகை ஊட்டும் இச் சிறந்த தொழில் இன்னும் அழியாமல் இருக்கின்றது. இன்றைய தினமும் நமது நாட்டிலிருந்து இத்துணிகள் அமெரிக்கா, ஜப்பான், சைனா, பர்மா முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இவை குடிசைகட்கு மிகவும் ஏற்ற தொழிலாம்.

நார்கள்

தென்னை, பனை, முதலிய நாரெடுத்து கயிறுகளும் பாய்களும் தயாரித்தல் நல்ல குடிசைத் தொழிலாகும். வருடத்தில் இக்கயிறுகளும், நார்ப்பாய்களும் இரண்டு கோடி ரூபாயுக்கு அதிகமாகப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடும். மற்றும் சணல் நார் கத்தாளைநார் முதலியவற்றிலும் கயிறுகள் திரிக்கப்படுகின்றன.

பிற தொழில்கள்

நமது மாகாணத்தில் சாவாது உயிரோடிருக்கும் இன்னும் பல குடிசைத் தொழில்கள் இருக்கின்றன. அவை தோல் பதனிடுதல், செருப்புகள், தோல் பெட்டிகள், வார்கள் தைத்தல், நரம்பு முறுக்குதல், வாசனைத் திரவியங்கள், ஔடதங்கள், நகாஸ் வேலைகள், தந்த வேலைகள், சங்கீதக் கருவிகள் செய்தல், சித்திரமெழுதுதல், பொம்மைகள், விளையாட்டுச்சாமான்கள், சுருட்டு, பீடி, சிகரெட்டுகள், குல்லாய்கள், நெட்டி பின்னல் வேலைகள், குடைகள், சங்கு, சங்கு மணிகள், கருப்பட்டி சர்க்கரை, கற்கண்டு, எண்ணெய் தைலங்கள், மரச்சாமான்கள், இரும்புப் பெட்டிகள், பூட்டுகள், விவசாயக் கருவிகள், வெள்ளி தங்கச் சரிகைகள், பஞ்சலோகப் பாத்திரங்கள், மட்பாண்டங்கள், ஜாடிகள், ஓடுகள் மூங்கிலாலும் ஓலைகளாலும் முடையும் பாய்கள், கூடைகள், பிரம்பு வேலைகள், கல் தச்சு சிற்பி வேலைகள், வளையல்கள், மீன் பிடித்தல் முதலிய பலப்பலவாம். இவையன்றி சமீப காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சோப்புகள், தீப்பெட்டிகள், பனியன்கள் செய்தல், கோழி வளர்த்தல், தேனெடுத்தல் முதலிய தொழில்களுமுண்டு.

நமது மந்திரிகள்

மேற்கூறிய தொழில்கள் அனைத்தையும் ஆராய்ந்தறிந்து அவற்றிற்கு வேண்டிய புத்தம் புதிய கருவிகள், மூலதனங்கள்

போக்குவரத்துச் சாதனங்கள், விற்பனை விளம்பர வசதிகள், காட்சிசாலைகள் முதலியன ஏற்படுத்திக் கொடுத்துவிடுவார் களானால் நமது மாகாணத்தில்மட்டும் பிரதி வருடமும் குறைந்தது நூறு கோடி ரூபாய் விலைபெறும் குடிசைப் பொருட்களை பாரதியார் சொன்னபடி பண்ணி மலைகளென வீதி குவிக்கமுடியும். அத்தனை வசதியும் மக்களும், ஓய்வும், அறிவும், திறனும், மூலப் பொருட்களும் நமது நாட்டில் இன்னும் இருக்கின்றன. அரசாங்கம் நமதாய் இருந்து, நமது மந்திரிகளின் கைகள் கட்டுப்படாமல் இருந்தால் அவர்கள் இவற்றை மிக எளிதாய்ச் செய்துவிடமுடியும். அப்போது நம் மக்கள் சோம்பேறிகள் தொழில் நுட்ப ஞான மற்றவர்கள் என்று எவனாலும் எண்ணவும் முடியாது. பெரிய பெரிய இயந்திரசாலைகள் இல்லாமலேயே நாம் இவ்வுலகிலே தொழில் வல்லோரென மீண்டும் பெயர் வகிக்கமுடியும்.

நமக்கு முதன் மந்திரியாய்ச் சிறந்த ஞானியும், தேசாபி மானியும், உள்ளும் புறமும் தூய்மை நிறம்பியவரும் வாய்த் திருத்தல் நமது தவப்பயனேயாகும். அவருடைய அறிவாற் றல்களால் நமது செந்தமிழ்நாடு இன்று பரதகண்ட முழுமைக்கும் அரசியல் போராட்டத்தில் வழிகாட்டியாய் விளங்குகிறது. அன்னவரைக் காயும் சின்ன மனிதர்கள் விரைவில் ஓய்ந்து, உண்மை தெளிந்து நம்முடன் ஒத்துழைப் பார்கள் என்பதில் ஐயமில்லை. இதர மந்திரிகளும் நமக்கு வாய்த்த இன்னுயிர்த்தோழர்களாவர். நமக்கு வேண்டிய வற்றைத் தங்கள் சக்திக்கு எட்டியவரை செய்தே தீருவார் கள் என்பதில் சந்தேகமே வேண்டாம். பூமியின் ஈரத்தைச் சூரியன் இழுத்துச்சென்று, மீண்டும் அதை மழையாகப் பூமி யின்மீதே பெய்வதுபோல், நமது மந்திரிகள் நம்மவர்களா தலால் நம்மிடம் வசூலிக்கப்படும் வரிப்பணத்தின் முழுப் பயனையும் நம்மீதே வருஷிக்கச் செய்வார்கள். அப்பயன் இதுகாறும் இங்கிலாந்திலே வருஷிக்கப்பட்டதை அவர்கள் தடுத்து நம் நாட்டின்மீது திரும்பும்வரை கண் துஞ்சார்கள்.

அடடா! என்னவொரு அற்புதம்!! நமது மந்திரிகள் பதவியேற்ற தினத்திலிருந்து நாட்டில் என்னவொரு புதுமையும் புரட்சியுமேற்பட்டிருக்கிறது!!! ஒருவன் தெய்வ சந்நிதானத்தில் சென்றவுடன் அவனது ஐம்புலன்களும் அடங்கி ஒடுங்கி ஈசனைத் தியானம் செய்வதேபோல, சர்க்கார் கோட்டையினுள் நமது மந்திரிகள் பிரசன்னமானவுடன் அங்குள்ள அதிகார வர்க்கத்தினர் பாரத மாதாவைத் தியானிக்கத் தொடங்கிவிட்டனர். ஏதோ ஒரு நல்ல கனவு கண்டு விழித்ததுபோல உத்தியோக வர்க்கத்தினர் முகங்களில் ஒரு மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தாங்கள் வசிப்பது பாரத நாடென்றும், புசிப்பது பாரத நாட்டு உப்பென்றும், சேவிப்பது பாரத நாட்டு மக்களென்றும் அவர்கள் சந்தேகமறத் தெரிந்துகொண்டார்கள். பாரத தேவியின் பிரதம பூசாரியாகிய சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாருக்கு எத்தகைய காணிக்கை சமர்ப்பிப்பதென்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். நல்ல ஒத்துழைப்பும், விஸ்வாசமும் தங்கள் கொடுத்த சம்பளங்களில் சரியான ஒரு வெட்டும் காணிக்கைகளாக கொடுக்கப்போகிறார்கள். கோயிற் பூசாரிகள் பக்தர்களிடம் பரிவுடன் நடப்பதேபோன்று நம்மிடமும் தடபுடல் யாதுமின்றி நேசப்பான்மையில் உழைக்கப் போகிறார்கள். நாமும் நமது மந்திரிகட்குப் பக்கபலமாக நிற்போமாக. நமது கிராமங்களில் விடுதலை உணர்ச்சி பெருகவும், விவசாயம், கல்வி, தொழில், சுகாதாரம், வைத்தியம், கால்நடைகள், மேய்ச்சல் வசதிகள், விளையாட்டு மைதானங்கள், நாடகங்கள், இராப்பள்ளிக்கூடங்கள் வளர்ச்சியடையவும் தகுந்த யோசனைகளை எடுத்துக்கூறி ஒத்துழைப்போமாக.

எல்லாவற்றிற்கும் மேலாக

வறுமையிற் செம்மை என்ற வாக்கியத்தை வாழ்க்கையில் கடைப்பிடித்தல் அவசியம். அற்ப சுகங்களை எண்ணி நமது ஆருயிர்க் கொள்கையை மறவாதிருக்க நம்மில்

வல்லமை வேண்டும். நம்மையும் நமது நாட்டையும் நீடித்த அவமானத்திலும் ஏழ்மைத்தனத்திலும் ஆழ்த்திவைத்திருக்கும் இவ்வரசாங்கச் சட்டங்களை குழிதோண்டிப் புதைத்து நமது நாட்டாண்மையை நமது மக்களே நிறுவிக்காக்க நாம் காங்கிரசுக்குத் துணை நிற்க வேண்டும். நமது நாட்டிலுள்ள பொம்மை மன்னர்கள் அந்நியருடன் செய்துள்ள அடிமை ஒப்பந்தங்களை வீசி எறிந்துவிட்டு நம்மக்களுடன் சுதந்தர ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவேண்டும். தங்கள் ஆதீனத்தில் உள்ளதாகக் கருதப்படும் பிரதேசங்களில் அவர்கள் உடனே பொறுப்பாட்சியை ஏற்படுத்தி சுதேசியத்தை வளர்த்தல் அவசியம். சாதி சமயப் பூசல்களைக்கிளப்பி வாழும் சோதரர்கள் நல்லறிவு பெற்று தேசீயக்கொடியின்கீழ் அணி வகுத்து நிற்கவேண்டும். சுயநலமிகள், சுய அறிவும், மதிப்பும் பெற்றுச் சுதந்தரப் போரில் ஈடுபடுவார்களாக. அரசாங்கத்தில் சேவை செய்பவர்கள், போலீசார், இராணுவ வீரர் எல்லோரும் நமது அபிலாஷைகளை அறிந்து அதற்கேற்ப நடக்கத் துணிவார்களாக.

நமது வீட்டுக் கல்யாண வைபவங்களிலே நாம் வீசி எறியும் எச்சில்களை குக்கல்களுடனே போர்புரிந்து மீட்டு உண்ணும் நமது சோதர சோதரிகளை நாம் நமது திறந்த கண்களால் இன்னும் கண்டுகொண்டுதானிருக்கிறோம். மனித உடல் தாங்கிய உருவங்கள் நாயினுங் கேவலமாக வாழ்வது நமக்கு மிகப்பெரிய அவமானமாகும். எனினும் இதனிலும் பெரிய அவமானம், இதனிலும் பெரிய கேவலம், நமது சொந்த நாட்டிலும், வீட்டிலும், அந்நிய நாட்டவன் வந்து அதிகாரம் செலுத்துவதாகும். இன்று அந்தமான் தீவிலே நமது சோதரர்கள் பட்டினிகிடந்து உயிர்நீக்கத் துணிந்தது அவர்கள் இக்கேவல வாழ்க்கையை உணர்ந்ததே ஆகும். அவர்களே மக்கள், அவர்களைப்போன்ற சுயமரியாதை உணர்வு பெற்றவர்களே மக்கள். மற்றவர் மக்களாகார். இந்நாட்டில் மாக்களாய்க் கிடந்தவர்களைத் தட்டியெழுப்பி மக்களாக்கிய மகாத்மா காந்தி அடிகளைத் தலைசாய்த்து

வணங்குவோமாக. திக்குத் தெரியாத காட்டில் திசை தெரியாது அலைந்த மக்கள் முன் தோன்றி வழி நடத்திச் செல்லும் துணைவனேபோல், இருள்சூழ்ந்து இன்னவழி நடப்பதென்றறியாது, சத்தை விடுத்துச் சாயலுடன் போராடிக்கொண்டிருந்த நம் மக்கள் மனத்தில் ஆத்ம சக்தியைத் தோற்றுவித்து, தன்னம்பிக்கையை ஏற்படுத்தி எதற்கு மஞ்சா நெஞ்சத்தையும் தோல்வியறியாத் தோள் வலிவும் வேற்றுமைபுரியா ஞானத்தையும் சர்வ பரித்தியாக போதத்தையும், ஒழுங்கையும், உறுதிப் பாட்டையும், ஒற்றுமையுணர்வையும் அற்புதமாய்த் தோன்றச்செய்து, பொக்கைவாயில் புன்னகை பூத்து, தடிகையூன்றித்தனியே சிவகிராமத்தில் சிவனேபோன்று எட்ட நின்று ஏவல்கூறும் மகாத்மா காந்தியடிகள் நமது தந்தை, தனயன், குரு, தோழன், நமது மன மொழி மெய்களால் வாழ்த்தத்தகும் ஆசார்யன், நமது வாழ்வைப் புனிதமாக்கிய ஞான பண்டிதன், உலகெங்கும் ஒளி வீசிய லோக குரு நீடூழிகாலம் நம் மத்தியில் வாழ்ந்திருப்பாராக. இதுகாறும் அறியாமை யால் அத் தக்காரைத் தாக்கிய நாக்கள் கழுவாய் தேடிக் கொள்ளுமாக. ஆணவ ராணுவ அதிகாரிகள் மோடி சப்தங் கேட்ட நாகம்போல் அவரிடம் வயப்படுவார்களாக மாக்களை மக்களாக்கும் காங்கிரசில் நாம் எல்லோரும் சேர்ந்து தலை நிமிர்ந்து மார்தட்டி நின்று அடிமைத்தனத் துடன் போர் புரிவோமாக. இந்த உயரிய எண்ணம் பட்டம் பதவி வேட்கையாளர் மனதிலும் ஊடுருவிப் பாய்வதாக.

சுதந்தரச் சூரியன் அதோ தன் ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் சவாரி வருகிறான். நம்மைப் பற்றிப் படர்ந்திருந்த இருள்கள் யாவும் பறந்தன, கள்ளுச் சாராயக்கடைகளைக் காணோம். பஞ்சம், பிணி, சோர்வு இருந்த இடமெங்கே? நம்மை ஆள்வது யார்? நாம் தானே! எங்கும் இன்பம், எங்கும் குதூகலம், என்று எல்லோரும் சொல்லும் காலம் வரப்போகிறது. எழுந்து நின்று வணங்குங்கள். எல்லோரும் கைகூப்பித் தொழுங்கள். ஒன்று கூடுங்கள். வந்தேமாதரம்.

"ஊதுமினே வெற்றி!
    ஒலிமினே வாழ்த்தொலிகள்!
ஓதுமினே வேதங்கள்!
    ஓங்குமினே! ஓங்குமினே!
தீது சிறிதும் பயிலாச்
    செம்மணி மாநெறிகண்டோம்
வேதனைகளினி வேண்டா
    விடுதலையோ திண்ணம்."

தஞ்சை ஜில்லா
நாச்சிகுளம் முதலாவது
அரசியல் மகாநாடு

கீழக்காடு—10-4-1938

அன்பர்களே!

இம்மகத்தான மகாநாட்டில் தலைமை வகிக்கும் பெருமை நல்கிய உங்கட்கு எனது நன்றி என்றென்றும் உரித்தாகுக. எனக்கீந்த இப்பெருமை என்னைச் சார்வதன்று, நான் பணியாற்றும் அகிலபாரத சர்க்கா சங்கத்தையும் அதன் மாபெரும் தலைவரான மகாத்மா காந்தியடிகளையும் சார்வதாகும். இந்நாட்டில் வதியும் கோடானுகோடி ஏழை மக்கட்கு உண்ண உணவும் உடுத்த உடையும் கிடைக்க வேண்டுமென்பதே மகாத்மாவின் கனவாகும். அக்கனவை நினைவாக்கவே பல்லாண்டுகளாக பற்பல சங்கங்கள் மூலமாக நாம் பணியாற்றி வருகிறோம்.

அச்சங்கங்களாவன :

1. அகில இந்திய "காங்கிரஸ்"
2. அகிலபாரத சர்க்கா சங்கம்
3. ஹரிஜன சேவா சங்கம்
4. ஹிந்தி பிரசார சபை
5. கிராமப் புனருத்தாரண சங்கம்
6. காந்தி சேவா சங்கம்
7. கோ சம்ரட்சண சங்கம்

எனப் பலவாம்,

காங்கிரஸ்

இவற்றிலே காங்கிரஸ் தலையாயது. இந்நாட்டில் வதியும் முப்பத்தைந்துகோடி ஜனங்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யப் போராடுவது காங்கிரஸ். இங்கிலீசார் இங்கிலாந்தை ஆள்வது போன்றே இந்நாட்டை இந்நாட்டவரே ஆள வேண்டும் என்பதே இந்நாட்டவரின் விருப்பம். சர்வஜன வாக்குரிமை என்ற பரந்த அஸ்திவாரத்தின்மீதே நமது சுய ஆட்சி நிருவப்படும். அதுவே இந்நாட்டு மக்களின் பிரதி நிதித்துவ ஆட்சியாகும். அது எந்த தனிப்பட்ட மதத்தினர், வகுப்பினர், மொழியினருடையதாய் இராமல் இந்நாட்டிலுள்ள சர்வமக்களுக்கும் சமநீதிவழங்கும் சமத்துவ் ஆட்சியாகவிருக்கும். அவ்வாட்சியின் எந்த அம்சத்திலும் பிற நாட்டவர் எவருடைய ஆதிக்கமும் இராமல் தூய இந்தியரின் ஆட்சியாகவிருக்கும். அதுவே இந்நாட்டின் விடுதலையாகும். அதுவே நாம் விழையும் சம்பூர்ண சுயராஜ்யமாகும். இன்றைய தினம் அந்நியவாட்சியெனும் சங்கிலியால் நம்மனைவரையும் கட்டிப் பிடித்து வைத்திருக்கும் அடிமை வாழ்வை தவிடுபொடியாக்கிச் சுதந்திர வாழ்வை அடைந்தே தீர வேண்டும் என்ற சங்கற்பம் கொண்டுள்ளவர் அனைவரும் காங்கிரஸில், தாயைத் தேடியலையும் சேயைப்போல தாவிச் சேரக் கடமைப்பட்டுள்ளார்கள். அவர்கள் காங்கிரசினின்றும் தனித்து நிற்க யாதொரு காரணமும் காணோம்.

ஒரு நாட்டினரைப் பிறநாட்டினர் அடக்கியாள்வதென்பது மனித நாகரிகத்துக்கே விரோதமானது. மனிதனுக்கு அதைவிட அவமானம் பிறிதொன்றுமில்லை. இந்த அவமானத்தை இந்தியராகிய நாம் இன்னும் எவ்வளவுகாலம் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்? ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள், பார்ஸிகள், சீக்கியர்கள் இன்னோரன்ன எத்தனை மதத்தினராயினும், பத்தான், பஞ்சாபி, வங்காளி, மார்வாரி, குஜராத்தி, தெலுங்கன், கன்னடியன், தமிழன், மலையாளியாகிய எத்தனை மொழியினராயினும் அத்தனை

பேரும் இந்நாட்டிலே பிறந்து, இந்நாட்டிலே தவழ்ந்து, இந்நாட்டிலே வாழ்ந்து, இந்நாட்டிலே இறந்து போகின்றவர்கள். இந்நாட்டின் தாழ்வும், வாழ்வும் அனைவருக்கும் ஒன்றாகும். நாம் மதம்பற்றியும், மொழிபற்றியும் இன்னும் பிரிந்து நிற்க யாதொரு நியாயமுமில்லை. இந்நாட்டின் சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். நாம் பிரிந்து, பிரிந்து, நான் வேறு நீ வேறு, அவன் வேறு என்று சின்னா பின்னப்பட்ட காரணத்தினால்தான் பிச்சைக்கு வந்தவன் நம்மை பெண்டாள முடிந்ததென்பதைக் காண்பீர்கள். அப் பேதமை, அம்மதியீனம், இத்தனை ஆண்டுகளாய் நாம் அனுபவித்த அவமானத்துக்குப் பின்னரும் நம்மைப் பற்றாதிருக்குமாக, நம்மைப் பாழாக்கிய சந்தேகபுத்தியும் அவநம்பிக்கையும் இன்றே நம்மைவிட்டுப் பறந்தேகுமாக.

காங்கிரஸின் போர்முறை உலகத்தை பிரமிக்கச் செய்து விட்டது. தன்னிலும் பலவான் யாரேனும் எங்கேனும் உண்டோவென்றும் இந்தியாவையாளத் தானே பிறந்தவனென்றும் மமதை கொண்டிருந்த பிரிட்டிஷ் சிங்கம் மகாத்மாவின் தண்டியாத்திரையை எள்ளிநகையாடியது. அச்சிங்கம் நக்கியெறியும் ஊனற்ற எலும்புத்துண்டுகளை கரண்டிக்கரண்டி அதனால் கீறுண்ட தனது வாயினின்று ஒழுகும் இரத்தம் அவ்வெலும்பினின்று வடிவதாக எண்ணி மகிழும் ஈன நாய்களின் மதிபடைத்த நம்மில் சிலரும் அச்சிங்கத்துடன் சேர்ந்து ஆஹாவென்று கைத்தாளங் கொட்டினர். அடக்கு முறைகளாலும், அவசரச் சட்டங்களாலும், கடின தண்டனைகளாலும், குறுந்தடிப் பிரயோகத்தாலும், சொத்துக்கள் பறிமுதலாலும், இன்னும் இவை போன்ற பற்பல கொடூர பயங்கரச் செயல்களாலும் நமது தேசபக்தியை, நமது தேசபக்திக்குத் தாய்போன்ற காங்கிரஸை ஆழமான குழிதோண்டிப் புதைக்கப் பார்த்தனர். புதைத்து விட்டதாக ஜம்பமும் பேசினர். ஆனால் இறுதியில் என்ன வாயிற்று? இந்தியாவின் புகழ் உலகெங்கும் சென்றது. கத்தியின்றியும் கபடாவின்றியும் இந்தியர்கள் வீறுகொண

டெழுந்து பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரிமயிரைத் தட்டிய வல்லமையை உலகம் கண்டு வியந்தது.

காங்கிரசின் போர்முறை அஹிம்சை, சத்தியம் ஆகிய கவசங்களைக் கொண்டது. அஹிம்சா தர்மம் உலகிலுள்ள சர்வ அதர்மங்களையும் அறுத்துத்தள்ளும் வல்லமை கொண்டது. கத்தியைக் கையிலெடுக்கும் மனிதன் மிருகமாகின்றான். அக்கத்தியை மார்பிலேந்துகின்றவன் மனிதனாகின்றான். கத்தியை கையிலெடுத்து நியாயம் தேடுபவன் பேடியாகின்றான். கத்திக்குத் தன் மார்பைக் காட்டுகின்றவன் நியாயத்துக்காக மடியும் வீரனாகின்றான். பிரிட்டிஷாரின் கத்திக்கும், துப்பாக்கிக்கும் பயந்து புழுக்கள்போல் வாழ்ந்திருந்த நம்மை மகாத்மா காந்தியடிகள் தமது அகிம்சா நெறியினால் தியாக மூர்த்திகளாக்கினார். வீரம் செறிந்த போர்வீரர்களாக்கினார். நமது பெண்கள் என்றுமிலா எழிலுடன் தம் இல்லம் விட்டெழுந்தனர். என்னே அகிம்சையின் மகிமை! அதனினும் மகிமைவாய்ந்தது சத்தியம். காங்கிரசின் போர்முறைகளில் சத்தியத்துக்குப் புறம்பானதெதுவும் இருக்கவில்லை. 'யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற' என்று இரண்டாயிரம் வருடங்கட்கு முன்னர் வள்ளுவர் வலுத்திய வாய்மை இன்றையதினமும் இந்தியாவின் மூலமே உலகத்தார் அறிந்துகொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கொடுமையும், பொறாமையும், சூழ்ச்சியும் நிறைந்ததாகக் கருதப்படும் போர் முறைகளைக்கூட சத்திய நெறிக்கு வழுவாத முறையில் நடத்தமுடியுமென்ற புதுமையைக் காங்கிரஸால், காந்தியடிகளால் உலகம் கண்டு கொண்டது.

இன்று காங்கிரஸ் அரசாங்க நிர்வாகத்தில் நுழைந்துள்ளதால் நமது சுயராஜ்ய அபிலாஷை, போர்முறை, எல்லாம் மாறிவிட்டதாகக் கருதி அநேக சுயநலமிகள், சுதந்திர வேட்கை சிறிதுமற்றவர்கள், அடிமைவாழ்வில் ப்ரீதியும், சுதந்திர வாழ்வில் பீதியும் இயற்கையாகப் பூண்ட வீணர்கள் சிலர் காங்கிரசுக்குள்ள பெருமையில், புகழில், பொதுஜன

அபிமானத்தில் பங்குகொள்ள எண்ணி, வாயில் ஜலம் சொட்டச் சொட்ட காங்கிரஸ் கமிட்டிகளிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும் அட்டைகள்போல் ஒட்டிக்கொள்ள வருகின்றனர். சிறைச்சாலையை நிர்வகிக்கும் அதிகாரிகள்போன்று காங்கிரஸார் இந்தியாவென்னும் இப்பெரிய சிறைச்சாலை நிர்வாகத்தை வெகுகாலம் நடத்திக்கொண்டிருப்பார்கள் என்று இந்த அற்பர்கள் எண்ணி ஏமாற்றமடையப் போகிறார்கள். சுதந்திரபீடத்தில் தங்கள் உயிரைப் பலிகொடுக்க விருப்பமுள்ளவர்களே காங்கிரஸ் கமிட்டிகளில் அங்கம் வகிப்பது காங்கிரஸின் புனிதத்தன்மைக்கு ஏற்றதாகும். சட்டி சுட்டது கையும் விட்டது என்று ஆபத்துக்காலத்தில் ஓடியொளியும் சூரர்கள் காங்கிரஸ் கமிட்டிகளைக் கைப்பற்றாதிருப்பார்களாக. இத்தகைய கூட்டத்தினர் சேர்க்கையால் காங்கிரஸை ஒரு மிதவாத ஸ்தாபனமாக மாறாதிருக்கத்தக்க உபாயங்களை தேச பக்தர்கள் தேடவேண்டியது கடமையாகிறது. இன்று காங்கிரஸ் சர்க்காரால் விளையும் அற்பசுகங்களுக்காக நமது ஆருயிர்ப் பிரச்சினையாகிய, சுதந்திரத்தை, சுயராஜ்யத்தை, அந்நிய ஆதிக்க விடுதலையை ஒத்திப்போடவோ, விட்டுக்கொடுக்கவோ முடியாதென்பதை என் தோழர்கள் அறிவார்களாக.

காங்கிரஸ் கொள்கைகளுக்கு, காங்கிரசின் முக்கிய லட்சியத்துக்குப் புறம்பானவர்கள் காங்கிரஸில் செல்வாக்கடைதல் ஒரு அபாயம். காங்கிரசின் லட்சியத்துக்கும், போர்முறைக்கும் எதிராக அமைந்துள்ள இதர சமூக, பொருளாதார, சமுதாய, மத ஸ்தாபனங்களில் தேசபக்தர்கள் அங்கம் வகிப்பதோ, ஆதரவு காட்டுவதோ மற்றோர் அபாயமாகும். ஹிந்துவென்றும், முஸ்லீம் என்றும், பிராமணன் என்றும் அல்லாதவனென்றும் கூறி நமது பலவீனத்தை பிரமாதப்படுத்தி, நம்மை ஏய்த்து, நமது கண்களில் நாமே கோலெடுத்துக் குத்திக்கொள்ளச்செய்ய அநேக சுயநலமிகள் —வீசும் வலைகளில் நாம் சிக்காமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டுதல் அவசியம். காங்கிரசின் உள்ளிருந்தே சில

வீணர்கள் வகுப்புவாதத்தைக் கிளப்பவும் வகுப்பு விஷத்தைப் புகுத்தவும் முயலுகிறார்கள். அவர்களை முளையிலேயே கிள்ளி யெறியும் ஆண்மை நம்மில் குன்றாதிருக்கவேண்டும். காங்கிரஸ் கொடி ஓங்குமாக. அதைக் காப்பதற்கு நமது உயிரையும் திறனென மதியாது ஈவோமாக.

அகில பாரத சர்க்கா சங்கம்

"உறுபசியும், ஓவாப்பிணியும், செறுபகையுஞ் சேரா தியல்வது நாடு" என்று செப்பியுள்ளார் நமது செம்மை சேர்ப்புலவர் திருவள்ளுவநாயனார்.

நமது நாட்டவர் இன்று உறுபசியால் வாடுகின்றனர். எரிபசியால் அவர்கள் நெஞ்சம வேகின்றனர். தேள் கொட்டியதுபோல் கடுக்கின்றது அப்பசி. சீறும் புலிபோல் பாய்கின்றது. வற்றிய ஸ்தனங்களிலே பால் இல்லையே வெனக் குழந்தைகள் தாயைக் கண்டதும் வீறிட்டழுகின்றன. அழுதவாயுக்கு அமுதளிக்க வகையில்லையே ஆண்டவா எனத் தாய்கள் ஏங்குகின்றனர். அடிமை வாழ்வின் அவமானம் ஓர்புறம், அறியாமையும், வறுமையும், பஞ்சமும், ஆதரிப்பாரில்லையே என்ற திக்கற்ற நிலைமையும் மற்றோர் புறம். திக்குத்தெரியாது தத்தளிக்கும் கப்பலுக்கு திசைக்கருவி போன்று மகாத்மா நம் மக்களுக்கு கைராட்டினத்தைக் காட்டினார். இக்கைராட்டின இயக்கத்தை நடத்திச் செல்வதே அகில பாரத சர்க்கா சங்கமாகும்.

இது காங்கிரசால் நிறுவப்பட்ட ஸ்தாபனமாகும். இந்த ஸ்தாபனம் ஏற்படுவதற்கு முன் ஆங்காங்குள்ள காங்கிரஸ் கமிட்டிகளே கதர் உற்பத்தி விற்பனையாகிய கார்யாதிகளைக் கவனித்து வந்தது. ஆனால் அது இதர ராஜீய கார்யங்களுக்கு இடைஞ்சல் விளைவிப்பதாயும், கைராட்டின முன்னேற்றத்துக்கு சாதகமற்றதாயுமிருந்தபடியால் கதருக்கென தனி ஸ்தாபனம் ஏற்படுத்தி அதற்கொரு மூலதனமும் ஒதுக்கப்பட்டது. கடந்த இருபதாண்டுகளாக நடைபெற்ற

கதர் வேலையும், கதரின் தொகையும் மிகவும் அற்பமாகக் காணப்படலாம். ஆனால் கதரும் கைராட்டினமும் இந்நாட்டின் தொழிலபிவிருத்திக்கு மூலகாரணமாக நின்று ஆக்கம் தருவதை அறிவாளிகள் கண்டுகொண்டார்கள். கதரை ஓரிடத்தில் உற்பத்தி செய்து மற்றோரிடத்தில் கொண்டு போய் விற்பனை செய்யும் பண்டமாக மதித்து வேலை செய்யும் படியாக மகாத்மா கூறவில்லை. நமது வீடுகளில் நமது பெண்கள் சமைப்பது போலவே தங்கள் ஒய்ந்த காலங்களில் தங்கள் தேவைக்குத் தாமே நூற்க வேண்டும் என்பதே அவரது சித்தாந்தமாகும். இதனை மக்கள் சரியாக உணராத காரணத்தாலோ, அல்லது நமது பிரசாரக் குறைவினாலோ இவ்வியக்கம் இன்னும் சரியாக இந்நாட்டில் வேரூன்ற வில்லையென்று சொல்வது தப்பாகும் என்று நான் கருதவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்னால் நூற்பவர்கள் கூலியை உயர்த்தவேண்டும் என்று மகாத்மா சொன்னது இது துறையில் நல்ல அபிவிருத்திக்கு இடந்தருவதாய் இருக்கிறது. ஏனெனில் நாம் அதிகக் கூலி கொடுப்பதன் காரணத்தால் நூற்பவர்கள் தாங்கள் நூற்கும் எல்லா நூலையும் விலைக்கு விற்றுவிடச் செய்யாமல் ஒரு பகுதியை அவர்கள் தங்கள் புடவைகளுக்காக சேமித்து வைக்குமாறு தூண்டுவதற்கு ஏதுவாக இருக்கிறது. கடந்த இரண்டு வருஷங்களில் தமிழ் நாட்டில் மட்டும் நூற்பவர்கள் எழுபத்தேழாயிரம் ரூபாய் மதிப்புள்ள பதினேழாயிரம் புடவைகளைத் தங்கள் சொந்த நூலால் தயாரித்து உடுத்திக்கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்ட வியாபாரிகள் சிலரின் போட்டியும், துஷ்பிரசாரமும் அவர்களுக்கு காங்கிரசின் கொள்கைக்கு முரணாக நடக்கும் சில காங்கிரஸ் அன்பர்களின் ஆதரவும் இல்லாதிருக்குமானால் இதற்குள் தமிழ்நாட்டிலுள்ள சுமார் 50,000 நூற்பவர் குடும்பங்களை வழக்கமாகக் கதருடுத்தச் செய்திருக்க முடிந்திருக்கும். மற்றும் முறுக்குள்ள நூலும், உறுதியுள்ள துணியும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கும். நூற்பவர்களும் புதிய அபிவிருத்திகளடங்கிய கருவிகளைக் கையாண்டு தனது நூற்புத்

திறமையில் தேர்ச்சி பெற்றிருப்பார்கள். காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்ட பின்னர் கதருக்கு ஏற்பட்ட அபரிமித கிராக்கியினுல் அநேக வியாபாரிகள் தோன்றி நமது அபிவிருத்திகள் எல்லாம் பாழாகும் முறையில் கார்யாதிகள் செய்து வருகின்றனர். கைராட்டினத்தில் நூல் நூற்பவனும், கைத்தறியில் நெசவு செய்பவனும் தான் நூற்றுத் தான் நெசவு நெய்த துணியைத் தானுடுத்தாமல் அதைப் பிறருக்கு விற்றுவிட்டு அவர்கள் பிற துணி வாங்கி உடுத்துவார்களானுல் அது நமது சித்தாந்தத்திற்கு முற்றிலும் முரணுன காரியமாகும். இதை விடத் தற்கொலைக்கொப்பான காரியம் பிறிதொன்றுமில்லை. இத்தீச்செயல் நிறுத்தப்பட வேண்டுமானுல் சர்க்கா சங்க அத்தாட்சியில்லாத கடைகளிலிருந்து கதர் என்று விற்கப் படும் துணிகளை எக்காரணத்தைக் கொண்டும் வாங்குவதில்லையென்ற சங்கல்பத்தை காங்கிரஸ் அன்பர்களும் பொதுஜனங்களும் செய்துகொள்ள வேண்டுவது அவசியம். கதர் உடுத்துவதென்பது கொள்கை, சித்தாந்தம் முதலியன ஒருபுறமிருக்க நீடித்த பழக்கத்தால் ஏற்படுவதாகும். கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக நம்மில் கதருடுத்தி வருபவர்கள் உயிர் போவதானுலும் பிறதுணியை கையாலும் தொடுவதற்கஞ்சுவோம். இம்மாதிரியான ஒரு பழக்கம் நூற்பவர்களுக்கும், நெய்பவர்களுக்கும், கிராம ஜனங்களுக்கும் ஏற்பட்டு விடுமேயானுல் அவர்கள் நகரவாசிகள் கதர் வாங்கினுலும் சரி வாங்காவிட்டாலும் சரி, தங்களுடைய தேவைகளுக்கு வேண்டிய அளவு நூற்று, வேண்டிய அளவு நெசவு செய்வித்து உடுத்திக்கொள்வார்கள். அத்தகைய பழக்கத்தை ஏற்படுத்த மகாத்மா புதிய திட்டம் மிகவும் பயனளிப்பதாக இருக்கிறது. ஆனுல் கடவுளுக்குஎதிராக சாத்தான்கள் இருப்பதாக விவிலிய நூலில் விவரித்துள்ள மாதிரி, மகாத்மாவின் எண்ணம் பூர்த்தியாகச் செய்யவொட்டாது பல வியாபாரிகளும், அவர்களுடைய தரகர்களும் தொல்லைகள் செய்துவருகின்றனர். இவற்றை நீக்குவதும் போக்குவதும் தேசபக்தர்களின் கடமையாகும்.

கதரைப்பற்றி மற்றுமோர் வார்த்தை சொல்ல ஆசைப் படுகிறேன். என்னைப் பார்ப்பவர்கள் எல்லாம் ஏனையா! கதர் விலை இறங்காதா என்ற கேள்வி கேட்ட வண்ணமாக இருக்கிறார்கள். கதர் விலை இறங்குவதென்றால் நூற்பவர் களின் கூலியை குறைப்பதென்றே அர்த்தமாகும். நாளொன் றில் 8 மணி நேரம் நூற்பவர்களுக்கு மூன்றணா கூலியாக மகாத்மா நிர்ணயித்திருக்கிறார்; இது எட்டணாவாக உயர்த் தப்பட வேண்டும் என்பது மகாத்மாவின் விருப்பமாகும். கதர் விலையை மீண்டும் உயர்த்த வேண்டும் என்றுகூட மகாத்மா எங்களுடன் வாதாடிக் கொண்டிருக்கிறார். நமது அரசியல் போராட்டம் நான் முன்னர் கூறிய மாதிரி அகிம்சை, சத்தியம், தியாகம் ஆகியவற்றை அணிகலனாகக் கொண்டுள்ளது. நமது நாட்டு மக்கள் வயிறார உண்பதற்கும், மானத்தோடு வாழ்வதற்குமே நாம் போர்க்கோலம் பூண்டு நிற்கிறோம். அப்போரில் நமது உயிரையும் தத்தம் செய்வ தற்குச் சித்தமாக இருக்கிறோம். இந்நிலையில் கதருக்கு நாம் கொடுக்கும் சிறிது அதிகப்படியான காசுகள் நமது உயிரினும் மிக்கதல்ல. நமக்காக 8 மணி நேரம் ஓயாது நூல் நூற்றுத் தந்த ஒரு ஏழைச் சகோதரி வயிறார உண்ணவும், உடுத்தவும் மூன்றணா இன்று தந்து உதவினோம் என்ற எண்ணத்தால் நமக்கேற்படும் சந்தோஷத்தைக் கேவலம் ரூபாய் அணா பைசாவால் அளவிட்டுப் பார்க்க முடியுமா?

கதருக்கு அதிகவிலை கொடுக்க மயங்குகிறவர்கள் ஏன் தங்கள் தேவைக்குத் தாங்களே நூற்றுக்கொள்ளக்கூடாது? தினம் அரைமணி நேரம் நூற்பதின் மூலம் ஒரு வருடத்தில் 75,600 கெஜம் நூல் நூற்றெடுக்க முடியும். இந்நூலைக் கொண்டு பதினாறு கெஜம் துணி நெசவு செய்விக்கலாம். இது துணித் தேவையைப் பூர்த்தி செய்யும். இதை உணர்ந்தே அடிகளார் தினம் அரைமணி நேரம் நோய்வாய்ப்படினும் படுக்கையிலிருந்தபடியே நூற்று வருகிறார். அவ்வழி நாமும் பின்பற்றுவோமானால் கதர்க்கடை, கதர்விலை என்ற பிரச்சனை சோற்றுக்கடை, சோத்துவிலை என்ற பிரச்சனை இல்லாதது போல் தீர்ந்துவிடும்.

இன்றைய தினம் மில் துணிகளும், அயல்நாட்டு ஆடைகளும் மலிவாகக் கிடைக்கும் காரணம் பற்றியே கதர்விலை இறங்காதா என்ற கேள்வி உதயமாகிறது; சற்றே கண்களை மூடி கடந்த இருபது வருடங்களுக்கு முன் துணி விலை என்னவாகி இருந்ததென்பதை யோசித்துப் பாருங்கள். 1914ம் வருடம் ஜர்மன் யுத்தம் மூள்வதற்கு முன் கெஜம் 5 அணுவிற்கு விற்றிருந்த 1703 எனும் அந்நிய நாட்டுத்துணி யுத்தம் மூண்ட பின்னர் கெஜம் ஒரு ரூபாயுக்கும் அதிகமாக விற்கப்பட்டது. அன்றையதினம் நமது கதர் கெஜம் பத்தணுவுக்குக் கிடைத்திருந்தால் எவ்வளவு ஆவலோடு வாங்கி உடுத்தியிருப்போம். அன்றையதினம் அகவிலைகளும் உயர்வாக இருந்தன. பத்துப்பொதி பருத்தி விளைவித்த குடியானவன் அதைப் பொதியொன்று 100 ரூபாய் வீதம் 1000 ரூபாய்க்கு விற்றான். அதே குடியானவன் அதே பருத்திக்கு இன்று 300 ரூபாய் கிடைக்காமல் திண்டாடுகிறான். ஆனால் அவனுடைய குடும்பம் குறையவில்லை; அவனுடைய குடும்பச் செலவு குறுகவில்லை; கடன் ஒழியவில்லை. பருத்தி விலை குறைந்த தேதியில் அவன் பட்ட கடனுக்குக் கடந்த பதினைந்து வருடங்களாக ஓயாது கடன் கட்டிய வண்ணமாக இருக்கிறான். நூறு ரூபாய் கடனுக்கு நாளதுவரை நாநூறு ரூபாய் வட்டியாகச் செலுத்தியும் அவனுடைய கடன் பத்திரம் உயிரோடிருந்துகொண்டு உன்னை விட்டேனு பார் என்கிறது. நல்லவேளையாக நமது மந்திரிகள் கடன் நிவாரண மசோதா ஒன்று சட்டமாக்கி இக்கடன்களுக்கெல்லாம் சாவுமணியடித்தார்கள். என்றாலும் கடன் கொடுத்த அநேகர் கடந்த நாலைந்து மாதங்களில் பழைய கடன்களுக்கு புதிய பத்திரங்கள் எழுதியும் பூமிகளையும் வீடுவாசல்களையும் ஈனவிலைக்கு கிரயங்கள் செய்தும் அநேக குடியானவர்களை வஞ்சித்துவிட்டார்கள், இம்மாதிரியாக அகவிலை குறைந்து, கடன் பளுவாகி நிற்கும் குடியானவனுக்கு மில் துணி கெஜம் இரண்டணுவுக்கு விற்கப்பட்டாலும், அதற்கு விலை கொடுத்து வாங்கும் சக்தி ஏது? இந்நிலையில் இம்மனிதன் நூற்ற நூலுக்குச் சற்று விலை கொடுத்து வாங்கி ஆதரித்து

அவனையும் கதருடுத்தச் செய்வதை விடச் சிறந்த வேறு தர்மம் இருப்பதாக என்புத்தியில் தைக்கவில்லை. மில் துணிகளை வாங்குவதால் ஆமாதாபாத், பம்பாய், கோவை, மதுரை, சென்னை முதலிய இடங்களில் சில முதலாளிகள் கொழுக்க உதவுகிறோமேயல்லாது ஏழைகளுக்கு எள்ளளவும் பிரயோஜனமில்லை. இது விரிக்கிற் பெருகுமாதலால் இத்துடன் நிறுத்தி மேலே சொல்லுகிறேன்.

ஹரிஜன சேவா சங்கம்

தான் திருடன் பிறனை நம்பான் என்று சொல்வார்கள். அதைப் போலத்தான் அடிமையாகவிருக்கும்போது பிறரைத் தனக்கடிமை கொள்வதிலேயே ஒருவனது கருத்தும் விருப்பமும் செல்லும். நமது நாட்டின் மாமி மருமகள் சண்டை உங்கட்கு நன்ருகத் தெரியும். "என் மாமி என்னை இப்படிச் செய்தாள், அப்படிச் செய்தாள், அவள் கையில் நான் எத்தனையோ கொடுமைப்பட்டிருக்கிறேன். நான் பட்டதில் நீ படுவது பாதிகூட இல்லையடி" என்பது நமது நாட்டு மாமிகளின் வழக்கமான வாதம். இது மனித இயல்பு.

கடந்த இருநூறு ஆண்டுகளாய் நமது நாட்டில் சுதந்திர வாழ்வு மறைந்தது. அந்நியவாதிக்கத்தின் காரணத்தால் அரசியல் துறையில் அடிமைத்தனம். ஜமீன்தாரன்—குடியானவன், மிராசுதாரன்—பண்ணையாள், முதலாளி—தொழிலாளி, உள்ளவன்—இல்லாதவன் முதலிய பேதங்களால் பொருளாதாரத் துறையில் அடிமைத்தனம். பிராமணன், சூத்திரன் என்ற ஜாதி பேதங்களால் சமூகத்துறையில் அடிமைத்தனம். இவ்வாறு பற்பல துறைகளாலும் முறைகளாலும் நாம் அடிமையும் சிறுமையும் பட்டுப்பட்டுப் படிப்படியாக ஒருவர் மீதொருவர் ஏறிஏறிச் சவாரி செய்து அதன் காரணமாக சாக்கடை நீர்போல் நம்மில் ஒரு சாரர் பல மற்றுப் படிப்பற்று, முதலற்று, தமக்கெனச் சுயமான தொழிலற்று, நிற்க நிழலற்றுக், குடிசையற்று, கோவணச் சேலைக்கும், குடிக்கும் கூழுக்கும் கதியற்று, குடிப்பதற்கும் குளிப்பு

தற்கும் நல்ல நீரற்று, கறுப்பர்களாய், உங்கள் வெறுப்புக்கும் பழிப்புக்கும், சாபத்துக்கும், கொடுமைக்கும், அநீதிக்கும் அக்கிரமத்துக்கும் ஆளானவர்களாய், கல்வியற்று, கடவுளாரின் கருணையற்று, கவர்ன்மெண்டாரின் கவலையற்று, "கசடர்களாய்", "நீசர்களாய்", "சண்டாளர்களாய்", பார்க்கவும், தொடவும், பேசவும் படாதவர்களாய், உங்கள் ஏச்சுக்கும் ஏவலுக்கும் ஆளானவர்களாய் இருந்ததைக்கண்டு மனங்குழைந்தார், பொங்கினார், கலங்கினார், கதறினார் காந்தியடிகளார்.

நாமே சிவம் என்றுயர்ந்த வேதாந்தத்துக்கும், அன்பே சிவம் என்று பரந்த சித்தாந்தத்திற்கும், பக்தர்களைக் கண்ட மாத்திரத்தில் கட்டி ஆலிங்கனம் செய்து கூத்தாடும் வைணவ சம்பிரதாயத்திற்கும், மனிதனது அறிவு எட்டாத தூரத்துக்கு எட்டிச்சென்றடைந்த ஞானத்துக்கும், உயரிய வேத சாஸ்திர தர்ம நியாயங்கட்கும் உறைவிடமாகிய நமது புராதன ஹிந்து மதத்திலே இத்தகைய பஞ்சம சாதி நமது ஆணவத்தால், அறியாமையால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதைக் கண்ட காந்தியடிகளின் உள்ளம் அனலில்பட்ட புழுப்போல் துடித்தது.

நாம் சுதந்திரமடையவேண்டும், நமது நாடு விடுதலை பெற்றே தீரவேண்டும் என்று நாம் திடசங்கற்பம் செய்து கொண்ட பின்னர் நம்மில் நாமே ஒரு பகுதியினரை அடிமைகளாய், அறியாமையில் மூழ்கினவர்களாய் வைத்திருப்பதெங்ஙனம்?

உடலிலே அடிபட்ட ஒரு பாகத்தின்மீது தனிமையான கவனம் செலுத்தி, மருந்து பூசி, துணியால் கட்டி சொஸ்தமாக்கும் வைத்தியன் போன்று இன்று நமது ஜன சமூகம் என்ற உடலிலே நோய்ப்பட்டுள்ள ஒரு பாகமான ஹரிஜனங்கள்—ஆண்டவன் மக்களின் விமோசனத்துக்கென ஒரு தனிஸ்தாபனம் கண்டார் மகாத்மா—அதன் காரணமாக ஹரிஜனங்களின் வாக்குயர்ந்தது, வகுப்புயர்ந்தது, கல்வி

யுயர்ந்தது, அவர்களும் மனிதர் தாமென மார்விடைத்துத் தோளுயர்த்தி நம்முடன் சுதந்திரப்போருக்கு அணிவகுத்து வருகின்றனர். அவர்களைச் சார்ந்த ஒருவர் நமக்கு அமைச்சராகவும் அமர்ந்துவிட்டார். ஹரிஜனங்கள் பொருளாதாரத் துறையிலும், சமூகத்துறையிலும் நம்முடன் சரிநிகர் சமானமாய் வாழ்வதற்கேதுவாய் நாமனைமரும் ஹரிஜன சேவா சங்கத்தில் சேர்ந்து பணியாற்றுதல் நமது தனிப்பெருங்கடமையாகிறது. நமதாலயங்கள் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்படும் நாளை நாம் எல்லோரும் ஆவலுடன் விழைவோமாக.

ஹிந்தி பிரசார சபை

ஓர் கிணற்றுத்தவளை கிணற்றின் நாற்புறமும் எட்டியெட்டிக் குதித்து சமுத்திரம் இவ்வளவு பெரிதாகவிருக்குமா என்று கேட்டதாக நாம் ஒரு கதை படித்திருக்கிறோம். அம்மாதிரி இன்றைய தினம் நமது நாட்டில் சிலர் எட்டியெட்டிக் குதித்து உலகம் இதைவிடப் பெரிதாகவிருக்குமா என்று ஆர்பாட்டம் செய்து வருகிறார்கள். முப்பத்தைந்து கோடிப் பேர்கள் வதியும் இந்தியாவில், இந்தியாவனைத்துக்கும் ஒரு தனிச்சுயவாட்சி வேண்டுமெனக் கிளர்ச்சி நடைபெறும் இந்தியாவில், நாடெங்கும் சோதரபாவமும், ஒற்றுமையும் நிலவ வேண்டுமெனப் பறை சாற்றப்படும் இந்தியாவில், ஒருவர் மொழியைப் பிறர் அறியாமல், ஒருவர் கருத்தைப் பிறர் உணராமல் ஊமைகள்போல் வாழவேண்டும் என்று இவர்கள் விரும்புகிறார்கள்போலும். இருபத்திரண்டு கோடிப்போர்கள் ஹிந்துஸ்தானி பேசும்போது ஏனைய பத்துக்கோடிபேர்களும் அதனைப் பயின்றுவிட்டால் இந்தியாவெங்கும் ஒரேமொழியில் ஒருவரையொருவர் அறிந்துகொள்ள முடியுமெனக் கண்டு மகாத்மா காந்தியடிகள் ஹிந்தி பிரசாரத்தைத் துவக்கி இன்று பல்லாண்டுகளாயின. இதுவரை தமிழ்நாட்டில் அப்பிரசாரத்துக்கென வடநாட்டவரே பணத்தை மனங்கோணாது வாரி வாரிக்கொடுத்திருக்கிறார்கள். வர்த்தகத்தைக் கருதியும், வயிற்றுப்பிழைப்பை நாடியும் வடநாட்டிற்கு

ஓயாது போய்க்கொண்டிருக்கும் நம் தமிழ்புதல்வர்களுக்கே ஹிந்தியின் அருமை தெரியும். ஹிமாசலம் முதல் கன்னியா குமரி வரை வியாபித்துள்ள நமது தேசீய சபையாகிய காங்கிரஸ் நடவடிக்கைகளில் ஹிந்தி எவ்வளவு பிரதானம் என்பது தேசபக்தி ததும்பும் இந்தியர்கட்கே தெரியும். புத்தகத்தை யரிக்கும் பூச்சிபோலத் தமிழ் புத்தகமொன்றையே தடவிக் கொண்டிருக்கும் பண்டிதனுக்கு ஹிந்தியின் அவசியம் எப்படிப் புலனாகும்?

ஹிந்தியைப் பயின்றால், பரப்பினால் தமிழுக்கு ஆபத்து வந்து விடுமாம்!

கடந்த நூற்றாண்டுகளுக்கு மேலாக ஆங்கிலம் பயின்று பயின்று பரவிப் பரவி நமது வீடுகளில் துயில்விட்டெழுந்ததும், காபி ரெடியாகிவிட்டதா? டிப்பன் என்ன செய்திருக்கிறாய்? ஆபீசுக்கு நேரமாயிற்று. டே பையா ஸ்கூலுக்குப் போகவில்லையா, உன் லெசன் படித்தாகிவிட்டதா? என்னடி பால்காரி இவ்வளவு லேட்டாக வருகிறாய்? டைம் என்னவாயிற்று என்று எவ்வளவு சுயம்பான தனித்தமிழ் பேசப்படுகிறது! இதனால் தமிழுக்கு வராத ஆபத்து இனிமேல் எப்படி வரமுடியுமோ எனக்குத் தெரியவில்லை.

தேசீய இயக்கம் சுடர்விடத் தொடங்கியபின் காங்கிரசால் தாய்மொழி எவ்வளவு வளர்ச்சியுற்றுள்ள தென்பதை இப்பண்டிதர்கள் மறந்து பேசுகிறார்கள். இருபதாண்டுகட்கு முன்னர் அரசியல் மேடைகளில் தமிழில் பேசுபவர்கள் முயற்கொம்பென இருந்தார்கள். காங்கிரசின் கிளர்ச்சியால், காங்கிரஸில் பாமரமக்கள் பெருவாரியாகப் பங்கு கொண்ட பெருமையால், இன்று அரசியல் கூட்டங்களனைத்தும் தமிழால், தூய தனித்தமிழால் நடைபெறுகின்றன. இப்பெருமை நமக்கா அல்லது இப்பண்டிதருக்கா?

இன்றைய தினமும் இப்பண்டிதர்கள் பேசும் தமிழ்ப் பரடையை மிகவும் கற்றோரேயல்லாது மற்றோர் கேட்பின்

அவை கிரீக்கோ, லத்தீனே, சமஸ்கிருதமோ போல் படுமே யல்லாது நாமும் நமது தாயும், குழந்தையும் பேசும் மொழி போலிராது. தேவபாஷை போன்று இப்பண்டிதர்களுக் கெனத் தனிப்பாஷை யொன்று—ஏட்டுப்பாஷை—ஏற்பட் டிருக்கிறது. இவர்களால் இதுவரை தமிழ் வளர்ச்சிபெறாது தளர்ச்சியடைந்துள்ளதென்பதை மாடுமேய்க்கும் பையன் கூடக் கூசாமல் சொல்லுவான்.

தமிழர்களின் சைவமதத்தைக் கொல்லவேண்டும், தமிழர்களின் கோவில்களை இடித்துத் தரைமட்டமாகத் தள்ளவேண்டும், தமிழர்களின் கவித்திறமைக்கும், கற்பனு சக்திக்கும் அற்புதச் சான்றாய் அமைந்துள்ள கம்பராமா யணத்தைச் சுட்டுப் பொசுக்கவேண்டும், தமிழர்களின் பெயர்கள் கூடாது, ஆசாரங்கள் ஆகாது என்று கூறித் தமிழர்களையும், தமிழ்நாட்டையும், பாதாளத்திலாழ்த்தும் நோக்கத்துடன் பிறமதஞ்சேருங்கள், பிறமொழி பயிலுங்கள், பிறரின்கீழ் அடிமைகளாய் வாழுங்கள், என்று பிரசாரஞ் செய்யும் ஒரு தமிழ்நாட்டுப் பகைவனுக்குக்கூட இன்று தமிழின் மீது தனிக்காதல் பிறந்துள்ளது காலத்தின் கோல மேயாகும்.

நமது நாட்டுத் தொழில் வளர்ச்சியில் பிரியமில்லை. நமது நாட்டுப் பண்டங்களின் மீது மோகமில்லை. நமது நாட்டு நாகரிகத்தின் மீது பற்றில்லை. இவர்களுக்கு நமது நாட்டு மொழியின்மீது மட்டும் எங்ஙனம் திடீரென ஆவல் பொங்கிப் பிறந்ததோ என்றால் புரியக்கூடவில்லை.

தமிழ்மொழி பேணுமிவர்கள் கண்களுக்கு பள்ளியில் ஹிந்தி புகுத்துவதால்தானு தமிழுக்கு ஆபத்து வந்தது தெரிந்தது?

கச்சேரிகளில், சட்டசபைகளில், விளம்பரங்களில், விளம்பரப் பலகைகளில், அறிக்கைகளில், பிரசுரங்களில், பாட்டுகளில், கீர்த்தனங்களில், நாடகங்களில், பாடசாலை

போதனுமுறைகளில் தமிழல்லாத பிறமொழிகள் புகுந்து தமிழின் மணம் குன்றி தமிழையும் தமிழ் பண்டிதரையும் துச்சமாக்கிய நிலையைக் கண்டும், கேட்டும் உணர்ந்தும். இதுகாறும் ஏனிவர்கள் வாய்திறவாது மௌனம் சாதித் தார்கள்? சாதிக்கிறார்கள்?

மூவர் தேவாரம் ஆகாதாம்! பட்டினத்தார் பாடல் கூடாதாம்! குறள், நாலடியார் போன்ற தமிழ்நீதி நூல்கள் ஒவ்வாதாம்! நமது தனிப் பெருங்காவியங்கள் தீயனவாம்! கம்பராமாயணம் கயமையாம்! இவை நீங்கிய தமிழை இவர்கள் ஆதரிக்கிறார்களாம்! இவர்களே சுயமரியாதை வீரர்களாம்! என்னே இவர்களின் பேய்க்கூத்து!

கிராமப் புனருத்தாரண சங்கம்

இந்தியாவிலுள்ள ஏழுலட்சம் கிராமங்களில் நம்மில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் வதிகிறார்கள். அவர்கள் எல்லோரும் நிலத்தை அண்டியே வாழவேண்டியவர்களாக இருக்கிறார்கள். கால வேறுபாட்டினாலும், கால மழையின் மையாலும், நமது நலனில் சிறிதும் அக்கரையற்ற அந்நிய ஆட்சிமுறையாலும் அயல்நாட்டுப் பண்டங்கள் நமது சந்தைகளில் வந்து குவிந்ததாலும், இயந்திரங்களின் மூலம் ஏராளமான பொருட்கள் உற்பத்தியாவதாலும், நமது நாட்டுக் குடிசைகளில் நடைபெற்றுவந்த தொழில்களனைத் தும் மாண்டு, நமது நாட்டவர் தொழிலற்று, சோர்வுற்று, சோம்பலுற்று, பிழைக்க வழியற்றுக் கொடிய வியாதிகட்கும் பசிப்பிணியாதிகட்கும் இலக்காகியுள்ளதை விலக்கவும், இறந்துபோன நமது குடிசைத் தொழில்கள் மீண்டும் புத்துயிர்பெற்று அதன் மூலம் நம் மக்களும் நாடும் விழிப் புறவும், வயிறார உண்டுவாழவும் வேண்டுமென்ற நோக்கங் கொண்டே 'காந்தியடிகள் கிராமப் புனருத்தாரண சங்க மொன்றைக் கண்டுள்ளார். கிராமங்களில் உண்டாகும் பண்டங்களையே நாமனைவரும் வாங்குதல் நமது கடமை யாகிறது. அதன் மூலமே நாம் கிராம மக்களிடம் நெருங்

கிய தொடர்பு வைத்துக் கொள்ளமுடியும். அத்தொடர் பின்றி நாம் அவர்களை சுயராஜ்யப் போருக்கு ஆயத்தம் செய்ய வெண்ணுதல் பகற்கனவாய் முடியும். அந்தந்த கிராமங்களிலும் கிடைக்கும் மூலப் பொருட்களைக்கொண்டு ஆங்காங்கு பற்பல பண்டங்கள் தயாரித்து விற்பனை செய்ய சங்கங்கள் நிறுவப்படவேண்டும். இதற்கான முயற்சிகளை தேசபக்தர்கள் செய்வார்களாக.

காந்தி சேவா சங்கம்

அண்மையில் திலாங்கில் நடைபெற்ற காந்தி சேவாசங்க மகாநாட்டிற்கு அடியேன் போயிருந்தேன். மகாத்மா காந்தியின் ஜீவதாரமான கொள்கையாகிய அகிம்சாநெறியையும், சத்தியத்தையும் தங்கள் வாழ்நாளில் கடைப்பிடிப்பதாகக் கூறிக் கைச்சாத்திட்ட 150 பேர்களே இன்று அகில இந்தியாவுக்கும் இச்சங்கத்தின் அங்கத்தினர்களாக பாலில் வெண்ணை திரண்டதுபோல இருக்கிறார்கள். இந்நாட்டில் அடிகளாரின் கொள்கையை உள்ளும் புறமும் ஒருங்கே கொண்டுள்ளவர்கள் 150 பேர்களே இருக்கிறார்கள் என்பதை யாரால் நம்பமுடியும்?

மகாத்மா காந்தியடிகளால் போதிக்கப்பட்டுள்ள சத்தியாக்கிரக நெறிப்படி மக்களுக்குச் சேவை செய்வதே இச்சங்கத்தின் உத்தேசமாகும். இந்த உத்தேசம் சித்தியாவதின் பொருட்டு இச்சங்கத்தார் செய்யும் கார்யக் கிரமங்களாவன:

1. கதர்ப் பிரசாரம்
2. கிராமசேவை
3. சரீரசேவை
4. சுகாதாரம்
5. அரசியல் வேலை
6. ஹிந்தி பிரசாரம்

7. மதுவிலக்கு
8. ஹரிஜன சேவை
9. சமூக ஐக்கியம்
10. மாதர் முன்னேற்றம்
11. வைத்தியம்
12. சங்கட நிவாரணம்
13. பசுக்காத்தல்
14. காந்தீயத்தைப் பரப்புதல்

மேலே விவரித்த காரியாதிகளை நம்மில் அநேகர் செய்து வருகிறோமென்பதில் சந்தேகமில்லை. எனினும் கிராமங்கள்தோறும் சங்கங்கள் நிறுவி அகிம்சையிலும், சத்தியத்திலும் கட்டுப்பட்டோர் பலர் இச்சேவகத்தை ஆங்காங்கு மேற்கொள்ளுதல் மிகவும் அவசியமாகும். வெறும் மேடைப் பிரசங்கத்தினாலும், சுயராஜ்ய சுலோகங்களினாலும், தேர்தல் பிரசாரத்தினாலும் மக்கள் விழிப்படைவார்கள் என்று எண்ணுதல் பிசகாகும். உருவானதும், நிலையானதுமான முறையில் நாம் கிராம மக்களிடையே வேலை துவக்காவிடில் நமது பிரசாரங்கள் சமுத்திர அலைபோன்றும் புயற்காற்றைப் போன்றும் ஒரோர் சமயம் தோன்றிப் பின்னர் ஒன்றுமில்லாது மறைந்துபோகும்.

கோசம் ரட்சண சங்கம்

இதுவும் குடியானவன் நலன் கருதியே மகாத்மாவால் ஆரம்பிக்கப்பட்டதாகும். பசு காத்தலே நமது முன்னோர்களின் முக்கிய கடமையாயிருந்தது. உழுதுண்டு வாழும் மக்களாகிய நமக்குப் பசு மிகவும் அத்தியாவசியமானது. பசுவின்றி இந்நாட்டில் எவராலும் ஒரு துளி அன்னமும் புசிக்க முடியாது. இந்நாளில் விவசாயம் முன்னேற்றத்தைப்பற்றிப் பேசுபவர்களெல்லாம் இயந்திர அபிவிருத்திகளையே மனதிலெண்ணிப் பேசுகிறார்கள், அவர்கள் இந்

நாட்டு நிலையம், குடியானவர்களுடைய ஏழ்மை நிலையும் கொஞ்சமும் அறியாதவர்கள். மோட்டார் (Tractors) உழவுகளைக் கையாளத்தக்க பெரிய நிலப்பரப்புகள் நமது குடியானவர்களிடம் கிடையாது. அதற்கு வேண்டிய முதலீடும் அவர்களிடம் இல்லை செயற்கை உரங்களைக் கையாளவும் வசதியில்லை. என்னுடைய சொந்த ஜில்லாவில் மோட்டார் பம்புகள் வைக்கப்பட்டுள்ள கிணறுகளில் 100-க்கு 90 தண்ணீர் வற்றிப் போய் அவற்றினுள் பாய்விரித்துப் படுத்துறங்கும் நிலைமையிலிருக்கின்றன. அரசாங்கத்திலும் சமூகப் பொருளாதார அமைப்பிலும் பெரிய மாறுதல்கள் ஏற்படும் வரையில் விவசாயிக்கும் வியசாயத்துக்கும் பசுக்காத்தலாலும், குடிசைத் தொழில்களாலுமே உதவியும் சீர்திருத்தமும் செய்ய முடியும்.

இதுவன்றி நமது குழந்தைகள் நோவின்றி, உடல் நலனும் மனோவலியும் பெற்று வாழ்தலுக்குப் பசுவின்பால் மிகவும் இன்றியமையாதது. அதை உத்தேசித்தேனும் நாம் பசுக்களைக் காக்கவும், வளர்த்துப் பெருக்கவும், கடமைப் பட்டிருக்கிறோம். இச்சமயம் சென்னையில் நடக்கும் சம்பவம் என் நினைவுக்கு வருகிறது. அங்கு பால் விற்பவர்கள் இளங் கன்றுகளைக் கொன்று அதன் சரீரங்களில் வைக்கோலைத் துருத்தி எடுத்துச் செல்வதும், கன்றுக்குப் பால் கொடாமல் அதை எலும்புந்தோலும் தாங்கிய கூடாக்கி தெருக்களில் பிடித்து நெக்கித்தள்ளுவதும் பயங்கரமும் கொடுமையும் நிறைந்த காட்சியாகும். இதைத் தடைசெய்ய சென்னையில் யாரும் எண்ணாதது புதுமையாக இருக்கிறது. நமது காங்கிரஸ் சட்டசபை மெம்பர்களாவது இதைக் கவனித்துத் தக்கது செய்யுமாறு வேண்டுகிறேன்.

அரசாங்கத்தாரால் ரிசர்வ் செய்யப்பட்டுள்ள காடுகளில் கால் நடைகள் சென்று மேயும் கட்டணத்தைக் குறைத்திருப்பதின் மூலம் குடியானவனின் பெருஞ்சுமை யொன்று குறைந்திருக்கிறது. இந்தச் சலுகையால் கால்நடைகள் பெருகலாம். மலைகளும், காடுகளும் இல்லாத பிறதேசங்களில்

மேய்ச்சல் வசதிக்காக ஊர் மந்தைகளேயும் புறம்போக்குகளே யும் யாருக்கும் தர்க்காஸ்து கொடாமல் காப்பாற்ற வேண்டியது சர்க்காரின் கடமையாகிறது. மற்றும் குடி யானவர்கள் தங்கள் பூமிகளில் ஒரு பாகத்தை மேய்ச்சலுக் கென ஒதுக்கிவைக்க வேண்டுமெனவும், அவ்வாறு ஒதுக்கிய பாகத்துக்கு வரியில்லேயெனவும் சட்டங்கள் செய்தால் பசுக்களே அதிகமாக காக்க முடியும். மேய்ச்சல் தரைகள் இல்லாத காரணத்தினுலேயே கிழப் பசுக்களும் இளங்கன்று களும் கசாப்புக்காரன் வாளுக்கு நித்தமும் இரையாகின்றன.

காங்கிரஸ் மந்திரிசபை

காங்கிரஸ் மந்திரிசபைகள் ஏற்பட்டதற்கும், அவர்கள் கடந்த பத்து மாதங்களாக ஒரு துருப்பிடித்த இயந்திரத்தை அதி சாமர்த்தியமாக ஓட்டிக் கொண்டிருப்பதற்கும் முக்கிய காரணஸ்தர் மகாத்மா காந்தியடிகளேயாகும். காங்கிரஸ் மந்திரிசபையார் குடியானவர்களின் க்ஷேமாபிவிருத்தியில் கண்ணுங்கருத்துமாயிருந்து பற்பல காரியங்களாற்றி வரு வதை நீங்கள் பத்திரிகை வாயிலாகவும், பிரத்தியட்ச பலன் களாலும் அறிந்துகொண்டிருப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் ஜனங்களின் எஜமானர்கள் என்று கருதியிருந்ததும், லஞ்சம் வாங்கும் பழக்கமும், ஜனங்களே உதாசீனப்படுத்தி அவமரி யாதையாகப் பேசியும் நடத்தியும் மிரட்டியும் வந்த வழக்க மும், இப்போது மாறி, தாங்கள் ஜனங்களின் ஊழியர்கள் என்பதை உணர்ந்து அதற்கேற்ப நடக்கவாரம்பித்துவிட் டார்ாள். காங்கிரசார் வீண் வேதாந்திகளல்ல. வெறும் நாசவேலேயில் ஈடுபட்ட புரட்சியாளர்களல்ல. ஆனுல் ஆண் மையும், மதிவண்மையும், நிர்வாகத்திறமையும், உலகானு பவமும், ஒழுக்கமும், வாய்மையும், கட்டுப்பாடும், தியாக சிந்தனேயும், கலங்கா நெஞ்சமும் ஒருங்கே அமைந்தவர்கள் என்பதை தெளிவுற நிரூபித்துக் காட்டிவிட்டார்கள். காங் கிரசுக்கு எதிர்க்கட்சியாய் அமைந்துள்ள சிலர்கள் காங்கிரஸ் கட்சியின் குணத்திலோ, கொள்கையிலோ, செய்கையிலோ,

நிர்வாகப் போக்கிலோ, இதர ஏற்பாட்டிலோ யாதொரு குறையுங் காணவோ கூறவோ முடியாமல் பிரதம மந்திரி தன் வேஷ்டியைத் தானே துவைத்தார், தன் இலையைத் தானே எடுத்தார், தன் குழந்தையைத் தானே தூக்கினுர், கருப்புக் கண்ணுடி போட்டுக்கொண்டிருக்கிருர். காரியதரிசிக்குக் கதரைக் கொடுத்து அதை உடுத்தும்படி கட்டாயம் செய்துவிட்டார். காப்பி உப்புமா விற்கும் பார்ப்பான் மோட்டார்கார் எப்படி விற்கலாம்? அப்படி விற்ருலும் இவர் எப்படி அங்கு போய் வாங்கலாம்? என்றிவ்வாருன மிஸ். மேயோ காரியங்களில் இறங்கிவிட்டார்கள். அந்தோ! இவர்கள் மதி சென்றவாறென்னே!

முடிவுரை

பெரியோர்களே!

நீண்ட நேரமாகப் பற்பல விஷயங்களைக் கூறி உங்கள் பொறுமையைப் பரீட்சித்துவிட்டேன். அரசியல் மேடைக்குப் பொருத்தமற்ற விஷயங்கள் ஏதேனும் நான் கூறியிருந்தால் அவற்றை மறந்துவிடுங்கள். நமது நாடும் நாமும் இன்று அந்நியருக்கு அடிமைகளாய் இருக்கிரும் என்பதை சதா ஞாபகத்திலிருத்துங்கள். நமது நாடு விடுதலை பெறுவதற்கான முயற்சிகளைச் செய்யுங்கள். அதுவே என் பிரார்த்தனே. நமது மக்களுடைய அறியாமையைப் போக்குங்கள். அவர்கள் கைத்தொழிலுக்கு ஆக்கம் அளியுங்கள். அவர்களது வரண்ட எலும்புகளிலே புதிய ரத்தமும், குழிந்த கண்களிலே பிரகாசமும் சோர்வுற்ற நெஞ்சினிலே உற்சாகமும், புதியதொரு நம்பிக்கையும் ஏற்பட உழையுங்கள். நம்மில் பகையை, அச்சம், பேதமையகன்று வீரமும் சுதந்திர தாகமும் தழைக்க உதவுங்கள். சுதந்திரமடைவதற்கு நாம் மிகவும் பயங்கரமான யுத்தம் செய்யவேண்டியிருக்கும். அதனிமித்தம் காங்கிரசையும் அதன் தொடர்புள்ள ஸ்தாபனங்களையும் இப்போதிருந்தே பலப்படுத்துங்கள். திரள் திரளாக

அவற்றினிற் சேர்ந்து தொழிலாற்றுங்கள். மக்களுக்கிடையே சாதிமத பேதமின்றி நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துங்கள். நான் மேலே விவரித்த ஸ்தாபனங்கள் வேறு, காங்கிரஸ் வேறு, என்றிராமல் உங்கள் ஒத்துழைப்பை இச் சங்கங்கள் அனைத்திற்கும் தந்து அவற்றின் உபதேசங்களைப் பூர்த்தி செய்யுங்கள்.

தேசத்திற்காகவும், தர்மத்திற்காகவும், நமது மானத்தைக் காப்பதற்காகவும், நமது முன்னோர்களின் புகழை நிலை நாட்டுவதற்காகவும், பலிபீடத்தில் தங்கள் உயிரை உவப்புடன் கொடுக்கும் அகிம்சைப்படையில் அணிவகுத்து ஒன்று சேருங்கள். தனக்கென வாழ்வதும், தனக்கெனச் சாவதும் ஒருங்கே கடினம். அதிலே சுயநலம், பயம், கோழைத்தனம், அசத்தியம் எல்லாம் சார்ந்து நிற்கும். பிறர்க்கென வாழ்தலும், பிறர்க்கென சாதலும், ஆனந்தம். அதிலே ஆண்மை, வீரம், சத்தியம், அன்பு, நம்பிக்கை, அனைத்தும் நிரம்பியிருக்கும். ஸ்மாசனத்தையும் சிம்மாசனத்தையும் ஒன்றென மதிக்கும் மனோவலிமை நம்மில் ஏற்படுமாக. நமது உழைப்பாலும் நமது தியாகத்தாலும் நமது ரத்தத்தை இப்பூமியில் சிந்தியேனும் நமது காலத்தில் நாம் இந்நாட்டு விடுதலையைப் பெற்று நமது சந்ததியார்களுக்கு அளிப்போமாக.

வந்தேமாதரம்.

தஞ்சை ஜில்லா
நன்னிலம் தாலூகா
மூன்றாவது தேசிய வாலிபர் மகாநாடு

பூந்தோட்டம்—24-4-1938

அன்புசான்ற தோழர்களே!

நீர்வளம், நிலவளம், மற்றெல்லா வளமும் ஒருங்கே நிரம்பிய நன்னிலம் தாலூகா வாலிபர் மகாநாட்டில் தலைமை வகிக்கும் பெருமை தந்த உங்கட்கு எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். இக் கண்ணியம் மிக்க பதவிக்குத் தாங்கள் என்னிலும் மிக்காரைத் தேர்ந்தெடுத்திருக்கலாம்.

நமது தேசம்

நமது தேசம் இவ்வுலகின் கண்ணுள்ள மற்றெல்லாத் தேசங்களைக் காட்டிலும் மிகப் பழமையும், பெருமையும் வாய்ந்தது. வடக்கே ஹிமாசலத்திலிருந்து தெற்கே குமரி வரையிலும் மேற்கே காஷ்மீரத்திலிருந்து கிழக்கே வங்காளம் வரையிலும் வியாபித்துள்ளதும், முப்புறமும் கடல் சூழ்ந்ததும், வானமளாவும் மலைத்தொடர்களும், என்றும் வற்றாது

பொய்கைகளும், வளந்தரும் ஜீவநதிகளும், அடர்ந்த சோலைகளும், பரந்த வயல்களும், மிக விஸ்தீரணமான நிலப்பரப்புகளும், அறுசுவைதரும் காய்கனி விருட்ச வகைகளும், மத யானைகளும், மற்றும் செப்பற்கரிய இயற்கையின் மாட்சிகளும் மலிந்த பொன்னாடு. இதனைப் பாரதியார்,

1. மன்னு மிமயமலை யெங்கள் மலையே
மாநில மீததுபோற் பிறிதிலையே
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே
பன்னிரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிதுபோலே?
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவ மிஃதை யெமக்கிலையீடே.

2. மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லனயாவையு நாடுறுநாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரதநாடு பழம் பெரு நாடே
பாடுவமிஃதை யெமக்கிலையீடே!

3. இன்னல் வந்துற்றிடும் போததற்கஞ்சோம்
ஏழையராகி யினி மண்ணிற் றுஞ்சோம்
தன்னலம் பேணி யிழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனிலினிக்கையை விரியோம்
கன்னறுந்தேனும் கனியுமின்பாலும்
கதலியும் செந்நெலும் நல்குமெக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே!
ஓதுவ மிஃதை யெமக்கிலையீடே!

என்றும்,

1. ஞானத்திலே பரமோனத்திலே—உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர் நாடு.

2. தீரத்திலே படைவீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே உபகாரத்திலே
சாரத்திலே மிகு சாத்திரங்கண்டு
தருவதிலே உயர் நாடு.

3. நன்மையிலே உடல் வண்மையிலே—செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே
பொன்மயிலொத்திடு மாதர் தங்கற்பின்
புகழினிலே உயர் நாடு.

4. ஆக்கத்திலே தொழிலூக்கத்திலே—புய
வீக்கத்திலே உயர் நோக்கத்திலே
காக்கத் திறல்கொண்ட மல்லர்தஞ்சேனைக்
கடலினிலே உயர் நாடு.

5. வண்மையிலே உளத்தின்மையிலே—மனத்
தன்மையிலே மதி நுண்மையிலே
உண்மையிலே தவறுத புலவர்
உணர்வினிலே உயர் நாடு.

6. யாகத்திலே தவவேகத்திலே—தனி
யோகத்திலே பலபோகத்திலே
ஆகத்திலே தெய்வபக்தி கொண்டார்தம்
அருளினிலே உயர் நாடு.

7. ஆற்றினிலே சுனையூற்றினிலே—தென்றற்
காற்றினிலே மலைப்பேற்றினிலே
ஏற்றினிலே பயனீந்திடுங் காலி
யினத்தினிலே உயர் நாடு.

8. தோட்டத்திலே மரக்கூட்டத்திலே—கனி
யீட்டத்திலே பயிரூட்டத்திலே
தேட்டத்திலே அடங்காத நிதியின்
சிறப்பினிலே உயர் நாடு—இந்தப்
பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள் பாரத நாடு.

என்றும் கூறியுள்ளார்.

சுயராஜயம் நமது பிறப்புரிமை

இத்தனை சீரும் சிறப்பும் மிக்க நமது நாடும், நமது நாட்டவரும் இன்று அந்நியருக்கு அடிமைப்பட்டுக் கிடப்பது மனித நாகரிகத்துக்கே அவமானமாகும். இதுபற்றியே காலஞ்சென்ற லோகமான்ய பால கங்காதர திலகர் சுயராஜ்யம் நமது பிறப்புரிமையென்பதை பறைசாற்றி நமது சுதந்திர வித்தை விதைத்தார். அவ்வித்து இன்று நமது சுதந்திர தாகத்தாலும், சத்தியாகிரகப் போராட்டத்தாலும், தியாகத்தாலும், சிறைக்கோட்டங்களைத் தேடி நுழைந்ததாலும், சத்தியத்தாலும், அகிம்சை நெறியாலும் முளைவிட்டுத் தழைத்துக் கொழுந்துவிட்டு, இலையாகிச் செடியாகி, மரமாகி அரும்பெடுத்து நிற்கிறது. நாம் இனிச் செய்யவிருக்கும் கடைசிப்போராட்டத்தின் மூலம் இவ்வரும்பு மொட்டாகி, வெடித்துப்பூத்துக் காய்த்துப்பிஞ்சாகி, முற்றிக் காயாகி கடைசியில் சுதந்திரக்கனி தரப்போகின்றது. ஏனைய மரங்களைப்போல் இச்சுயராஜ்ய மரத்தின் வேர்கள் பூமியில் செல்லவில்லை. ஆனல் நீடூழிகாலம் அந்நியருக்கு அடிமையாக வாழ்ந்து தடித்து இறுகிப்போயிருந்த இந்நாட்டவரின் நெஞ்சைப் பிளந்து அதன் வேர்கள் சென்றிருக்கின்றன. இந்நாட்டில் இந்நாள்வதியும் முப்பத்தைந்து கோடிப் பேர்களின் உள்ளத்திலும் இம்மரத்தின் வேர்கள் பற்றிப் பாய்ந்து ஊன்றி நிற்கின்றன.

ஒரு தனி மனிதனுக்குச் சுதந்திரமும் விடுதலையும் எவ்வளவு அவசியமோ அதைப் போன்றே ஒரு நாட்டுக்கும் அவை அவசியமாகும். சுதந்திரமிழந்த அடிமை மனிதன்

தனது அடிமைத் தளைகளை நீக்கத் தன்னால் ஆனதனைத்தும் செய்வான். அவ்வாறே அடிமை நாடும் தனது அடிமைத் தனத்தைப் போக்கத் தன்னால் ஆனதனைத்தும் அஞ்சாது செய்யும். எனவே நாம் இன்று விடுதலைபெற நம்மையடக்கி யாளும் அந்நியவாட்சியுடன் பல்வேறு முறைகளாலும் போராடி வருகிறோம். இன்று காங்கிரஸ் மந்திரி பீடத்தில் அமர்ந்திருப்பது நமது விடுதலைப் போரில் ஒரு அம்சமேயன்றி மாற்றானுடன் கூட்டுறவோ ஒத்துழைப்போ பூண்டுள்ளதாக அர்த்தமாகாது. மந்திரிகள் அரசாங்கக் கோட்டையுள் தங்கள் காரியாதிகளைச் செய்வதோடும் அங்கு அவர்கள் கெஞ்சிக் கூத்தாடிப் பெற்று நமக்கு வீசும் கடன் நிவாரணம், மதுவிலக்கு, கல்விக்கும் கைத்தொழிலுக்கும் உதவும் சட்டங்கள், போன்ற மிகவும் துச்சமாகிய இலாபங்களைப் பெரிதென்றெண்ணி, நாம் வாயைப் பொத்திக் கையைக் கட்டி காங்கிரஸ் மந்திரிகளுக்கு ஜேயும், பூமாலைகளும் போட்டுக்கொண்டிருப்போமென யாரும் எண்ணி மதி மோசம் போகாதீர்கள். காங்கிரஸ் மந்திரிகளும் பிரிட்டிஷ் தந்திரிகளும் ஒருங்கே கலங்கும்படியான கிளர்ச்சியை நாம் ஓயாது செய்துகொண்டே இருக்கவேண்டும். சுயராஜ்யம் வெறும் வார்த்தையல்ல, கூச்சலல்ல, மூச்சல்ல ஆனால் நமது உயிர் என்பதை மனதில் வைத்து இரவு பகல், வெப்பம் குளிர், பசி, பிணி, மூப்பு, வறுமை, குடும்பத் தொல்லை, கவலையாகிய ஒன்றையும் பொருட்படுத்தாது காலனுங் கண்டு நடுநடுங்கும் வண்ணம் நாம் கிளர்ச்சி செய்துகொண்டே இருக்கவேண்டும். நமது உடலைவிட்டு ஆவி போவதாயினும் சுயராஜ்யம் என்று கதறிவிட்டே போகவேண்டும். மயானத்தில் நமது உடல் வெந்து நீராகும்போதும் சுயராஜ்யம் என்ற பேரிரைச்சல் ஆங்கும் கிளம்பவேண்டும்.

அவமானத்தை நாம் இனிப் பொறுக்கமாட்டோம்

அடிமையென்ற அவமானத்தை இனி அரை நொடியும் நாம் பொறுத்திருக்கமாட்டோம். பிரிட்டிஷாரின் யூனியன்

ஜாக் கொடி நமது கோட்டைக் கொத்தளங்கள்மீது ஒய்யார மாகப் பறந்து நாம் பிறநாட்டினருக்கு அடிமைகளாகவிருக் கின்றேம் என்பதைச் சதா நினைப்பூட்டி நம்மை அவமதித்துக் கொண்டிருப்பதை நாம் நமது திறந்து கண்களால் கண்டு சகித்திருக்க முடியாது. அந்நிய நாட்டவர்கள் இங்கு நமது ஊழியர்களாய்ச் சேவை செய்வதையும், நமது நலன்களுக்குப் பாதகமின்றி இதர தொழில்களோ வர்த்தகமோ புரிவதை யும் நாம் அனுமதிப்போம். ஆனல் அவர்கள் நமது எஜமானர்களாய் நம்மீது சவாரி செய்வதையும், நமது வர்த்தகமும் கைத்தொழிலும் பாழ்பட்டுப் போமாறு போட்டியும் சூழ்ச்சியும் புரிவதையும் இனி நாம் தாளமாட் டோம். பட்சி சாதிகள் யாதொரு கட்டுப்பாடுமின்றி இரை தேடியுண்டு தத்தம் கூடுகளில் சுதந்திரமாக வாழ்கின்றன. மிருக ஜாதிகள் தம்மிஷ்டம்போல் கானகத்தே திரிகின்றன. ஆனல் ஆறறிவு படைத்த மனித ஜாதியார் இன்று பிறருக் கடிமைப்பட்டு உண்ண உணவும், உடுக்கத் துணியும், நிற்க நிழலும், ஒதுங்கக் குடிசையுமின்றி நாய்களிலும் பேய்களி லும் கேவலமாய் வாழ்வதை நாம் கண்டு எப்படிக் கண்களை மூடிக்கொண்டு சும்மாவிருக்க முடியும்? எந்த நாட்டிலும் இந்த அநீதிகள் இல்லை. இனி நாம் அஞ்சமாட்டோம். விடுதலை பெறும் வரை துஞ்சவுமாட்டோம். ஒரு சின்னஞ் சிறிய ஆப்கானிஸ்தானம் தலை நிமிர்ந்து வாழ்கையில் முப்பத் தைந்து கோடி மக்கள் வதியும் இப்பரந்த பரதகண்டம் எப்படி அந்நியருக்கு அடிமையாய் இந்த இருபதாம் நூற் ருண்டில் இருந்துகொண்டிருக்க முடியும்? சுதந்திர தாகங் கொண்ட நம்மை இன்னமும் பிரிட்டிஷார் அடக்கியாளப் பார்ப்பது, தீக்குழம்பை வாரியெறியும் மிகப்பயங்கரமான எரிமலையின் வாயைத் தங்கள் கைக்குட்டையால் மூட எத்தனித்த பேதமைக்கு ஒப்பாகும்.

அந்நியவாட்சியின் தீமைகள்

கடந்த நூற்றைம்பது வருடங்களாக இந்நாட்டில் நடை பெற்று வரும் அந்நியவாட்சியின் பயனய் நமது நாடும் நாமும்

யாதொரு முற்போக்கும் அடையாது நாளுக்கு நாள் மிகக் கேவலமான நிலைமை எய்தி வந்திருக்கிறோம். அந்நியர் இந் நாட்டில் காலடி வைக்குமுன் நமது நாட்டில் செல்வங் கொழித்தது. நம் மக்கள் பசியும் பிணியுமற்று வாழ்ந்திருந் தனர். நமது செல்வத்தை நாடியே, நமது சுகபோகங்களைப் தட்டிப்பறிக்கவே அந்நியர் பலர் ஆவலோடு நம் நாட்டைத் தேடி பல்லாயிரம் மையிலுக்கப்பாலிருந்து வந்தனர். இன்று செல்வத்தில், சுகபோகத்தில், கல்வியில், கைத்தொழில் வளர்ச் சியில் இந்தியா அவர்கள் கண்களில் மட்டமாகப் படுகிறது. அந்நியவாட்சியின் துணைகொண்டு அந்நிய தேசத்தவர்கள் நமது வியாபாரத்தை நசுக்கி நமது கைத்தொழில்களை நாச முறச்செய்துவிட்டனர்; செய்தும் வருகின்றனர். இந்தியாவில் ரயில்பாதைகளும், நல்ல ரோடுகளும், கல்வி நிலையங்களும், நவீன இயந்திரச்சாலைகளுகளும் பிரிட்டிஷாரின் நன்முயற்சி யால் ஏற்பட்டிருப்பதாகச் சில பேதையர்கள் பேசுகின்றனர். உலகத்தில் மற்ற நாடுகள் இத்துறைகளில் அடைந்திருக் கும் முன்னேற்றத்தையும், இந்தியராகிய நம்மீது சுமத்தப் பட்டிருக்கும் கடன் பளுவையும், வருடத்தில் இருநூறு கோடி ரூபாய்களைக் கூசாமல் விழுங்கும் அரசாங்க அமைப் பையும், இராணுவச்சாத்தான்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மற்ற தேசங்களில் ஏற்பட்டுள்ள சாதகங்களில் ஆயிரத் தில் ஒரு பங்குகூட இந்நாட்டில் ஏற்படவில்லை என்பது விளங்கும். நமது கடற்கரையோரங்களில் நூற்றுக்கணக் கான கப்பல்கள் ஓடுகின்றன. ஒன்றுவது நம் நாட்டில் செய்யப்படவில்லை. நமது நாட்டில் ஆயிரக்கணக்கான மைல் நீளமுள்ள புகைவண்டிகள் செல்லுகின்றன. ஒரு இன்ஜினுவது இந்நாட்டில் இதுவரை செய்யப்படவில்லை. நமது தெருக்களில் புழுதியை மேகம்போலக் கிளப்பி மக்கள் வாயிலும், வயிற்றிலும், கண்ணிலும், மூக்கிலும் மண்ணைவாரி வீசும் மோட்டார் எமன்களில் ஒன்றுவது இந்நாட்டில் செய்யப்படவில்லை. நமது நாட்டில் 600-க்கு மேற்பட்ட பஞ்சாலைகள் இருப்பதாக ஜம்பம் பேசுகிறார்கள். ஆனல் அவற்றில் பூட்டியுள்ள இயந்திரங்கள் ஒன்றுவது இங்கு

செய்யப்படவில்லை. இவற்றைச் செய்தற்குரிய பொருளும், வகையும், மக்களும், சௌகர்யமுமிருந்தும் நமது நலனில் அக்கறையில்லாத அரசாங்கமாகையால் நாளதுவரை இதைப் பற்றி அவர்கள் சிந்திக்கவேயில்லை. இதர நாடுகளில் வேலை யற்றிருப்போரைக் கணக்கிட்டு அவர்களுக்கு உபகாரம் செய்யப்படுகிறது. ஆனால் இந்த நாட்டிலே வேலையில் உள்ளவர்களைக் கணக்கிட்டு அவர்கட்கு இந்நாட்டின் வரிப் பணம் பங்கிடப்படுகிறது. வேலையற்றோர்களின் உதவிக்கு பசி, பிணி, பஞ்சம், பிளேக், வயிற்றுப்போக்கு, வாந்திபேதி, வைசூரி, தற்கொலை, அற்பாயுள், அகால மரணமாகிய தேவதைகளின் கருணை வழங்கப்படுகிறது.

இந்தியாவில் சுயவாட்சி இருந்திருந்தால் இக்கதி நேர்ந் திராது. அது இந்நாட்டு மக்களின் முன்னேற்றமொன்றையே கருத்தில் கொண்டு அரசாட்சி செய்திருக்கும். இந்நாட்டின் தொழிலையும் வர்த்தகத்தையும் அந்நியர் சூறையாடாமல் காத்து ரட்சித்திருக்கும். இந்தியாவின் மண்ணும், இயற்கை வளங்களும், நதிகளும், சுரங்கங்களும், காடுகளும், இந்தி யருக்கு வேண்டிய சகலமும் தரும் வளமுடையதாகவிருக் கின்றன. இந்தியாவுக்கு வேண்டிய நிலக்கரியும் இரும்பும் இந்திய மண்ணில் புதைந்து கிடக்கின்றன. இந்தியருக்கு வேண்டிய அளவு சர்க்கரை தரத்தக்க கரும்புகள் இந்நாட் டின் கரிசல் பூமியில் கம்பீரமாக ஓங்கி விளைகின்றன. ஆனால் இரும்புக்கும் கரும்புக்கும், நிலக்கரிக்கும் எண்ணற்ற கோடிப் பணம் இந்தியாவைவிட்டு அந்நிய நாடுகளுக்குத் தினமும் போய்க்கொண்டிருக்கிறது. இந்தியரின் ஆடைக்கு வேண்டி யதைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமான பருத்தி இந் நாடெங்கும் விளைந்தும் அந்நியவாடையும் அந்நியப்பருத்தியும் இந்நாடெங்கும் வந்து குவிந்து, நமது பணத்தைப் பறித்து நம்மை ஓட்டாண்டிகளாக்கி வருகின்றன. இந்தியாவின் காடுகளிலே காகிதத்துக்கு வேண்டிய கணக்கற்ற மூலப் பொருட்கள் இருக்கின்றன. ஆனால் அந்நிய நாட்டின் காகி தத்தை நாம் அளவற்ற பணம் கொடுத்து வாங்கவேண்டி

யிருக்கிறது. இந்தியாவின் நிலப்பரப்பு முழுவதையும் நீரால் பரப்பத்தக்க ஜீவநதிகள் பல இந்நாட்டில் ஓடுகின்றன. அவற்றைத் தேக்கி வாய்க்கால்களில் பாய்ச்சி நிலத்தை உழுது விதைக்க வகையில்லாமல் நமது நிலத்தில் ஐந்தில் நான்கு பாகம் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண் டிருக்கிறது. கைத்தொழில் செழிக்கும் வண்ணம் மின்சார சக்தியை ஏற்படுத்த எத்தனையோ நீர் வீழ்ச்சிகள் நமது நாடெங்கும் இருக்கின்றன. ஆனால் அவற்றைப் பயன்படுத்த வகையின்றி விழிக்கிறோம். அந்நிய ஆதிக்கத்தின் ஆதரவால் அந்நியநாட்டு மூலதனத்தைப் போட்டு இந்நாட்டில் மின்சார வேகத்தைக் கிளப்பும் அயல் நாட்டுக்கம்பெனிகள் நமது தொழில் செழிக்கவொண்ணாதவகையில் விலைபோட்டு வசூலிக்கின்றன. விலையாகாத சக்தியை வீணில் பூமிக்குள் விடுத்துப் பாழாக்குகின்றன. இந்நிலையில் இன்று இந்தியா ஏழ்மைப்பிணியால் வாடுவதில் என்ன அதிசயம் இருக்கப் போகிறது?

தமது நாட்டவரின் சராசரி வருமானம் மாதமொன்றுக்கு நான்கு ரூபாயுக்கும் குறைவாகவிருக்கும்போது, அந்த நான்கு ரூபாயுக்கும் கதியின்றிப் பலகோடிப் பேர்கள் ஏங்கித் திரியும்போது, நமது நாட்டையாளும் வைசிராயுக்கு மாதம் இருபத்துநான்காயிரம் ரூபாயும், கவர்னர்களுக்கு பனிரண்டாயிரம் ரூபாயும், இதர உத்தியோகஸ்தர்களுக்கு பத்தாயிரம், ஐயாயிரம், மூவாயிரம், இரண்டாயிரம் என்றும் வாரிக் கொடுக்கப்படுகிறது. அந்நிய நாட்டுச் சைன்யங்களுக்கு அறுபதுகோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. இத்தனை ரூபாயும் அவர்கள் வாங்கி மூட்டை கட்டிக் கொண்டு, தங்கள் வாழ்நாள் பூராவும் இங்கு தங்கி தங்கள் அறிவையும், அனுபவத்தையும் இந் நாட்டின் முன்னேற்றத்தில் பயன்படுத்தாமல், சொல்லாமல் கப்பலேறிக் கடல் கடந்து தங்கள் சொந்த தேசத்துக்குப் போய்விடுகின்றார்கள். செத்தபின்னர் சனியன் விட்டுவிடுமென்பார்கள். ஆனால் இந்த சனியன்கள் நம்மை விட்டுச் சென்றபின்னரும் நம்மை விடாமல் மாதந்தோறும் பென்ஷனாகப் பலகோடி ரூபாய்

களை வாங்கித் தின்று கொழுத்து நம்மைப் பட்டினி போட்டு மாளச்செய்கின்றன. கர்ஸன், வெல்லிங்டன், ரீடிங் என்ற வைசிராய்களுக்கும், பட்லர், பார்பர், டோபி, ஸ்டோன், கிரீன், பிளேக் போன்ற கவர்னர்களுக்கும் பதிலாக நமது கோகலே, திலகர், லஜபதிராய், சித்தரஞ்சனதாஸ், முகம்மதலி, மோதிலால் நேரு போன்ற நம்மவர்கள் நமது நாட்டை ஆட்சி செய்திருந்தால் அவர்களால் இந்நாட்டு மக்கள் எத்தனையோ முன்னேற்றமடைந்திருப்பார்கள்.

நம்முடைய நாட்டைவிட்டு பிரிட்டிஷார் கப்பலேறி விட்டால் நமது நாடு அதோகதியாகப் போய்விடுமோ வெனச் சில பேதையர் அஞ்சுகின்றனர். இந்தியர்களின் போர்முறையும் வீரமும் எத்தகையதென்று சென்ற மகா யுத்தத்தின்போது பிரான்சில் முறியடிக்கப்பட்ட ஜர்மானியர்களைக் கேட்டால் அவர்கள் சொல்லுவார்கள். ஜர்மானியர் பெல்ஜியத்தை மிதித்து பிரான்சினுள் பிரவேசித்து அதன் கழுத்தை நெருக்கி ஆண்டவர்ப் கோட்டையைத் தாக்கி, இங்கிலாந்திலுள்ள டோவர் துறைமுகத்தின்மீது குறி பார்க்கத் தொடங்கியதைக் கண்டதும் பிரிட்டிஷாரின் வீரம் காய்ந்து வரண்டு, "ஐயோ! இந்தியரே! அபயம், அபயம் வாருங்கள் என்று கூக்குரலிட்டனர். யுத்தம் முடிந்ததும் உங்கட்குச் சுயநிர்ணய உரிமை (சுயராஜ்யம்) தருகிறோம்" என்று வாக்குமளித்தனர். நமது நாட்டு மல்லர்களின் தீரத்தால், புயவலியால், நமது கூர்க்கர்களின் கூரிய கத்தியால் ஜர்மானியர் வதைப்பட்டு யுத்தமும் நின்று பிரிட்டிஷ் பேரிகையும் கொட்டப்பட்டது. அதன் பின்னர் நாம் பெற்ற வெகுமதிகள் ரௌலட் சட்டமும், பாஞ்சாலக்கொடுமையும், கிலாபாத் அநீதியும், இரட்டை ஆட்சியும், சிறைவாசமும், சொத்துப் பறிமுதலும், வகுப்புத்துவேஷக் கலகமும் மற்றும் இத்யாதி கொடுமைகளேயாகும்.

நமது சீக்கிய வீரர்கள் பாஞ்சாலத்தில் அரசு செலுத்திய போது எல்லைப்புற மாகாணங்களில் எத்தகைய தொல்லையுமில்லாமல் சமாதானம் நிலவியதாகச் சரித்திரம் கூறுகிறது.

ஆனால் பிரிட்டிஷார் வருஷந்தோறும் பலகோடி ரூபாய்கள் செலவழித்தும், பிரிட்டிஷ் படைகள் நவீன போர் முறைகளைக் கையாண்டும் ஆகாயக் கப்பல்களிலிருந்து ஓயாது குண்டுகளை வீசிப் பல்லாயிரம் மக்களைக் கொன்றும், மீண்டும் எல்லைப்புற ஓரத்தில் அமைதி நிலவவில்லை என்பது பிரிட்டிஷ் படையின் வலிமையற்ற நிலைமை நன்கு விளக்கிக் காட்டுகிறது.

பிரிட்டிஷ் படைகளுக்குச் செலவழிக்கப்படும் பகுதிப் பணத்தில் நம் மகா வல்லமை பொருந்திய படையை ஒரே ஆண்டில் திரட்டிப் பயிற்சியளித்துவிட முடியும். மற்றும் விஷப்புகைகளாலும், வெடிகுண்டுகளாலும் போர் செய்யும் இக்காலத்தில் பணமொன்றிருந்தால் எத்தனையோ நவீன நாசகாரியங்கள் புரியும் இயந்திரங்களைச் செய்துவிட முடியும். நமது அண்மையிலிருக்கும் ஆப்கானிஸ்தானத்தில் வருடத்தில் இராணுவத்திற்கு அரைக்கோடி ரூபாயே செலவழிக்கப்படுகிறதாம். அதை முறியடிக்க பிரிட்டிஷ் ராணுவத்தால் முடியுமா? என்பது எனக்குச் சந்தேகமாகத்தானிருக்கிறது.

நம்மை ஆள்வோரின் மனப்பான்மை

நம்மை ஆளும் பிரிட்டிஷாரர்களின் மனோபாவம் மாறினால் கூடப் போதுமென மகாத்மா காந்தியடிகள் ஒரு சமயம் சொன்னார்கள். ஆனால் நமது நலன்களுக்கு எதிராகவும் முறணாகவுமே காரியாதிகள் நடைபெற்று வருகின்றன. அதற்குச் சில திருஷ்டாந்தங்கள் கூறுகிறேன்.

ஜாலியன் வாலாத்தோட்டத்திலே யாதொரு பாவமும் அறியாத நம் மக்களைச் சுட்டேன் சுட்டேன் என்று சுட்டு வீழ்த்திய டையரை நாமனைவரும் ஒருங்கே சபித்தோம். ஆனால் வெள்ளையர்கள் அந்தப் பாவிக்கு தங்க வாளும் பொன் முடிப்பும், வீரசண்டாமணியும் அளித்து நம்மைப் பரிகாசப் படுத்தினார்கள்.

இஸ்லாத்துக்கும் கிலாபத்துக்கும், யாதொரு ஆபத்தும் நேராவண்ணம் பார்ப்பதாக உறுதி கூறியதின்பேரில் இந்திய முஸ்லீம்கள் மகா யுத்தத்தில் கலந்து தங்கள் மதத்தினராகிய துருக்கியுடன் போர்புரிந்து அவர்களைக் கொன்று தாங்களும் மாண்டனர். ஆனால் யுத்தம் முடிந்ததும், கிலாபத்துக்குப் பேராபத்தை ஏற்படுத்தி துருக்கிக்குச் சொந்தமாயிருந்த சிரியா பாலஸ்தீனம், அரேபியா, மெசப்பொட்டாமியா, எகிப்து முதலிய நாடுகளையெல்லாம் பிடுங்கி துருக்கியரை பிரிட்டிஷார் ஒடுக்கிவிட்டனர்.

அகால்யர் தங்கள் மத குரு ஒருவன் செய்யும் அட்டூழியத்தைச் சகியாது அவனை விலக்கித் தங்கள் மதஸ்தாபனமாகிய குருத்துவாரத்தை சீர்திருத்த வெண்ணியபோது அரசாங்கத்தார் அக்கிரமஸ்தனாகிய குருவுக்குத் துணைநின்று அகாலியரின் மனதைப் புண்படுத்தி அவர்களில் பலபேர்களைச் சுட்டுக் கொன்றும் சிறையிலடைத்தும் வாட்டினார்கள்.

கடல்கடந்த நாடுகளிலுள்ள இந்தியர்கள் பல அவமானங்களுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாகி வருவதைத்தடுக்க இந்திய மக்கள் எவ்வளவோ கிளர்ச்சி செய்தும், மனக்கொதிப்படைந்தும் அவர்கள் நிவாரணத்துக்கு மார்க்கம் தேடாமல், பதிலுக்குப்பதில் யாதொரு நடவடிக்கையும் செய்யமுடியாமல் அந்நிய அரசாங்கம் குறுக்கே தடைக்கல்லாய் நின்று வருகிறது. இன்று இந்தியாவில் சுயாட்சி இருந்திருந்தால் ஜான்சிபாரிலுள்ள இந்தியரின் உரிமைகள் பறிமுதலாகியிராது. அந்நாட்டு வெள்ளையரின் கிராம்புகள் தங்கு தடையின்றி நமது துறைமுகங்களில் வந்திறங்கியுமிராது. கடந்த மகாயுத்தத்தின்போது பிரிட்டனுக்கு எதிராகப் போர் புரிந்த ஜர்மானியர்கள், ருஷியர்கள், ஆஸ்திரியர்கள் முதலானவர்கள் எல்லாம் இந்த பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் இன்று யாதொரு அவமதிப்புமில்லாமல் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் பிரிட்டிஷாரின் வெற்றிக்காகத் தங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் தமதெனக் கருதாமல் தத்தம்

செய்த இந்தியர்கள் இன்று ஆங்கே "பறையர்"களிலும் கேவலமாய்ப் பாவிக்கப்படுகின்றனர்.

நமது பணத்தாலும், ஆட்பலத்தாலும் பர்மாவை வென்று, ஆங்கு நமது பணத்தை வாரியிரைத்து அந்நாட்டை வளமாக்கி, அங்குள்ள எண்ணெய்க்கிணறுகளை ஏகபோகமாய்ச் சுரண்டுவதற்கும், இந்தியா சுயராஜ்யம் பெறவொட்டாமல் தடுப்பதற்கும், அந்நாட்டினர் எதிர்ப்புக்கிடையே அதனை இந்தியாவினின்று பிரித்து நமது நாட்டவர் போட்டுள்ள முதலீட்டுக்கும், வர்த்தகத்துக்கும், தொழிலுக்கும் ஹானி விளைவித்து வரப்படுகிறது.

சர்வகட்சிகளும், சகல மதஸ்தர்களும், சர்வ சாதியார்களும் ஒருங்கே எதிர்த்துப் போராடும் ஒரு அகில இந்திய சமஷ்டி எனப்படும் பிரித்தாளும் சூழ்ச்சியை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு நிரந்தரப் பாதுகாப்பளிக்கும் ஏற்பாட்டை, பிரிட்டிஷ் நலன்களுக்கு அரணமைத்து இந்திய நலன்களுக்குக் குழிதோண்டும் அரசியல் முறையை, நம் மீது திணிக்கத் தருணம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

நமது நாட்டு நலனுக்கும், நமது நாட்டுமக்களின் சுக வாழ்விற்கும் இன்னல் விளைக்கும் மதுபானக்கடைகளையும், அந்நிய நாட்டுப் பண்டங்களையும் சாத்வீகமான முறையில் வேண்டாமெனத் தடுத்த நமது வீரர்களையும், வீராங்கனைகளையும், தடியாலடித்துச் சிறையிலடைத்து இம்சித்தனர். கொடிய அடக்குமுறைச் சட்டங்களை ஏற்படுத்தினர். தேர்தல்களில் நம்மால் தோற்கடிக்கப்பட்ட மானிடப்பிண்டங்களை, உயிரற்ற கோழைகளை நமது மந்திரிகளாக்கி நம்மை சிந்நாள் ஏளனமும் செய்துபார்த்தனர். நமது மந்திரிகளின் கீழ் இன்று சிப்பந்தியாய் உழைக்கும் வெள்ளையனை நாளை நமது மந்திரியை மேய்க்கும் கவர்னராக நம்மை மதியாது உத்தரவு போடுகிறார்கள். அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு இன்னும் சால்ஜாப்புகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் இவைபோன்ற எத்தனையோ காரியங்கள் அன்றும்

இன்றும் இந்திய மக்களின் அபிலாஷைகளுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் விரோதமாகச் செய்து நெடுக அவமானப் படுத்தி வருகின்றனர்.

நாம் விழையும் சுதந்திரம்

உலகத்திலே உள்ள சுதந்திர நாடுகளில் நமது நாடும் ஒன்றாகத் திகழவேண்டும். இல்லையேல் நாம் கல்வியிலோ, கைத் தொழிலிலோ, கலையிலோ, கவித்திறமையிலோ, வியாபாரத் திலோ, விஞ்ஞான சாஸ்திரத்திலோ, ஆண்மையிலோ, அதி கார வன்மையிலோ, சேனாபலத்திலோ, வீராவேசத்திலோ, முன்னேற முடியாது. சுதந்திரமின்றி உலகத்திலுள்ள சுக போகங்களெல்லாம் நமக்குக் கிடைப்பதாயினும் நாம் அதைத் துச்சமாகக் கருதுவோம்.

மனிதவர்க்கத்தின் நாகரிகம் ஒரு நாட்டைப் பிறநாட் டான் ஆளக்கூடாதெனச் சொல்லுகிறது. ஒவ்வொரு மனி தனும் தன் சொந்த நாட்டில் எண்ணுவதற்கும், எழுதுவதற் கும், பேசுவதற்கும், தனது இஷ்ட தேவதையை வணங்கு வதற்கும், தனக்கிஷ்டமான தொழிலை பேணுவதற்கும், பிற மனிதனுக்குப் பங்கமில்லாத வகையில் வாழ்க்கை நடத்து வதற்கும் சுதந்திரமுடையவனாகவிருக்க வேண்டும். சிலர் எலும்புடைப்பப் பாடுபடுவது, பலர் பஞ்சணைமீது சொகுசாகப் படுத்துறங்குவது, பலர் கஞ்சிக்குத் தெருத்தெருவாய்த் தாளங்கொட்டுவது, சிலர் பணப்பைகளைப் பேய்கள் போலக் காத்திருப்பதுபோன்ற நிலைமையை ஏற்படுத்தி மக்கள் பிறந் தது முதல் சாகும்வரை மேம்படவொட்டாது தடைபடுத்தும் சட்டங்கள் எல்லாம் ஒழியவேண்டும். மனிதனது அறிவை யும், உல்லாசவாழ்வையும் பாழ்படுத்தும் கட்டுப்பாடுகள் தொலையவேண்டும். மனிதன் முன்னேறத்தக்க சந்தர்ப்பங் களும் சௌகரியங்களும் ஏற்பட வேண்டும். சுதந்திரம், சுய ராஜ்யம் என்பன வெறும் பதங்களல்ல. நமது தேசம், நமது ராஜரிகம், நமது பொருளாதாரம் அனைத்தும் அந்நியவாதிக் கத்தினின்று விடுதலை பெறவேண்டும். எல்லாவற்றிற்கும்

மேலாகத் தனி மனிதனின் சுதந்திரம் பங்கப்படாமல் காப்பாற்றப்படவேண்டும்.

முடிவுரை

இத்தகைய சுதந்திரம் இன்று நம்முடைதாய் இல்லை. இதை நாம் பெறும் வரையில் இந்நாட்டுக்கு உண்மையான மகிமையோ, மக்களுக்குச் சந்தோஷமான வாழ்க்கையோ ஏற்படுவதென்பது முடியாத காரியம். நமது மூதாதையரின் புகழுக்கேற்ப நாம் வாழ முடியாது. தனியொருவனுக்குணவில்லையெனில் ஜகத்தினையழித்திடுவோம் என்று பாரதியார் சொல்லியுள்ள வைராக்கியம், திடசித்தம், விடாப்பிடிவாதம், அஞ்சாமை, உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போழ்தினும் அச்சமில்லை என்றவர் கூறிய வீரமான தைரியம் நம்முள் பிறந்தாலன்றி நாம் சுதந்திரமடைய முடியாது.

தேசத்தின் கடைசி விடுதலைப் போருக்கும் தியாகத்துக்கும் காங்கிரஸ் தனது சங்கை ஊதும் நேரத்தை எதிர்பார்த்திருங்கள். கிராம மாந்தர்களின் மத்தியில் சென்று வாழ்ந்து அவர்களையும் தட்டியெழுப்பிச் சத்தியாகிரகப் போருக்கு ஆயத்தமாக்குங்கள். அவர்களுடைய அறியாமையைப் போக்கவும், கல்வி, சுகாதாரம், கைத்தொழில் விருத்தியாக்கவும் முயற்சி கொள்ளுங்கள். பாரதியாரின் பாடல்களைச் சேரிகள் தோறும் பாடுங்கள். தேசியப் பத்திரிகைகளை தெருக்கள் தோறும் திண்ணை தோறும் கூட்டமிட்டு வாசித்துக் காட்டுங்கள். கிராமந்தோறும் சேவாசங்க ஆசிரமங்கள் நிறுவி அகிம்சை சத்தியம் தன்னம்பிக்கையாகிய உயர்ந்த நெறிகளைப் பரப்புங்கள்.

நாம் முன்வைத்த காலைப் பின் வைக்காதிருக்கத்தக்க நெஞ்சழுத்தமும், லட்சியத்தினின்று கொஞ்சமும் மாறாத மனவுறுதியும் நம்மில் ஏற்படுமாக. போர்முரசு நம் காதில் பட்டதும் நாம் நமது சொந்த சுகதுக்கங்களைப் பொருட்படுத்தாது நமது தாய், நமது சேய், நமது மனைவி, மைத்துனன்,

தங்கை, தமக்கை, தம்பியாதிகளுடன் கோவிலுக்குப் போவது போல் போருக்குப் புறப்படச் சித்தமாக இருப்போமாக. உலகம் தோன்றியது முதல் நடைபெற்ற யுத்தங்கட்கும் நாளை நமது புண்ணிய பூமியில் நடைபெறப்போகும் போருக்கும் பெரிய வித்தியாசம் இருக்கப் போகிறது. நமது யுத்தம் சத்தியத்தையும், நியாயத்தையும் அகிம்சையையும் அணிகலனுகப் பூண்டிருக்கும் சமாதானத்தையும் சமதர்மத்தையும் நோக்கமாகவும், மனித வர்க்கத்தின் சுதந்திர சுபீட்ச வாழ்வையும் நாகரிகத்தையும் லட்சியமாகவும் கொண்டிருக்கும். நமது யுத்தம் அன்பினுல் வெல்லப்படுவது. அது துப்பாக்கி முனைகளில் நாம் நமது மார்பைக் காட்டி நம் தேச விடுதலைக்காகச் சாகும் உயரிய வீரதீரப் பராக்கிரமம் வாய்ந்திருக்கும். நாம் அத்தகைய, அதியுன்னத சாவுக்கஞ்சாதிருப்போமாக.

மரண பயந்தனை மனதில் எண்ணுதிருப்போமாக.

மற்றொருவர் உயிரைச் சிதையப் பண்ணுதிருப்போமாக.

மரண பயங்கர விடுதலை பெறுவோமாக.

மரணத்துக்கஞ்சாது மார்தட்டுவோமாக.

வந்தேமாதரம்.

மருங்காபுரி ஜமீன் ரயத்துகள் முதலாவது மகாநாடு

கோவில்பட்டி (13-9-38)

எனது அன்புமிக்க நேயர்களே!

இம் மகாநாட்டில் தலைமை வகிக்கும் கௌரவத்துக்கு நான் சிறிதும் அருகனல்லேன். இதற்குத் தகுதியுள்ள ஒருவரை நீங்கள் தெரிந்தெடுக்காதது ஒரு பெருங்குறை என்றே சொல்லுவேன். உங்களுக்குள்ள எண்ணற்ற குறைகளை நீக்குவதற்காக நீங்கள் செய்யும் முயற்சியில் இக்குறையையும் ஏனோ சேர்த்துக் கொண்டீர்கள்? என்னிடம் நீங்கள் காட்டிய இந்த அன்புக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?

நானும் உங்களைப்போன்ற ஒரு எளிய குடியானவன். நிலத்தைப் பண்படுத்தி உழுதுண்டு வாழும் சமுதாயத்தைச் சேர்ந்தவன். உங்களுடைய கஷ்ட நஷ்டங்களும் திக்கற்ற நிலைமையும் நான் ஒருவாறு உணர்ந்திருக்கிறேன். எனவே நான் உங்களில் ஒருவன். உங்கள் நலனிலும், துயரிலும் எனக்கும் பங்குண்டு. இந்த ஒரு உரிமையின்மீதே மிகத் துணிவுடன் நான் இப் பதவியை ஏற்கச் சம்மதித்தேன். உங்கள் ஒத்துழைப்பின் பலத்தால் இம் மகாநாடு வெற்றியுடன் நடைபெறுமாக. தீர்க்கமாக விஷயங்களை ஆலோசித்து, முடிவு கண்டு, அதனைச் செயலாற்ற ஏற்ற மனோவலிமை இம்மகாநாடு உங்கட்கு அளிக்குமாக.

அக்கரை காண வழி

நாம் இன்று ஏழைகளாய், நித்திய தரித்திரத்தில் உழன்று, பல கொடுமையும் கொடூரமும் நிறைந்த வாழ்க்கை யாகிய சாகரத்தில் தத்தளித்துத் தடுமாறி நீந்திக் கொண் டிருக்கிறோம். சாந்தி, சமத்துவம், சகோதரத்துவம், சந்தோஷம் விளங்கும் கரையை நாம் என்று சேருவோம் என்பது தெரியவில்லை. அக்கரை நமது புத்திக்கும், சக்திக்கும், திருஷ்டிக்கும் எட்டாத தூரத்திலிருக்கிறது. நெஞ்சில் உறுதி யும், நேர்மையும், சத்தியத்தில் பற்றுதலும், தியாக புத்தியும், ஒற்றுமை யுணர்வும் நம்மில் இருக்குமேயானால் நாம் நிச்சய மாக அக்கரை காண்போம்.

தியாகம் என்று சொன்ன மாத்திரத்தில் நீங்கள் சிரிக்கக் கூடும். உள்ளவனிடம் தியாகத்தை எதிர்பார்க்கலாம். இல்லாதவனிடம் தியாகம் செய்வதற்கு என்ன இருக்கிறது என்று நீங்கள் கருதக்கூடும். "நாம் நித்தமும் பிறருக்கு உழைத்துழைத்துப் பலனைப் பறி கொடுத்துவிட்டு ஒன்றுமற்ற ஓட்டாண்டிகளாய் இருக்கிறோமே. தியாகம் செய்ய இன்ன மும் என்ன இருக்கிறது? எலும்புக் கூடும், சுருங்கிய தோலும், குழிந்த கண்களும், தளர்ந்த மேனியும், மீளா வறுமையும், கடன் பளுவும், அறியாமையும் நிரம்பி, அதிகாரக் கொடுமைக்கு ஆளாகியிருக்கும் நாம் செய்யத்தக்க தியாகம் ஒன்றுமில்லையே," என்று நீங்கள் மலைக்கக் கூடும். நாம் செய் யத்தக்க தியாகம் என்னவென்று உங்கட்குச் சொல்லுகிறேன்.

சிறுமைக் குணம் ஒழிக

நாம் இந்நிலையில் இருப்பதற்குக் காரணம் நமது தலை விதியே ஆகும் என்ற எண்ணத்தை நீங்கள் உங்கள் மனதி னின்று இந்த க்ஷணமே அகற்றிவிடவேண்டும். ஒருவன் செல்வ போகத்தில் மூழ்கிக் கிடப்பதற்கும் அவனைச் சூழ்ந் துள்ள பல்லோர் வறுமைக் குழியில் ஆழ்ந்து நிற்பதற்கும் காரணம் அவர்கள் பூர்வ ஜன்மத்தில் செய்த பூஜாபலன்கள்

என்ற தப்பான எண்ணத்தை நீங்கள் உடனே போக்கிவிட வேண்டும். அவன் வேறு, நான் வேறு என்ற வேற்றுமை உணர்ச்சியை நீங்கள் உங்கள் மனதினின்று தகர்த்தெறிய வேண்டும். உங்கள் நெஞ்சிலுள்ள பயத்தை, பயங்கொள்ளித் தனத்தை, அடிமைப் புத்தியை, லஞ்சம் கொடுத்தேனும், கைகட்டி வணங்கியேனும், காலில் வீழ்ந்தேனும், நிலத்தையும், மகசூலையும், மாடு கன்றுகளையும், பட்டி தொட்டிகளையும், வீடு வாசல்களையும், மக்கள் மனைவிகளையும், காசு பணங்களையும் காத்து ரட்சித்து இக் கும்பியை எப்படியாவது கழுவ வேண்டும் என்ற சிறுமைக் குணத்தை ஆழமான குழி தோண்டி நீங்கள் வெட்டிப் புதைக்கவேண்டும். "ஆறிலும் சாவு, நூறிலும் சாவு, நாங்கள் எதற்கும் அஞ்சோம். சத்தியம், நியாயம், தர்மம் ஆகிய முக்குணங்களுக்கே அஞ்சுவோம். மற்ற அனைத்தையும் தகர்ப்போம். அவ்வாறு தகர்ப்பதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைத் துச்சமாகக் கருதுவோம். மக்களின் சந்தோஷ வாழ்வுக்காக நாங்கள் எங்கள் உயிரையும் இழக்கத் தயாராக இருப்போம்," என்ற எண்ணத்தை, திடவைராக்கியத்தை நீங்கள் கைக்கொள்ள வேண்டும். உங்களிடம் நான் விரும்பும் தியாகம் இதுவே யாகும்.

உலகத்தின் தாதாக்கள் நாம்

நாம் மிகவும் கம்பீரமான மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். நமது மூதாதையர்கள் உலகில் ஒப்பற்ற நாகரிகத்தைப் படைத்தவர்கள். நாம் வசிக்கும் இந்நாடு இயற்கை வளமும், எழிலும் ஒருங்கே பொருந்தியது. நாம் பாவமற்ற தொழிலைச் செய்கின்றோம். நமது உழைப்பினால் உலகிலுள்ள சகல ஜீவராசிகளும் பிழைக்கின்றன. நாம் உலகத்தின் தாதாக்கள்; செல்வத்தை சிருஷ்டிக்கும் கர்த்தாக்கள். உழுதுண்டு வாழ்வோரே வாழ்வார், பிறரனைத்தும் தொழுதுண்டு பின் செல்லுவோரெனத் திருவள்ளுவ நாயனார் கூறியுள்ளார். எனவே, நாம் மிகவும் சிறப்புடையவர்கள்,

புகழும், பெருமையும், செல்வமும் நாகரிகமும் ஒருங்கே படைத்தவர்கள். நாம் எவர்க்கும் அடிமைகள் அல்லோம்.

துஷ்ட மிருகங்களை விரட்டியடித்து, அடர்ந்த கானகத்தைச் சுட்டெரித்து, மேடு பள்ளங்களைத் திருத்திச் சமப்படுத்தி, வரப்புயர்த்தி, வாய்க்கால் பறித்துக் குளங்கள் வெட்டி, நீர் பாய்ச்சி, உழுது, எருவிட்டு, விதைத்து, களையெடுத்து, வேலியமைத்துக் காத்து, அறுத்து, உலர்த்தி, தூத்திப் புடைத்தெடுத்து, அம்பாரி போட்டு, நம்மை அண்டிப் பிழைக்கும் "பள்ளுப்பறை" பதினெண் சாதி யாருக்கும் பங்கிட்டுக் கொடுத்து, ஆறிலொரு பங்கு தேசத்தையாளும் காவலனுக்கீந்து, விருந்தோம்பி, எளி யோருக்கீந்து, தாமும் உண்டு, "குடி உயரக் கோனுயரும்" என்ற நீதி வாக்கியத்தைப் பரிபாலித்துவந்த மேதாவிகளின் வம்ச பரம்பரையை நாம் சேர்ந்தவர்கள். பண்டைக்காலத் தில் நமது கிராமங்கள் மிகவும் செழிப்புற்றிருந்தன. பஞ்சமென்பதை யாரும் அறியாதிருந்தனர். வீடுகளுக்கு அந்நாளில் பூட்டிடுவாரில்லை. வீதிகளிலே கஞ்சிக்கலைந்து திரிவாருமில்லை. கோவில்கள், சத்திரங்கள், சாவடிகள், பாட சாலைகள், வைத்தியசாலைகள், யாவும் நமது முன்னோர்கள் அமைத்திருந்தனர். ஊரிலே வம்பில்லை, வழக்கில்லை, தீயோர் கொடுமையும், திருடர் பயமும் இல்லை. ஊர்ப் பெரியோர் களே சிக்கறுத்து, செம்மையான முறையில் மக்களை ஓம்பி வந்தனர். எல்லோரும் யாதொரு கவலையுமற்று உழுதும், பிறபல தொழில்கள் உவப்புடன் புரிந்தும் நாட்டை ராமன் ஆண்டாலென்ன, பரதன் ஆண்டாலென்ன என்று கவலை யற்று வாழ்ந்திருந்தனர்.

ஊரையடுத்த மந்தைகள், காலி நிலங்கள், மேய்ச்சல் காடுகள், கால்நடைக் கூட்டங்கள், சிறுமியர் கும்மி தட்டுதல், சிறுவர் கோலாட்டங்கள், பெரியோரின் கூத்துக் கள். உற்சவங்கள், சாமி சாட்டுதல், தேர் இழுத்தல், காளைக் கட்டு, கோழிச் சண்டை, குதிரை யேறுதல் ஆகிய காட்சி

களும் களியாட்டங்களும் மனத்திற்கு இன்பம் தந்து வாழ்க்கையில் சுவையும், சாந்தியும், ஆனந்தமும் பொங்கி வழிந்திருந்த அப்பண்டைய வாழ்வு நம் கண்முன் இன்று கூத்தாடுகின்றது.

உழுதவன் கணக்கு

இன்று நாம் காண்பதென்ன? உழுதுண்டு வாழ்வோனுக்கு உணவில்லை. யாதொரு தொழிலும் புரியாதவன் மச்சுமேல் மச்சுகள் கட்டிப் பஞ்சணையில் சாய்ந்து சுகிக்கிறான். நமது முன்னோர் வெட்டிய குளங்களெல்லாம் மண்மேவிப் போயின; வாய்க்கால் கள்ளி முளைத்துக் கடைகெட்டுப்போயின; ஊர் மந்தைகள் உழுது விதைக்கப்பட்டன; மேய்ச்சல் காடுகள் பட்டாப் பூமிகளாயின; குளங்களிலும் வேளாண்மைகள் ஏற்பட்டுவிட்டது; விளைந்தாலும் விளையாவிட்டாலும் வரி கொடுத்தாக வேண்டும். இல்லையேல் காடுகள், வீடுகள், கட்டும் கந்தைகள், சட்டி பானைகள், ஆடு மாடுகள் அனைத்தும் ஏலத்தில் போய்விடும்.

100 ஏக்கர் பூமிக்கும் பாயாத ஒரு குளத்துக்கு ஆயிரம் ஏக்கர் நிலத்தை ஆயக்கட்டாக்கி நீர் வரியென்றும், நிலவரியென்றும், தண்டமென்றும், முட்டென்றும் விதித்து செலவுத் தொகையுடன் வசூலித்து விடுகிறார்கள். ஒரு போகம் விளைந்ததா, அதுவும் சரியாய் விளைந்ததா அல்லது கருகி நாசமாயினவா என்று யாதொன்றும் கேளாமலும் பாராமலும் வரி வசூலிக்கப்படுகின்றது.

வெள்ளம் பெருக்கெடுத்துப் பயிர்கள் நாசமாகி, குடிசைகள் விழுந்து, கால் நடைகள் செத்து, குடியானவன் தத்தளிக்கும்போது உதவிக்கு வருவாருண்டா? வரிவஜா உண்டா?

மழையின்றிப் பயிர்கள் காய்ந்து, உழைத்த உழைப்பும், விதைத்த விதையும், காத்த காலமும் விரயமாகிக்

குடியானவன் கடன்பட்டுக் கண் பஞ்சடைந்து வாடும் போது உதவியுண்டா?

அதற்கு மாறாக மணியக்காரன், வரி வரி என எரிமலை கக்குவது போலக் கோபக் கண்களுடனும், தலையாரி தண்டலுடனும் வந்துவிடுகிறான். எங்காவது மழை பெய்து, நமது குட்டைகளில் தண்ணீர் தேங்கி நாம் அதை மொண்டு மொண்டு வேளாண்மை செய்தால் அதற்கும் கூசாமல் தண்ணீர் வரி போடும் கொடுமையை என்னென்பது?

ஆயிரம் ஐந்நூறெனக் கடன் பட்டு, நகை நட்டுகளை யெல்லாம் விற்று, நாகராஜன் எல்லை காணும்வரை கிணறு வெட்டி, தொலைபூட்டி, காளைகள் கட்டித் தண்ணீர் இறைத்து ஒரு காயோ கசம்போ பயிர் செய்த மாத்திரத்தில் கணக்குப்பிள்ளை என்ற சித்திரபுத்திரன் அதைத் தோட்ட பூமியெனத் தாக்கல் செய்து வரி உயர்த்தும் புதுமையை என்னென்பது?

அனலில் பட்ட புழு

விளைந்தெடுத்த தானியங்கட்கேனும் தகுந்த விலை யுண்டா? சென்ற வருஷம் பருத்தி பொதி ஐம்பது ரூபாய்க்கு விற்றோம். இவ்வாண்டு இருப்பத்தைந்து ரூபாய்க்கு தாளம் போடுகிறோம். விலை இவ்வாறு திடீரென சரிபாதிக்குக் குறைந்து போனதிற்குக் காரணமென்ன? சென்ற வருஷம் விளைந்ததை விட இவ்வருஷம் இருமடங்கு அதிகமாக விளைந்து விட்டதா? அல்லது வேறு ஏதேனும் சம்பாத்தியம் நமக்கு எவ்வகையிலேனும் ஏற்பட்டு விட்டதா? செலவுகள் குறைந் தனவா? கடன் பளு இறங்கியதா? புதையல் கிடைத்ததா? வரிவஜா ஏற்பட்டதா? குத்தகை குறைந்ததா?

இவ்வாறு விலைவாசிகள் குறையும்போதும், வேளாண்மை கெட்டுப் போகும் போதும், நமது மாடு கன்றுகள் சாகும்

போதும் நமது மனைவிமக்களை நோய் பற்றும்போதும், ஆணவம் பிடித்த அயலானோ, அதிகார வெறிப் பிடித்த உத்தியோகஸ்தனோ நம்மை அநியாயமாகக் கச்சேரிக்கு இழுக்கும்போதும் நாம் அனலில் பட்ட புழுக்கள்போல் துடிக்கின்றதைக் கண்ணெடுத்துப் பார்க்கும் ஒரு கடவுளேனும் உண்டா?

நமது பருத்தியை ஒன்றுக்குப் பாதி விலை கொடுத்து வாங்கிச்செல்லும் மில் முதலாளி அதற்கேற்ப தனது நூலையும் விலை தள்ளி விற்கிறானா? அல்லது துணி விலையாகிலும் குறைந்ததுண்டா? மில்களில் வேலை பார்க்கும் தொழிலாளிகளின் சம்பளமேனும் உயர்ந்ததுண்டா? இந்த அக்கிரமத்துக்கு ஒரு எல்லை இல்லையா? முடிவுதான் இல்லையா? நாம் எத்தனை பாடு பட்டு, பத்து கத்தரிச் செடிகளை வைத்துக் காத்து, சொத்தையும் சொள்ளையும் நாம் வைத்துக்கொண்டு நல்ல பளபளப்பான பிஞ்சுகளைத் தளதளவென்று பறித்துக் கூடையில் போட்டுத் தலையில் சுமந்து சென்று, பட்டினக் கரையிலுள்ள பணக்காரனிடம் காசுக்கு நாலென்று சொன்னாலும் ஆறில்லையா என்று நம்மை அதட்டி லஜ்ஜையில்லாமல் கேட்கின்றானே! இந்த அநியாயத்துக்கு ஒரு நீதியில்லையா? சட்டமில்லையா?

பட்ட கடனுக்கு அபராதம்

நிலத்தைக் காலமெல்லாம் உழுபவனுக்கு நிலத்தின்மீது சொந்தமில்லாமல் போய்விட்டது. அவன் கடன் பட்டுப் பட்டுக் கடன்காரனுக்குப் பூமியைப் பட்டாச் செய்து கொடுத்துவிட்டு, அதே பூமியைத் தான் பட்ட கடனுக்கு மேலும் அபராதம் கொடுப்பதற்காகப் பிடித்து, இரவு பகல் எண்ணாது, வெய்யிலிலும், பனியிலும், குளிரிலும், மழையிலும் தன் மனைவி மக்களுடன் சரீரத்தை சாறாய்ப் பிழிந்து நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டச் சொட்டவும், கால் கடுக்கவும், கைகள் நோவவும், மார் வலிக்கவும், மண்டை வீங்கவும் பாடுபட்டு எடுத்து, விற்று முதலாக்கி, குத்தகை செலுத்தவும், விதைப்புக்கும் தன் வயிற்றுச் சோற்றுக்கும்

மீத்தவும், வழியின்றிக் கடன் பட்டு அல்லற்படும் கொடுமையை என்னென்று கூறுவது?

படிக்கப் பாடசாலைகள் உண்டா? குடிக்கக் குடி தண்ணீர் உண்டா? குளிக்கத் தடாகங்கள் உண்டா? வைத்தியசாலைகள் உண்டா? கால்நடைகள் மேயக் காடுகள் உண்டா? நல்ல பாதைகள் உண்டா? திருடரிடமிருந்து நம்மைக் காத்துக்கொள்ள ஆயுதங்கள் உண்டா? கைத்தொழில்கள் உண்டா? நீண்ட காலத்துக்கும் எளிய வட்டிக்கும் கடன் பெறும் ஏற்பாடுகள் உண்டா? விளைந்த பொருளைச் சேமித்து வைத்து, தக்க விலைபேசி விற்க வசதிகள் உண்டா?

மித்திரபேதம்

நமக்கேற்பட்டுள்ள இத்தனைக் கொடுமைக்கும், நம் மத்தியில் விளைந்துள்ள அநீதிக்கும், நமது திக்கற்ற நிலைமைக்கும் முக்கிய காரணம் நமது நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்தி வரும் அந்நிய ஆட்சிதானென்று துணிந்து கூறலாம். ஆறாயிரம் மைலுக்கப்பாலிருந்து வியாபாரத்துக்கென இந்நாட்டுக்கு வந்தவர்கள் நமக்குள் மித்திரபேதத்தை வளர்த்து நம்மில் சில சுயநலமிகளின் உதவியால் நமது தேசமனைத்தையும் சிறுகச் சிறுகப் பிடித்துக் கொண்டு, நம்மிடமிருந்து நிலவரியென்றும், நாம் வாங்கும் பண்டங்கள்மீது இறக்குமதி வரியென்றும், நாம் விற்கும் பொருட்கள் மீது ஏற்றுமதி வரியென்றும் பல்வேறு வகைகளில் வருடமொன்றுக்குப் பலகோடி ரூபாய்களைப் பெற்று, அவற்றில் பெரும் பகுதியை ராணுவத்துக்கென்றும், உயர்தர உத்தியோகத்திற்கென்றும், ரயிலுக்கென்றும், நாடுகள் பிடித்த கடனுக்கென்றும் செலவழித்து வருகிறார்கள். நம்மில் 100-க்கு 90 பேர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாய் கைத்தொழில்கள் அனைத்தும் நாசமுற்றுத் தொட்டது தொண்ணூற்றுக்கும் அந்நியர்களின் கைகளை எதிர்பார்த்து நிற்கிறோம்,

நம்மை ஆளும் சூத்திரம்

முப்பத்தைந்து கோடி மக்களாகிய நம்மை சுமார் மூவாயிரம் பிரிட்டிஷார் கடந்த 150 வருஷங்களாகக் கட்டி ஆண்டு வருவது உலகிற்கே பெரும் அதிசயமாகவிருக்கிறது. நம்மை நிராயுதபாணிகளாகவும், நிரக்ஷர குட்சிகளாகவும் வைத்து துப்பாக்கி முனையில் அரசாண்டு வருவது மேல் நோக்காகத் தெரியும். ஆனால், உண்மையில் அவர்கள் நம்மை ஆளும் சூத்திரம் வேறு. அதை நாம் என்று உணர்ந்துகொண்டு போராடுகிறோமோ அன்றே நமக்கு விடுதலையும் விமோசனமும் ஏற்பட்டுவிடும்.

இந்தியாவை இன்று இரண்டு கூறாகப் பிரித்து ஆண்டு வருகிறார்கள். ஒன்று சுதேச மன்னர்களின் இந்தியா. மற்றொன்று பிரிட்டிஷ் இந்தியா. 556 சுதேச மன்னர்கள் தங்கள் பிரதேசங்களில்' தங்கள் இஷ்டம்போல எதேச்சாதிகாரமாய் மக்களை அடக்கி ஆண்டு வர அனுமதி தரப்பட்டிருக்கிறது. அதற்கு கைம்மாறாக அம் மன்னர்கள் பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஒரு கப்பம் செலுத்தி வருகிறார்கள். இம்மாதிரியான ஆட்சி இந்தியாவின் சரிபாதி பாகத்தில் நடைபெறுகிறது. சுதேச மன்னர்கள் இஷ்டம் போல் வரிகள் விதித்து தங்கள் ஆடம்பரச் செலவுகளுக்கு எடுத்துக்கொள்வதும், அதில் ஒரு பாகத்தை கப்பமாகப் பிரிட்டிஷாருக்குச் செலுத்தி வருவதும் ஒரு தினுசான லஞ்சம்.

அதிகாரிகள் பெறும் "லஞ்சம்"

பிரிட்டிஷ் இந்தியாவையும் சுதேச மன்னர்களையும் அடக்கியாள்வது பிரிட்டிஷ் மன்னருடைய பிரதிநிதியான வைசிராய். இவருக்கு தினமொன்றுக்கு ஓராயிரம் ரூபாய் சம்பளம் என்னும் பெயரால் "லஞ்சம்" கொடுக்கப்படுகிறது. இவருக்கு கீழாகப் பதினொரு மாகாண கவர்னர்கள். இவர்களுக்கும் சம்பளம் என்னும் பேரால் நித்தம் 500 ரூபாய்

"லஞ்சம்" கொடுக்கப்படுகிறது. இவர்கள் கட்டளைகளை நிறைவேற்றி வைக்கச் சுமார் மூவாயிரம் அதிகாரிகள். இவர்களுக்கும் சம்பளம் என்னும் பெயரால் மாதம் இரண்டாயிரம் முதல் ஐயாயிரம்வரை "லஞ்சம்" கொடுக்கப்படுகிறது. பிரிட்டிஷ் ஆட்சியைப் பற்றி புகழ்மாலைகள் சதா பாடிக் கொண்டிருக்கும் கலிகாலக் கவிராயர்களான அநேகம் பேர்களுக்கு ராவ்பஹதூர் முதல் ராஜா, சர்வரை அநேகவிதப் பட்டங்களும், பதவிகள், இனும்கள், மான்யங்கள்போன்ற "லஞ்சங்கள்" தரப்படுகின்றன.

"லஞ்சம்" பெறும் சைனியம்

இவர்களன்றி முதலாளிகள் என்னும் பணக்காரர்கள் என்றொரு கூட்டம். இவர்கள் தங்கள் இஷ்டம்போலத் தொழிற்சாலைகள் அமைத்துக் கூலிக்காரர்கள் வயிற்றில் அடித்து, ஆதாயம் என்ற பெயரால் "லஞ்சம்" அடைந்து வருகிறார்கள். இதேபோன்று வட்டிக் கடைக்காரர்கள், வியாபாரிகள் முதலாயினோர். இவர்கள் சட்ட பூர்வமாக 'இலாபம்' என்னும் பெயரால் தங்கள் திறமைக்கேற்றவாறு "லஞ்சம்" பெறுவதற்கு வசதியாக சட்டங்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன.

மற்றும் சில்லரை உத்தியோகஸ்தர்கள், மணியக்காரர்கள், கணக்குப்பிள்ளைகள், ரயில்வே சிப்பந்திகள், கோவில் பூசாரிகள், தரகர்கள் முதலிய ஒரு பெருஞ்சைனியம் பற்பல விதத்தில் மக்களை ஏய்த்தும், மிரட்டியும், வாட்டியும் "லஞ்சம்" பெற்று வருகிறார்கள். சட்டங்களை காசுக்குத் தக்கபடி வியாக்கியானம் செய்யும் ஒரு வக்கீல் கூட்டம்! சுவைக்குதவாத கல்விபோதிக்கும்(குமாஸ்தா உற்பத்திச்சாலைகளான) கல்விச்சாலைகள்! மக்களுக்குள் மாத்சர்யத்தையும், மிகத் தீங்கான போட்டா போட்டியையும் ஏற்படுத்தி லஞ்சப் பழக்கத்துக்கு சக்தியூட்டும் ஜில்லா போர்டுகள்! அதன் தேர்தல்கள், சட்டசபைகள், மந்திரி பதவிகள் போன்ற எண்

ணற்ற முறைகள் சங்கிலித் தொடர்போல் நாட்டின் நாற் புறமும் பற்றித் தொடர்ந்தும், பரந்தும் நம்மை அடக்கி வைத்திருப்பதனுல்தான் இவ்வளவு காலமாக ஒரு அந்நிய அரசாங்கம் இந் நாட்டில் நிலைபெற்றிருக்க முடிகிறது. இதற்கு அரசுக நம்மில் 100-க்கு 90 பேர்களை யாதொரு கல்வி வாசனையும் உலக ஞானமும் இல்லாமல் வைத்திருக் கிறுர்கள்.

அடிமைத்தனத்தின் அஸ்திவாரம்

அடிமைத்தனம் என்ற கட்டடத்துக்குத் தூண்களாகவும் உத்தரங்களாகவும், சுவர்களாகவும், கதவு, நிலவு, ஜன்னல் களாகவும் அமைந்துள்ள கூட்டத்தவர்களைப்பற்றி இதுகாறும் சொன்னேன். ஆனுல், அஸ்திவாரமாக அமைந்துள்ள ஒரு வர்க்கத்தைப்பற்றி இப்போது பிரஸ்தாபிக்கிறேன். அவர் கள்தான் ஜமீன்தார்கள். ஜமீன் என்ருல் பூமி என்றர்த்தம். இவர்கள் எப்படி பூமிக்குச் சொந்தக்காரர்கள் ஆனுர்கள் என்பது மிகவும் ஆச்சரியமான விஷயமாகும். இவர்களுடைய ஆதி உற்பவத்தை ஆராயப் புகின் அது மிகவும் கேவலமான தாக இருக்கும்.

ரிஷிகட்கும் நதிகட்கும் மூலத்தைத் தேடக்கூடாதெனப் பெரியவர்கள் சொல்வார்கள். ஜமீன்தார்களுடைய மூலத்தைத் தேடப்புகின் அது மிகவும் வெட்கமும் நாற்றமும் பொருந்தியதாக முடியும். இவர்கள் பெருங் கொள்ளைக் கூட் டத்தினர் போன்று நமது நாட்டை அன்னியர்களுக்குக் காட் டிக் கொடுத்தமைக்காக இவர்கள் ஒவ்வொருவருக்கும் சில கிராமங்கள் "இனுமாக"க் கொடுக்கப்பட்டுள்ளன. அக் கிராமங்களில் உள்ள பூமிக்கு இவர்களே சொந்தக்காரர்கள். இவர்கள் "தங்கள்" குடிகளுக்குப் பூமியைக் குத்தகை யென் னும் வாடகைக்கு விட்டு, வரியென்னும் "லஞ்சம்" பெற்று அதில் பெரும் பங்கைத் தாங்கள் வைத்துக் கொண்டு சிறு பங்கைத் தங்களை ஜமீன்தாரர்களாக்கிய (அந்நிய நாட்டு) எஜமானர்களுக்குத் தந்து வருகிறுர்கள்.

ஏட்டில் அடங்காது

இவ்வழித் தோன்றிய ஜமீன் வர்க்கத்தில் நமது சென்னை மாகாணத்தில் சுமார் 1,500 பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஆதிக்கத்தில் சுமார் 191 லட்சம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள பூமிகள் இருக்கின்றன. இதில் 31 லட்சம் பூமியே சாகுபடி செய்யப்படுகிறது. இதிலிருந்து ஜமீன்தார்கள் அடையும் வரிப்பணம் சுமார் 2½ கோடி ரூபாய். இதில் அரசாங்கத்துக்கு அரைக்கோடி ரூபாயைச் செலுத்திவிட்டு இரண்டு கோடி ரூபாயை இந்த 1,500 பேருமாகச் சேர்ந்து ஏப்பம் போடுகிறார்கள்.

எனவே, இவர்கள் ஒவ்வொருவரும் வருடமொன்றுக்கு ஆறாயிரம் ரூபாய்க்குமேல் வரி என்னும் பெயரால் "லஞ்சம்" பெற்று வருகிறார்கள். இவையன்றி இவர்களது மானேஜர்கள், காரியஸ்தர்கள், சிப்பந்திகள் முதலியோர் வாங்கும் லஞ்சங்களும், செய்யும் கெடுபிடிகளும் எழுதில், ஏட்டில் அடங்கா. இவர்கள் செய்யும் அட்டூழியங்களை எதிர்த்து சட்டபூர்வமாய் கச்சேரிகளில் வழக்காடி நியாயம் பெறுவதென்பது, ஏழைக் குடியானவனால் இயலாத காரியம். இவர்களுடைய மனம் சிறிதுகூடக் கோணாமல் விரும்பியதையெல்லாம் அட்டி சொல்லாமல் குடியானவன் கொடுத்துவந்தால்தான் இவர்களின் கீழிருந்து ஜீவிக்க முடியும்.

ஒப்புவமையற்ற அநீத நிலைமை

வருடம் 6,000 ரூபாய் பெறும் ஜமீனால் குடிகளுக்கோ, நிலங்களுக்கோ ஏற்படும் நன்மையோ அபிவிருத்தியோ ஒரு சிறிதும் இல்லை. இவர்களுடைய ஒரு சொட்டு வியர்வையும் (ஏற்பட்டால்தானே!) நிலத்தில் படாமல் ஏஜண்டுகள் மூலம் குடியானவர்களைக் கசக்கிப் பிழிந்து ரத்தம் சொட்டச் சொட்ட அவர்களிடமிருந்து பணத்தை வசூலித்து உல்லாசமாய் உப்பரிகைகளில் உலகறியாது தெரியாது பற்பல லீலா விநோதங்களின் மத்தியில் அக்கிரம வாழ்க்கை நடத்தி

வருகிறார்கள். இவர்களின் கீழ் நாம் பட்டுவரும் கஷ்டநஷ்டங்களை எண்ணிலும் வெகு நன்றாக நீங்கள் அறிந்தும் அனுபவித்தும் வருவதால், நான் அவற்றை ஈங்கு விவரித்து உங்கள் காலத்தை வீணாக்க எண்ணவில்லை.

கேவலம் ரயத்வாரி முறையில் உள்ள குடிகள் அநுபவிக்கும் அற்ப சுதந்திரம்கூட உங்களுக்கு மறுக்கப்படுவது எண்ணவுங் கூடாத கொடுமையாகவிருக்கிறது. நீங்கள் ஓயாது பாடுபட்டு ஏக்கர் ஒன்றுக்கு 7 ரூபாய் வரி செலுத்துகிறீர்கள். பூமியைத் திருத்தியும், எரு சேர்த்துப் பண்படுத்தியும், வேலி அமைத்தும், பட்டிகாத்தும், கிணறுகளையும், கம்மாயங்களையும் நீங்கள் துருஸ்து செய்தும் உங்களில் அநேகர் பட்டாக்கள் இன்றி வெறும் குத்தகைதாரர்களாய், ஜமீன்தார்கள் விரட்டியவுடன் பிள்ளைகுட்டிகளுடன் நிலத்தை விட்டுவிட்டு ஓடக்கூடியவர்களாய் இருக்கும் அநீத நிலைமைக்கு ஒப்புவமை உலகில் எங்கேனும் உண்டோ? "பிறர்" பூமியில் இவ்வளவு ஆர்வமுடன் உழைக்கும் நீங்கள் அடையும் பலன்தானென்ன? ஒன்றுமில்லை.

கூலிபாளுக்கு நித்தமும் கூலி வேலை கிடையாது; ஆனால் வேலை செய்த நாட்களுக்கேனும் அவனுக்குக் கூலி நிச்சயம் கிடைக்கும். ஆனால், நீங்களோ நித்தமும் ஓயாமல் பாடுபட்டும் அடையும் கூலியும், உங்கள் பெண்டு பிள்ளைகள் அடையும் சுகமும், என்னவெனில் பற்றிய நோயும் கடனும் நீங்கா வறுமையுமாகும்.

இம் மாகாணத்தில் ரயத்வாரி முறையில் சாகுபடி செய்யும் பூமியின் விஸ்தீரணம் 256 லட்சம் ஏக்கர்கள். இதற்குச் செலுத்தப்படும் வரி 647 லட்சம். எனவே, ஏக்கர் ஒன்றுக்கு வரி 2½ ரூபாய்தானாகிறது. அதிலும் இவ்வாண்டு காங்கிரஸ் ஆட்சியின் பயனாய் 75 லட்சம் வஜா ஏற்பட்டிருக்கிறது. ஆனால், நீங்கள் ஜமீன்தார்கள் வலையில் சிக்குண்டு அப்பயனில் ஒரு சிறிதும் அடையாதிருப்பது எவ்வளவு கேவலம்! எனவே

ஜமீன்தாரி முறை ஒழிக்கப்படும் வரை இந்நாட்டுக் குடிகளுக்கு எத்தகைய விமோசனமும் ஏற்படாதென நாம் கூறுவதில் யாதொரு குற்றமும் இல்லை.

வேண்டுவதென்ன?

நாமனைவரும் ஒன்றுபட்டு ஒரே மனதாகக் கீழ்க் கண்ட சீர்திருத்தங்கட்காக சாத்வீக முறையில் கிளர்ச்சி செய்து போராடி வெற்றி பெற்றாகவேண்டும்.

1. நிலத்தை உழுபவனே நிலத்துக்குச் சொந்தக்காரன்.

2. அவன் அதைக் குத்தகைக்கு அடைக்கவோ பிறருக்கு அடமானம் வைக்கவோ, விற்கவோ கூடாது.

3. ஒருவன் ஒரு நிலத்தை மூன்று வருஷத்துக்குச் சேர்ந்தாப்போல் தரிசாகப் போட்டிருந்தால் அப்பூமியை சர்க்கார் பறிமுதல் செய்து வேறு நிலம் இல்லாதவனுக்குக் கொடுத்து விட வேண்டும்.

4. பூமியில் ஒரு பகுதியில் மட்டும் விவசாயம் செய்யப் படவேண்டும். மறுபகுதி கால் நடைகளுக்கு மேய்ச்சல் காடாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

5. மகசூலின் மீது அட்வான்சு கொடுக்கவும், விளை பொருட்களை வாங்கித் தேக்கிவைத்திருந்து நல்ல விலைக்கு விற்கவும், நீண்டகால எளிய வட்டிக்குக் கடன் கொடுத்து பூமியைப் பண்படுத்த உதவவும் சர்க்கார் பாங்கிகளும் சொஸைடிகளும் ஏற்படுத்தப்படவேண்டும்.

6. குளங்கள், வாய்க்கால்கள், ஏரிக்கரைகள் முதலானவைகள் ஒழுங்காகப் பழுது பார்க்கப்படவேண்டும்.

7. அருகில் உள்ள மலைகளில் ஆடுமாடுகள் மேய்ச்சல் கட்டணங்கள் குறைக்கப்படவேண்டும். குடியானவனுடைய சொந்த உபயோகத்துக்கு விறகு வெட்டிக்கொள்ள அனுமதி தரப்படவேண்டும்.

8. நஞ்சை பூமிகளுக்கு ஒரு போகத்துக்கே நீர் வரி விதிக்கப்படவேண்டும். புன்செய் பூமிகளுக்கும் தோட்டங் களுக்கும் ஒரே வரி விதிக்கப்படவேண்டும். எல்லா பூமிகட்கும் மறு பைசல் ஏற்பட்டு ஸ்திரமான ஒரு புது வரி விதிக்கப்பட வேண்டும். அது குடியானவனின் நிகர் வருமானத்தின்மீது கணக்கிடப்பட்டு, பூமியின் தராதரத்துக்குத் தக்கபடி நிர்ண யிக்கப்பட வேண்டும்.

9. ஒவ்வொரு கிராமத்திலும் பிள்ளைகள் விளையாட மைதானமும், பொது மந்தையும், ஸ்மசானமும் இருக்கவேண் டும். இவைகளும் குளங்களும் எக்காரணம் கொண்டும் எவருக்கும் பட்டா செய்யப்படலாகாது. ஏற்கனவே பட்டா செய்யப்பட்டுள்ளவைகள் ரத்து செய்யப்பட்டு ஊர்ப் பொது வாகவே பாவிக்கப்படவேண்டும்.

10. பட்டா பூமிகள் பிரிவினை செய்யப்பட்டு சிறிது சிறிதாகி ஒன்றுக்கும் உதவாமல் போவதைத் தடுக்கும் பொருட்டு ஒரு விவசாய பூமி பத்து ஏக்கருக்குக் குறைவுள்ள தாக இருக்கக்கூடாது.

11. ஆறுகட்கு அணைகள் கட்டி அதிக நீர்ப்பாசன வசதி கள் ஏற்படவேண்டும்.

12. மகசூல் விளையாத காலங்களில் அதற்கேற்ப வரி வஜா செய்யப்படவேண்டும்.

13. கிராமப் பஞ்சாயத்துகள் ஏற்பட்டு, சில்லறை விவ காரங்களைத் தீர்த்துக்கொள்ளவும், கிராம பரிபாலனம், பாதை, இட்டேரி முதலிய காரியங்கள் அவர்களிடம் ஒப் படைக்கப்படவேண்டும்.

14. ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக்கூடம், கிராமச் சாவடி, வைத்தியசாலை (மனிதருக்கும், கால்நடைக்கும்) ஏற் படவேண்டும்.

15. அந்தந்த கிராமங்களில் கிடைக்கும் மூலப்பொருட் களைக் கொண்டு அத்தியாவசியமான கைத்தொழில்கள் நடை

பெறவும், அவற்றை விளம்பரப்படுத்தவும், விற்கவும் ஸ்தாபனம் ஏற்படவேண்டும்.

16. கிராம சுகாதார சபைகள், கிராம விளையாட்டுக் கமிட்டிகள், கிராமக் கூத்துகள், பஜனைகள் முதலியன நடத்திக் கோஷ்டிகள் ஏற்படவேண்டும்.

17. ஒவ்வொரு கிராமத்திலும் நூல் நூற்போர் சங்கமொன்று ஏற்படுத்தி அவர்கட்கு நல்ல மனை, ராட்டு, வில், நரம்பு, வீசனம், பருத்தி முதலியன சேகரித்துக் கொடுக்கவும், அவர்கள் நூற்ற நூலை வாங்கி அவர்கட்கே நெசவு செய்து கொடுக்கவும், மிகுதியான துணியைப் பட்டணங்களுக்கு அனுப்பி விற்பனை செய்யவும் சங்கங்கள் ஏற்படவேண்டும். கிராமச் சந்தைகளுக்கு வரும் மில் துணிகள்மீது வரி விதித்து அப்பணத்தை நூற்போர் சங்கங்களுக்கு உதவ வேண்டும்.

18. லஞ்சம், மாமூல் முதலியன வாங்கும் அதிகாரிகள், மனிதர்கள் முதலியோருக்கு கடின தண்டனை விதிக்க வேண்டும்.

19. அங்கவீனர்களுக்கும், வயோதிகர்களுக்கும் உதவ ஒவ்வொரு கிராமத்திலும் க்ஷேம நிதிகள் ஏற்படவேண்டும். இதற்காக கிராமக்குடிகள் எல்லோரும் தங்கள் வருவாயில் இவ்வளவென தரும்படி செய்யவேண்டும்.

20. சுகாதார வாரங்கள், கைத்தொழிற் போட்டிகள், கைத்தொழிற் விவசாயக் காட்சிகள் முதலியன ஒவ்வொரு கிராமத்திலும் நடைபெறவேண்டும்.

21. விவசாயத்தில் ஈடுபட்டுழைக்கும் ஆண் பெண் தொழிலாளருக்கு நாளொன்றுக்கு குறைந்த பட்சம் எட்டணா கூலி கொடுக்கப்படவேண்டும்.

இத்யாதி காரியங்கள் சித்திக்கவும் அவற்றிற்கு அரசாங்கச் சட்டம் ஏற்படவும் நாம் ஓயாது கிளர்ச்சி செய்துகொண்டே

இருப்பதுடன், அம் முயற்சியில் நமக்கேற்படும் அல்லல் யாவற்றையும் சமாளிக்கத்தக்க மனோதைரியத்தை வளர்க்க வேண்டும்.

மருங்காபுரி ஜமீன்தாரணி

உங்கள் மருங்காபுரியின் ஜமீன்தாரணி சிறந்த கல்வியும், உதாரகுணமும், உபகார சிந்தையும், தெய்வ பக்தியும் உடையவர் என்று நானறிய மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

உங்கள் ஜீவாதாரமான உரிமைகளை வழங்கவும், உங்கள் வரிப் பளுவையும், கடன் பளுவையும் குறைக்கவும், உங்கட்கு வேண்டிய பாடசாலைகள், வைத்தியசாலைகள், தொழிற்சாலைகள், இலவச புத்தகசாலைகள் முதலியன ஏற்படுத்திக் கொடுக்கவும், சில்லரை அதிகாரிகள் சிப்பந்திகள் ஆகியோர் தொல்லைகளிலிருந்து உங்களை மீட்கவும், குளங்குட்டைகள், வாய்க்கால்கள் ஆகியவற்றை சீர்திருத்தவும், மேய்ச்சல் கட்டணத்தைக் குறைத்து விறகு வெட்டிக்கொள்ளவும், குளங்களில் மீன் பிடிக்கும் உரிமையும் இன்னும் உங்கள் வாழ்க்கைக்கு அத்யாவசியமான சகலமும் உங்கள் வரிப்பணத்தில் ஒரு சல்லிக்காசும் தனது சுயப் பிரயோஜனத்துக்கு எடுத்துக் கொள்ளாமல் உங்கட்கே அளித்துக் கிராமப் பஞ்சாயத்துகள் அமைத்து அவற்றின் மூலம் நிர்வாகம் நடத்துவதாக ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மணி அம்மாள் இசைவாராயின் ஜமீன் முறைமை ஒழியவேண்டும் என்று சொல்வதைவிட நாம் தற்சமயம் நிறுத்திக் கொள்ளலாம்.

வருவாய் அதிகமாக்க வழி

உங்கள் ஊரிலே, உங்கள் மத்தியிலே, உங்கள் சுகதுக்கங்களில் பங்குகொண்டு வாழும் ஹரிஜனங்களுக்கு உங்களால் இயன்ற உதவிகள் புரிந்து அவர்களை நீங்கள் கைதூக்கிவிட வேண்டும். கிராமத் தொழில்களை வளர்க்க வேண்டும். அகில

வி.—7

பாரத சர்க்கார் சங்கத்தின் உதவியால் உங்களுக்கு வருஷம் 6,000 ரூபாய் நூற்புக் கூலியாகத் தரப்படுகிறது. நீங்கள் இன்னும் அநேகம் பேர் ஓய்ந்த காலங்களில் நூல் நூற்று, உங்கள் தேவைக்கு வேண்டிய நூலை நிறுத்திக்கொண்டு மிகுதியை விலைக்கு விற்று உங்கள் ஆடைச் செலவை மீத்து, உங்கள் வருவாயை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதுகாறும் நான் கூறியவற்றிற்கு அன்புடனும் ஆர்வத்துடனும் செவிசாய்த்த உங்கட்கு எனது வந்தனத்தைச் செலுத்துகிறேன். என்னை இம் மகாநாட்டுக்கு அக்கிராசனதிபதியாகத் தேர்ந்தெடுத்த உங்கள் அன்புக்கு மீண்டும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் எனது வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

மகாத்மா காந்தியடிகளின் அருளாலும், காங்கிரஸ் மகா சபையின் முயற்சியாலும், நமது உழைப்பினாலும், தியாகத்தினாலும், நாம் தொடங்கும் காரியங்கள் அனைத்தும் நமக்கும், நமது நாட்டுக்கும் வெற்றி தருமாக.

வந்தேமாதரம்.

இராமநாதபுரம் ஜில்லா
பரமக்குடி தாலூகா
இரண்டாவது அரசியல் மகாநாடு

பரமக்குடி 16—10—1938

பெரியோர்களே!

உலகெங்கும் பெருங்குழப்பமும், கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ள சமயத்தில் நாம் இங்கு கூடுகிறோம். மேற்றிசை நாடுகளிலே ரணபேரிகையும் பீரங்கிகளும் வெடிகுண்டுகளும் முழங்குகின்றன. விஷவாயுக்கள் புகைத்துக் கிளம்பி மக்களைக் கூட்டங் கூட்டமாய் எமபுரத்துக்கு ஏற்றிச் செல்லுகின்றன. ஒரு மனிதன் இறுமாப்புடன் கட்டிய கூடகோபுரங்களை மற்றொரு மனிதன் வேட்டெழுப்பித் தரைமட்டமாக்குகிறான். உல்லாசமாக கடல்மீது தெப்பமிட்டுச் செல்லும் பெரிய கப்பல்கள் மறுநிமிடம் பாதாளத்தில் ஆழ்த்தப்படுகின்றன. மக்களின் அழுகுரலும், காயம் பட்டவர்களின் கூக்குரலும் வானத்தைப் பிளக்கின்றன. இரத்த வெள்ளம் ஆறாய்ப் பாய்ந்தோடுகிறது. மக்கள் பெருமையுடன் வாழ்ந்திருந்த பெரும் பட்டணங்களெல்லாம் இடிந்து பாழாகி எங்கும் பிணக்காடாக விளங்குகின்றன.

இவ்வாறாகக் காளி தன் கோரரூபத்துடன் கோரைப் பற்களை நீட்டிக்கொண்டு ஸ்பெயினிலும், சீனாவிலும் நர்த்தனம் புரிந்து வருகிறாள். அபிசீனியாவில் அவள் ஆடிய கூத்தால் ஏற்பட்ட கலக்கம் இன்னும் அமரவில்லை.

ஆஸ்திரிய நாட்டை ஹிட்லர், கருடன் கோழிக்குஞ்சைத் தன் கூரிய விரல்களால் பற்றிப் பறந்து செல்வதுபோல கண்மூடிக் கண் திறப்பதற்குள் அபகரித்து ஜெர்மனியுடன் ஐக்கியப்படுத்திவிட்டார். சுடேட்டன் பிரதேசத்திலுள்ள ஜெர்மானியர்களுக்கு ஏதோ பேராபத்து வந்துவிட்டதாகப் பாசாங்கு செய்து, போர்முரசு கொட்டி, ஆர்ப்பரித்துக் கொக்கரித்த சுதந்திர ஜெக்கோவைச் சின்னபின்னமாக்கி விட்டார்.

பிரிட்டிஷ் சரண்

உலகிலேயே கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும் மிக வல்லமை பொருந்தியுள்ளதாக ஜம்பம் பேசிக் கொண்டிருந்த பிரிட்டிஷார்—கடந்த பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் முடிவு பெற்ற உலகப்போரிலே தோல்வியுற்ற ஜெர்மனியின் விஷப்பற்களையெல்லாம் பிடுங்கி, ஒடுக்கி, அடக்கிய பிரிட்டிஷார்—உலகத்திலே தங்கள் சாம்ராஜ்யத்திலே சூரியன் அஸ்தமிப்பதே கிடையாதென யூனியன் ஜாக்கை ஓங்கிப் பறக்கவைத்த பிரிட்டிஷார்—சர்வநலனும் வளமும் பொருந்தி நாகரிகத்திலும் கலையிலும் சிறந்து உலகத்துக்கே ஞானவொளி வீசிவந்த முப்பத்தைந்து கோடி மக்கள் வதியும் பரத கண்டத்தைச் சீரழித்து, சிறுமைப்படுத்தி, ஆழ்ந்த வறுமையிலும், நீங்கா அறியாமையிலும் அவமானம் பொருந்திய அடிமைத்தனத்திலும் தாழ்த்தி வைத்து, விடாப்பிடியாய் ஒன்றரை நூற்றாண்டுகளாக இராணுவபலத்தால் அரசாண்டு வரும் பிரிட்டிஷார்—அந்தோ! மண்டியிட்டுத் தெண்டனிட்டு மும்முறை காவடியெடுத்துச் சென்று மூனிச் என்ற ஊரில் ஹிட்லரிடம் மூக்கறுபட்டு, "போரைத் தவிர்த்தோம், தப்பித்தோம், பிழைத்தோம்" என ஓடிவந்ததை என்னென்போம், என்னென்போம்!

பிரான்ஸ் துரோகம்

பன்றியுடன் கூடிய கன்றுக்குட்டியும் கெட்டுவிடும் என்ற கதைக்கொப்ப, உலகத்திலேயே மிகப் பெரிய புரட்சி

செய்து, முடியரசைத் தாழ்த்தி, குடி அரசை ஸ்தாபகம் செய்து, மக்களின் சுதந்திரத்துக்கு வழிகாட்டியாய் நின்ற பிரான்ஸு தேசமும், ஐயோ! சேம்பர்லேனுடன் சேர்ந்து முகமெங்கும் கரியைப் பூசிக்கொண்டது உலகம் எதிர்பாராத சம்பவமாகும்.

பிரிட்டிஷாரும், பிரான்ஸு தேசமும் ஜெக் மக்களுக்கு நல்வார்த்தை கூறி, நயவஞ்சகமாய்ப் பேசி, நட்டாற்றில் கைவிட்டுவிட்டன. ஜெர்மன் புலிகளும், போலந்து, ஹங்கேரி நாய்களும் ஜெக் மக்களைத் திக்குமுக்காடச் செய்துவருகின்றன. இக்கேவலமான சம்பவத்தை உலகம் உள்ளளவும் மறக்க முடியாது. இன்று ஜெக் மக்கள் நெஞ்சம் புழுங்குகின்றனர். இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர். உயிரற்ற பிணங்கள் போல நிற்கின்றனர். ஜெர்மானியருடன் போர் புரிந்து உயிரிழந்திருப்பதே அவர்கட்கு மேலாய் இருந்திருக்கும். தன் கண் முன்னால் தன்னை ஈன்றெடுத்த தாயை மாற்றான் மானபங்கம் செய்வதைத் தடுக்க முடியாமல் ஒருவன் கட்டுண்டு கிடந்தால் அவன் மனம் எவ்வாறு பதைக்குமோ அதினினும் கொடியதாக ஜெக் நாட்டார் மனங் கொதித்து பதை பதைக்குமாறு அவர்களை பிரிட்டனும் பிரான்ஸும் சமாதானம், சாந்தி என்னும் பேரால் இறுகக் கட்டிப் போட்டு விட்டனர்.

இந்த ஏற்பாட்டால் உலகப்போர் தவிர்க்கப்பட்டதா என்பதை நாம் பார்க்கவே போகிறோம். ருசி கண்ட பூனை உரி உரியாய்ப் பாயும் என்பதேபோல் ஹிட்லர் சும்மாவிருக்கப்போவதில்லை. 1914-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 14-ந் தேதி உலகப் படத்திலே ஜெர்மனிக்கு எந்தெந்த தேசம் உரித்தாயிருந்ததோ, அவையனைத்தையும் மீண்டும் ஜெர்மனியின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் வரையில் ஹிட்லர் சும்மா இருக்கப் போவதில்லை. பிரிட்டனின் ஆகாய பலம் மிகச்சூன்யமாக இருப்பதை ஹிட்லரும் முசோலினியும் கண்டு கொண்டனர். "இதோ, நான் எழுந்தால் பொல்லாதவன்,"

என்று சுங்கச்சாவடி நொண்டி பிதற்றிக் கொண்டிருந்த அளவுக்குக்கூட பிரிட்டனால் பிதற்ற முடியவில்லை. பிரிட்டன் தனது சேனை பலத்தையும், யுத்த தளவாடங்களையும் பலப் படுத்தி உலகப் போருக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள் வதற்குள்ளாக இட்லரும் முசோலினியும் தங்கள் காரியத்தை இலகுவாகச் சாதித்துக்கொள்ளவே போகிறார்கள்.

ஜின்னா போர் முரசு

"கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்து தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போல" சுயேச்சையும், சேனை பலமும், ஒற்றுமையும், அசைக்க முடியாத உறுதியும், பெருஞ் சேனையும், தேசத்துக் காகத் தங்கள் உயிரை சுதந்திர பீடத்தில் பலிகொடுக்கப் பல்லாயிரம் மக்களும் படைத்துள்ள ஜெர்மானியர் தங்கள் சாதியார் உள்ள பிரதேசமனைத்தையும் தங்கள் கொடியின் கீழ் கொண்டு வர எண்ணுவதைக் கண்ட, நமது அடிமை நாட்டு ஜின்னாவும் அவரைச் சார்ந்த சில புலி, சிங்கங்களும், இந்தியாவைப் பிரிக்கப் போகிறார்களாம்.

இந்தியாவில் முஸ்லீம் மக்கள் வசிக்கும் பிரதேசங்களை யெல்லாம் ஒன்றுபடுத்தி உலகத்திலுள்ள இதர இஸ்லாமிய தேசங்களாகிய ஆப்கானிஸ்தானம், அராபியா, பெர்ஷியா, எகிப்து, துருக்கி முதலானவற்றுடன் ஒன்றுசேர்த்து உலகிலே ஒரு மகத்தான இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறார்களாம். அதற்காக இந்திய முஸ்லீம்களெல்லாம் ஒன்று சேர்ந்து, ஒரே கட்டுப்பாடாக முஸ்லீம்லீக் கொடியின் கீழ் நிற்கவேண்டுமாம். வாதத்தினாலே தங்கள் கார்யம் ஜெயம் பெறாவிடில், பலாத்காரத்துக்கு மக்கள் தயாராக இருக்க வேண்டுமாம்! சபாஷ்! எவ்வளவு அற்புதமான யோசனை!

மதத்தால் ஒற்றுமை இல்லை

உலக சரித்திரத்தையும், மக்களின் மனோபாவத்தையும் அறியாது பேசும் ஜின்னா கோஷ்டியாரின் அறியாமைக்கு

வருந்த வேண்டியிருக்கிறது. இன்று ஜப்பானும் சைனாவும் போரிடுகிறது. இரண்டு தேசங்களும் பௌத்த மதத்தைச் சார்ந்தவை. ஒரே மதத்தினர் என்ற காரணத்தால் அவைகள் ஐக்கியப்படவில்லை. இன்று ஸ்பெயின் தேசத்தில் இரண்டு வருஷங்களாகப் போராட்டம் நடைபெறுகிறது. அத்தேசத்தார் அனைவரும் கிறிஸ்தவர்கள். அம்மதம் அவர்களை ஒன்றுபடுத்தவில்லை. கிறிஸ்தவ இத்தாலியால் விரட்டப்பட்ட அபிசீனிய மன்னரும் கிறிஸ்தவரே. அவ்விரு நாட்டு மக்களும் கிறிஸ்தவர்களே. ஜெக் நாட்டவரும், அதனை விழுங்கிய ஜெர்மானியரும் கிறிஸ்தவர்களே. எனவே, இவற்றிலிருந்து மக்களை மதம் ஒன்றுபடுத்தாது என்பது தெளிவுபடுகிறது.

இவ்வுண்மையை நாடி ஆறாயிரம் மைலுக்கு அப்பால் ஓடுவானேன்? நமது இந்திய சரித்திரத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு மீர்ஜாபர் தன் சகோதரனுக்குத் தீங்கிழைக்காமலிருந்தால், வங்காளம் ஆங்கிலேயர் வசமாகியிராது. பிரதாப சிம்மனின் தம்பி மொகலாயருடன் சேராதிருந்தால் மேவாரின் வீழ்ச்சி ஏற்பட்டிராது. இத்தேசத்திலிருந்த இந்து மன்னர்களும், முகலாய மன்னர்களும் ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்ததன் காரணமாகவே பிரிட்டிஷார் இந்நாட்டைப் பற்றி அடிமை கொள்ள முடிந்தது.

இன்று தேசமெங்கும் நடைபெறும் கொலை, குத்து, சண்டையாகிய வழக்குகளையேனும் எடுத்து ஆராய்ந்து பாருங்கள். 100-க்கு 90 வழக்குகளில் இரத்தக் கலப்புள்ள உறவினர்களே ஒருவர்மீதொருவர் விரோதமுற்றிருப்பது தெரியவரும். எனவே, எவ்வகையில் பார்த்தபோதிலும் சரி, மதம் காரணமாகவும் சாதி காரணமாகவும் மக்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டுவிடுமென்பது பகற்கனவே யாகும்.

தேசபக்தியின் வலிமை

மக்களை ஒற்றுமைப்படுத்தவல்லதும், மக்களைப் பெரிய வீரர்களாகவும், தியாகிகளாகவும் ஆக்கவல்லதும் தேசபக்தி

ஒன்றேயாகும். தேசபக்தியென்னும் தீயை அணுகும் பேதாபேதங்கள் அனைத்தும் வெந்து சாம்பாராகிவிடும். இதனை நாம் நிதர்சனமாகக் காண்கிறோம். பற்பல மதங்களைத் தழுவியும், பற்பல மொழிகள் பேசியும், பற்பல ஆசார அநுஷ்டானங்களைக் கடைப்பிடித்தும், வேற்றுமைப்பட்டு, ஒற்றுமை உணர்வு அற்று, ஒன்றரை நூற்றாண்டுகளாக அந்நிய நாட்டவருக்கு அடிமைப்பட்டுக் கிடந்த மக்களை அற்புதமாகத் தட்டியெழுப்பி, ஒற்றுமைப்பட்டு மகத்தான தியாகங்களை செய்ய வைத்தது தேசபக்தியெனும் செம்மைப் பொருளேயாகும்.

கடந்த 52 வருடங்களாக இந்நாட்டில் தேசீய வித்தை விதைத்து வந்தது காங்கிரஸ். காங்கிரஸுக்கு உயிர் தந்தது மகாத்மா காந்தியடிகள். சற்றே கண்களை மூடிக்கொண்டு சிந்தித்துப் பாருங்கள். இத் தேசத்தில் காங்கிரஸ் என்ற ஒரு ஸ்தாபனம் இல்லாதிருந்திருக்குமேல், மகாத்மா காந்தியென்ற ஒரு மனிதர் தோன்றாதிருப்பரேல், கடந்த இருபதாண்டுகளில் நாம் கண்ட விழிப்பும், கிளர்ச்சியும், சுதந்திர தாகமும் ஏற்பட்டிருக்குமா? இன்று இங்கே நாம் கூடி இந்நாட்டுக்கு சுதந்திரம் வேண்டுமெனப் பகிரங்கமாகக் கேட்டிருக்க முடியுமா? ஜின்னாவும், சிந்து மகாநாட்டில் வாயில் வந்தவாறெல்லாம் பிதற்றித்தான் இருக்க முடியுமா?

முஸ்லிம் லீக் தேசிய ஸ்தாபனமாம்! முஸ்லிம்லீக்கிற்குள் முஸ்லிம்கள் எல்லாம் ஒன்று சேர வேண்டுமாம்! கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பார்சிகள், சனாதனிகள், சைவர்கள். வைஷ்ணவர்கள், அரிஜனங்கள் என்ற ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு கொடியைப் பிடித்துக் கொண்டு தனித் தனியாகக் கூட்டமிட்டுக் கத்திக் கொண்டிருந்தால் இத் தேசம் என்னாகும் என்பதைச் சற்றே யோசித்துப் பாருங்கள், ஓகோ! ஜின்னாவுக்கும், சிக்கந்தருக்கும்தான் தங்கள் மதத்தைப் பற்றிப் பேசத் தெரியுமோ? மற்றவர்கள் எல்லாரும் வாயில்லாத பூச்சிகள் ஆகிவிட்டார்களோ! காலும் கையும்

பலமும் மூர்க்கத்தனமும் ஜின்ஞ கோஷ்டியாருக்குதான் தனி பாத்யதையோ! இவர்கள் மதி சென்றவாறென்னே! சத்யமும் அகிம்சையும் பொய்மைக் கோட்டைகளாம். கத்தியும் கபடாவும் பிரத்யட்ச உண்மைகளாம்! பலாத்காரமே பயன் தருமாம்! மனம் போனவாறெல்லாம் சிந்து மகாநாட்டில் ஜின்ஞ தம் மதிதன்னைச் சிந்தியாமல் சிந்தியிருக்கிறுர்.

துர்ப்பாக்கிய பேச்சு

எங்கே இவரது சக்தி? பர்மாவிலே பொங்கிகள் இந்திய முஸ்லீம்களைத் தாக்கினர்களே. இன்னும் தாக்குகிறுர்களே! அங்கேன் ஜின்ஞவின் சக்தி பிரவேசிக்கவில்லை? அங்குள்ள ஹிந்துக்களும் ஏனைய இந்தியர்களும்தானே பர்மியர் களுடைய கத்திக்குப் பலியாஞர்கள்? ஒரு கோடிக்கு மேற் பட்ட பொருள் இழந்தார்கள். கட்டிய துணியுடன் கப்ப லேறி தாய் நாட்டுக்கு ஓடிவந்தார்கள்! பர்மாவில் ஜின்ஞ வின் சித்தாந்தப்படி இஸ்லாத்துக்கு ஆபத்து வந்தபோது இந்தியர்களைத் தவிர பூலோகத்திலுள்ள இதர முஸ்லீம்கள் ஒரு வார்த்தையேனும் கூறவில்லையே! ஆகாகான் விழுந் தடித்து ஓடிவரவில்லையே!

ஜான்ஸிபாரில் கிராம்பு வர்த்தகம் செய்யும் இந்திய முஸ் லீம்களுக்குப் பேராபத்து வந்த காலத்தில் காங்கிரஸ் இல்லா திருந்தால் அவர்கள் கதி என்னவாகியிருக்கும்? ஜின்ஞ கோஷ்டியினர் ஜான்ஸிபார் முஸல்மான்களுக்கு எவ்வித உதவியும் செய்யவில்லையே! அதற்கு மாருகத் துரோக மல்லவோ செய்தனர்!

மலையாளத்திலுள்ள மாப்பிள்ளை முஸ்லீம்களின் கருவும் வேரும் பூண்டும் அறவே அறுக்கப்பட்டபோது ஜின்ஞவும் முஸ்லீம் லீக்கும் எங்கிருந்தது? அந்தக் காலத்தில் மாப் பிள்ளைமார்களை ஆதரித்ததற்காக எம்.பி. நாராயண மேனன். யாகூப் ஹாசன் சேட் போன்ற காங்கிரஸ் வாதிகள்தானே சிறைப்பட நேர்ந்தது? காங்கிரஸ் அதிகாரம் பெருமல்

இருந்திருக்குமானுல் அந்தமானிலிருந்து மாப்பிள்ளைகளை விடுதலை பெறச்செய்யவும், மாப்பிள்ளைச் சட்டத்தை ரத் தாக்கி குப்பைத் தொட்டியில் போடவும் ஜின்னுவாலும் அவர் தலைமை தாங்கும் முஸ்லிம் லீக்காலும், அதற்கு வால் பிடிக்கும் ஹமீத்காளுலும் முடிந்திருக்குமா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

முன்னுக்குப்பின் முரண்

முஸ்லீம் லீக் என்பது இந்தியாவிலுள்ள முப்பத்தைந்து கோடி மக்களின் பிரதிநிதி ஸ்தாபனமல்ல. அது சில குறிப் பிட்ட பதவி வேட்டைக்காரர்களாலே ஆளப்படும் ஸ்தாபன மாகும். முஸ்லீம் லீக்கை தீண்டாதாரைப்போல காங்கிரஸ் செய்துவிட்டதென்று ஜின்னு கூறுகிறுர். இத்தேசத்தின்மீது பக்தியுள்ள முஸ்லீம் கனவான்கள் காங்கிரஸ்-லீக் சமரசப் பேச்சின்போது கலந்துகொள்ளக்கூடாது, அவர்களுக்குப் பேச உரிமையில்லையென ஜனுப் ஜின்னு கூறியது என்னவோ? காங்கிரஸில் சேர யாருக்கு உரிமையில்லாது போய்விட்டது? நான்கணு சந்தா செலுத்தி, சுயராஜ்ய உறுதிமொழியில் கையெழுத்திட்டவர்கள் எல்லாம் காங்கிரஸில் சேரலாமே? காங்கிரஸ் எந்த தனிப்பட்ட வகுப்பாருக்கும் சொந்த மல்லவே? இந்தியாவின் விடுதலையை விரும்பும் அந்நிய நாட்டினர்கூடக் காங்கிரஸில் சேரலாமே!

காங்கிரஸில் ஹிந்துக்கள் பெருவாரியாக இருக்கின்றன ராம். ஆதலால், காங்கிரஸ் ஹிந்துக்களின் ஸ்தாபனமாம். ஜனுப் ஜின்னுவையும் அவரது சகாக்களையும் காங்கிரஸில் வந்து சேரவேண்டாமெனத் தடுத்தது யார்?

முஸ்லீம்கள் மைனுரிடிகளாய் இருக்கிறுர்களாம். அவர் கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் செய்யப்பட்டாலொழிய காங்கிரஸுடன் சமாதானம் செய்யமாட்டார்களாம். இன்று இந்தியாவில் நான்கு மாகாணங்களில் முஸ்லீம்கள் மெஜாரிட்

டியாக இருக்கிறார்களே, அங்கு மைனாரிட்டியாகவுள்ள இந்துக்களுக்கும் இதர வகுப்பார்களுக்கும் இன்னின்ன பாதுகாப்புகள் நாங்கள் அளித்திருக்கிறோம், அதே பாதுகாப்புகளை இதர மாகாணங்களில் மைனாரிடியாகவுள்ள எங்கள் மதத்தார்களுக்கும், இதர மதத்தினர்களுக்கும் ஏற்படுத்துங்கள் என்று முஸ்லீம் லீக் சொல்லுவதுதானே? அதைப் பற்றி ஏன் அவர்கள் ஒரு வார்த்தைகூடத் திறக்கவில்லை?

சமரசம் பேசியது போதும்

வட்டமேஜை மகாநாட்டின்போது காந்தியார் முஸ்லீம்களுக்கு செக்கில் கையெழுத்தும் போட்டுத் தருவதாகவும், அதில் அவர்கள் தங்கட்கு வேண்டிய தொகையை எழுதிக் கொள்ளலாமெனவும் கூறினார். ஜின்னா ஒரே பிடிவாதமாக வகுப்புவாதத்தைக் கிளப்பினார்.

துரியோதனன் வீட்டுக்குக் கிருஷ்ணபரமாத்மா தூது சென்றதுபோல காந்தியடிகளே ஜின்னாவின் வீடு தேடிச் சென்று, "உனக்கு வேண்டியதை எல்லாம் கேளப்பா தருகிறேன்" என்றார்.

உடனே ஜின்னா, "இந்தியாவிலுள்ள ஏழுகோடி முஸ்லீம்களுக்கும் தனது லீக்கே பிரதிநிதி சபையென எழுதிக் கொடுக்குமாறு" கேட்டார்.

இது காந்தியாரால் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? வடமேற்கு எல்லைப்புறத்திலுள்ள முஸ்லீம்களில் பெரும்பாலோர் காங்கிரஸில் இருக்கிறார்கள். இதர காங்கிரஸ் மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் காங்கிரஸ் மந்திரிசபைகளில் முஸ்லீம்கள் இருக்கிறார்கள். அவர்களை ஆதரிக்கும் முஸ்லீம் சகோதரர்கள் லட்சக்கணக்கில் ஆங்காங்கு இருக்கிறார்கள். அப்படியிருக்கையில் காந்தியார் ஜனாப் ஜின்னாவின் தலையில் முஸ்லீம் மகுடத்தை எப்படி வைக்கமுடியும்? ஜின்னா காங்கிரஸில் சேர்ந்து, தேச நலனையே மனதில்

பூண்டு உழைக்க முன் வருவாராஞல் ஒருக்கால் முப்பத்தைந்து கோடி இந்திய மக்களின் மன்னராக அவருக்கு முடி சூட்டுவிக்க மகாத்மா காந்தியால் முடியும்.

காந்தியடிகள் ஜின்னுவை பெரிதாக மதித்தது பிசகென்பதே என்னுடைய எண்ணம்; முஸ்லீம் தேசபக்தர்களைத் துச்சமாக மதித்துப் பரிகசிக்கும் ஜின்ஞு கோஷ்டியுடன் சமரசம் பேச காங்கிரஸ் தலைவர் எண்ணியது மகா பிசகான காரியம் என்பதே எனது திடமான முடிவு. வகுப்புவாதத்தில் ஊறிப்போய் இருப்பவர்கள் யாராஞலும் அவர்களுக்குக் காங்கிரஸில் இடமில்லை; அவர்களுடைய உதவி இல்லாமலே இந்தியா அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறமுடியும். காங்கிரஸுக்கு இந்த விஷயத்தில் தன்னம்பிக்கை குறைந்துவிட்டதா என நான் கேட்க ஆசைப்படுறேன். காங்கிரஸின் லட்சியத்தை இந்தியப் பாமர மக்கள் அறியும்படி பலமான பிரசாரம் செய்து விட்டால் வகுப்புவாதிகளின் கூச்சல் தாஞக அடங்கிவிடும்.

சுயமரியாதைக் கூச்சல்

உலகப் போக்கும் முஸ்லிம் வீக்கும் இவ்வாருக இருக்கையில், தென்ஞட்டில் ஒரு சிறிய கும்பல் அனுவசியமான குழப்பம் செய்துகொண்டிருக்கிறது. இந்தியாவில் மதங்களே இருக்கக்கூடாது, மசூதிகளே இருக்கக்கூடாது, கோவில்களே இருக்கக்கூடாது, சர்ச்சுகளே இருக்கக்கூடாது என்பதே அக்கட்சியின் சித்தாந்தம். மற்றும் இந்தியாவுக்கு சுயராஜ்யமே வரக்கூடாதென்பது அதன் கோரிக்கை. இந்த தேசத்தில் உள்ள ஆரியர்களாகிய பிராமணர்களையெல்லாம் கப்பலேற்றி ஜெர்மனிக்கு அனுப்பிவிடலாமென்பது அதனுடைய அபிலாஷை. ஒவ்வொரு சாதிக்கும் இத்தனை விகிதாசாரம் என்று ஏற்படுத்தி அதனை வழங்க சாஸ்வதமாக ஆங்கிலேயன் இங்கிருக்க வேண்டுமென்பது அதன் பிரார்த்தனை.

இந்தியாவுக்கென ஒரு பொதுமொழி இருக்கக்கூடா தென்பது அதனுடைய வாதம். தமிழ் மொழி பயிலவேண்டும் என்றும் சொல்லுகிறது. ஆனால், தமிழில் உள்ள இதிகாசங்கள், புராணங்கள், கதைகள், நாடகங்கள், காப்பியங்கள், இலக்கண இலக்கியங்கள், கணித ஜோதிட வைத்திய சாஸ்திரங்கள், சங்க நூல்கள் முதலிய யாவற்றையும் நெருப்பிவிட்டுக் கொளுத்திவிட்டு, இராமசாமியாரின் இலங்கைப் பிரசங்கம், இங்கர்சாலின் இங்கிதமொழிகள், லெனினும் மதமும். இராமாயணத்தின் ஆபாசங்கள், கைவல்ய சாமியாரின் கட்டுரைகள் போன்ற சுயமரியாதைத் தமிழில் அச்சிட்ட நூல்களே இருக்கவேண்டும் என்பது அதனுடைய பலமான எண்ணம்.

இவ்வாறான அதன் கொள்கைகள் ஈடேறுவதற்கு காங்கிரஸ் அதிகாரத்திலிருப்பது அதற்கு இடைஞ்சலாகவிருக்கிறதாம். அதனால், மஞ்சள் பெட்டியைக் காலிசெய்து, காங்கிரஸ்காரர்களையெல்லாம் வெளியே தள்ளி சிறையில்போட்டு மூடிவிட வேண்டிய கார்யாதிகளை செய்து வருகிறது. இம்முயற்சிக்கு அநுசரணையாக குடியரசு, விடுதலை, நகரதூதன் பத்திரிகைகள், வேலைபோன மந்திரிகள், தேர்தலில் ஜாமீனிழந்த கனவான்கள், நாடில்லாத ராஜாக்கள்போன்ற கழன்றுபோன அகப்பைகள் சேர்ந்திருக்கின்றன.

ஆந்திரர் ஆர்ப்பாட்டம்

ஆந்திரநாட்டு "வீரர்கள்" ஒருபுறம் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். தமிழர்களெல்லாம் சாபூத்தாகப் போய்க் கொண்டிருப்பது அவர்களுக்குச் சம்மதமில்லை. அவர்களை எப்படியாவது கிள்ளிவிட்டுத் தங்கள் வாழ்க்கையில் காரசார மேற்படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள். மச்சானில்லாத வேளையில் கேலிபேச அக்காளையாவது கூப்பிடுவோம் என்ற கோமாளி மாதிரி நம்மோடு சண்டைபோட வரிந்து கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

வேங்கடமிருந்து குமரிவரைக்கும் தமிழ் நாடாயிருக்கை யில், அவர்களுக்கு சென்னைப்பட்டணத்தையும் சேர்த்து ஒரு தனி மாகாணம் ஏற்பட்டாகவேண்டுமாம். காங் கிரஸுக்கு பூரண அதிகாரம் வரும்வரையில் காத்திருக்க மாட்டார்களாம். இப்போதிருந்தே காவடி யெடுத்துக் கொண்டு ஆட்டம் போடவேண்டுமாம். கடந்த இருபது வருஷங்கள் தொடர்ச்சியாக ஆந்திரத் தெலுங்கர்கள் பிரதம மந்திரிகளாக இருந்தபோதெல்லாம் இந்த ஆட்டம் போடா மல், இப்போது ஒரு வருஷம் ஒரு தமிழர் பிரதம மந்திரியாக இருப்பது தாளாமல், கேவலமான ஆர்ப்பாட்டங்கள் செய்து வருகிறார்கள். இவர்கள் அளவுக்கும் மீறிச் செல்லாதிருக்கு மாறு தமிழர்களாகிய நாம் தகுந்த முறையில் எச்சரிக்கை செய்துவிடவேண்டும்.

சுயேச்சை இந்தியாவில் பாஷாவாரியாக மாகாணங்கள் பிரிக்கவேண்டுமென்பதே காங்கிரஸின் லட்சியமாக விருக் கையில் ஆந்திர நாட்டவர்கள் இப்போதே ஆர்ப்பாட்டம் தொடங்கியிருப்பது மிகவும் ஆபாசமான காரியமாகும். தமிழர்களைவிடத் தாங்கள் மட்டமானவர்கள் என்று எண்ணிக்கொண்டு இவர்கள் கூத்தாடுகிறாப்போல் தெரி கிறது. அவர்களிடம் "நீங்கள் ரொம்பவும் ஒஸ்தி" என்று நாம் சொல்லிவிட வேண்டும்.

மேற்கே மூண்ட யுத்தமேகம் தடைபடாமல் இருந்திருந் தால் இந்தியாவெங்கும் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகி யிருக்கும். உலகினருக்கு இந்தியாவின் சக்தி இன்னதென் பதைக் காங்கிரஸ் காட்டியிருக்கும். வகுப்பு வாதங்களும் விஷமக் கூத்துகளும் தலைகாட்டாது மறைந்துபோய், தேச மெங்கும் என்றுமிராத ஐக்கியம் ஏற்பட்டிருக்கும். அத் தகைய சந்தர்ப்பம் இன்னும் ஓராண்டுக்குள் ஏற்படவே போகிறது. அதற்குள் நமது சக்திகளை சிதறடிக்காமல் காத் திருக்க வேண்டியது அவசியம்.

சமஸ்தானங்கள் விழிப்பு

இந்திய சமஸ்தான மக்களும் சுதந்திர தாகம் கொண்டு தேசமெங்கும் கிளம்பியிருத்தல் நற்சகுனமாகும். தென்னிந்தியாவில் திருவாங்கூர் மக்களின் சத்தியப் போர் நாடோறும் வலுவடைந்து வருகிறது. அங்கு அஹிம்சாப் போருக்கு அநுகூலங்கள் ஏற்படுத்திக் கொடுத்த திவான் ராமசாமி அய்யருக்கு நாம் நன்றி பாராட்டவேண்டும். ஏனெனில், மேல் நாட்டு வல்லரசுகள் தாங்கள் செய்து குவித்திருக்கும் நவீன யுத்த தளவாடங்களின் வல்லமையை பரீட்சை செய்வதற்காக ஸ்பெயினில் ஒரு கலகத்தை கிளப்பிவிட்டு நடத்திக் கொண்டிருக்கையில், இங்கு மகாத்மாவின் சிறந்த அஹிம்சா முறையை மக்கள் கையாண்டு பரீட்சை செய்வதற்காக திருவாங்கூரை சர். ஸி. பி. ஒரு யுத்த க்ஷேத்திரமாகத் தந்திருப்பது நல்லதல்லவா? இப்போரில் திருவாங்கூர் மக்கள் பெருத்த சோதனைக்கும் தியாகத்துக்கும் ஆளாகியிருக்கிறார்கள் என்பது உண்மையே. எனினும் சுதந்திரம் என்ற புனிதமான வஸ்துவை ஏற்ற விலை கொடுக்காமல் எப்படிப் பெறமுடியும்?

இந்தியா விடுதலை பெறவேண்டுமென்றும், இந்திய மக்கள் சுதந்திர புருஷர்களாய் வாழவேண்டும் மென்றும் நாம் ஆர்வம் கொண்டிருக்கிறோம். நாம் அடிமைகளாய்வாழுகிறோம் என்ற எண்ணம் நமக்கு அவமானமாய் இருக்கிறது. அதை எண்ண எண்ண நமது இரத்தம் கொதிப்படைகிறது. ஆனால், சுதந்திரம் சும்மா வரப்போவதில்லை. அதற்கு நாம் தகுந்த விலை தராமல் அது தானே வராது. காங்கிரஸ் நம்மை சுதந்திரப் போருக்கு ஆயத்தமாக்கி வருகிறது. வீரர்களாக உள்ளவர்கள், தியாகத்துக்கு அஞ்சாதவர்கள், சுதந்திரமில்லாத வாழ்வைத் துச்சமென எண்ணுகிறவர்கள் காங்கிரஸில் சேர்ந்து கட்டுபாடாகவும் ஒழுங்காகவும் அணிவகுத்து நில்லுங்கள். பேடிகள், கோழைகள், பயங்கொள்ளிகள் விலகி நின்று வேடிக்கை பாருங்கள்.

வந்தேமாதரம்!

சேலம் ஜில்லா
திருச்செங்கோடு தாலூகா
அரசியல் மகாநாடு

மல்லசமுத்திரம் 13-11-1938

பெரியோர்களே!

இங்கு கூடியிருக்கும் இம் மாபெரிய மகா நாட்டில் தலைமை வகிக்கும் கௌரவத்தை எனக்களித்த உங்கள் அன்பிற்கு நன்றி செலுத்துகிறேன்.

மூவருடன் வந்திருந்தேன்

இவ்வூருக்குச் சுமார் பதின்மூன்று வருடங்களுக்குமுன், நான் ஒருமுறை வந்து உங்கள் முன்னிலையில் பேசும் பாக்கியம் பெற்றேன். அன்று என்னுடன் வந்திருந்த மூன்று நண்பர்களின் ஞாபகம் எனக்கு வருகிறது. அம் மூவரும், அந்தோ! இன்று நம் மத்தியில் இல்லாதுபோனது எனக்கு ஆழ்ந்த துக்கத்தைத் தருகிறது. அம் மூவரில் ஒருவர் உங்கள் தாலூகாவைச் சேர்ந்தவர். மற்றிருவர் எனது ஜில்லாவைச் சார்ந்தவர்கள்.

புதுப்பாளையம் மிட்டாதார்

புதுப்பாளையம் மிட்டாதார் இரத்தின சபாபதிக் கவுண்டரைஉங்கள் மனக்கண்முன் கொண்டுவர அனுமதி தாருங்கள். சிவந்த மேனியும், கட்டுவாய்ந்த உடலும், ஒளிவீசும் கண்களும், புன்முறுவல் பூத்த முகமும், கள்ளங்

கபடமற்ற சிந்தையும், அன்புகனிந்த நெஞ்சமும், பரோபகார குணமும், கருணைவடிவமும், தேசபக்தியில் ஆர்வமும், சொல்லில் வீரமும், செயலில் உற்சாகமும் நிறைந்திருந்த அக்கொங்கு நாட்டுமன்னனை எண்ணுந்தோறும் என் மனம் துயரத்தால் சோர்வடைகிறது.

அவர் நம்மெல்லோரையும் ஏய்த்துவிட்டுச் சொல்லாது விண்ணுலகம் சென்றிடினும், அவரது பெயர் என்றும் மங்காது நம் இருதயத்தில் இலங்குகிறது. புதுப்பாளையத்தில் காந்தி ஆச்ரமம் நிறுவி, அவர் விதைத்த தேசீயவித்து இன்று குளிர்ச்சி தரும் விருக்ஷமாக ஓங்கி வளர்ந்து இத் தாலுகா வாசிகள் அனைவருக்கும் இன்பம் பயப்பதாக இருந்து வருகிறது. பெரிய சாம்ராஜ்யங்கள் ஏற்படுத்தி, ஆகாசமளாவும் கற்கோட்டைகள் எழுப்பி, மமதையுடன் வாழ்ந்திருந்த மன்னுதி மன்னர்கள் இருந்த இடங்கள் எல்லாம், அவர்கள் இறந்த பின்னர் இருளண்டி, ஆந்தைகள் கத்தவும், கள்ளிகள் முளைக்கவும், பாம்புகள் புத்தெடுக்கவும், மண்மூடிப்போகவும் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், எம் மன்னன் இரத்தின சபாபதி இறந்த பின்னரும், அவர் இருந்தவிடம், ஏழைகள் பசியும், பிணியும் போக்கும் ஆச்ரமமாகப் பொலிவுற்று விளங்கி வருதலன்றோ அவரது மாண்புக்குச் சான்று தருகின்றது. புதுப்பாளையம் காந்திசேவா சங்கத்தைப்போன்று தமிழ்நாட்டுக் கிராமங்கள்தோறும் ஆச்ரமங்கள் தோற்றுவித்து நடத்த நமது நாட்டு வள்ளல்கள் முன் வருவார்களாக!

கொங்குநாட்டு மல்லன்

காலனுங் கண்டு நடுநடுங்கும்படியான உடலும், வலிவும், பொலிவும் ஒருங்கே பெற்றிருந்த கொங்குநாட்டு மல்லனாகிய மற்றொரு நண்பன் கோவைக்கடுத்த செட்டிபாளையம் அய்யாசாமிக் கவுண்டர். அச்சம் என்பதை அறியாதவன்! கலங்கா நெஞ்சம் படைத்தவன். தேச சேவை ஒன்றையே தன் வாழ்

நாளின் நோக்கமெனக் கொண்டவன். கடல்மடை திறந்து விட்டதுபோல் பேசுந்திறன் பெற்றவன். அந்த நண்பனும் தனது இளம்பிராயத்தே, நம்மை விட்டுப்பிரிந்து வானேக்கிச் சென்றது நாம் செய்த அவப்பயனேயாகும்.

கன்னடியன்

மூன்ரும் நண்பர் இன்னும் உயிருடன்தான் இருக்கிருர். அன்று உச்சிக்குடுமி வைத்திருந்தவர் இன்று பெருந்தாடியும் மீசையும் வளர்த்துக்கொண்டிருக்கிருர். அன்று தூய்மைக் கதருடுத்தியிருந்தவர் இன்று மல்லுக் கட்டிக் கொண்டிருக் கிருர். அன்று சுதந்தர முழக்கம் செய்தவர், இன்று நாட்டில் பேடித்தனத்தையும், பகைமை துவேஷம் ஆகிய இழிகுணங் களையும் பரப்பிவருகிருர். அந்நியவாதிக்கத்தினின்று விடு படத் தேசமெங்கும் கொந்தளித்துக்கொண்டிருக்கும் சந்தர்ப் பத்தில், இல்லாத பூசலைப் பொல்லாத முறையில் புகுத்த முயன்று கொண்டிருக்கிருர். இப்பெரியார் யாரென நான் சொல்லவும் வேண்டுமோ?

நமது நாட்டினிடத்தும், நம் நாட்டவரிடத்தும் இம்மியளவும் பற்றுதலின்றி, ஓயாது நமது நாட்டையும், நமது மூதாதையர்களையும், நமது நாட்டு உன்னதக் கலைகளை யும், தொழில்களையும், நாகரிகத்தையும், மதத்தையும் செந் தமிழ் நூல்களையும் இழிவுபடப் பேசி, நம்மில் அநேகரை மதம்விட்டு மாற்றவும், ஏமாற்றி அடிமைப் படுகுழியில் வீழ்த்தவும் முனைந்து இன்று ஹிந்தி எதிர்ப்பெனவும், தமிழ் வளர்ப்பெனவும் குழப்பத்தைக் கிளப்பி, அதற்கென அங்கு மிங்கும் தேடியலைந்து. கூலிப்படைகள் திரட்டவும், முயன்று கொண்டிருக்கும் அக்கன்னடியரை எண்ணும்போதெல்லாம் எனக்குத் துக்கமும் சிாிப்பும் கலந்து வருகிறது.

யாரால் வீரர்களானேம்?

கடந்த பதின்மூன்று வருஷங்களுக்குள் நமது தேசத்தில் நடைபெற்றுள்ள காரியங்களால் நாம் ஒரு நூற்ருண்டில்

பெறக்கூடாத முன்னேற்றத்தைப் பெற்றிருக்கிறோம். கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளாக ஆட்டு மந்தையை மேய்ப்பதை விட, வெகு சுலபமாக 35 கோடி மக்களை அடக்கி மேய்த்துக் கொண்டிருந்த அந்நியர்கள் இனி இந்தியர்களை அடிமை கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொள்ளவும், ஆடுகள்போல் அடங்கியிருந்த நமது நாட்டு மக்கள் இன்று தாங்களும் மனிதர்கள்தாம் என்றுணர்ந்து மார்தட்டி, மீசை முறுக்கி, கண்களை உருட்டிப் பார்க்கவும், இதுகாறும் இந் நாட்டு மக்கள் அடிமைகள், கூலிகள், ஒன்றுமறியாத பேதைகள் என்று எண்ணியிருந்த உலகமக்கள், இல்லை இல்லை; இந்தியர்கள் உயர்ந்தவர்கள், பெருங் கலைவாணர்கள், வேதாந்திகள், வீரபுருஷர்கள், அறிவாற்றல் படைத்தவர்கள், ஆத்ம பலங்கொண்டவர்கள், சுதந்தரப்பிரியர்கள்'' என்று தங்கள் அபிப்பிராயத்தை இன்று மாற்றிக்கொள்ளவும் செய்தவர் யார்?

திகைக்க வைத்தது யார்?

"இந்தியா ஒரு தேசமல்ல. அது பற்பல தேசங்கள் கொண்ட ஒரு கண்டம். அங்கு 556 இராஜாக்கள் இருக்கிறார்கள். 5,560 பாஷைகள் பேசுகிறார்கள். 55,560 சாதி சமய பேதங்கள் இருக்கின்றன. அங்கு வாழும் சீக்கியர்கள், முஸல்மான்களின் மண்டையைப் பிளக்கிறார்கள். முஸல்மான்கள், ஹிந்துக்களைக் கண்டதுண்டமாக்குகிறார்கள். இந்துக்கள், தங்களில் ஒரு பகுதியினரை சாருய்ப்பிழிந்தெடுக்கிறார்கள். அன்றாடம் 50,000 பேர்கள் அந்நிய மதங்களில் புகுந்தவண்ணமாய் இருக்கிறார்கள். இந்தியா, பாம்பும், புலியும் வாழுந்தேசம். ஆங்கிலேயன் இல்லாவிட்டால் ஒரே நாளில் ஒருவரையொருவர் அடித்து மாய்த்துக் கொள்வார்கள்'' என்றெல்லாம் செப்பித் திரிந்தவர்கள் இன்று இந்தியா சாதிசமய வேறுபாடுகளையெல்லாம் காற்றில் பறக்கடித்து, தேசபக்தி ஊற்றெடுத்து, விடுதலைப் பிரவாகம் பெருக்கெடுத்து, கரைதிரண்டு புரண்டுவருவதைக் கண்டு திகைக்கும்படி செய்தது யார்?

வியக்க வைத்தது யார்?

உப்புச் சட்டத்தை மீறும் இயக்கம் நடைபெற்ற காலையில் வடக்கே இமயத்திலிருந்து தெற்கே குமரிவரையிலும், மேற்கே எல்லைப் புற மாகாணத்திலிருந்து கிழக்கே வங்கம் வரையிலும் வியாபித்துள்ள இப்பரதகண்டமெங்கும் ஆண்களும் பெண்களும் வாலிபர்களும் வயதானவர்களும், பாமரரும் படித்தவரும், ஏழைகளும் பணக்காரர்களும், இந்துக்களும் முஸல்மான்களும், கிறிஸ்தவர்களும் பார்சிகளும், சீக்கியர்களும் பட்டாணியர்களும், பௌத்தர்களும், சாதி, மதம், மொழி, இடம் பேதமற்று வீரசிங்கங்கள் போலச் சுதந்திர கர்ஜனை புரிந்து, தோளோடு தோள் சேர்ந்து, பெரும்படைகளாய்த் திரண்டு, நாமக்கல் இராமலிங்கம் பாடியதுபோல் கத்தியின்றி, இரத்தமின்றி யுத்தம் தொடுத்து, அடிபட்டும், உதைபட்டும், மண்டை உடைபட்டும், உயிரிழந்தும், பொருளிழந்தும், சிறைப்பட்டும், தெருவில் மிதிபட்டும் அஞ்சோம், அஞ்சோம் என ஆர்ப்பரித்து, முரசு கொட்டி அந்நிய ஆதிக்கத்தின் அஸ்திவாரத்தை ஆட்டி அசைத்த தீரத்தை மாநிலத்தோர் கண்டு வியக்கும்படி செய்தது யார்?

கண்டதில்லை—கேட்டதில்லை

உலகம் தோன்றியதுமுதல் எத்தனையோ யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், இந்தியாவில் நடந்ததும், நடப்பதும், நடக்கப் போவதும்போன்ற யுத்தம் ஒருநாளும் எங்கும் இதற்குமுன் நடைபெற்றதில்லை. கண்டதில்லை, கேட்டதில்லை யுத்தமிந்தமாதிரி என்று நன்றாய்ச் சொன்னார் நாமக்கல் இராமலிங்கமும். உலகத்திலேயே மிகப் பெரிய வல்லரசாய் விளங்கியிருந்த பிரிட்டிஷார் தங்களிடமிருக்கும் ஆயுத பலத்தினாலும், அடக்குமுறைச் சட்டங்களாலும், அதிகார மமதையினாலும் இந்தியர்களின் சாத்வீக இயக்கத்தை நசுக்க இயலாமல் போய்விட்டது.

உலகத்தில் சாதாரணமாக நடைபெறும் யுத்தங்கள் சில பகைமையாலும், சில பேராசையாலும், சில அதிகார ஆணவத்தாலும் ஏற்படுவன. ஆனால், நமது சத்திய யுத்தம் பகைமையால் தொடுக்கப்பட்டதல்ல. நமக்கு எதிரியே இன்னாரென இல்லை. நம்மை அநியாயமாகவும், அக்கிரமமாகவும், தர்ம நியாயத்துக்கும், மனித நாகரிக உணர்ச்சிக்கும் விரோதமாக ஆக்கிரமித்து ஆண்டுவரும் அந்நியனுடைய ஒரு ரோமக்காலுக்கும் தீங்கு நேராவண்ணம், அவன் கண் முன் நமது தியாகத்தின்மூலம், நியாயத்தை நிலைநிறுத்தும் நோக்கத்துடனே நாம் யுத்தம் புரிந்தோம், இன்றும் புரிகிறோம். எதிரியை அன்பினால் வெல்லும் இந்த அற்புத உபாயத்தை, மிருக பலமெனப்படும் ஆயுதபலத்தை ஆன்ம சக்தியால் தோற்கடிக்கும் இப்புதிய நெறியை நமக்கும், இவ்வையகத்தாருக்கும் வழங்கித் தாமும் கையாண்டு மெய்ப்படுத்திக் காட்டி வருபவர் யார்?

அவர்தாம் காந்தியடிகள்.

காங்கிரஸ்

பெரிய பெரிய பகட்டான சட்டைகளும், கோணல் தலைப்பாகைகளும், வைர நகைகளும் அணிந்து அரண்மனைச் சிங்காதனங்களில் கொலுவிருந்த மன்னர்கள் என்போர்களும் ஆடம்பரமான மாளிகைகளும், அலங்காரவாகனங்களும் படைத்திருந்த செல்வர்களும், அதிகார ஆசையிலும், பதவி மோகத்திலும் மூழ்கியிருந்த படித்தவர்களும், பிறர் உழைப்பால் தொந்திபெருத்து பஞ்சணைகளில், சாய்ந்திருந்த ஜமீன்தாரர்களும், ஏழைகளை ஏமாற்றி எண்ணற்ற இலாபமும், ஏகபோக உரிமையும் பெற்றிருந்த முதலாளிகளும், சாதிசமய பாகுபாடுகளால் மக்களை வஞ்சித்துப் பதவிபெற்று அடிமை தேவதைக்குத் தூபங்காட்டி அமுல் நடத்திக்கொண்டிருந்த தேசத்துரோகிகளும், கடந்த சட்டசபைத் தேர்தல்களில் மஞ்சள் பெட்டியுடன் மாறுபட்டு படுதோல்வியடைந்து மண்ணைக் கவ்விய விந்தையை நாம் கண்ணாரக் கண்டோம்.

காந்தியடிகளின் ஆணைக்குட்பட்ட காங்கிரஸ் செய்துள்ள மகத்தான தியாகத்தையும், சேவையையும், பூண்டுள்ள சுதந்தரத் தீர்மானத்தையும் கண்டுள்ள மக்கள் காங்கிரசுக்கே அல்லாது பின் வேறு யாருக்குத் துணை நிற்க முடியும்?

கண்யன் ராஜாஜீ

காங்கிரஸ் பதவியேற்ற இப் பதினைந்து மாத காலத்துக்குள் நாட்டு மக்களின் நலங்கருதிப் பல அரிய பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இன்னும் செய்யத் திட்டங்கள் வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். உங்கள் ஜில்லாவில் மதுவரக்கனைக் கொன்று வீழ்த்தினார்கள். கடப்பை, சித்தூராகிய இரண்டு ஜில்லாக்களிலும் மதுவிலக்கு அமுலுக்கு வந்துவிட்டது. நமது தவப்பேற்றால் நமக்கு வாய்த்திருக்கும் ராஜாஜீ தொடங்கிய இந் நற்காரியம் இம் மாகாணத்தில் மட்டுமன்றி இந்தியா முழுவதும் பரவி வருகிறது. மூன்று ஜில்லாக்களில் மதுபானக் கடைகளை ஒழித்தால் இம் மாகாணத்துச் சர்க்கார் வரும்படியில் 34 லட்சம் ரூபாய் வருஷந்தோறும் குறைகிறது. இதை ஈடு செய்வதற்காகப் புதிய வரிகள் யாதொன்றும் போடவில்லை. அதற்கு மாறாகப் பற்பல துறைகளில் சிக்கனத்தைக் கையாண்டு வருகிறார் ராஜாஜீ. ஆனால், மாகாணம் பூராவும் மதுவிலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதினால் வருடந்தோறும் நான்கு கோடி ரூபாய் நஷ்டமேற்படும். இதை ஈடுசெய்ய இதர வருமானம் தேடவேண்டும். ஏற்கனவே ஏழ்மையாலும், கடன் பளுவாலும், தாங்கொணா வரிச்சுமையாலும், வேளாண்மைக் குறைவாலும், விலைவாசிகள் இறக்கத்தாலும் திண்டாடிக்கொண்டிருக்கும் ஏழைக் குடியானவர்களின் தலைமேல் இன்னும் அதிக பாரத்தைச் சுமத்தமுடியாது. இதற்கு எவ்விதமான உபாயம் செய்யலாம் என்று ராஜாஜீ யோசனை செய்துகொண்டிருக்கிறார்.

கூழுக்கு உப்பில்லை

ஒருவன் கூழுக்கு உப்பில்லையென்று அழுகையில் மற்றொருவன் பாலுக்குச் சர்க்கரையில்லை என்று ஏங்கினானும். அம்மாதிரியாக நமது கிராமங்களிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் குடி தண்ணீருக்கு வசதிகள் இல்லையே; குழந்தைகள் படிக்கப் பாடசாலைகள் இல்லையே, வாலிபர்களுக்குச் செய்யத் தொழில்கள் இல்லையே, எல்லாத் தொழில்களும் பாழாய்ப் போயினவே, எங்கெங்கிருந்தோ கப்பல் கப்பலாய்ச் சாமான்கள் வந்து குவிந்து சந்தை சந்தையாய் சீரழிகின்றனவே. அவற்றைப் பார்த்தால் ஆசையாகுதே, ஆனால் வாங்க பணம் இல்லையே, கடன் கொடுப்பாரையும் காணோமே என்று ஏங்கிப் புழுங்கி அனலில் பட்ட புழுக்கள்போல நமது மக்கள் தவித்துக் கொண்டிருக்கையில், இங்கிலாந்திலிருந்து இங்கு குடியேறி, நம்மைப் பலவந்தமாக ஆண்டும், வர்த்தகம் செய்தும், நமது தொழில்களைப் பறித்தும், நம்மை ஒட்டாண்டிகளாக்கி வரும் வெள்ளையர் சிலர் சின்னாட்களுக்குமுன் குன்னூரில் கூடி, நல்ல ரோடுகள் இல்லை, ரோடுகள்தான் ஒரு தேசத்தின் சொத்து என்பதை ராஜாஜீ உணர்ந்து அவற்றிற்குப் போதுமான பணம் ஒதுக்கவில்லை என்று புகார் செய்தார்கள்.

தார் ரோடு வேண்டுமாம்!

மோட்டார்முன் மோட்டார் பறக்கையில் ரோட்டில் புழுதி மலைபோல் கிளம்புகிறதாம்! அதனால், காரும், அக்காரரார் உடலும் கெட்டும் போகிறதாம்! அதற்காக ரோடெல்லாம் கருஞ்சாந்து பூசவேண்டுமாம்! தையற்காரன் சட்டையை உடலுக்குப் போதாமல் தைத்தால், ஏனய்யா மந்திரியாரே! நீங்கள் அவனைச் சும்மா விடுவீர்களா? ஏண்டா பயலே! நான்கு கெஜம் துணி கொடுத்தேனே, அதெல்லாம் எங்கடா போச்சு? என்று கேட்கமாட்டீர்களா? அம்மாதிரி நாங்கள் இந்த ரோடுகளுக்காக மோட்டார் வரி மூன்று மாதங்களுக்கொரு முறை முழுசு முழுசாய்க் கொடுத்துவரு

கிறுமே, அந்தப் பணமெல்லாம் எங்கே போச்சுது? அப் பணத்துக்கு நல்ல கப்பி வாங்கிப்போட்டுத் தட்டுவதுதானே" என்று ஒரு தோட்டக்கார வெள்ளையன் நமது ராஜாஜீயை வெளு வெளு என்று வெளுத்து விட்டான்.

சுங்கம் வேண்டுமாம்!

அம்மட்டோடு விட்டானு? "குளுகுளு என்று ரப்பர் டையர்கள் மாட்டி வாயுவேகமாய் நாங்கள் மோட்டார்களில் செல்லுவதால் எங்கள் சக்கரங்கள் ரோடுகளில் பட்டும் படா மல் பறக்கின்றன. அவைகளால் ரோடுகளுக்கு யாதொரு சேதமும் ஏற்படுவதில்லை. ஆனுல், சாமிக்குப் படைத்த சோற்றில் பேய்கள் புகுந்த மாதிரி, நாங்கள் பணங் கொடுத்துப் போட்ட ரோடுகளில் இந்தப் பட்டிக்காட்டு குடி யானக் கட்டைவண்டிக்காரப் பசங்கள், ஒன்றரை அங்குல இரும்புப்பட்டாக்கள் போட்ட வண்டியை மணிக்கு முக்கால் மைல் வேகத்தில் முக்கி முக்கி ஓட்டிச்செல்லுவதால், ரோடு களில் போட்டுள்ள கப்பிகள் இடம்விட்டுப் பெயர்ந்து, முக்காலடி வாய்க்கால்களும், முழ உயர வரப்புகளும் ஏற் பட்டுப் போகின்றன. அதுதான் போகட்டும். கார் வந்தால் பம் பம் என்று எத்தனை ஓசை செய்தாலும் அவன் வண்டியைத் திருப்புகிறுனு? அவன் திருப்பினுலும் அந்த வண்டி திரும்பு கிறதா? அந்த வண்டி திரும்பினுலும் அந்தப் பொல்லாத மாடுகளேனும் திரும்புகின்றனவா? இந்தப் பசங்களுக்கு மறு படியும் டோல்கேட்டுகள் போட்டுப் பணத்தைப் பறிக்க வேண்டும். இல்லாவிட்டால், வண்டி வண்டிக்கு லைசென்சு விதித்துப் பணம் பிடுங்கவேண்டும். இவன்களைச் சும்மா ரோட்டுகளில் விட்டுவிட்டால், ரோடெல்லாம் குண்டுங் குழியுமாய்ப் போகும். அதைப் பார்த்துச் சகித்துக்கொண் டிருக்க முடியாது" என்று அவ்வெள்ளைக்கார முதலாளி மீண்டும் ஒரு போடு போட்டான்.

அஞ்சாமல் சொல்லிவிட்டான்

நமக்குச் சொந்தமான மலைக்காடுகளையெல்லாம் இவர் கள் ஒன்றுமில்லாத விலைக்குப் பிடித்துக்கொண்டு, அங்குள்ள

அடர்ந்த மரங்களையெல்லாம் வெட்டிச் சுட்டுவிட்டதால், கால மழை பெய்வதும் நின்றுபோய் நமது வேளாண்மை குறைந்ததால், நம்மை அண்டிப் பிழைக்கும் ஏழைபாழைகள் இவர்களுடைய தேயிலைத் தோட்டங்களுக்குச் சென்று குளிரிலும், பனியிலும், அட்டைகளுக்கும், கொசுக்களுக்கும், இரத்தத்தைக் கொடுத்து, பகலெல்லாம் உழைத்து, அந்தியில் ஆடுமாடுகள்போல் அறைக்கு ஐம்பது பேர்கள் அடைபட்டுக் கிடந்து, மீண்டும் எழுந்து, ரங்கூன் குருணை அல்லது ரயிலரிசியைக் காய்ச்சி குடித்துவிட்டு, சீலைப்பேனைப் பொருக்கவும், சீவிச் சிடுக்கெடுத்துத் தலைப்பேன் பார்க்கவும் நேரமின்றி, அழுக்குத் துணி போர்த்து நாற்றம்பிடித்த உடலுடன் காதவழி மேடும், பள்ளமும் ஏறி இறங்கி, கொழுந்துகள் கிள்ளி எடுத்து, வெள்ளை முதலாளிக்கு நிறுத்துக் கொடுத்து, இப்படியே பத்துமாதங் கழித்துப் பரதேசிபோல் தலையில் சீலையைப் போட்டுக்கொண்டு, ரயிலுக்கும், மோட்டாருக்கும் அடிதடியாய், நமது கிராமங்களுக்கு வயிற்றை மலேரியக் கட்டியுடன் துருத்திக்கொண்டு, சோகை பிடித்து, கண்கள் பிதுங்கி வந்து சேரும் உழைப்பாளிக்கு "நல்ல வீடு கட்டிக்கொடுங்கள், கூலி கொஞ்சம் சேர்த்துக்கொடுங்கள் என்று நீங்கள் கேட்கக்கூடாது மந்திரியாரே" என்று அவ் வெள்ளைத் தேயிலை வியாபாரி நெஞ்சுங்குடல் அஞ்சாமல் சொல்லிவிட்டான்.

அது நமக்கு அவமானம்

ரோடுகள்தான் தேசத்தின் ஆஸ்தியாம்! இப்பாட்டாளி மக்கள் ஒன்றுமில்லையாம்! இத் தோட்டக்கார "எசமானர்கள்" அன்றாடம் குடித்துவிட்டு எறியும் காலிப்புட்டிக்காவது அரையணு முக்காலணு விலையுண்டு. அந்த அளவுக்கு அதைப் பத்திரப்படுத்த வேண்டும் என்ற அக்கரையும் மதிப்பும் அவர்களுடைய பட்லருக்காவது உண்டு. ஆனால், வருடந்தோறும் கிராமங்களிலிருந்து மலையேறிப் பாடுபட்டு வயிறு வளர்க்கச் செல்லும் நமது நாட்டு மக்களை இவ்

வெள்ளையர்கள் தங்கள் காலில் ஒட்டிய தூசியளவுக்குக்கூட மதிக்கிறார்கள் இல்லை. இதைவிட நமக்கு வேறு என்னதான் அவமானம் வேண்டும்?

நமது காட்டுக்கும் வீட்டுக்கும், கச்சேரி விவகாரத்துக்கும், உப்புமுதல் உள்ள பண்டங்கள் யாவற்றிற்கும் ஆங்கிலேயன் கடந்த 150 வருஷங்களாக வரியைத் தேடித் தேடிப் போட்டுவிட்டான். "அவள் சுத்தாத ஊர் இல்லை, பொத்தாத கூடை இல்லை" என்கிற மாதிரி அவன் போடாத வரியும், நாடாத பொருளும் ஒன்றும் பாக்கி கிடையாது. அப்படியிருக்கையில், கட்டை வண்டிக்கும் வரி போட வேண்டுமென சிபார்சு செய்கிறார்கள் இவ் வெள்ளைக்கார ஆசாமிகள். நமது செல்வம், கல்வி, தொழில், விவசாயம் எல்லாம் அழிந்து போய்க்கொண்டே இருக்கின்றன. அவற்றை செழுப்பிக்கப் போதிய செல்வம் நமது மந்திரிகளின் கைவசத்திலும், அதிகாரத்திலும் இல்லை. நமது ராணுவத்தில் நமது மக்களுக்கு இடமில்லையாம்! அந்நிய தேசத்தவர்கள் இங்கு கூட்டங் கூட்டமாயும், கட்டுப்பாடாயும் வந்து, கொள்ளையடிப்பதை நிறுத்த நமக்கு உரிமையில்லையாம்! அவர்களுக்கு நமது உழைப்பிலும், பலனிலும் சாசுவதமான பங்குண்டாம்! இத் தேசத்தையும் இத்தேச மக்களாகிய நம்மையும் அவர்கள் ஜெயித்தார்களாம்!

சம்பள பூதங்கள்

ஒரு அதிகாரிக்கு மாதம் பனிரண்டாயிரம் ரூபாய் சம்பளம் தரப்படுகிறது. மற்றும் பல்லோருக்கு மாதம் இரண்டாயிரம் முதல் ஐயாயிரம், ஆறுயிரமென்று அள்ளிக் கொடுக்கப்படுகிறது. கட்டுவதற்குச் சரியான அகலமும், நீளமும் உள்ள கோவணச் சேலையும் இல்லாமலும், சத்தற்ற கஞ்சியை மொள்ளுவதற்கொரு சொப்பும் இல்லாமல் கையொட்டிக் குடித்துவிட்டு, படுத்துறங்குவதற்கு மாட்டுச்சாலையின் குட்டிச்சுவற்றின் ஒதுக்கை நாடும் குப்பன்கள் வாழும் இத்

தேசத்தில், அப்பாடா! மாதம் பனிரண்டாயிரம் ரூபாயை ஒருவர் மூட்டை கட்டிக்கொள்வதென்பது உலகில் வேறெங்கும் நடைபெற முடியாது. இதைப்பற்றி வாய்திறந்து பேசுவதற்கோ, கேட்பதற்கோ நமக்கு உரிமையில்லையெனச் சட்டத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

அடிமைக் கோட்டை

இவ்வளவு மோசமான நிலையிலுள்ள சட்டத்தின் கீழ் அரசாட்சி நடத்த ஏனிவர்கள் இசைந்தார்கள் என்று நீங்கள் யோசிக்கலாகும். தேசத்தில் உள்ள பெருவாரியான மக்கள் இச் சட்டத்தின்கீழ் என்னதான் செய்யமுடியும் என்றொரு கைபார்த்துவிடுங்கள் என்று ஆத்திரப்பட்டதால்தான், காங்கிரஸ் இக்காரியத்தில் துணிந்துள்ளது. ஒரு கையென்ன, இரண்டு கையும், இரண்டு காலும் சேர்த்துப் பார்த்து விடுவதாகவோ கங்கணம் கட்டிக்கொண்டு, ஒன்றரை நூற்றுண்டுகளாக நம்மை அடக்கி ஒடுக்கி ஆளுவதற்கென அமைக்கப்பட்டுள்ள அடிமைக்கோட்டையின் மேன்மாடியில் ஏறியிருக்கிறார்கள். ஆங்கில கவர்னரும் அவர்களது அன்றாட வேலையில் தலையிடுவதில்லை யென்றொரு விரதம் பூண்டிருக்கிறார்.

ஆனால், கோட்டையோ மிகப் பெரிது. அதன் அஸ்திவாரம் போடப்பட்டு 150 வருஷங்களாகிவிட்டன. மேன்மாடியில் வீற்றிருந்தவாறே நமது மந்திரிகளால் அதனுடைய அஸ்திவாரத்தையும் கட்டிடத்தையும் மாற்றி விடமுடியாது. அவர்கள் அதன்மேல் உட்கார்ந்துகொண்டே கீழே பழுது பார்க்க முடியாது. மேலாகப் பழுதுபார்ப்பதாலும் அக் கட்டிடம் நமக்கு உதவாது. அதைவிட்டுக் கீழே இறங்கி வந்து அதைத் தரைமட்டமாக்கி வேறு கட்டிடம்தான் கட்டியாகவேண்டும். அக் கட்டிடத்தின் உளவுகளையெல்லாம் தெரிந்து கொள்வதற்காகத்தான் நமது மந்திரிகள் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆத்திரம் வேண்டாம்

அங்கு வீற்றிருக்கும் வரையில் நமக்கு என்னென்ன நன்மைகள் செய்யமுடியுமோ அவற்றையெல்லாம் செய்தே தீருவார்கள். நமக்கு யாதொரு நன்மையும் செய்யமுடியாது என்று தோன்றும் மறுநிமிஷத்தில் அவர்கள் அதைவிட்டுக் கீழே இறங்கி வந்துவிடுவார்கள். ஆகையால், நாம் அவர்கள் இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லையென்று அவசரமும் ஆத்திரமும் படக்கூடாது. நமது மந்திரிகள் நமது பண்ணையத்து ஆட்கள் மாதிரி. அவர்களுக்கு நமது பண்ணையத்தைப் பற்றிய சகல விஷயங்களும் நன்றாகத் தெரியும். எந்தெந்தக் காரியத்தை எந்தெந்தக் காலத்தில் முன்பின்னாக எப்படிச் செய்யமுடியுமோ அதையெல்லாம் அப்படியே செய்து முடிப்பார்கள். அவர்கள் வெறும் கூலி ஆட்கள் அல்ல. அவர்கள் பெரிய தியாகிகள். தேசத்துக்காகச் சர்வ தியாகமும் செய்யச் சன்னியாசம் பெற்றுள்ளவர்கள். தேச பக்தியில் எவருக்கும் இளையாதவர்கள். ஏன், இணையற்றவர்கள்கூட.

நம்பிக்கை கொள்ளுங்கள்

எனவே, நாம் நமது மந்திரிகளுக்குப் பக்க பலமாக நிற்க வேண்டும். காங்கிரஸை சுயநல மோகங்கொண்டு தாக்குபவர்களின் வாயை அடக்க வேண்டும். நம்மில் ஒழுங்கான கட்டுப்பாடு ஏற்படவேண்டும். காங்கிரஸ் தலைவர்கள் கட்டளையிடுகிறபடி நாம் நடப்பதை கௌரவமாக மதிக்கவேண்டும். நாம் ஒரு யுத்தம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை மறந்து விடக்கூடாது. அந்த யுத்தத்தை நமது மந்திரிகள் திறம்பட நடத்துவார்கள் என்ற நம்பிக்கை நமக்குள் இருக்க வேண்டும்.

அச்சம் ஒழிந்தது

காங்கிரஸ் மந்திரிகள் அரசாங்க கையைப் பிடித்தபிறகு ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென சென்னை

கவர்னரே ஸ்ரீரங்கத்தில் சொல்லியிருக்கிறார். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் இத்தனை காலம் நமக்கு எசமானர்கள் என்று எண்ணியிருந்தார்கள். ஆனால், அந்த எண்ணம் இப்போது மாறிப்போய் நாம்தான் அவர்களுக்கு எசமானர்கள் என்ற நிசமான எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. மக்கள் எல்லோரும் அச்சத்தை அறவே ஒழித்துவிட்டார்கள். யார் முகத்தை வேண்டுமானாலும் பாருங்கள்; மயாரிடேனும் கொஞ்சமாவது பயம் இருக்கிறதா? எல்லோர் முகத்திலும் ஒரு தேஜஸ், ஒரு புன்முறுவல் அல்லவா இப்போது தவழ்ந்து கூத்தாடுகிறது. காங்கிரஸை அப்படியே விழுங்கி ஏப்பம் விட்டு விடுகிறேன் பார் என்று பகாசூரனைப் போல கிளம்பி யிருக்கிறாரே. அந்த ராமசாமி நாய்க்கருக்குக்கூட காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் இத்தனை தைரியம் வந்திருக் கிறது. இதற்குமுன் ஜஸ்டிஸ் கட்சி அதிகாரத்தில் இருந்த போது மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து கோயமுத்தூர் ஜெயிலிலிருந்து தப்பித்தேன் பிழைத்தேன் என்று ஓடிவந்து ஒளிந்தவர்தானே இவர்! இம்மாதிரியான கோழைகள் எல்லாம் வீரர்களாகி வருவது காங்கிரஸின் பெருமையைத் தான் காட்டுகிறது.

நாமே எல்லாம்

காங்கிரஸால் நமக்கும் நமது நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள பலன்களை உப்பு புளி மிளகாய்க் கணக்கில் பார்க்கக் கூடாது. காங்கிரஸால் நமது கௌரவம் உயர்ந்திருக்கிறது. காங் கிரேஸ் நமது உயிர். காங்கிரஸே நமது தேசம். காங்கிரஸே நாம். நாமே காங்கிரஸ். நாமே எல்லாம். நம்மை அசைக்க வல்லவன் யார்!

வந்தே மாதரம் !

தென்னாற்காடு ஜில்லா
9-வது அரசியல் மகாநாடு
திருமுண்டீஸ்வரம் (காந்திபுரம்)

6—8—1939

அன்பிற் சிறந்த பெரியோர்களே!

இச் சிறியேனை இம் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்குமாறு பணித்த வரவேற்புக் கமிட்டியாருக்கும் தென்னாற்காடு ஜில்லா தேச பக்தர்கட்கும் எனது நன்றியை முதலாவதாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இப்பதவிக்கு என்னினும் மேலான பல்லோர்கள் இருக்கையில், நான் தேர்ந்தெடுக்கப்பட்டது ஆச்சரியமேயாகும். இதனால் ஏற்படும் பெருமைக்கு நான் உரிமையுள்ளவன் அல்ல. அதற்குரியவர் மகாத்மா காந்தியடிகள் ஒருவரே என்பதை நான் உணர்கிறேன். அவர் ஏவலைச் சிரமேற்றாங்கி, அவருக்குக் கண்ணொத்த கதரியக்கத்தை அடியேன் நடத்தி வருவதை முன்னிட்டே என்னை இப்பதவிக்கு நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள் அல்லாது எனது அறிவாற்றல் கருதியோ, தியாகத்தை மெச்சியோ அல்லவென்பதை நான் அறிகிறேன். மகாத்மா காந்தியடிகளின் கொள்கையிலும், தலைமையிலும் சில இளங்கன்றுகள் சந்தேகமுற்றுத் தலைவிரிகோலமாய்க் கூத்தாடும் இந்நேரத்தில், நீங்கள் என்னை இம் மகாநாட்டுத் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுத்ததன் மூலம் மகாத்மா காந்தியடிகளிடம் உங்களுக்குள்ள அசையாத நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டவர்களாகிறீர்கள்.

உலக நிகழ்ச்சிகள்

உலகெங்கும் யுத்த மேகங்கள் கவிழ்ந்து கொண்டிருக்கின்றன. பேரிடியும் பெரு மழையும் வந்ததென்றால் இருக்கக் குடிலோ, உடுக்கக் கந்தையோ இல்லாத ஏழைகள் எவ்விதம் கலங்குவார்களோ, அவ்விதமே இன்று சின்னஞ்சிறு தேசங்களெல்லாம் ஹிட்லரின் இடி முழக்கத்தையும், இராணுவ அணிவகுப்பு ஆர்ப்பாட்டத்தையும் கண்டு கலங்குகின்றன. கருடனைக் கண்ட நாகம்போலப் பெரிய வல்லரசுகள் பதுங்குகின்றன. சர்வாதிகாரிகளின் சண்டமாருதத்தால் பிரெஞ்சு-பிரிட்டிஷாகிய பெரும் விருட்சங்களின் ஏமாப்புக் கிளைகள் ஒன்றன்பின்னொன்றாக முறிந்து வீழ்கின்றன. வெகு விரைவில் இம் மரங்கள் மொட்டையாகித் தனிக்கட்டையாக நிற்குமோ, அல்லது வேருடன் பெயர்ந்து மண்ணை வாரியிறைத்து வீழ்ந்துபடுமோ என்று உலகத்தார் வியப்புடன் நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் சில ஆண்டுகள் இந்தியாவின் ராஜப் பிரதிநிதியாய் இருந்து சென்ற லார்டு இர்வின் இங்கிலாந்தில் நடைபெற்ற விருந்தொன்றில்,

"உலக நிகழ்ச்சிகள் இந்தியாவில் உள்ளவர்களை வெகு தீவிரமாகச் சிந்திக்கச் செய்திருக்குமென நான் அடிக்கடி எண்ணுகிறேன். இந்தியாவில் விடுதலை பெறவேண்டுமென ஒவ்வொரு தேசியவாதியும் விரும்புகிறார். ஆனால் ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் நாலு பக்கங்களிலும் மிக மூர்க்கத்தனமான முறையில் இரண்டு தத்துவங்களுக்கிடையே நடைபெறும் போராட்டங்களையும் அவர் பார்த்து வருகிறார். அவர் அறிந்துள்ள விடுதலைக்கு இவ்விரண்டு தத்துவங்களில் எது உகந்ததென்பதில் அவருக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்க முடியாதென நான் கருதுகிறேன். சிற்சில சமயம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அவருடைய கண்களுக்கு அளித்த தோற்றத்திலிருந்து, இன்று மாறி, இவ்வுலக நிகழ்ச்சிகளின் பலனைகப்

புதிய தோற்றத்தை அளித்திருக்குமென்றும் எண்ணு கிறேன்,''

என்று பேசியுள்ளார்.

ஆம்! இவ்வுலக நிகழ்ச்சிகள் இந்திய தேசியவாதியை வெகு தீவிரமாகவே சிந்திக்கச் செய்துள்ளன! பிற நாடுகளை வெறிகொண்டு பிடித்தாள ஹிட்லரும், முஸோலினியும், ஜப்பானும் முனைந்து நிற்கையில் தன் சொந்த நாட்டில் அந்நியனுக்கு அடிமைப்பட்டுக் கிடத்தல் என்ன அவமானம் என்று சிந்திக்கச் செய்கிறது. சர்வாதிகாரம், ஜனநாயகம் என்ற இரண்டு தத்துவர்ர்த்தங்களிடையே யுத்தம் நடைபெற்று வருவதாக இர்வின் பிரபு நம்மை எண்ணச் சொல்லுகிறார். நாம் அவ்வாறு எண்ணி ஏமாறத் தயாராகவில்லை. உண்மை அவர் சொல்லுகிறபடி இருப்பதாயின் உலகத்திலே சர்வாதிகார ஆட்சியை முதன் முதலாகத் தோற்றுவித்த ருஷ்யாவின் துணை கோரி இன்று ஜனநாயகப் பிரிட்டன் பேரங்கள் நடத்துவானேன்?

உலக சாம்ராஜ்யங்களை அழித்தொழித்து உலகெங்கும் அபேதவாத நெறியைப் புகுத்தப் புரட்சி துவக்கிய ருஷ்ய நாட்டுச்சர்வாதிகாரிகளும் இன்றுபிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் துணை சேர எண்ணுவதேன்? இந்தியாவின் விடுதலைக்கும், இந்த மேல்நாட்டுத் தத்துவார்த்தங்களுக்கும் வெகு தூரம் என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். சர்வாதிகாரிகளின் நாடு பிடிக்கும் கொள்கை மூர்க்கத்தனமானதுதான். அதில் சந்தேகமேயில்லை.

ஆனால், ஆதிதொட்டு உலகிலே நாகரிகம் வாய்ந்த இந் நாட்டையும் அறிவின் கரைகண்ட இந்நாட்டு மக்களையும் விடாப்பிடியாய் அடிமை கொண்டுள்ள பிரிட்டனின் ஜனநாயகம் எந்தவிதத்தில் மூர்க்கத்தனமற்றதென அறிய ஆவல் பொங்குகிறது. இந்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்

கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு ஒரு சபை அமைத்து, அவர்களால் ஏகோபித்து இந்நாட்டுக்கு ஒரு அரசிய லமைப்பை தயாரித்துக் கொள்ளும் நமது விருப்பத்தை மறு தளிக்கும் பிரிட்டன், ஜனநாயகம் பேசவோ, ஜனநாயகத் தைக் காக்கப் புறப்பட்டுள்ளதாகக் கூறவோ எவ்விதத்தில் அருகதையுள்ளதோ தெரியவில்லை. இன்றைய உலக நிகழ்ச்சி களின் பயனாய் நமது கண்முன் பிரிட்டன் புதியதோர் தோற்றமளிக்கிறதென்பதும் உண்மையே.

இதுகாறும் தரையிலே பேரரசன், நீரிலே இறைவன் என்று பறைசாற்றிக்கொண்டிருந்த பிரிட்டன், இன்று சொந்த நாட்டில் சுரங்கங்கள் தோண்டி, அவற்றுள் நுழைந்து கொண்டிருக்கும் புதிய தோற்றம் வெகு நன்றாய் இருக் கிறது! ஸ்பெயின், கடலிலே தனது கப்பல்கள் ஒன்றன் பின் ஒன்றாய் மூழ்கடிக்கப்பட்ட போது பிரிட்டனிலிருந்து வெறும் கடுதாசி மறுப்புகள் போய்க்கொண்டிருந்ததைக் கண்டோம். அன்று கெய்ஸரின் முறுக்கு மீசையைக் கண்டு அஞ்சாது போர் தொடுத்த பிரிட்டன், இன்று ஹிட்லரின் கிள்ளு மீசையைக் கண்டு பயந்து, மியூனிச்சுக்குப் பறந்து சென்று, மண்டியிட்டுத் தெண்டனிட்டு, சமாதானப் பேச்சைக் கேட்டு ஜெக் நாட்டைக் காட்டிக் கொடுத்த தையும் கண்டோம்.

சீனாவில் வாழும் தன் தேய மக்கள் ஆண்களும் பெண் களும் நிர்வாணமாக்கப்பட்ட பின்னரும் ரோஷமின்றி ஜப்பான் சென்று திருட்டுச் சொத்தில் பங்கு கேட்டும் விந் தைகளையும் கண்டோம். சுதந்தரச் சைனாவிலே இத்தனை காலம் சர்வதேசப் பிரதேசம் அமைத்துக் கொண்டு அத் தேசத்தின் செல்வங்களைத் தன்னாட்டிற்குக் கப்பலேற்றிக் கொண்டிருந்த பிரிட்டன், சைனாவின் ஆபத்துக் காலத் திலே அதற்கு உதவாமல், தனது ஏகபோக உரிமைகட்கு எதிரொளியாய்ப் படையெடுத்துள்ள ஜப்பானிடம் பயந்து

சென்று, "என்னையேன் விரட்டுகிறாய்? நான் எப்போதும் போலவே அங்கிருப்பதில் உனக்கென்ன ஆட்சேபம்?" என்று நயந்து கேட்கும் வீரத்தையும் நாம் கண்டோம்.

நாளைக்கு ஒருகால் ஜெர்மானியர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தால் இந்த பிரிட்டன், 'வேகிற வீட்டில் பிடுங்கியது லாபம்' என்றவாறு இந் நாட்டில் தனக்கும் ஒரு பங்கு உரிமையை ஸ்தாபித்துக் கொள்ள முயலுமே அல்லாது இந் நாட்டின் விடுதலையில் அக்கரை கொள்ளாது என்பதில் என்ன சந்தேகம் இருக்கப்போகிறது? மூளப் போகும் யுத்தத் திலே இந்தியா பிரிட்டனுக்கோ, ஜெர்மனிக்கோ துணை நிற் கப் போவதில்லை என்பது நிச்சயம். அந்த நல்ல சமயத்தை இந்தியா தனது அடிமைத்தனத்தை விடுவித்துக் கொள்ள ஏற்றவாறு பயன்படுத்திக்கொள்ளும் என்பதை இர்வின் பிரபு அறிய வேண்டுகிறோம்.

ஏன் இந்தப் போராட்டம்?

இன்று ஏன் தேசங்கள் ஒன்றோடொன்று போர் தொடுத் துக் கொண்டிருக்கின்றன? நாகரிகம் வளர்ந்து விட்டதாகக் கூறும் தேசத்தார் ஏன் ஒருவரையொருவர் வெடிகுண்டு களாலும், விஷப்புகைகளாலும் மாய்த்து வருகின்றனர்? இது தானா நாகரிகம் எனப்படுவது? இவர்கள்தானா இந்தியரை சுய ஆட்சிக்குப் பக்குவப் படுத்துகிறவர்கள்? இவர்களது சாம் ராஜ்யத்தின் கீழா இந்தியா அடிமைப்பட்டுக் கிடக்கப் போகிறது?

ஒருவன் சொத்தை ஒருவன் அபகரிக்கலாகாது என்று 'இந்தியன் பீனல் சட்டம்' கூறுகிறது. அதிகமாய் உள்ளவ ரிடமிருந்து இல்லாதவனுக்குப் பங்கு பிரித்துக் கொடுக்கும் அபேதவாதக் கொள்கை கண்டிக்கப்படுகிறது. குடிகாரரர் களை ரட்சிக்க குபேரர்களுக்கு வரி போடுவது என்ன நியாயம் என்று சுபாஷ் பாபு சப்தம் போடுகிறார்.

"விளைந்தாலும் விளையாவிட்டாலும், மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும், தானியம் நல்ல விலைக்கு அழிந்தாலும் அழியாவிட்டாலும், அவன் கடன் பட்டாலும் படாவிட்டாலும், குடியானவனும் குடிகாரனும்தான் நாட்டுக்கு வரிசெலுத்தவேண்டும், நாம் ஏன் விற்பனை வரி கொடுக்க வேண்டும்?" என்று வியாபாரிகள் ஆர்ப்பரிக்கின்றனர்.

"இந்த நாடு எங்கள் நாடு, உங்கள் நாட்டுக்கு ஓடிப் போ," என்று இந்தியத் தொழிலாளர்களை சிங்கள மந்திரிகள் விரட்டியடிக்கின்றனர்.

"யாரடா நீ? இங்கு எங்கு வந்தாய்? ஓடடா வெளியே," என்று வெள்ளையர்முன் விரலசைக்க முடியாத பர்மிய அடிமைகள் இந்தியர்களை கருப்பட்டி போல் கடித்து மெல்லுகிறார்கள்.

"இந்தியருக்கு நடமாட வீதியில்லை, குடியிருக்க வீடுமில்லை, விற்பனைக்குக் குடிக்கூலிக் கடையுமில்லை, வாக்குச் சுதந்திரமில்லை, நம்மோடு நேர்நின்று பேசவும் நியாயமில்லை," என்று ஜனநாயக சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியான தென்னாப்பிரிக்கா வெள்ளையர்கள் உறுமுகிறார்கள்.

இந்த நிலையில் யாதொரு பாவமுமறியாத தங்கள் சொந்த நாட்டில் சுதந்திரமாக வாழ்ந்திருந்த சீனர்கள்மேல் ஜப்பானியர் வெடி குண்டு வீசி, அவர்களுடைய நாடு நகரங்களைப் பாழ்படுத்தக் காரணம் ஏன்? அபிஸீனியாவையும் அல்பேனியாவையும் முஸோலினி ரணகளமாக்கிக் கைப்பற்றக் காரணம் ஏன்? மஞ்சூகோவை ஜப்பான் விழுங்கியதேன்? ஆஸ்திரியாவை ஆக்ரமித்து, ஜெக்கோவை சங்கரித்து, யூதர்களை கருவருத்துப் போலந்தின் பொலிவழிக்க ஹிட்லர் பீரங்கிப்படைகளை அணிவகுத்து நிறுத்தியதேன்? இவையெல்லாம் ஜனநாயகத்துக்கும் சர்வாதிகாரத்துவத்துக்கும் மூண்டுள்ள பகைமையாலா?

இல்லை, இப் பகைமையல்ல காரணம். இத் தத்துவார்த்த பேதங்களல்ல காரணம். இவர்கள் சாம்ராஜ்ய-சர்வாதிகார- ஜனநாயக தேசங்கள் அனைத்துக்கும் கொள்கையும் குறியும் ஒன்றே. அவர்களுள் கருத்து வேறுபாடுகள் சிறிதேனுமில்லை, நடை முறை வேலைத் திட்டங்களிலும் பேதா பேதமில்லை. நூறு வருடங்களுக்கு முன் பிரிட்டன் தனது சேனுபலத்தினுல் என்ன செய்ததோ அதைத்தான் இன்று பிறநாடுகளும் செய்கின்றன. வர்த்தகத்தை நாடி வந்த பிரிட்டன் இந்தியாவை அடிமை கொண்டது.

இந்திய மன்னர்களை ஒருவர்மீதொருவரை ஏவிவிட்டு, கிளைவுகளும், வாரன் ஹேஸ்டிங்ஸுகளும் பிறரும் போர் தொடுத்து சூறையாடி இந் நாட்டை இங்கிலாந்தின் நலனுக்காக அடிமைப்படுத்தி வைத்துக்கொண்டார்கள். இதைப் போன்றே இன்னும் பல 'காலனிகள்' எனப்படும் நாடுகளில் குடியேறி அங்குள்ள மக்களைக் கொன்று குவித்துக் கைப் பற்றி, அந் நாட்டுத் தொழில்களை அழித்து வளங்களைக் கொள்ளையடித்து வருகிறுர்கள்.

போதாக்குறைக்கு 1914-ம் ஆண்டு தொடங்கி 1919-ல் முடிந்த மகாயுத்தத்திலே தோற்றுப் போன ஜெர்மனிக்குச் 'சொந்தமாயிருந்த' பல பிரதேசங்களை பிரிட்டன் தனக்கும், தன் நேச தேசங்கட்கும் இடையே பங்கு போட்டுக்கொண்டது. அவைகளை மீட்கவும், பிரிட்டனைப்போல் தன்னுட்டைப் பெரிய சாம்ராஜ்யமாக்கவும், ஹிட்லர் இன்று ஆக்கிரமிப்புக் கொள்கையில் இறங்கியுள்ளார். ஜப்பானும், இதாலியும் அப்படியே; எனவே பிரிட்டனுக்கும் இச் சர்வாதிகார தேசங்கட்கும் யாதொரு வேற்றுமையும் காணேம்.

இந் நிலைமைக்குக் காரணமென்ன? இந்தியாவையும் இந்தியரையும் நாகரிகப்படுத்தவா பிரிட்டன் இந்தியாவைப் பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறது? சைனுவையும் சீனர்களையும் சீர்திருத்தவா ஜப்பான் அங்கு போர் செய்கிறது?

அபிஸீனியரையும் அல்பேனியரையும் ஆட்சிக்கொண்டு ரட்சிக்கவா இதாலி தனது ரணபேரிகையுடன் அங்கு குடிபுகுந்தது? பால்கன் நாடுகளை பரமபதத்துக்குயர்த்தவா ஜெர்மன் விரும்புகிறது? இல்லையேல் ஏன் இந்த இம்சை முறைகள்? ஏனிந்த கொலைப்பாதகப் போர்கள்? பிறர் பாவத்தைப் போக்க சிலுவையில் அரைபட்டதாகச் சொல்லும் ஏசுவானவர் பிறந்த பாலஸ்தீனத்தில் இன்று ஏன் மக்கள் கொன்று குவிக்கப்படுகின்றனர்?

"ஒருவன் இடது கன்னத்தில் அறைந்தால் உன் வலது கன்னத்தையும் திருப்பிக்காட்டு, ஒருவன் உன் மேலங்கியைக் கேட்டால் உன் உள்ளங்கியையும் கழற்றிக் கொடு" என்றெல்லாம் போதித்த ஏசுவின் மதத்தைப் பின்பற்றும் ஐரோப்பிய நாட்டினரும், அன்பே உருக்கொண்டு அகிம்சா நெறியைப் பறைசாற்றின புத்தரின் உத்தம மதத்தைத் தழுவியுள்ள ஜப்பானியரும் இன்று ரத்தவெறிகொண்டு உலகத்தைப் பிணக்காடாக்கி வருவதேன்?

காந்திஜீயின் பித்து

இதனைத் தீர யோசித்தவர்கட்கே காந்திஜீயின் உபதேசங்களும், உத்தேசங்களும் புலனுகும். மற்றவர்களுக்கு ஒன்றும் புலனுகாது. நொடிப்பொழுதில் உலகெலாம் சுற்றித் திரிய ஆகாயக் கப்பல்களும், மக்கள் உழைப்பின்றி மலைகள் போன்ற பொருள்களை உற்பத்தி செய்து தள்ளவல்ல இயந்திர சாலைகளும், பெரிய கப்பல்களும், பெருமிதமான சேனைகளும், கண்மூடித் திறப்பதற்குள் கனகோடி பேர்களை மாய்க்கவல்ல நவீனப் போர்சாதனங்களும் நிறைந்துள்ள இவ்வுலகிலே, இக்காந்தியார், கோவணத்தை உடுத்திக் கொண்டு, "கைராட்டினத்தைச் சுற்றுங்கள், கதராடை கட்டுங்கள், தீண்டாமையை ஒழியுங்கள், மதுபான விலக்கில் முனையுங்கள், மயிர்பிடி சண்டையை விலக்குங்கள், சத்தியமே பேசுங்கள், அகிம்சா நெறியைக் கூறுங்கள், பரஸ்பரம் உறவு

கொண்டாடுங்கள், சமாதானப்படையைத் திரட்டுங்கள், சாந்தம் அமைதி கைக்கொள்ளுங்கள், அப்போதுதான் விடுதலை சித்திக்கும்'' என்று கூறுவது எவ்வளவு பைத்தியக் காரத்தனம்! என்றும்,

என்ன விந்தை மனிதர் இவர்? மெல்லிய சல்லாக்கள் களும் நான்கணுவுக்குக் கிடக்கையில் அவை கூடாதாம்! எட்டணுவைக் கொடுத்து முரட்டுக் கதர் வாங்கவேண்டுமாம்! இரண்டாயிரம் கதிர்களை வரிசையாகப் பூட்டி இருபது பேர்களைக்கொண்டு இரண்டு லட்சம் பேர்களுக்கு வேண்டிய நூலை இரண்டே வாரங்களில் தயாரிக்கவல்ல இயந்திரங்கள் கூடாதாம்! மனிதன் மிருகப் பிராயத்தில் கையாண்ட கைராட்டையை நாளெல்லாம் கைநோகச் சுற்றி நான்கு சிட்டங்கள் நூற்றால் போதுமாம்! சிட்டமொன்று நான்கு தம்பிடிக்கு மில்களில் ஆகும்போது, கையினுல் நூற்கும் நூலுக்கு ஆறு மடங்கு விலை அதிகம் கொடுக்கவேண்டுமாம்! மணிக்கு நான்கு மூட்டை அரைத்துத் தள்ளும் ஹல்சர்கள் கூடாதாம்!

உலக்கையும் குந்தாணியும் ஏந்தி ஒருநாளைக்கு ஒருகூடை குத்தினுல் போதுமாம்! நல்ல வெள்ளைச் சீனியாகாதாம்! கன்னங் கறேலென்றுள்ள கருப்பட்டிதான் தித்திக்குமாம்! இலகுவாகவும் மலிவாகவும் இயந்திரங்களால் ஆகும் எண்ணற்ற எழிற் பொருட்கள் கூடாதாம்! எங்கெங்கோ குடிசைகளிலுள்ள கபோதைகள் தங்கள் கைகளால் செய்யும் கரடு முரடான சாமான்கள்தான் வேண்டுமாம்! என்னே இக் காந்தியின் பித்து! இவரை நம்பினுல் நமக்கு ஸ்வராஜ்யம் கிட்டுமா! உலகெங்கும் முன்னேறிக் கொண்டிருக்கையில் இந்த மனிதன் நம்மைப் பின்னுக்கல்லவோ இழுக்கிறுர்? காரை விடுத்துக் கட்டைவண்டியில் போகச்சொல்லும் இக் கிழக்காந்தி காலச் சக்கரத்தை சுழலவொட்டாமல் நிறுத்த வல்லவோ பார்க்கிறுர். கடிகாரத்தின் முட்களைப் பின்புறம் திருப்பவல்லவோ முயலுகிறுர்! என்றும்,

சுபாஷ் பாபு 'அல்டிமேட்டம்' என்கிறார். இவர், ஆடட்டும் கைராட்டு என்கிறார். அவர் அபேதவாதம் என்கிறார். இவர் அன்பு—தியாகம் என்கிறார். அவர் சட்ட மறுப்பு என்கிறார். இவர் நிர்மாணத்திட்டம் என்கிறார். அவர் தேசம் தயார் என்கிறார். இவர் மதுவிலக்கு என்கிறார். அவர் புரட்சி, போர் என்கிறார். இவர் சத்தியம் அகிம்சா என்கிறாரே என்றும் நமது நாட்டு இளைஞர்கள் மகாத்மாவின் புரட்சித்தன்மையை அறியாது தாங்கள்தான் பெரும் புரட்சியாளர்கள் என்றும் எண்ணிப் பெருங்கூச்சலிட்டு வருகின்றனர்.

'புரட்சி' என்ற பதத்துக்குத் தலைகீழ் மாற்றம் என்று தான் பெயர். இன்று நம் கண்முன் உலகிருக்கும் நிலையை மகாத்மா தலைகீழாகப் புரட்ட எத்தனித்துக் கொண்டிருக்கிறார். இயந்திரமெங்கே, கைராட்டினமெங்கே? விஷப்புகை எங்கே, அகிம்சை யெங்கே? போர்க்களமெங்கே, சாத்வீக சத்தியாக்கிரகமெங்கே? பகைமையும் பேதமும் எங்கே? அன்பும் ஒற்றுமையும் எங்கே? ஆதிக்க வெறியும் அடிமை வாழ்வுமெங்கே? ஒன்றுக்கொன்று எவ்வளவு முரணானவைகள்! இவைகளைப் போதிக்கும் காந்தியார், இவைகளைச் செயலில் நடத்திக்காட்டிய பெரியார், இத்தூய நெறியினை இங்கும் உலகெங்கும் பரப்ப ஈசனது அருளும் ஒளியும் வேண்டித் தவங்கிடக்கும் அண்ணல், புரட்சியில் புரட்சி மிக்கார் என்பதை யாரறிவார்?

இயந்திர பூதம்

உலகில் ஏற்பட்டுள்ள இத்தனை துயரங்களுக்கும் இயந்திர வளர்ச்சியே காரணமென்று மகாத்மா கூறி வருகிறார். இயந்திரத்தால் தேவைக்கு மீறி அதிகமான சாமான்கள் உற்பத்தியாகி விடுகிறது. அதனைப் பிரதேசங்களில் விற்பனை செய்தாக வேண்டும். அதற்காகக் கப்பல்களில் சரக்குகளை ஏற்றிக்கொண்டு அதற்குப் பக்கபலமாக ஒரு சைனியத்தை

யும் அனுப்ப வேண்டும். சென்றவிடத்தில் சலுகைகள் தேடிக்கொள்ள வேண்டும். சமயம் பார்த்து அத் தேசத்தையே தன் சுவாதீனப்படுத்திக் கொள்ளவேண்டும். பின்னர் இயந்திர வளர்ச்சியால் கைத்தொழில்கள் நாசமாக்கப்பட்டு, அதனுல் தன் நாட்டில் வேலை யிழந்தவர்களை வேறு தேசங்களுக்குக் குடியேற்ற வேண்டும். இதனிமித்தமும் நாடு பிடிக்க வேண்டும். என்ன நியாயம் என்று யாரேனும் கேட்டால் நாங்கள் உலகை நாகரிகப்படுத்துகிறோம். பக்குவமில்லாத ஜனங்களைப் பக்குவப்படுத்துகிறோம். மக்களனைவரும் ஒரே படியில் இருக்கவேண்டுமென்பதற்காக கீழானவர்களை மேல் நிலைக்கு உயர்த்துகிறோம் என்று சொல்லவேண்டும்.

இத்தனைக்கும் காரணம் இயந்திர பூதங்களேயாகும். அவற்ருல் இம்சை விளைகிறது. அவற்ருல் மக்களின் தொழில், சுதந்திரம், நாடு நகரம் அனைத்தும் பலவந்தமாகப் பறிக்கப் படுகிறது. இயந்திரங்களைக் கையாளும் தேசங்களில் உள்ள மக்களில்கூட அநேகர் இன்று வேலையின்மையாலும், பசியாலும் வாடி வருகின்றனர். ஆள்வோருக்கும், ஆளப்படுவோருக்கும் ஒருங்கே தீங்கே விளைந்து வருகிறது. உதாரணமாக இயந்திர வளர்ச்சியால் பெயர்பெற்ற இங்கிலாந்தைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

இங்கிலாந்து

இங்கிலாந்து தேசம் ஏறக்குறைய நமது வங்காளத்தின் அளவேயாகும். அங்கு வசிக்கும் மக்கள் 4½ கோடியாவர். வங்கத்தின் ஜனத்தொகை 5 கோடி. அகில இந்தியாவின் ஜனத்தொகை 40 கோடி. இந்த 40 கோடிப் பேர்களுடைய நலன்களும் இங்கிலாந்திலுள்ள 4½ கோடிப் பேர்களுடைய நலனுக்காகப் பறிக்கப்படுகிறது. இங்கிலாந்துக்கு இந்தியா மட்டும் அடிமையல்ல. அடுத்தாற்போல் பர்மாவும் சிலோனும் இருக்கின்றன. இன்னும் அநேக நாடுகள் அடிமையாகி இங்கிலாந்தின் நலனுக்காகப் பயன்பட்டு வருகின்றன. கனடா, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா போன்ற தேசங்களிலே

ஆங்கிலேயர் பலர் குடியேறி அந்நாடுகளில் பெரும் பிரதேசங்களைத் தங்கட்குச் சுவாதீனப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இக் குடியேற்ற நாடுகளும் இங்கிலாந்தின் க்ஷேமாபிவிருத்திக்கு உதவுகின்றன.

இங்கிலாந்திலே கல்வித் திறமை உச்சஸ்தானத்திலிருக்கிறது. அங்குள்ள கலாசாலைகள், சர்வ கலைகளிலும் அந்நாட்டு மக்களுக்கு உயர்தரமான பயிற்சியை அளித்து வருகின்றன. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்தை எவராலும் அசைக்க முடியாதபடி உறுதிப்படுத்த என்னென்ன காரியங்கள் செய்யலாம் என்று அந்நாட்டு அறிவாளிகளும் விஞ்ஞான சாஸ்திரிகளும், தொழில் நிபுணர்களும் சதா தங்கள் மூளையைக் கிளறிக்கொண்டே இருக்கிறார்கள்.

இந்தியாவின் நாணய மார்க்கெட் இங்கிலாந்தின் கையிலிருக்கிறது. 'பாங்க் ஆப் இங்க்லண்டு' என்னும் இங்கிலாந்து பாங்கி கவர்னரின் திருவுள்ளத்துக்கேற்றவாறு இந்திய ரூபாயின் மதிப்பு ஏறியும் இறங்கியும் வருகிறது. இங்கிலாந்தின் நன்மையை உத்தேசித்து வகுக்கப்படும் நாணய மாற்றுத் திட்டங்களால் இந்தியாவின் செல்வம் ஓயாது ஒழுகிக்கொண்டே வருகிறது.

இங்கிலாந்தில் பூட்டியுள்ள இயந்திரங்கள் ஓயாது ஓடிக்கொண்டே இருப்பதற்கு வேண்டிய மூலப் பொருட்கள் இந்தியாவிலிருந்தும், ஆப்பிரிக்காவிலிருந்தும் எடுத்துச் செல்லப்படுகிறது. அவ்வியந்திரங்களால் தயாரிக்கப்படும் சாமான்களை விற்பதற்குப் பல தேசங்களும், வாங்குவதற்கு எண்ணற்ற அடிமைகளும் இங்கிலாந்தின் ஆதிக்கத்தின்கீழ் இருக்கின்றனர். இவ்வாறு தொழில்களாலும், வர்த்தகத்தாலும், அரசியல் பொருளாதார ஆதிக்கத்தாலும் இன்னும் பல வழிகளாலும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இங்கிலீஷ் மக்களை போஷித்து வருகிறது. இம்மக்களின் நலனைக் கருதியே இந்தியா அடிமையாக்கப்பட்டது. இந்தியாவின் குடிசைத்

தொழில்களும் அழிக்கப்பட்டன. இன்னும் நாம் அடிமைகளாக வாழ்ந்துவரும்படி நிர்ப்பந்தம் செய்யப்பட்டு வருகிறோம்.

வேலையில்லாத் திண்டாட்டம்

இவ்வாறாக உலகெல்லாம் பிரிட்டிஷாரின் வர்த்தகத்துக்குத் திறந்திருந்தும், நவீன இயந்திர சாதனங்களுக்கு இவர்கள் தேசம் பெயர்பெற்றிருந்தும், இந்தியாவின் ஜங்கம சொத்துக்கள் இவர்கள் தேசத்துக்கு தங்கு தடைகளின்றி மாறிக்கொண்டிருந்தும், இந்தியாவின் ஸ்தாவர சொத்துக்களின்மீது இவர்களுக்கு ஏகபோக ஆதிக்கமிருந்தும் இவர்களுடைய தேசத்திலும் ஏன் மக்கள் வேலையில்லாமல் திண்டாடி வருகின்றனர் என்பது யோசிக்கவேண்டியதாகும்.

இங்கிலாந்திலே இப்போது இருபது லட்சம் பேர்கள் வேலையில்லாமல் திண்டாடி வருகிறார்கள். அத்தேசத்தின் ஜனத்தொகையே 4½ கோடி. அதில் சின்னஞ்சிறு குழந்தைகள், பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள், குடும்ப பாரத்தைத் தாங்கி நடத்தும் மனைவிமார்கள், வயோதிகர்கள், நோயாளிகள், அங்கவீனர்கள் ஆகியோர்களின் தொகைகளைக் கழித்துவிட்டுப் பார்த்தால் சுமார் இரண்டு கோடிப் பேர்களே வேலைக்கு லாயக்கானவர்கள் இருப்பார்கள். இந்த இரண்டு கோடிப் பேர்களில் 20 லட்சம் பேர்களுக்கு வேலையில்லையென்றால், பத்துக்கு ஒன்பது பேர்களுக்கே இயந்திரங்களால் வேலை கொடுக்க முடிகிறதென்று புலனாகிறது. உலகில் பெருவாரியான சந்தைகளும், பலகோடிப் பேர்களும் இங்கிலாந்தின் பண்டங்களை வாங்கவிருந்தும், இங்கிலாந்தால் தன் தேசத்துத் தொழிலாளர் அனைவருக்கும் வேலை கொடுக்க முடியவில்லையென்றால், அதைப்பற்றி நாம் தீவிரமாக யோசிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லையா?

இரண்டு கோடிப் பேர்கள் தொழில் நடத்துவதற்காக சுமார் 80 கோடிப் பேர்களை இங்கிலாந்து தன்கீழ் பிடித்து

வைத்துக்கொள்ளவேண்டி யிருக்கிறது. அப் பிடியை பிறர் தளர்த்தாதிருக்குமாறு எண்ணற்ற கப்பல்கள், ஆகாய விமானங்கள், சைனியங்கள், பீரங்கிகள், வெடிகுண்டுகள், விஷவாயுப் பிரயோகங்கள், வைஸ்ராய்கள், கவர்னர்கள், ராஜத்துவேஷச் சட்டங்கள், சிறைச்சாலைகள் இத்தனையும் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

பிற தேசத்து மக்களின் சுதந்திரதாகத்தை தனது ஜனநாயக உணர்ச்சிக்கும், தத்துவத்துக்கும் முரணாகத் துப்பாக்கி முனையில் அடக்கி ஆளவேண்டியிருக்கிறது. அடிமைகளுக்கிடையே குரோதமும் விரோதமும் வளரத் தக்க வகுப்புத் தீர்ப்புகள் செய்யவேண்டியிருக்கிறது. சமஸ்தான மன்னர்களின் யதேச்சாதிகாரங்களுக்கும் பாது காப்புகள் அளிக்க வேண்டியிருக்கிறது. இரண்டு கோடிப் பேர்கள் வேலை செய்யக்கூடிய இங்கிலாந்தின் நிலைமையே இப்படியிருக்குமானால், நாமும் இயந்திர பூதங்களை வைத்துக் கொண்டு இந்தியாவிலிருக்கும் இருபது கோடி பேர்களுக்கும் வேலை கொடுக்க முயன்றால், அவர்கள் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்களுக்காகவும், அவர்களால் தயாரிக்கப்படும் பொருட்களை விற்பதற்காகவும் நாம் எத்தனை தேசங்களைப் பிடிக்க வேண்டியிருக்கும், எத்தனை கோடி மக்களை அடிமைப் படுத்த வேண்டியிருக்கும், எத்தனை ஹிட்லர் முஸோலினிகள் நமது தேசத்தில் அவதரிக்க வேண்டியிருக்கும், எத்தனை சேம்பர் லேன்கள் நடுங்க வேண்டியிருக்கும் என்பதைச் சற்றே விரிவாக ஆராய்ந்து பாருங்கள்!

சுதந்திர இங்கிலாந்து, யாருக்கும் இதுகாறும் அடிமைப் படாத இங்கிலாந்து, பரீட்சித்துத் தோல்வி யடைந்ததைக் கண்ணாரப் பார்த்த பின்னரும், நமது நாட்டிலுள்ள சில மேதாவிகள், அதே வழியை நமக்குப் போதித்து வருவது எவ்வளவு மதியீனம் என்று பாருங்கள். அதாவது, இந் நாட்டிலும் ஏராளமான இயந்திரசாலைகளை ஏற்படுத்தி விட்டால், இந்நாட்டு மக்கள் எல்லோருக்கும் வேலை

ஏற்பட்டு விடுமாம்! வறுமை நீங்கி, வாழ்க்கை நிலைமை ஓங்கி, எங்கும் செல்வம் கொழிக்குமாம்! இது ஆகும் காரியமா என்று சிந்தித்துப் பாருங்கள்!

இன்று இந்தியாவில் 400 பஞ்சாலைகள் ஓடுகின்றன. இவைகளில் 4 லட்சம் பேர்களே வேலை செய்கின்றனர். இவர்களால் உற்பத்தி செய்யப்படும் துணி இருபது கோடிப் பேர்களுக்குப் போதுமானதாயிருக்கிறது. இந்தியாவில் உள்ள எல்லோருக்குமே மில் ஆடைகள் வழங்க வேண்டுமானால், மேலும் 300 மில்கள் கட்டினால் போதுமானது. அவைகளில் மேலும் 3 லட்சம் பேர்களுக்கே வேலை கொடுக்க முடியும். ஆனால், இந்தியாவில் வேலை செய்யக்கூடிய மக்கள் பத்து கோடிப் பேர்களாவது இருப்பார்களே. அவர்கள் கதி என்னவது?

இந்த வேலையில்லாத பிரச்னை இந்தியாவை மட்டும் வாட்டவில்லை. நாம் மேலே கண்டவாறு இங்கிலாந்தையே வாட்டுகிறது. இன்னும் உலகிலுள்ள தேசங்களையெல்லாம் வாட்டி வருகிறது. இதற்கு மூல காரணம் இயந்திர வளர்ச்சியே என்பதைக் கண்ட பின்னரும், வேலையே வேலையென வீதியெல்லாம் மக்கள் திண்டாடுவதைப் பார்த்த பின்னரும், நவீன இயந்திர சாலைகள் மூலைக்குமூலை முளைத்துக் கொண்டே இருக்கின்றன. அவைகளால் மேலும் மேலும் கைத்தொழில்களும் சிறிய தொழிற்சாலைகளும் நாசமாக்கப் பட்டு, வேலையில்லாதார் தொகை விருத்தியாகி, அவர்களுக்கு வேலை கொடுக்கும் பிரச்னை கடினமாகிக் கொண்டே வருகிறது. இதனை நிவர்த்திக்கப் பிற தேசங்களை அடிமைப் படுத்த வேண்டியிருக்கிறது. அதற்காக யாதொரு காரணமுமின்றி போர் துவக்க வேண்டியிருக்கிறது. அப் போருக்கான கருவிகளும், இதர சாதனங்களும் தேடவேண்டியிருக்கிறது.

யாருடைய க்ஷேமத்தைக் கருதி இப்போர் ஆரம்பிக்கப் படுகிறதோ, அதே மக்கள் கட்டாய ராணுவச் சேவைக்கு

அமர்த்தப்பட்டு, போர்க்களங்களில் தள்ளப்பட்டு பலியிடப் படுகின்றனர். போர் நீடித்து நடக்க, நடக்க, பலர் கொல்லப் பட்டு ஜனசங்கையும் குறைந்துகொண்டே வந்து இறுதியில் வேலையில்லாப் பிரச்னையும் ஒருவாறு நிவர்த்தியடைகிறது. இது எவ்வளவு சுருக்கமான வழி பாருங்கள்! போர் முடிந்த பின் உடன்படிக்கைகள் எழுதப்பட்டு, தேச நிர்மாண வேலைகள் வெகு சுறுசுறுப்பாகக் கவனிக்கப்படுகிறது. அதன் பொருட்டு மீண்டும் பல நவீன இயந்திரங்கள் கையாளப்படு கிறது. நாளடைவில் வேலையில்லாப் பட்டாளமும் பெருகி வருகிறது. உடனே நவீனப் போர் சாதனங்கள் செய்யவும் வெகுசுலபமாக எதிரிகளைக் கொல்லக்கூடிய முறைகளும் சிந்திக்கப்படுகிறது. அப்புறம் பிரசங்க மாரிகள் பொழியப் படுகிறது. உடன்படிக்கைகள் முறிக்கப்பட்டு மீண்டும் போருக்கு வழி பிறக்கிறது. இவ்வாருக இயந்திரம் தன் நாசவேலைகளைக் கூசாமல் செய்து வருகிறது.

அகிம்சை காட்டும் வழி

ஆதிகாலந் தொட்டு அநேக காலம்வரை, இந்தியாவில் வேலையில்லாப் பிரச்னை தலைகாட்டவில்லை. அதற்கு ஏற்ற சான்றுகள் சரித்திரங்களிலும், நமது இதிகாச புராணங் களிலும் ஏராளமாக இருக்கின்றன. கிழக்கிந்திய கம்பெனி யாரின் ஆதிக்கம் இந்நாட்டில் வலுக்க ஆரம்பித்ததிலிருந்து தான், இங்கிலாந்தில் இயந்திர வளர்ச்சி தொடங்கிய பிறகு தான் நமது நாட்டுத் தொழில்கள் நாசமாகி நமது மக்கள் ஏழ்மையில் மூழ்கலாயினர். நமது மக்கள் சக்திகுன்றி, நிர்க்கதியடைந்தனர்.

பண்டு .நமது நாட்டைப் பல சான்ருேர்கள் ஆட்சி புரிந்த காலத்திலே மக்கள் எல்லோருக்கும் வேலையும், கூலியும் இருந்தது. தப்பித்தவறி வானம் பொய்த்து, பயிர்ப் பச்சைகள் வாடுமாகில், அரசாங்க பொக்கிஷங்கள் காலியாக் கப்பட்டன. கண்டோர் வியக்கும் கோவில்களும், குளங்

களும், சத்திரஞ் சாவடிகளும், சித்திர வேலைப்பாடுகளும் மக்களுக்குப் பஞ்சம் தெரியாதிருக்கும் பொருட்டு, வேலை யில்லாத காலங்களில் செய்து முடிக்கப்பட்டன. அச்சீரிய செயல்கள் இன்னும் கம்பீரத்துடன் நம் கண்முன் நின்று காட்சியளித்து வருகின்றன.

இந்த நாட்டின் தொழில் முயற்சியும் வளர்ச்சியும் எப்போதும் அகிம்சைக்கு அனுசரணையாகவும், நாகரிகத் துக்கு உகந்ததாகவும் இருந்து வந்தன. அம்முறையால் மக்கள் தத்தமக்குரிய தொழில்களை, காலாகாலத்தில் செய்து கவலையின்றி சுபிட்சமாக வாழ்ந்து வந்தனர். அத்தகைய சுபிட்ச நிலைமைக்குப் பாதகமின்றி, ஏற்ற அளவுக்கு இயந் திரங்கள் கையளப்படுமானால் நமக்குக் கவலையில்லை. ஆனால், இன்றைய நிலையில் இயந்திரங்கள் கட்டுக்கடங்காது மக்களின் கைத்தொழில்கள் அனைத்தையும் நாசப்படுத்தி, கோடிக் கணக்கான பேர்களின் உழைப்பையும் பிழைப்பையும் பலவந்தமாய்ப் பாழாக்கி. மனதில் துயரமும், நெஞ்சில் பகைமையும், நாட்டில் இருளும், கொடுமையும் இயற்றி வருகிறது.

சிலர் பணக்காரர்களாகவும், அவர்களால் பலர் சுரண் டப்பட்டு ஏழைகளாகிக் கண்ணீர் வடிக்கவும் உதவிவருகிறது. இவ்வாறு மக்கள் ஏழைகளாய், கோழைகளாய், அச்சத்தில் ஆழ்ந்து, அறியாமையில் மூழ்கி, பேதமுற்று, சின்னப்பட்டு, சீரழியச் செய்யும் இயந்திரங்கள் நமது நாட்டுக்கு ஏற்ற தாமோ? இவையனைத்தையும் உணர்ந்தே மகாத்மா காந்தி யடிகள் இயந்திர வளர்ச்சியை ஆதரிக்காது குடிசைத் தொழில்களுக்குப் புத்துயிர் கொடுத்து அவற்றின் மூலம் நாட்டிலுள்ள சகலருக்கும் வேலையும், கூலியும், உடையும், உணவும், குடிசையும், கல்வியும், நிலையான சாந்தியும், சந்தோஷமும், சுதந்திரமும், தன்னம்பிக்கையும், பக்தியும், பொலிவும் ஒற்றுமையும் பிறவும் ஏற்படுத்த நிச்சயித்துள்ளார். இதனை யறியாப் பேதையர் வீணே ஏதேதோ பிதற்று கின்றனர்.

கிராம சேவை

இவ்வுண்மையைக் கண்ட பின்னர் நாம் வாளாவிருத்தல் தகுமோ? நாமும் நமது நாடும் உய்வதற்கான வழிகள் நமது கிராமங்களில்தான் இருக்கின்றன. கிராமங்களின்மீது நமது கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று மகாத்மா கூறுதலும் இதன் பொருட்டே. கிராமங்களிலே நல்ல சுகாதாரமும், ஏற்ற கல்வியும் ஏற்படுத்த வேண்டும். பாலர்கட்கும் வயதான சகல மாந்தர்கட்கும் கல்வி புகட்டத்தக்க விரிவான திட்டங்களமைத்து வேலை செய்ய வேண்டும்.

ஆங்காங்கு கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு, மனிதனுக்கு அத்யாவசியமான தொழில்களைக் குடிசைகள் தோறும் செய்விக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் தொழிற் சங்கங்களும், தொழிலாளர் சங்கங்களும் ஏற்பட வேண்டும். நல்ல வித்துக்கள் சேகரித்து விவசாயத்தைப் பெருக்க வழி செய்யவேண்டும். கால்நடைகள் மேயவும் அவை நோயின்றி வாழவும், மேய்ச்சல் வசதிகள் ஏற்படுத்த வேண்டும்.

கிராமந்தோறும் கைராட்டினங்கள் சுழலச் செய்ய வேண்டும். நூற்புக்கு வேண்டிய பருத்தியும், மணையும், வில்லும், ராட்டினமும் இதர கருவிகளும் சேகரித்துக் கொடுக்கவும், நூற்ற நூலைத் துணியாக்கி கிராமங்களிலுள்ள சகலரும் உடுத்தச் செய்யவும், பிற துணிகளும் பொருள்களும் கிராம எல்லையில் நுழையாமல் தடுக்கவும் வழி காணவேண்டும்.

கிராமக் கோவில்கள், குளங்கள், ஏரிகள், மடைகள், வாய்க்கால்கள், ரஸ்தாக்கள், சாவடிகள் எல்லாம் செப்பனிடப்பட்டு ஒழுங்காகப் பராமரிக்கப்பட வேண்டும். வழக்கும் வியாஜ்யமும், கட்சிப் பிணக்கும், சண்டையும் ஒழிந்து மக்கள் ஒற்றுமை பூண்டு வாழச் செய்ய வேண்டும்.

இவ்வனைத்தையும் செய்துமுடிக்க நாம் எவ்வளவு பிரயத்தனம் செய்கின்றோமோ அவ்வளவு விரைவில் சுயராஜ்யம் நம்மைத் தேடி ஓடிவரும் என்று மனதில் தெளிந்து வேலை செய்யவேண்டும். உருவகமான, நிர்மாண வேலைகள் ஒன்றையும் கருதாமலும் செய்யாமலும், வீணே கூச்சலிட்டு தமது திறனையும், காலத்தையும் பாழாக்குகிறவர்களுக்கு இதனை எடுத்துச் சொல்ல வேண்டும்.

விடுதலைக்கு வழி

நீண்டகாலமாக அடிமை வாழ்வில் அகப்பட்டுள்ள நாமும் நமது தேசமும் விடுதலை பெறவேண்டுமானால் நமக்குள் ஒற்றுமையும், சரியான கட்டுப்பாடும் இருந்தாக வேண்டும். கட்டுப்பாட்டுக்கடங்காத ஒழுங்கீனமான எந்தக் கூட்டமும் எங்கும் எக்காலத்திலும் எக்காரியத்திலும் சித்தி பெற்றதில்லை.

நமது தவப்பயனால் நமக்குக்கிடைத்துள்ள மகாத்மாவின் தூய குணத்தாலும், சக்தியாலும், ஞானதிருஷ்டியாலும் நடத்தப்பட்டுவரும் காங்கிரஸ் இந்நாட்டின் ஒற்றுமைக்கு அஸ்திவாரமாயும், விடுதலைக்கு ஆஸ்பதமாயுமிருந்து வருகிறது. மகாத்மாவின் சீரிய தலைமையின் கீழ் இந்நாட்டவர் பல வியக்கத்தக்க போராட்டங்களைச் சாத்வீக முறையில் நடத்தி பெரும் வெற்றிகளைக் கண்டு வந்திருக்கின்றனர்.

வீரனாகப் பிறந்தவன் வெற்றித் தோல்விகளைக் கண்டஞ்சாமல் கொண்ட காரியத்தில் கண்ணும், கொள்கையில் பற்றுதலும் உடையாவனாயிருக்க வேண்டும். ஆனால், சில வீணர்கள், காரியத்துக்குதவாக் கபோதிகள், தன்னலமே உருக்கொண்ட தருதலைகள், பரந்த நோக்கமற்ற பதிதர்கள், போரில் புறமுதுகு காட்டியோடும் கோழைகள் இன்று காந்தியாரையும் காங்கிரசையும் காய்கின்றனர்.

எங்கு தங்களை மற்றவர்கள் கோழைகள் என்று சொல்லி விடுவார்களோ என்று பயந்து வாயளவில் படாடோபமான புரட்சி கோஷங்கள் செய்கிறார்கள். ஆனால், காரியத்தில் வகுப்புவாதம் பேசி, வேற்றுமை வளர்த்து, நாட்டை அடிமைப் படுகுழியில் ஆழ்த்தி வருகின்றனர். மற்றுஞ் சிலர் காங்கிரஸுக்குள்ளிருந்துகொண்டே காங்கிரஸுக்கு விரோத மாகப் பேசியும், எழுதியும், காங்கிரஸ் விரோதிகளின் சுயராஜ்ய விரோதிகளின் பாட்டுக்கு ஏற்பத் தாளம் போட்டு வருகின்றனர். நமது மந்திரிகள் அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை என்று சதா சர்வகாலமும் குறை கூறிக் கொண்டே திரிகிறார்கள்.

நமது மந்திரிகள்

காங்கிரஸ் மந்திரிகளின் நிலைமை மிகவும் பரிதாபத்துக் கிடமானது. மிகவும் குறுகலான சட்டங்களுக்கிடையில் அவர்கள் இதுகாறும் எவராலும் மனதாலும் சிந்தித்திருக்க முடியாத பெரிய புரட்சிகரமான திட்டங்களை வகுத்து அமுல் நடத்த முயன்று வருகிறார்கள். வகுப்பு வாதி களுடைய எதிர்ப்பு ஒருபுறம். தேர்தலிலே மண்ணைக் கவ்விய சுயநலக் கும்பலின் குரைத்தல் ஒருபுறம். காங்கிரசின் செல்வாக்கு ஒடுங்க வேண்டுமென ஆண்டவனை வேண்டிவரும் ஆங்கிலேயக் கூட்டமொருபுறம்.

காங்கிரஸ் சோர்வடையும் சமயம் பார்த்து சமஷ்டியைப் புகுத்தி இந்நாட்டை மீளா அடிமைக் குழியில் வீழ்த்த முடிவு செய்துள்ள பிரிட்டிஷ் பார்லிமெண்ட் ஒருபுறம். நூற்றைம்பது வருஷங்களாக அந்நிய எசமானர்களின் கால் களை வருடி வருடிக் கல்நெஞ்சர்களாக மாறிவிட்ட உத்தி யோகக் கூட்டமொருபுறம். நமது மக்களின் வறுமையும், பஞ்ச நிலைமையும், அறியாமைப் பிணிகளும் மறுபுறம்.

இவற்றிற்கிடையே கட்டுப்பாட்டுக்கு அடங்காப்பிடாரி களின் ஆர்ப்பாட்டங்கள். இத்தகையோர் மத்தியில்

உலகெங்கும் பிரமிப்படையத்தக்க மதுவிலக்குத் திட்டத்தையும் மற்றும் பல விமோசனங்களையும் விருப்பு வெறுப்புமின்றி அதிவிமரிசையுடன் நிர்வகிக்கும் நமது மந்திரிகள் நமது பாராட்டுதலுக்கும், நல்லாதரவுக்கும் உரியவர்களாகிருர்கள்.

புரட்சியில்லையாம்!

காங்கிரசின் நடைமுறைத் திட்டங்களிலே, காந்தியடிகளின் கொள்கைகளிலே, புரட்சியில்லையென்று சில முன்னேறிகள் முழக்குகிருர்கள். உலகெலாம் மிருக பலத்தில் நம்பிக்கைக் கொண்டு ஆக்கிரமிப்புகள் நடந்துகொண்டிருக்கையில் இங்கொரு கோவணுண்டி அகிம்சையில் அசைக்க முடியாத பற்றுக்கொண்டு, மக்களைப் பழக்கி வருதல் புரட்சியில்லையாம்!

உலகெங்குமுள்ள நாட்டினர் பெரிய பெரிய இயந்திர சாலைகளமைத்து, பெருவாரியான சாமான்களைச் செய்து முடித்து, அவற்றினை இங்கு கொண்டுவந்து குவித்து, பற்பல காரணங்களால் ஈன விலைக்கு விற்று வருகையில் மகாத்மா குடிசைப் பொருட்களில் கவனம் செலுத்துதல் புரட்சியல்லவாம்!

காலை முதல் மாலைவரை ஓயாதுழைத்து, கால் வயிற்றுச் சோற்றுக்கும் போதாத கூலிபெற்று, சேரி செல்லும் பாதையில் உள்ள கள்ளுக்கடையில் அக்காசைக் கொடுத்துக்குடித்து குடிசைக்குச் சென்று, அங்கு பசியால் ஏங்கி வாடும் பெண்டு பிள்ளைகளை அடித்தும், உதைத்தும், தானும் பசியால் வாடிச் சாகும் நிலைமையை மாற்றப்பூரண மதுவிலக்குத் திட்டத்தை அமுல் நடத்திக் காட்ட முயன்றுள்ளது புரட்சியில்லையாம்!

சாதிசமய வேறுபாடுகளால் பிணக்குண்டு, இந்துவென்றும், முஸ்லீமென்றும் உளறிப் போராடி, உயிரிழந்து, உரிமையிழந்து ஆருயிரம் மைலுக்கப்பாலிருந்து வந்த அந்நிய

னுக்கு அடிமைகளாய் வாழ்ந்து வந்த சமூகத்தைத் தட்டி எழுப்பி ஒற்றுமை ஊட்டி, சத்திய நெறியினைக் காட்டி, சட்டமறுப்புப் போரை மூட்டி அவர்கள் தடியடிபடவும், சொத்தையிழந்து, சுகத்தைத் துறந்து, சிறை வாழ்க்கையைத் துணிவுடன் மேற்கொள்ளச் செய்ததும் புரட்சியில்லையாம்!

நாய்களிலும் கேவலமாக மதிக்கப்பட்டும், நமது காலடியில் மிதிக்கப்பட்டும் வந்த ஆறு கோடி தீண்டாத மக்களின் கண்களிலே உற்சாகமும், மனதிலே ஆர்வமும் பூணச் செய்து, இன்று திருவாங்கூரிலும், மதுரையிலும், தஞ்சையிலும் மற்றும் பல ஊர்களிலும் உள்ள கோவில்களின் மணிக்கதவுகளையும், மக்களின் மனக்கதவுகளையும் அவர்கள் பால் திறக்கச்செய்து வருவதும் புரட்சியில்லையாம்!

அடுப்பங்கரை, ஊதுகுழல், சாணிச்சட்டி, விளக்குமாறு, பிரசவ அறை, தொட்டிலாட்டம், காம்போதி, நீலாம்புரி இவை தவிர வேறொன்றுமறியாது பேதையராய் வாழ்ந்திருந்த தாய்மார்களை வீராங்கனைகளாக்கி மேடைகளின்மீதேறி கர்ஜிக்கவும், சட்டசபைகளில் புகுந்து வீரத்துடன் முழக்கவும், சிறைக் கோட்டங்களைத் தவக்கோட்டங்களாக ஏற்கவும், தேசீயக் கொடியேந்தி தடியடிபட்டுச் சாகவும் செய்தாரே அதுவும் புரட்சியில்லையாம்!

காங்கிரஸையும் காந்தியாரையும் தூற்றித் திரிந்து சத்தியாக்கிரஹத்தை சண்டித்தனமெனக் கூறிய மேதைகள் இன்று அதே நெறியினை முறைதவறிப் போலித் தனமாக வாவது, கையாண்டு, முயன்று பார்க்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதும் புரட்சியில்லையாம்!

வெள்ளைக்காரனைக் கண்டவுடன் பல்லிளித்து, உடல் வியர்த்து, வாய் குளறி, கண்கலங்கிய மிதவாத சிங்கங்களெல்லாம் இன்று சமஷ்டியையும், பிறர் செயல்களையும் கண்டித்துப் பேசும் துணிவு கொள்ளச் செய்துள்ளது புரட்சியில்லையாம்!

இவர்கள் கோரும் புரட்சிதானென்னவோ நமக்குத் தெரியவில்லை. காரல் மார்க்ஸும், லெனினும் எழுதிய புத்தகங்களை அரைகுறையாகப் படித்துவிட்ட மாத்திரத்தில் இவர்கள் புரட்சி வீரர்களாகிவிடுகிறார்கள். இந்தியாவும் ருஷ்யாவாகிவிடுகிறது! தொட்டதிற்கெல்லாம், கண்டதிலெல்லாம், சொல்வதிலெல்லாம் பயமும் அவநம்பிக்கையும் பூண்டு, யாராண்டால் நமக்கென்ன என்று வாளாவிருந்த மக்கள் இன்று சத்தியமே கடவுள், உண்மையே பேசுவோம். உயிரையே இழப்போம், எதற்கும் அஞ்சோம், என்று தலை நிமிர்ந்து போராடும், ஒரு அகிம்சைப் படையாகத் திரண்டு வருதல் எவ்வளவு பெரிய புரட்சியென உலகத்தார் கண்டு வியந்து வருகையில், இவர்களுக்கு அது புரட்சியல்லவாம்!

எண்பது தொண்டர்களைக் கூட்டிக்கொண்டு கால்நடையாகக் காந்தியடிகள் தண்டி யாத்திரைக்குப் புறப்பட்ட போது எத்தனைப் பேர் கைகொட்டிச் சிரித்தார்கள்! அவர்கள் எண்ணமெல்லாம் பாழாக எத்தனை லட்சம் பேர்கள் அந்த சாத்வீகப் போரில் பங்கெடுத்து பிரிட்டிஷாரைத் திணற வைத்தார்கள்? இதுவும் புரட்சியில்லையாம்!

எப்படியாவது இந்தியாவுக்கு சுயராஜ்யம் வந்தால் போதுமென வாயால் கூறிவிட்டுக் குப்புற விழும் கோஷ்டியாருக்குக் காந்தீயம் விளங்காது. மேனகையீன்ற சிசுவை விசுவாமித்திரர் கண்டெடுத்துப் பார்க்க மறுத்ததுபோலக் குவயர் தந்த தீர்ப்பைப் மகாத்மா ஏற்க மறுத்துவிட்டதால் பெருந் தோல்வியடைந்து விட்டாராம். இனி எந்த வேலைக்கும் அவர் லாயக்கில்லையாம்! பென்ஷன் கொடுத்து மூலை சேர்த்து விடவேண்டுமாம்.

"இத்தனை நாள் நாங்கள் பட்ட கஷ்டங்களெல்லாம், செய்த தியாகங்களெல்லாம், சிறைகளில் வாழ்ந்ததெல்லாம் இந்தக் கிழக் காந்தியின் அகிம்சா ரசாயன சாலையில் பலியிடப்படுவதா?" என்று கத்தவாரம்பித்து விட்டார்கள்.

"இவர் எப்படி சத்தியாகிரஹத்தை நிறுத்தலாம்? இவர் யார், நிறுத்தச் சொல்ல?" என்று மீசை துடிதுடிக்க கிடுகிடு நடையில் பொறுப்பின்றிப் பேசவாரம்பித்துவிட்டது ஒரு சிறு கூட்டம். ஏன், இப்படைகள் ராஜ கோட்டுக்கும், திருவாங் கூருக்கும், ஹைதராபாத்துக்கும், மைசூருக்கும், இலங்கைத் தீவுக்கும், பர்மா நாட்டுக்கும், ஆப்பிரிக்காவுக்கும் புறப்பட்டுச் செல்வதுதானே? அதை விடுத்து கங்கை நகரப்புரத்தில் ஒருவரும், கூவம் நதிக்கரையில் ஒருவரும், பம்பாய்க் கடற் கரையில் ஒருவரும், ஈரோடுக் கால்வாயில் ஒருவருமாக உட் கார்ந்துகொண்டு 'ஜிந்தாபாத் கிந்தாபாத், காங்கிரஸ் ஒலிக, காந்தி ஒலிக, தமில் வால்க,இந்தி ஒலிக, பெரியாருக்கு சே, காங்கிரஸுக்கு பே,' என்று தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருப்பானேன்?

முடிவுரை

பெரியோர்களே!

கருமமே கண்ணாகக் கொண்டுள்ள உங்கள் முன் நான் இதுகாறும் ஏதேதோ பேசிக்கொண்டிருந்து விட்டேன். மேலும் உங்கள் பொறுமையைச் சோதிக்க நான் தயாராக வில்லை. இந் நாட்டு விமோசனத்துக்கு மகாத்மா காட்டும் வழியைத் தவிற ஏற்றதொன்றும் நமது கண்களில் பட வில்லை. அவர் சொற்படி கேட்டு நாம் நடந்தேயாகவேண் டும். அவர் கூறுவதில் விதிவிலக்குகள் ஒன்றும் கிடையாது. நாமும் நமது தேசமும் அடிமை என்ற நோய்வாய்ப்பட் டிருக்கிறோம். அப் பிணி நம்மைக் கடந்த இரு நூறு ஆண்டு களாக வாட்டி வதைக்கிறது. அப் பிணியிலிருந்து மீளா மலே அதற்கு ஆளாகி, நொந்த மனத்துடன் நமது மூதா தையர் பலர் வெந்து சாம்பாராகி விட்டனர். நாமும் அவ் வாறே முடிவுறுவது சரியல்ல.

நாம் பிறக்கும் போதே அடிமை நோயுடன் பிறந்தது உண்மையே. ஆனால், நமது தேசம் மிகவும் மகிமைவாய்ந்த

சரித்திரத்தையும் நாகரிகத்தையும் படைத்திருந்தது. நல்லன யாவுக்கும் உறைவிடமாக இருந்தது. அதன் பண்டைப் புகழை மீண்டும் நாம் நிலைநிறுத்தி நாமும் அடிமை நோயி னின்று தப்ப வேண்டும். அந் நோய் போக்கத் தகுந்த வைத்தியர் மகாத்மா காந்தியடிகள் ஒருவரேயாகும். அந் நோய்கொண்டு தரையோடு தரையாய்ப் படுத்திருந்த நம்மை அவர் மருந்து, தலை நிமிர்ந்து போராடும்படியாய்ச் செய்து விட்டது. அம்மருந்தால் அநேக நல்ல குணங்கள் ஏற்பட்டு, அச்சம், அறியாமை என்ற பிடிப்புகளெல்லாம் நீங்கி வருகின் றன. நாம் முறையோடு அம்மருந்தை உட்கொள்வோமாகில் வியாதி வெகு விரைவில் குணமாகும். அப்போது சுதந்தரம் என்ற பரிபூரண சுகத்தைப் பெற்றவர்களாவோம்.

மகாத்மா தரும் மருந்து யாதென நீங்கள் அறிவீர்கள். அதுதான் சத்தியாக்கிரஹம். அம் மருந்து தெய்வ நம்பிக் கையோடு சத்தியத்தையும் அகிம்சையையும், சர்வ மக்க ளிடமும் அன்பையும் சேர்த்துச் செய்யப்பட்டதாகும். அம் மருந்துடன் கலந்து சாப்பிடுவதற்குச் சில அநுபவங்கள் உண்டு. அவைதான் கதர், தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு, சமூக ஒற்றுமை முதலானவைகள். இந்த அநுபவங்களைச் சேர்த்து மருந்துண்ணு விட்டால் வியாதி விரைவிலும், பூரண மாகவும் விலகாது.

மருந்து உட்கொள்ளும் காலத்தில் சில பத்தியங்களும் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்பது நீங்கள் அறிந்த விஷயமே யாகும். ஒழுங்கு, கட்டுப்பாடு என்று சொல்லப்படுவதுதான் நமது அடிமை வியாதி நீங்க நாம் அனுஷ்டிக்கவேண்டிய பத்தியம். அப் பத்தியம் தவறினால் மருந்தாலும், அனுபானங் களாலும் விளையும் பயன் அனைத்தும் கெட்டுவிடும். மருந்தே ஒருகால் விஷமாகி வியாதியஸ்தனைக் கொன்றுவிடவும் கூடும். அல்லது பிற வியாதிகளுக்கு இடந்தரும்.

மற்றும் வியாதியஸ்தனின் நிலையறிந்து வைத்தியன் மருந்தைக் கூட்டியும், குறைத்தும் கொடுப்பதும், அநுபானங்

களைச் சேர்ப்பதும், பத்தியத்தை அதிகப் படுத்துவதும், சில நாள் உடல்நிலை யனுசரித்து மருந்து கொடுப்பதை நிறுத்தி வைப்பதும் இயற்கையேயாகும். இதனை விரிக்கில் பெருகு மாதலால் இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்று சொல்லி இவ்வுரையை முடித்துக் கொள்ளுகிறேன். பிரிட்டிஷ் ஆதிக்கத்தால் அடைந்துள்ள துன்பங்கள் கொஞ்சமல்ல. நமது தேசத்திலுள்ள ரத்தத்தைக் கொடிய அட்டை போன்றும், தேசத்திலுள்ள செல்வ வளங்களை நீடித்த காலத்துப் பஞ்சம்போன்றும் அபகரித்துக் கொண்டார்கள். அதோ! அந்த பிரிட்டன் ஒரு உலக நெருக் கடியில் சிக்கிக்கொள்ளப் போகிறது. இத் தருணத்தில் நாம் ஒற்றுமையுடன் இருப்போமாயின், வெற்றி நமதே. ஒற்றுமை குலைந்து நிற்போமாயின் நமக்கு எக்காலத்தும் விமோசனம் ஏற்படப் போவதில்லை.

வரப்போகும் யுத்தம் நமக்கு வாய்க்கும் ஒரு அரிய சந்தர்ப்பம். அச் சந்தர்ப்பத்தை நாம் நழுவவிட முடியாது. இந்த யுத்தத்திலே பிரிட்டன் மூச்சுவிட்டுத் திணறப்போகிற தென்பது மட்டும் நிச்சயம். அது இந்தியரின் ஒத்துழைப்பை வேண்டப்போவதும் நிச்சயம். அந்த நல்ல சமயத்தில் நம்மிடமிருந்து பிரிட்டன் பறித்துக்கொண்டுள்ள சுதந் திரத்தை நாம் திரும்பப் பெற்றாகவேண்டும். பிரிட்டன் தனது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள இந்தியாவின் உறவை நாடியே தீரும். எனவே, இந்தியாவுக்குப் பரிபூரண சுய ராஜ்யம் அளிக்கப்படவில்லையேல், இந்தியாவின் ஒத் துழைப்பை பிரிட்டன் எதிர்பார்க்க முடியாதென்று நாம் இப்போதே சொல்லிவிடவேண்டும்.

வெறும் வாய்ப்பேச்சையோ, வீண்மிரட்டலையோ, காகிதத் தீர்மானத்தையோ கண்டு பிரிட்டன் மலைக்காது. நம்முள் அசைக்கமுடியாத ஒற்றுமை இருந்தால்தான் பிரிட்டன் நமது சொற்களுக்குச் செவிசாய்க்கும். அதை நாம்

அநுபவப்பூர்வமாய் சமீபகால நிகழ்ச்சிகளிலிருந்து தெரிந்து மிருக்கிறோம்.

பிரிட்டன் நமது கோரிக்கையை மறுக்குமானால் நாம் போராடியே தீருவோம். அது எத்தகைய போராட்டமாய் இருக்கும். எந்த வழியில் நடைபெறும் என்பதைப்பற்றி யெல்லாம் இப்போது யோசிக்கத் தேவையில்லை. மனமிருக்கு மாகில் வழி தானே பிறக்கும். ஆனால், நமது கோரிக்கைகள் யாதென நாம் இப்போதிருந்தே நமது மக்கள் அறியச் செய்துவிடவேண்டும்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு இந்தியாவின்மீது இருந்து வரும் ஆதிக்கத்தை அறவே ஒழித்து அவர்களால் வழங்கப் படும் சமஷ்டித் திட்டத்தை எரித்து, நமது தேசத்தின் முழுப் பொறுப்பையும் நம் தேசமக்களே ஏற்று வகித்து நடத்தச் செய்வதே நமது சுயராஜ்யமாகும். அத்தகைய சுதந் திரத்தை மகாத்மா கண்மூடு முன்னர் அவரது தலைமையின் கீழ் நாம் அடைந்தே தீருவோம் என்ற உறுதியுடன் தேச பக்தர்களே! வீண் வாக்குவாதங்களை விடுத்து ஒன்று சேருங்கள், ஒன்றுசேருங்கள், ஒற்றுமைப்பட்டால் உரிமை யுடன் வாழ்வோம். இல்லையேல், அடிமைப் படுகுழியில் வீழ்வோம்.

எனது புன் மொழிகளுக்கு இதுகாறும் பொறுமையுடன் செவிசாய்த்த தங்கட்கு எனது நன்றி கூறுகிறேன். இம் மகாநாட்டை வெற்றியுடன் நடத்திவைக்க உங்கள் எல்லோ ருடைய ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்.

வந்தேமாதரம்.

தென்காசி தாலூகா
2-வது அரசியல் மகாநாடு
இடக்கால் 8-7-1940

அன்பர்களே!

இம் மகாநாட்டின் தலைமை தாங்குமாறு என்னை நீங்கள் பணித்ததற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நெருக்கடியான சமயம்

இவ்வுலகின் நெருக்கடியான ஒரு சமயத்திலே நாம் இங்கு கூடியிருக்கிறோம். ஐரோப்பாவின் பெரும்பகுதி இன்று சோகமும், அவமானமும் நிறைந்து சொல்லொணுக் கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கிறது. லட்சாதி லட்சம் மக்கள் மாண்டுமடிந்து போயினர். பல்லாயிரம் பேர்கள் படுகாயப் பட்டு நமனுடன் போராடிக்கொண்டிருக்கிறார்கள். புருஷனை யிழந்த மாதர்களின் கூக்குரல் ஒருபுறம், தந்தையை யிழந்த சேய்களின் அழுகுரல் ஒருபுறம், தனயனை யிழந்த தாயின் புலம்பல் ஒருபுறமாகப் பல்லோர், பார்க்குமிடமெங்கும்—ஐயகோ!—துன்பமயமான குரலோசை காற்றில் கலந்து செல்லுகிறது.

சொத்தும் சுகமனைத்தும் பறிகொடுத்து, துக்கமே உருவாய் தங்கவும், தஞ்சம் புகவும் இடமின்றிக் கண்ணீரும் கம்பலையுமாய்த் தவித்துக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்களோ!

வீடும் வாசலும், நாடும், நகரமும் துறந்து, பகைவர்களின் பட்டாளப் படைகளுக்கும், துப்பாக்கி குண்டுகளுக்கும் தப்பி யோடிக் காட்டினுள் நுழைந்து, துஷ்ட மிருகங்களுக்கு ஆளான மாந்தர்கள் எத்தனை பேரோ!

உண்ண உணவின்றி, குளிரில் நடுங்கிய வண்ணமாய்க் குழந்தை குட்டிகளைத் தூக்கிக்கொண்டு, உயிருக்காக இங்கு மங்கும் ஓடி அலைந்து கொண்டிருக்கும் ஏழைத் தாய்மார்கள் எத்தனை பேர்களோ!

செல்வமும், செழிப்பும் கொழித்துக் கொண்டிருந்த நகரங்களெல்லாம், இன்று இருளும் மிடியும் குடிசூழ்ந்து நிற்கின்றன. எழில் நிறைந்த கட்டிடங்களும், தொழிற்சாலை களும் தவிடு பொடியாகி விட்டன. நவநாகரிகமனைத்துக் கும் சின்னங்களாய் விளங்கி யிருந்தவை சின்னபின்னமாகி விட்டன. கடல்களிலே காந்தக் கண்ணிகளால் மூழ்கடிக்கப் பட்ட கப்பல்கள் எத்தனை?

சுதந்தரமாக அரசுரிமை செலுத்திவந்த தேசங்களில் பல இன்று ஹிட்லரின் வசப்பட்டு அடிமையாகிப் பல அட் டூழியங் கட்கும் ஆளாகிவிட்டன. அரசர்கள் பலர் நம் கண் முன்னே ஆண்டிகளாகிவிட்டனர். தேச மக்களின் மதிப்புக் குப் பாத்திரமாயிருந்து பரிபாலனம் செய்துவந்த தலைவர் களிற் பல்லோர் இன்று உயிரிழந்து போயினர்; உரிமை யிழந்து பகைவனின் காலடியில் சரணாகதியென வீழ்ந்து விட்டனர். சிறைக்கூடங்களில் அடைபட்டும் கிடக் கின்றனர்.

நாமிருக்கும் நிலைமை

கோரமான யுத்தம் இன்றும் நடைபெற்றுக்கொண்டிருக் கிறது. அது நாளுக்கு நாள், நிமிஷத்துக்கு நிமிஷம் உலகெங்கும் பரவிக்கொண்டுமிருக்கிறது. வெடிகுண்டுகள் வீழ்ந்த வண்ணமாய் இருக்கின்றன. கட்டிடங்கள் தகர்ந்த

வண்ணமாய் இருக்கின்றன. உலகெலாம் கட்டியாள முடியுமென்றிருந்த பிரான்ஸின் ஏகாதிபத்யம் தலைசாய்ந்து விட்டது. பிரிட்டன் தன்னுயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கிறது. சைனாவின்மீது ஜப்பான் இரக்கமின்றிப் பாய்ந்து சென்று கொண்டிருக்கிறது. இந்தியாவும் யுத்த நாடெனப் பிரிட்டனால் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது

நமது சுதேச மன்னர் பலர் போட்டியிட்டுக்கொண்டு பணமும், பொருளும், படைபலமும் பிரிட்டனுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றனர். பிரிட்டன் தோற்றுவிட்டால் இந்தியாவின் கதி அதோகதிதான். ஆதலால் 'உதவுங்கள், உதவுங்கள்' என்று அதிகார வர்க்கத்தார்களும், மானபிமான மற்ற நம் தேசமக்களில் சிலரும் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

யுத்தத்தில் நாங்கள் உதவினால் எங்கள் சமூகத்தாருக்கு இந்தியாவைத் துண்டித்துக் கொடுப்பாயா என்று ஜனாப் ஜின்னா பிரிட்டனுடன் பேரம் பேசிக்கொண்டிருக்கிறார். இந்தியாவின்மீது உனக்குள்ள பிடிப்பை இன்றுடன் விட்டு விட்டதாகச் சொன்னால் சகல உதவியும் இப்போதே செய்யக் காத்து நிற்கிறோம் என்று நமது மதிப்புவாய்ந்த தலைவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

வீடு தீப்பற்றி எரிய ஆரம்பித்தபின் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதை போன்று கடந்த நூற்றைம்பது வருஷங்களாக 40 கோடி இந்தியர்களை நிராயுதபாணிகளாக்கி வைத்திருந்த பிரிட்டன் இன்று ஒரு லட்சம் பேர்களை ராணுவத்தில் சேர்த்து, பயிற்சி கொடுக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

இத்தனை காலமாக "எங்கள் மூதாதையரின் வீர பராக்கிரமத்தால் வென்று பிடிக்கப்பட்ட இந்தியாவை நாங்கள் லேசில் விடமாட்டோம். நாங்கள் ஆளவே பிறந்துள்ளோம்!

எங்கள் நலன்களையும் பொறுப்புகளையும் விட்டுக்கொடுக்க மாட்டோம்" என்று சொல்லிக்கொண்டிருந்த பிரிட்டிஷ் மக்களில் ஒரு சாரார் இந்தியாவுக்கு உடனே "குடியேற்ற நாட்டந்தஸ்து கொடுத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் நமக்கு இந்தியாவின் ஆள் பலமும், பொருள் பலமும் கிடைக்காது போய்விடும்" என்று சொல்லத் தொடங்கிவிட்டார்கள்.

ஆனால், பிரிட்டனில் அதிகாரத்தில் உள்ளவர்கள் "நமது பேதாபேதங்கள்தான் நமது சுதந்திரத்துக்கு தடையாக இருக்கிற"தென்று நம்மை ஏளனம் செய்துகொண்டே இருக்கிறார்கள். இத்தகைய நிலையிலே நாம் இன்று இங்கு கூடியிருக்கிறோம்.

யுத்தம் நிற்கப் போவதில்லை

இந்தப் பயங்கரமான யுத்தம் திடீரென ஆரம்பிக்கப் படவில்லை. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகவே யுத்த மேகம் உலகமெங்கும் சூழ்ந்து கொண்டிருந்தது. யுத்தம் இன்று வரும் நாளை வரும் என்று சொல்லிக்கொண்டுதான் வந்தார்கள். 1914-ல் ஆகஸ்டு மாதம் ஆரம்பித்த மகா யுத்தம் நான்கு வருஷங்கள் நடைபெற்றன. உலகில் யுத்த மென்பது இல்லாமல் செய்துவிடுவதற்காகவே அந்த யுத்தம் நடைபெறுவதாக அப்போது சொல்லப்பட்டது, 1918-ம் வருஷம் நவம்பர் மாதம் அந்த யுத்தமும் நின்று, அதற்கடுத்த வருஷம் வார்சேல்ஸ் என்ற இடத்தில் சமாதான உடன்படிக்கையும் கையெழுத்தாயிற்று. அந்த யுத்தத்திற்கு மூல புருஷனாய் இருந்த கெய்சர் ஜெர்மனியை விட்டு ஓடினவர் இன்னும் அங்கு திரும்பவில்லை. ஜெர்மனி இனி உலகுள்ள வரையிலும் தலை தூக்க முடியாதபடி சமாதான உடன்படிக்கைகள் தயாரித்து முடிக்கப்பட்டன. இனிமேல் உலகில் யுத்தமே ஏற்படாதென்றும் சொல்லப்பட்டது.

ஆனால், உண்மையில் அந்தச் சமாதானம் மற்றொரு பயங்கரமான யுத்தத்துக்கு அடி கோலியதாகவே முடிந்தது. யுத்தத்தில் தோல்வியுற்ற ஜெர்மனி சற்றேனும் ஈவிரக்கமின்றி நடத்தப்பட்டதால் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் ஜெர்மன் மக்களிடையே குடி புகுந்து ஒரு எரிமலை போல் வளர்ந்து வந்தது. அதனின்று பல வருஷங்களாகப் புகை கிளம்பிக் கொண்டிருந்தும் உலகத்திலிருந்த இதர ஏகாதிபத்திய வல்லரசுகள் அலட்சியமாக இருந்தன. இன்று ஜெர்மனியில் எரிமலை பற்றி எரியத் தொடங்கிவிட்டது. அதனின்று கக்கப்பட்ட நெருப்பாறு இன்று ஐரோப்பாவின் பெரும்பகுதியைச் சுட்டெரித்து விட்டது. பிரிட்டன் மீதும் தீப்பொறிகள் பறக்க ஆரம்பித்து விட்டன. நாளை பிரிட்டன் வெற்றிபெற்று மீண்டும் ஜெர்மனியைப் பணிய வைக்கக்கூடும். அந்த முடிவு ஏற்பட வேண்டுமென நாம் ஈசனையும் வேண்டலாம். அதற்கு நம்மாலான உதவியனைத்தையும் செய்யலாம். ஆனால், அதனால், பிரிட்டன் வெற்றி பெறுவதால் மீண்டும் உலகில் யுத்தம் ஏற்படாதெனை நம்மால் சொல்லுவதற்கில்லை.

உலகிலே சாம்ராஜ்யங்கள் உள்ளவரையில், உலகிலே ஒரு நாட்டினரைப் பிற நாட்டினர் கட்டி அரசாள வேண்டுமென்ற எண்ணம் உள்ளவரையில், உலகிலே வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்ற துராக்கிரகத்துக்கு இடமுள்ள வரையில், ஒரு நாடு தனது பாதுகாப்பிற்கு சத்தியம், தர்மம், நீதி, சமத்துவம் ஆகிய அரண் தேடாமல் வெறும் கல்லினாலும், இரும்பாலும் அரண்கள் அமைத்துக் கொண்டிருக்கும் வரையில், நல்லெண்ணம், சமாதானம், பரஸ்பர உதவி முதலிய கொள்கைகளை விட்டு விட்டு யுத்த தளவாடங்களும், பீரங்கிகளும், வெடிகுண்டுகளும், விஷப்புகைகளும், சுரங்கக் கண்ணிகளும், இரகசிய ஆயுதங்களும் தயாரித்துக் கொண்டிருக்கும் வரையில் சுருங்கச் சொல்லுமிடத்து, இந்தியாவைப் பிரிட்டன் தனது ஆதீனத்தின் கீழ் வைத்துக் கொண்டிருக்கும்

வரையில், உலகில் யுத்தமும், யுத்த ஏற்பாடுகளும் நிற்கப் போவதில்லை. ஆம்? நிற்கப் போவதில்லை.

பிரிட்டன் செய்த தவறு

இந்த உண்மையை வார்சேல்ஸ் ஒப்பந்தத்தின் போது பிரிட்டன் கவனிக்கவில்லை. அந்த யுத்தத்திலே பிரிட்டன் வெற்றியடையுமாறு இந்தியா தன்னிஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தனை செய்தது. கோடிக்கணக்கான ரூபாயை வாரிக் கொடுத்து லட்சக்கணக்கான தன் புதல்வர்களை யுத்தகளத்திற்கு அனுப்பியது. தங்கட்கு முன்பின் தெரியாததும், யாதொரு விதமான தொடர்பும் சம்பந்தமும் இல்லாத தேசங்களில் முன்பின் தெரியாதவர்களுக்கெதிராக இந்திய வீரர்கள் சென்று போர் புரிந்து உயிர் நீத்து பிரிட்டனுக்கு வெற்றி தேடி வாகைமாலை சூட்டுவித்தார்கள்.

ஆனல், யுத்தத்தில் கிடைத்த வெற்றியிலோ, வெகுமானத்திலோ, பலாபலன்களிலோ இந்தியாவுக்கும் இந்திய மக்களுக்கும் யாதொரு பங்கும கிடைக்கவில்லை. இந்தியாவுக்குச் சுதந்திரமும் கிடைக்கவில்லை. பிரிட்டனுக்கு உதவியதன் மூலம் இந்தியாவின் அடிமைத்தனம் சிறிதும் தளரவில்லை. அதற்கு நேர்மாருகப் பாஞ்சாலப் படுகொலையும் இதர துன்பங்களுந்தான் நம்மை எதிர்நோக்கியிருந்தன.

பெல்ஜியத்துக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. ஜெர்மனியிடம் நஷ்டஈடு வழங்கப்பட்டது. ஜெர்மனிக்குச் சொந்தமாயிருந்த பல பிரதேசங்கள் பிடுங்கப்பட்டு சுதந்திரத் தனி நாடுகளாக்கப்பட்டன. ஜெர்மனியின் காலனிகள் பறிமுதல் செய்யப்பட்டன, ஆனல், இந்தியா விடுவிக்கப்படவில்லை. ஆப்பிரிக்கா போன்ற சுதேசிகளுக்கு நியாயமோ சுதந்திரமோ வழங்கப்படவில்லை. பிரிட்டனும், பிரான்சும், அமெரிக்காவும் எல்லா லாபங்களையும் பகிர்ந்து கொண்டன. இதர தேசங்கள் பல கஷ்ட நஷ்டங்களுக்கு இரையாயின. இவ்விதமாக

ஒருதலைப் பட்சமாக வற்புறுத்தி வாங்கப்பட்ட சமாதானத்தைக் காப்பாற்ற எண்ணி பிரிட்டன் ஒரு சர்வதேச சங்கத்தையும் ஏற்படுத்தியது.

சர்வதேச சங்கம்

ஆனல், சர்வதேச சங்கத்தால் உலகில் சமாதானத்தை நிலைநிறுத்த முடியவில்லை. சமாதானத்துக்கு அடிப்படையான நியாயமும், சமத்துவ தர்மமும் இல்லாத காரணத்தால் சமாதானத்தைக் காக்க அதனுல் முடியாதுபோயிற்று. பிரிட்டனும் பிரான்ஸும் உலகிலுள்ள நாடுகளில் பலவற்றை தங்களுக்குக் கீழ் சுவாதீனப்படுத்தி வைத்துக்கொண்டு பெரிய சாம்ராஜ்யங்களாகத் திகழ்வதைக் கண்ட இதர நாடுகள் நியாயமாகவே பொருமைப்பட்டன.

உலகத்தைப் பங்கு போட்டுக் கொள்வதுதான் முறையென்ருல், உலகத்திலுள்ள கருப்பு நிறமுள்ளவர்களை யெல்லாம் வெள்ளை நிறமுள்ளவர்கள் ஆளவேண்டுமென்பதுதான் சரியென்ருல், பிரிட்டனும், பிரான்சும், ஜெர்மனிக்கும், இத்தாலிக்கும், இதர வெள்ளை நாடுகட்கும், காலனிகளையும், குடியேற்ற நாடுகளையும், இந்தியா போன்ற அடிமைப் பிரதேசங்களையும் சமமாகப் பங்குபோட்டுக் கொடுத்திருக்க வேண்டும். அல்லது அவரவர் தேசத்தை அவரவர்கள்தான் ஆளவேண்டும், ஆப்பிரிக்கா தேசத்து சுதேசிகளும், இந்திய நாட்டு சுதேசிகளும், இங்கிலாந்திலிருக்கும் சுதேசிகளைப் போலவே தத்தம் நாட்டைத் தாமே ஆளவேண்டும் என்பது நியாயமென ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தால், அதன்படி பிரிட்டனும், பிரான்சும் தங்கள் சாம்ராஜ்யங்களைக் கலைத்து இங்கிலாந்து இங்கிலீஷ்காரருக்கே, பிரான்சு பிரான்சுகாரருக்கே, இந்தியா இந்தியாருக்கே, என்பதை அமுலுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

யுத்தம் வந்ததேன்?

பிரிட்டனும் பிரான்சும் அப்படிச் செய்யவில்லை. அவைகள் தாங்கள் மட்டும் பெரிய சாம்ராஜ்யங்களாகத் திகழ வேண்டுமெனக் கருதின. ஜெர்மனியைச் சுற்றிப் பல பால்கன் நாடுகளைச் சிருஷ்டித்து விட்டன. பிரான்சு பெரிய அரண் ஒன்று கட்டிக்கொண்டது. தங்களுடைய வல்லமையில் இந்த இரண்டு சாம்ராஜ்யங்களும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தன.

பிற தேசங்களும் பிரிட்டனைப் போலவும், பிரான்ஸைப் போலவும் நாடுகளைப் பிடித்துத் தாங்களும் பெரிய சாம்ராஜ்யங்களாகத் திகழவேண்டுமென்ற ஆசையினால் தூண்டப் பெற்றன. ஜப்பான் மெல்ல மஞ்சுகோவைப் பிடித்தது. சர்வ தேச சங்கத்தின் உறுமலுக்கு அது பயப்படவில்லை. இவ்வளவுதானாவென இத்தாலி அபிசீனியாவின்மீது பாய்ந்து ஆக்கிரமித்துக் கொண்டது. சர்வதேச சங்கத்தின் நடவடிக்கைகளனைத்தும் சுங்கச் சாவடி மொண்டியின் மிரட்டலுக்குச் சமானமாய்த் தீர்ந்தது. இதைக் கண்டறிந்த தேசங்கள் ஒவ்வொன்றாகச் சர்வதேச சங்கத்தை விட்டு வெளியேறின.

பின்னர், ஜெர்மனி ஆஸ்திரியாவையும், செக்கு நாட்டையும் ஆக்ரமித்துக்கொண்டதையும், இத்தாலி அல்பேனியாவை ஏப்பமிட்டதையும் பிரிட்டனும், பிரான்ஸும் பார்த்துக்கொண்டே இருந்தன. சர்வாதிகாரிகளான ஹிட்லரும் முஸோலினியும் தங்கள் வீரர்களுக்கு ஸ்பெயின் தேசத்தில் போர்ப் பயிற்சியளித்தனர். பிராங்கோவைத் தூண்டிவிட்டு அவர்கள் இத் திருவிளையாடல்களை நடத்திய போதும் ஏகாதிபத்ய நாடுகள் இரண்டும் ஒன்றையொன்று பார்த்து ஊமை கனவு கண்டதுபோல் விழித்துக்கொண்டிருந்தன.

ஜெர்மன் மக்கள் ஒய்வொழிச்சலின்றி இரவும் பகலு மாகப் பல்லாண்டுகள் யுத்த தளவாடங்களைச் செய்து கொண்டே இருந்தார்கள். ஆனால், பிரிட்டனும் பிரான்ஸும் ஆயுத பரிகரிப்புத் திட்டங்களைப்பற்றி ஆராய மகாநாடுகள் கூட்டிக்கொண்டும், உடன்படிக்கைகள் எழுதிக்கொண்டும் இருந்தார்கள். உண்மையான ஆயுதப் பரிகரிப்பு ஏற்பட வேண்டுமானால், சாம்ராஜ்யங்கள் ஒழிக்கப்படவேண்டுமென் பதை அவ்விரு நாடுகளும் உணரவில்லை. கடைசியாக ஹிட்லரின் ஆயுத பலம் பெருகவே, அவன் வரிசைக் கிரமமாக, கண் திறந்து கண் மூடுவதற்குள்ளாக ஒவ்வொரு தேசமாக ஆக்கிரமிக்கத் தொடங்கலானான். இவனை இப்படியே மிஞ்சவிட்டால் நமது கதி என்னவெனப் பயந்த பிரான்ஸும் பிரிட்டனும் ஜெர்மனியின் மேல் யுத்தத்தை வெகு நடுக்கத்துடனேயே தொடங்கினார்கள்.

நூறு வருடங்கள் போர் புரிந்தாலும் அடைய முடியாத வெற்றியை ஹிட்லர் பத்தே மாதங்களில் தன்னந்தனியனாக நின்று சாதித்து, உலகத்தையே திடுக்கிடச் செய்துவிட்டான். நல்லெண்ணமும், நியாய புத்தியும் ஜனநாயக உணர்ச்சியும் சிறிதுமற்ற இந்த அரக்கன் மேலும் வெற்றி பெற்று விட்டால், அந்தோ, இவ்வுலகமும் இவ்வுலக மக்களும் என்னவது?

நம்மால் என்ன செய்யக்கூடும்?

சிறு நாடுகளுக்குச் சுதந்திரம் அளிக்கவேண்டும், மிருக பலம் ஒடுங்கவேண்டும், ஜனநாயகம் ஓங்கவேண்டும், சர்வாதி காரம் ஒழியவேண்டும் என்றெல்லாம் பேசிவரும் பிரிட்டன் தனக்கேற்பட்டுள்ள இந்த நெருக்கடியான சமயத்திலுங்கூட இந்தியாவின் சுதந்தரத்தை ஒப்புக்கொள்ள மறுப்பதுதான் நமக்குப் பேராச்சர்யமாக இருக்கிறது. சரிசமத்துவமான முறையில் இந்தியா இந்த யுத்தத்தில் உதவுவதாகத் தனது

ஆவலைத் தெரிவித்தும் பிரிட்டன் விடாப்பிடியாக மௌனம் சாதிப்பதுதான் என்னவென நம்மால் புரிந்துகொள்ள முடிய வில்லை.

இந்தியா தனது ஆதிக்கத்தின்கீழ் இருந்துவருவதால் தனக்கு வேண்டியதனைத்தையும் அதிகாரத்துடன் எடுத்துச் செல்ல முடியுமென்ற எண்ணத்தினால் பிரிட்டன் நம்மை உதாசீனப்படுத்துவதாக ஒருகால் இருந்தாலுமிருக்கலாம். ஆனால், இதாலி போரில் இறங்கிய பிறகு இந்தியாவில் தற்காப்பு முயற்சிகள், தற்காப்பு முயற்சிகள் என்ற ஓலம் பலப்பட்டு வருகிறது. ஆனால் காரியாம்சத்தில், வைசிராய் எதேச்சாதிகாரம் பெற்றதும், தேசபக்தர்கள் சிலரை சிறைக்குள் தள்ளப்பட்டதற்கும் மேலாக வேறொன்றையும் உருவகமாக இதுவரை காணோம்.

கடந்த 150 வருடங்களாகப் பிரிட்டன் நம்மை நிராயுத பாணிகளாக வைத்திருக்கிறது. நம்மிடமிருந்த போர்க்குண மெல்லாம் மறைந்துபோய் நாம் இன்று பெரிய வேதாந்திகளாகவிருந்து வருகிறோம். எவனாவது நமது வீட்டுக்குள் புகுந்து நமது மனைவி மக்களின் கரத்தையோ, கழுத்தையோ பிடித்தால், நாம் ஐயையோ என்று அலறி விழுந்தடித்துக் கொண்டு நேராகப் போலீஸ் ஸ்டேஷனில்தான் சென்று நிற்கப் பழகியிருக்கிறோம். நமது மானத்தைக் காக்க நமக்குத் திறனில்லாமல் செய்துவிட்டது பிரிட்டன். நமது வீரத்தை வெளிப்படுத்த முடியாமலும் செய்துவிட்டது பிரிட்டன். இன்றைய தினம்கூட எல்லைப் புறத்திலுள்ள இந்துக்களை அங்குள்ள மலைஜாதியினர் தூக்கிச் சென்ற வண்ணமாக இருக்கிறார்கள். அப்படியிருந்தும் இந்திய மக்களை நிராயுதபாணிகளாக்கி வைத்திருப்பதின் மடைமைத் தனத்தை பிரிட்டன் உணர்ந்துகொள்ளவில்லை.

நாளைய தினம் இந் நாட்டின் மீது யாரேனும் படையெடுத்து வந்தால் நம்மால் என்ன செய்யமுடியும்? இந்

நாட்டிலுள்ள பிரிட்டிஷ் சோல்ஜர்களின் கையில்தான் நமது உயிரும் உடலும் சிக்கியிருக்கிறது. இதனுல்தான் இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டுமென வாயால் கேட்கவும் கூட நமது தேசத்தில் அநேகர் பயப்படுகிருர்கள். ஆனுல், இன்றைய யுத்தத்தில் ஆள் பலத்தால் ஆவது ஒன்றுமில்லையென ஹிட்லர் காட்டிவிட்டான். ஆகாயக் கப்பல்களும், டாங்கிகளும், பீரங்கிகளும்தான் யுத்தத்தை நடத்துகின்றன. பிரிட்டிஷார் நம்மை உதவுங்கள், உதவுங்கள் என்று சொல்லுகிருர்கள். நாம் நம்மிடமுள்ள பொட்டுப் பொடி நகைகளைத்தான் கொடுத்து உதவுமுடியும். பீரங்கிகளையும் டாங்கிகளையும் எதிர்த்துப் போராட நம்மால் எப்படி முடியும்? வேண்டுமானுல் மணல் மூட்டைகளுக்குப் பதிலாக நம்மையும், நமது மனைவி மக்களையும் யுத்த அரங்கத்தில் குவித்து, அதற்குப் பின்னுல் இருந்துகொண்டு பிரிட்டிஷ் சிப்பாய்கள் போர்புரியுமாறு நம்மால் உதவமுடியும்.

இத்தனை யாண்டுகளாக இந்தியருக்கு யுத்தப் பயிற்சியளித்து, இந்தியாவில் யுத்த சாதனங்களைத் தயாராக வைத்திருந்தால், இன்று பிரிட்டன் அமெரிக்காவிலிருந்து கப்பல்களுக்காக ஆகாயத்தை அண்ணுந்து பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிராது. இனிமேல் நாம் யுத்த சன்னத்தர்களாகி, தளவாடங்கள் செய்து முடிப்பதானது செட்டி சிங்காரிப்பதற்குள்ளாகப் பட்டிணம் பாழான கதையாய்த்தான் முடியுமென்பதில் என்ன சந்தேகமிருக்கப் போகிறது?

நமக்குள் இருக்கும் வேற்றுமைகள்

நமது நாடு சுயராஜ்யம் பெறுவதற்குத் தடையாய் இருப்பது, நமது பாதுகாப்புத் திறமையின்மை யென்பது பிரிட்டனுல் கூறப்படும் சாக்குகளில் ஒன்ருகும். மற்ருென்று நமக்குள் இருக்கும் வகுப்பு வித்யாசங்கள் என்று கூறப்படுகிறது. இந்த வித்யாசங்கள் நமக்குள் ஏற்பட்டிருந்ததால்

தான் பிரிட்டனால் நமது தேசத்தை ஆக்கிரமித்துக்கொள்ள முடிந்தது. பிரிட்டன் நம்மை ஆளுவதற்கு முக்கியமான சாதனமும், சாதகமும் சக்தியும் நம்மிடையேயுள்ள இந்த வேற்றுமை யொன்றுதான். பிரிட்டனது ஆட்சி இந்நாட்டில் நீடித்திருக்கும் வரையில் இந்த வேற்றுமைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டுதா னிருக்கும். யார் எத்தனை முயன்றாலும் அதனை நிவர்த்தி செய்யமுடியாது. அடிமைகளின் பிறவிக் குணமே தமக்குள் ஒற்றுமையின்றி வேற்றுமை பாராட்டிக்கொண்டிருப்ப தாகும். சுதந்திர மக்களிடத்திலே இக்குணமிருந்தாலும் அது மேலோங்காது. பிரிட்டனிடமிருந்து இந்நாட்டிலுள்ள ஏதாவதொரு கட்சி சுயராஜ்யத்தை வாங்கும் வல்லமை பெறும் வரையில் பிரிட்டன் நமது வேற்றுமைகளைச் சுட்டிக் காட்டிக்கொண்டுதானிருக்கும்.

படிப்படியாக என்பது இனி நடக்குமா?

அடுத்தபடியாகப் படிப்படியான பொறுப்பாட்சி கொடுத்துவருவதாகப் பிரிட்டன் சொல்லிக்கொண்டு வந்தது. அந்தக் காலம் இப்போது மலையேறிப் போய்விட்டது. நேற் றிருந்த பிரான்ஸூம், பெல்ஜியமும், ஹாலந்தும், போலந்தும், நார்வேயும், டென்மார்க்கும், பின்லாந்தும், பிறவும் இன் றிருந்தவிடம் தெரியாமல் போய்விட்ட பிறகும், பிரிட்டன் தன்னுயிருக்கே தத்தளித்துக் கொண்டிருக்கும் தறுவாயிலும் அப்படிச் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

நான்காவதாகப் பிரிட்டன் நாம் கோரும் அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்த மறுப்பதற்குச் சொல்லும்படி யான காரணம் சிறுபான்மையோர் விஷயத்தில் தனக்குள்ள பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாதென்பதாகும். பிரிட்டனுடைய சரித்திரத்தைப் புரட்டிப் பார்ப்பவர் களுக்கு, பிரிட்டன் இம்மாதிரியான பொறுப்புகளையெல்லாம் தனக்கிஷ்டமானபோது எப்படிக் காற்றுவாக்கில் விட்டு

விட்டதென்பது தெரியவரும். இதைப்பற்றி ஸ்ரீ பியாரிலால் "ஹரிஜன்" பத்திரிகையில் வெகு விளக்கமாகச் சில வாரங் களுக்குமுன் குறிப்பிட்டிருந்தார்.

பெர்னுட்ஷா எழுதியுள்ள நாடகங்களில் "விதியின் மனிதன்" என்பதொரு நாடகம். அதில் இங்கிலீஷ்காரனைப் பற்றி பெர்னுட்ஷா கீழ்க்கண்டவாறு வர்ணித்திருக்கிறார்!

"ஆங்கிலேயன் ஒரு அலாதியான பேர்வழி. நல்லது கெட்டது எதுவானாலும் செய்யத் தயங்கும் ஆங்கிலேயனை உங்களால் பார்க்க முடியாது. அவனுக்கும் பிரியமானதைச் செய்கிறான். அவன் இச்சிப்பதை எப்படியும் அடைந்தே தீரு வான். ஆனால், அவன் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் ஒரு கொள்கையைக் கற்பித்துக்கொண்டே செய்வான். இம் மாதிரியான 'ஒழுக்கத்துக்கு' அவனுக்குப் பஞ்சமே இல்லை. தேசபக்தி என்று சொல்லிக்கொண்டு உங்களோடு சண்டை போடுவான். வியாபாரம் என்று சொல்லிக்கொண்டு உங்களைக் கொள்ளையடிப்பான். ஏகாதிபத்தியம் என்று சொல்லிக்கொண்டு உள்ளே அடிமை கொள்ளுவான். ஆண்மை, மனித லட்சணம் என்றெல்லாம் பிதற்றிக்கொண்டு எங்களைப் பயன்படுத்துவான். பிரஜாபத்தியம் எனச் சொல்லிக் கொண்டு அவன் தனது அரசனது கழுத்தையே திருகிவிடு வான். இவைகளெல்லாம் அவனுடைய கடமைகள் என்பதாக அவன் எண்ணிக்கொண்டிருக்கிறான். தன் கடமையை மறந்து பகைவனுக்கு இடங்கொடுக்கும் தேசம் தலைதூக்க முடியாதென்பதை அவன் மறப்பது கிடையாது."

சரித்திரத்தில் நடந்த சம்பவங்கள்

சில வாரங்கட்கு முன்னால் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இந்தியா பற்றிய விவாதம் எழுந்தது. அப்போது "இந்திய சிறுபான்மை சமூகங்களின் பாதுகாப்புபற்றி நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்புகளை எப்படிக் கைவிட

முடியும்?" என்றார் ஒருவர். "அப்படிக் கைவிட்டோமே யானல் நம்மையே பூரணமாய் நம்பியிருக்கும் அவர்களுக்கு நாம் துரோகம் செய்தவர்களாக மாட்டோமா" என்று சீறினார் மற்றொருவர். "எவ்வகையான கட்டுப்பாடுமின்றி ஒரு சுயநிர்ணய சபையை நியமிக்கும் உரிமையை நாம் இந்தியாவுக்கு எப்படியளிக்க முடியும்" என்று இன்னொருத்தர் துள்ளியெழுந்து கூறினார். "இந்திய மக்களின் தர்ம கர்த்தா என்ற முறையில் நாம் தொடர்புற்றிருக்கவில்லையா?" என்று அதட்டினார் வேறொருவர். "ஒழுங்காயும், தொடர்பாயும் சரித்திர பூர்வமாயும், வளர்ச்சிபெற்று வந்திருக்கும் நமது கடமைகளும், பொறுப்புகளும், நலன்களும், உரிமைகளும் காற்றுவாக்கில் போவதா" என்று வாதாடினார் மற்றொருவர். சுதேச மன்னர்களைப்பற்றியும் ஒருவர் ஞாபகமூட்டினார்.

இந்திய சமஸ்தானாதிபதிகளும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடிமைகள்தானென்பது நமக்குத் தெரியும். இதர நாடுகளின் சிறுபான்மையோர் விஷயத்தில் பிரிட்டன் நடந்துகொண்டுள்ள விதத்தைக் காண்க.

1909-ம் வருஷத்தில் தென்னாப்பிரிக்கா அரசியல் சட்டம் அத் தேச பிரதிநிதித்வ சபையால் தென்னாப்பிரிக்காவில் வகுக்கப்பட்டது. அச் சட்டத்தில் "பிறப்பில் ஐரோப்பிய சம்பந்தம் உள்ளவர்களே அத் தேசத்தின் சட்ட சபைகளில் அங்கத்தினர்களாக வரமுடியும்" என்ற ஒரு ஷரத்தைச் சேர்த்திருந்தார்கள். தென்னாப்பிரிக்காவிலிருக்கும் சுதேசிகள் இந்த ஷரத்தைப் பலமாய் எதிர்த்தார்கள். அந் நாட்டில் அவர்கள் பிறந்து வளர்ந்திருந்தும், அந் நாடு தங்கட்கே சொந்தமானதாக விருந்தும் இந்தமாதிரியான அநீதி நடக்கலாமா என்று அவர்கள் கூக்குரலிட்டனர். இந்த அவமானத்தை அவர்களால் தாங்கமுடியாது எனக் கதறினார்கள். என்ன செய்தும் என்ன பயன்? "ஒரு தேசத்தின் பிரதிநிதி சபையால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை தான்

மாற்றவோ திருத்தவோ முடியாதெனப் பிரிட்டன் தன் கண்களை இறுக மூடிக்கொண்டது. அதே பிரிட்டன்தான் இப்போது இந்தியாவிலுள்ள சிறுபான்மை சமூகங்களுக்காக தன் முதலைக் கண்ணீரை வடித்து வருகிறது.

இவ்வாறாகத் தென்னாப்பிரிக்கா பிரதிநிதி சபை தயாரித்த சட்டமே பிரிட்டனில் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதிலிருந்து ஒரு சிறு புள்ளியைக்கூட பிரிட்டன் மாற்றத் துணியவில்லை.

இதேமாதிரியாக சரித்திரத்தில் இன்னும் பல சான்றுகளைக் காணலாம். 1864-ம் வருஷம் கனடாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையே பிரிட்டன் 1867-ம் வருஷத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் பார்லிமெண்டையோ, பிரிட்டிஷ் மக்களையோ எவ்விதத்திலும் கலக்காமல் 1900-ம் வருஷம் ஆஸ்திரேலியாவில் வகுக்கப்பட்ட அரசியலையே பிரிட்டன் சட்டமாக ஒப்புக்கொண்டுள்ளது. அயர்லாந்தின் கதை இன்னும் தெளிவாகவிருக்கிறது. அயர்லாந்தின் குடியாட்சித் திட்டம் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் விவாதிக்கப்பட்டபோது, அதில் பிரிட்டனுடைய விசேஷப் பொறுப்புரிமையைச் சேர்க்கவேண்டுமெனச் சர்ச்சில் தலைமையில் சில டோரிகள் எவ்வளவோ ஆர்ப்பாட்டங்கள் செய்தார்கள். "அயர்லாந்து விரும்பும்போது தன்னிஷ்டப்படி நடந்து கொள்ளக்கூடியதாய் இந்த சட்டம் இருக்கிறதே" என மற்றொரு பிரிட்டிஷார் கதறினர். ஆனால், ஐரிஷ் மக்கள் அதில் ஒன்றையும் சேர்க்கவோ மாற்றவோ இடங்கொடுக்கவில்லை. எனினும் மிஸ்டர் கிரெட்டன் என்பார் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தார். சர்ச்சில் கோஷ்டியார் அதைப் பலமாக ஆதரித்தும் பிரிட்டிஷ் பார்லிமெண்டு 50 வோட்டுகளுக்கெதிராக 360 வோட்டுகள் அளித்து அந்த திருத்தத்தை நிராகரித்து விட்டது.

அகிம்சை என்ற ஆயுதம்

சரித்திரம் இவ்வாறிருக்க இந்தியா விஷயத்தில் பிரிட்டன் ஒரே பல்லவியைப் பாடிக்கொண்டிருப்பதானது நமது பலஹீனத்துக்கு அறிகுறியாகவே இருக்கிறது. நிராயுத பாணிகளாக விருக்கும் நமக்கு மகாத்மா புதியவொரு அஸ்திரத்தைக் கொடுத்து நம்மைப் பலவான்களாக்கி யிருக்கிறார். நாம் இன்னும் நமது பலத்தையறிந்து கொள்ளாமலும் மகாத்மா நமக்குத் தந்துள்ள ஆன்ம சக்தியின் அளவைத் தெரிந்து கொள்ளாமலும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அகிம்சை யென்ற ஆயுதம் ஹிட்லரின் டாங்குகளையும், ஆகாயக் கப்பல்களையும், வெடிகுண்டுகளையும், சுரங்கக் கண்ணிகளையும் விடச் சக்தி வாய்ந்ததாகும். ஹிட்லரின் ஆயுதங்களை எந்தக் கோழையும் கையாளமுடியும். அதனால் மக்களுக்குச் சந்தோஷமோ, சமாதானமோ சித்திக்கப் போவதில்லை யென்பதையும் கண் கூடாகக் கண்டு வருகிறோம். ஆனால், மகாத்மாவின் அகிம்சா ஆயுதத்தைப் பலவான்களாலேயே கையாள முடியும். சரீரபலம் கொண்டவர்களால் அல்ல; ஆன்மா பலம் கொண்டவர்களால். பிறருக்குத் தீங்கிழைக்க வேண்டுமென்பவர்களால் அல்ல; ஆனால், பிறருக்குத் தீங்கு விளைவிக்காமல் அநீதியுடன் போராட எண்ணுபவர்களால். பிறரைக் கொல்லக் கருதுகிறவர்களால அல்ல; ஆனால், பிறர்பொருட்டுத் தமதுயிரையே மாய்த்துக் கொள்ளத் துணிந்தவர்களால். பிற நாட்டை வெல்லவேண்டுமென்பவர்களால் அல்ல; ஆனால், பிறரிடமிருந்து தன் நாட்டை மீட்டுக்கொள்ள வேண்டுமென்பவர்களாலென்க.

மகாத்மா செய்யும் புரட்சி

இந்த அகிம்சா நெறிக்குச் சின்னமாக மகாத்மா நம்மனைவரும் நூல் நூற்குமாறு சொல்லுகிறார். நாம் நம்பிக்கைகொண்டு நூல் நூற்று வருவோமேயானால் நிச்சயம் நாம் பலவான்களாவோம். மகாத்மா கூறுவது அர்த்த

சாஸ்திரம். படித்தவர்களுக்குப் புலனாகாதிருக்கலாம். பலாத்காரத்திலும், படை பலத்திலும் நம்பிக்கைகொண்ட அனர்த்த சாஸ்திரிகளுக்கும் மகாத்மாவின் கொள்கையைப் புரிந்துகொள்ள முடியாது.

மகாத்மா இன்றுள்ள உலகத்தையே திருத்தியமைக்க எண்ணுகிறார். உலகிலே தலைகீழான ஒரு புரட்சியை ஏற்படுத்த அவர் எண்ணுகிறார். பலாத்காரத்தை அடிப் படையாகக் கொண்ட மனித சமூகத்தையே அவர் மாற்றி யமைக்க எண்ணுகிறார். மக்களின் உழைப்பைப் பறித்து, மக்களின் வறுமையை அதிகரித்து, மூலப் பொருள்களுக் காகவும், பண்டங்களை விற்கும் சந்தைகளுக்காகவும் பிற நாடு களில் குடியேறி, ஆதிக்கம் செலுத்த எண்ணும் பேரா சையை, யுத்த வெறியை, சாம்ராஜ்ய போகத்தை உலகினின் றும் அறவே நீக்கி ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு குடும்பமும், ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு தேசமும் தத்தம் தேவைகளைத் தாமே பூர்த்திசெய்து கொள்வதுடன், பிற தேசங்களை அண்டியோ, ஆட்கொண்டோ வாழாம லிருக்கத்தக்க உபாயத்தையே மகாத்மா போதித்து வருகிறார்.

சர்வ சஞ்சீவி

பேராசையென்ற பேய்க்குணமே மனிதனது சிறுமை களுக்குக் காரணமாய் உள்ளதென்பதையுணர்ந்து மகாத்மா எளிய வாழ்க்கையும் உயர்ந்த எண்ணமும் மக்களுக்கு வேண்டுமென வலியுறுத்தி வருகிறார். எனவே, இவ்வுலகி லுள்ள சகல பிரச்னைகளுக்கும் சர்வ சஞ்சீவியாக கை ராட்டை ஒன்றினையே மகாத்மா மேற்கொள்ளுமாறு கூறு கிறார். சமஸ்தானங்களில் மக்கள் அடக்கு முறைகளுக்கு ஆளாகி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்களென்று அவரிடம் சொன்னால் அவர்களிடையே கைராட்டைகளைப் பரப்புங்கள் என்பதாகச் சொல்லுகிறார். இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளுகிறார்கள் என்று தெரிவித்தால், அவர்கள் கையில் கைராட்டினத்தைக்

கொடுக்குமாறு சொல்லுகிறார். பாரத அன்னையின் அடிமைத் தளையை அறுத்தெறிய விடுதலைப் போர் ஆரம்பியுங்கள் என்று கேட்டால், அதற்கும் முதலாவதாக ராட்டையைக் கையிலெடுத்து அனைவரும் நூல் நூற்குமாறு சொல்லுகிறார். பஞ்சத்தில் மக்கள் அடிபட்டுப் பரதவிக்கிறார்களென்று கேள்விப்பட்டால், அங்கும் கைராட்டையை கைக்கொள்ளுமாறு கூறுகிறார்.

நூல் நூற்பதின் அர்த்தமென்ன?

இவ்வாறாகக் காந்தியடிகளால் சிறப்பித்துக் கூறப்படும் கைராட்டையின் உண்மைப் பொருளை நாமனைவரும் உணர்ந்து கொண்டிருக்கிறோமோ என்று நாம் நம்மையே பரிசோதித்துக் கொள்ளும் தருணம் வந்துவிட்டது. பெயரளவில் ராட்டினத்தையோ தக்ளியையோ சுழற்றினால் போதாது. வெளி வேஷத்துக்காக ஒரு கதர்ச் சட்டையும், வேஷ்டியும், குல்லாயும் அணிந்துகொண்டு திரிந்தாலும் போதாது. உள்ளம் தெளிந்து செய்யப்படாத எக்காரியத்தாலும் யாதொரு பயனும் ஏற்படாது. நெஞ்சிலே பக்தியும், தெய்வ நம்பிக்கையும் இல்லாது ஒரு படி திருநீறை நெற்றியிலடித்து, ஒன்பது சரம் ருத்திராட்சங்களைக் கழுத்திலும் தலையிலும் மாட்டிக் கொண்டு அலைவதால் என்ன பயன் ஏற்படும்? உள்ளே இருக்கும் நாதனை அறியாது மூர்த்தியை முன்னூறு தரம் சுற்றினாலும் யாது பயன் விளையப்போகிறது? உடலிலுள்ள அழுக்குப் போகாமல் எத்தனை முறை நீராடியும் என்ன பயன்? அவ்வாறே நம்பிக்கையும், நல்லுணர்வுமின்றி கதர் உடுத்துவதாலும், கைராட்டினைச் சுற்றுவதாலும் கோரிய பலன் கிட்டாதெனலாம்.

கைராட்டினம் அகிம்சா தர்மத்தின் ஒரு சின்னமென்பதாகச் சொன்னோம். சின்னமென்பது கருத்தை, ஒரு எண்ணத்தை, வெளிப்படையாகக் காட்டும் சாதனமாகும். சின்னமாக இருப்பதற்கு வேண்டிய தகுதி எல்லா வஸ்துக்

களுக்கும் கிடையாது. ஒரு குறிப்பிட்ட கொள்கை அல்லது எண்ணத்திற்குச் சின்னமாக இருக்கும் சக்தி ஒரு குறிப்பிட்ட வஸ்துவில்தான் காண முடியும். அது என்ன சக்தி? சின்னத்தில் என்ன விசேஷம் இருக்க வேண்டுவது அவசியம்? எந்தக் கொள்கையை, எந்த எண்ணத்தை நாம் சமூகத்தில் ஸ்தாபிக்க விரும்புகிறோமோ, அதற்கும், எந்த வஸ்துவை அதற்குச் சின்னமாக உபயோகிக்க விரும்புகிறோமோ, அதற்கும் ஒரு பொதுவான தன்மையிருக்க வேண்டும், சரியான பொறுத்தமிருக்க வேண்டும். எந்த வஸ்துவிற்கும் இத்தன்மையும் பொறுத்தமுமில்லையோ அது சின்னமாக விளங்க முடியாது.

சில உதாரணங்கள்

ஜன சமூகத்தில் அநேகவிதச் சின்னங்களிருக்கின்றன. அவை தங்கட்குச் சமமான கொள்கைகள் அல்லது எண்ணங்கட்குச் சின்னங்களாகவிருக்கின்றன. அவற்றில் ஒன்று பேனா. மனிதனது சிந்தனா சக்திகளையும், கற்பனா சக்திகளையும் எழுத்து வடிவில் வெளிப்படுத்தவல்லது பேனா. உயரிய முறையில் சட்டங்களியற்றி மக்களை நீதியுடன் ஆட்சி செய்ய உதவுவது பேனா. உலகிலுள்ள சகல உன்னதமான கலைகட்கும், நாகரிகத்துக்கும், மொழிவளர்ச்சிக்கும், சமய நீதிகட்கும், நியாயவாதங்கட்கும் சின்னமாகத் திகழ்வது பேனா. பேனாவை ஒருவன் சின்னமாகத் சித்தரித்த மாத்திரத்தில் அது பிரதிபலிக்கும் தத்துவார்த்தங்களெல்லாம் நமது மனதில் பளிச்செனப் பாய்கின்றன.

சமமாக நீதி வழங்குதலுக்குச் சின்னமாகத் தராசைப் போடுகின்றனர். தராசில் உள்ள இரண்டு தட்டுகளுக்கும் சம எடையைக் காட்ட அதிலொரு முள்ளிருக்கிறது.

தூய்மைக் கடையாளமாக சங்கைப் போடுவார்கள் சங்கு சுட்டாலும் வெண்மை தருமல்லவா?

உலகத்திலே கத்தி மற்ருெரு சின்னம். அது பிரதிபலிக்கும் கருத்துகளென்ன? அதை நினைத்த மாத்திரத்திலேயே நமது உள்ளம் நடுங்கவில்லையா? இன்று ஹிட்லர் கத்தியின் பலத்தால் உலகத்தை வென்று வருகிருன். நாளை ஹிட்லர் கத்தியின் பலத்தால் சமாதானம் அளிக்கப் போகிருன். பிரிட்டன் கத்தியின் பலத்தால் நமது நாட்டைப் பிடித்துக் கொண்டது. கத்தியைக் காட்டி நம்மை அடிமைகளாக வைத்திருக்கிறது. நம்மிடமிருந்த கத்திகளைப் பிடுங்கிக் கொண்டு, இரு கைகளையும் கூப்பி வணங்கி வருமாறு பணித்திருக்கிறது. சென்ற சட்டமறுப்பின்போது தெருவிலே சென்ற பிரிட்டிஷ் சோல்ஜர்களுக்கு நமது பள்ளி மாணவர்கள் வரிசையாக நின்று செலாமிடுமாறு வற்புறுத்தப்பட்டது. கத்தியின் பின்னுல் தயை கிடையாது, தாட்சண்யம் கிடையாது, நியாயம் கிடையாது. அது மிகக் கொடூரமான துர்க்கிருத்தியங்களுக்குச் சின்னமாக விளங்குகிறது. மக்களை மக்கள் மாய்ப்பதற்கும், தேசத்தை தேசம் சங்கரிப்பதற்கும் கத்தி சின்னமாக இருந்து வருகிறது.

சம்மட்டியும் அரிவாளும்

ருஷ்ய நாட்டிலே சம்மட்டியும் அரிவாளும் சின்னங்களாகத் தீட்டப்பட்டிருக்கின்றன. அவை உடலுழைப்பைப் பிரதானப்படுத்துவதாக இருக்கிறது. உழைப்பாளிகளுக்கே இவ்வுலக போகங்களெல்லாம் மற்றவர்களுக்கில்லையென்ற முழக்கத்திற்கு அவை சின்னங்களாக விளங்குகின்றன. அச்சின்னங்களைப் பார்த்த மாத்திரத்தில் சிலருடைய மனதில் ஒருவகைப் பரபரப்பு ஏற்படுகிறது. சிலர் அதனைக் காணக் கிலேசமடைகிருர்கள். ஏனெனில், இன்றுள்ள சமூக அமைப்பையே அவை தலைகீழாக மாற்றுவதற்குச் சின்னங்களாக விளங்குகின்றன. அவற்றின் கீழே அரசுரிமை அடிபட்டுப் போயிற்று. ஏகாதிபத்யம் இருளடைந்து போயிற்று. ஏக போக உரிமை எரிந்து சாம்பலாகிவிட்டது. ஒருவன் சுக போகங்களுடன் கொஞ்சிக் குலாவும் பொருட்டு எண்ணற்ற

மக்கள் ஓயாதுழைத்து, ஒட்டி வரண்டு, பல்லைக் கெஞ்சி வாழவேண்டுமென்ற ஈன முறைகள் பறந்தோடி மடிந்தன. இதைக் கவி பாரதியார் எவ்வளவு அழகாக வர்ணித்துள்ளார் கேளுங்கள்:

1. மாகாளி பராசக்தி உருசிய நாட்டினிற்
   கடைக்கண் வைத்தா ளங்கே
   ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி
   கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்
   வாகான தோள்புடைத்தார் வானரர்
   பேய்களெல்லாம் வருந்திக் கண்ணீர்
   போகாமற் கண்புகைந்து மடிந்தனவாம்
   வையகத்தீர் புதுமை காணீர்!

2. இரணியன்பேர் வரசாண்டான் கொடுங்கோலன்
   ஜாரெனும் பேரிசைந்த பாவி
   ஆணின்றித் தவித்திட்டார் நல்லோரும்
   சான்றோரும்; தருமந் தன்னைத்
   திரணமெனக் கருதிவிட்டான் ஜார்மூடன்
   பொய் சூது தீமையெல்லாம்
   அரணியத்திற் பாம்புகள்போல் மலிந்துவளர்ந்
   தோங்கினவே யந்த நாட்டில்.

3. உழுதுவிதைத் தறுப்பாறுக் குணவில்லை
   பிணிகள்பல வுண்டு; பொய்யைத்
   தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்க
   ளுண்டுண்மை சொல்வோர்க்கெல்லாம்
   எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு
   தூக்குண்டே யிறப்பதுண்டு
   முழுதுமொருபேய் வனமாஞ் சிவேரியிலே
   ஆவிகெட முடிவதுண்டு.

4. இம்மென்றல் சிறைவாசம்; ஏனென்றல்
வனவாசம் இவ்வா றங்கே
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்தபோதில்
அம்மை மனங்களித் திட்டாள், அடி பரவி
உண்மைசொலும் அடியார் தம்மை
மும்மையிலுங் காத்திடு நல்விழியாலே
நோக்கினள்; முடிந்தான் காலன்.

5. இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்துவிட்டான்
ஜாரரசன், இவனைச்சூழ்ந்து
சமயமுளபடிக் கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள்செய்த
சுமடர் சடசட வென்று சரிந்திட்டார்
புயற்காற்றுச் சூறைதன்னில்
திமுதிமென மரம்விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போலே.

6. குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்ததுபார், குடியரசென்
றுலகறியக் கூறிவிட்டார்
அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போ
தடிமையில்லை அறிக என்றர்
இடிபட்ட சுவர்போல கலி விழுந்தான்
கிருதயுகம் எழுகமாதோ!

கைராட்டினம்

ஆனல் இச் சின்னங்களின் பின்னே பலாத்காரமும் நிறைந்து நிற்கிறது. முள்ளை முள்ளால் களையும் சாதாரண நீதிக்கு இவை உறைவிடமாய் இருக்கின்றன. தீமையைத் தீமையால் போக்குவதும், விஷத்தை விஷத்தால் நீக்குவதும்

பல்லுக்குப்பல், கண்ணுக்குக்கண் என்ற நீதிகளுக்கெல்லாம் இனி உலகில் இடமில்லை. இவற்றிலும் உயர்வான, மேலான, நிலையான நீதியை மகாத்மா போதித்து வருகிறார். அந்த நீதிக்குச் சின்னமாக விளங்குவது கைராட்டினமாகும்.

தீமையை அன்பால் வெல்லச் சொல்லுகிறார் மகாத்மா, விஷத்தை அமிர்தத்தால் கொல்லச் சொல்லுகிறார் மகாத்மா. ஒருவன் உனது இடது கன்னத்திலடித்தால் உன் வலது கன்னத்தைத் திருப்பிக்காட்டு என்று ஏசுவானவர் போதித்த இலக்கணத்துக்கு இலக்கியமாகத் திகழ்கிறார் மகாத்மா. இன்னா செய்யாமை என்ற அதிகாரத்திலே தெய்வப்புலமைத் திருவள்ளுவர் சித்திரித்துள்ள அத்தனை குணங்களுக்கும் உறைவிடமாய் நிற்கிறார் மகாத்மா. புத்த பகவானே மீண்டும் அவதரித்துள்ளதுபோல் விளங்குகின்றார் அவர். ஏன்? இவ்வுலகின் எண் திசைகளிலும் இதுகாறும் தோன்றிய அத்தனை பெரியார்களது கருத்தும் ஒருருவாய்த் திரண்டு அவதரித்துள்ளார் என்றே சொல்லவேண்டும்.

அரிவாளும் சம்மட்டியும் எந்த எண்ணங்கட்கும் தத்துவங்கட்கும் சின்னங்களாக விளங்குகின்றனவோ, அதே எண்ணங்கட்கும் தத்துவங்கட்கும் சின்னமாக கைராட்டினம் விளங்குவதேயானாலும் முந்தியது, இயந்திரத்தையும் பலாத்காரத்தையும் தம்முள் அடக்கியுள்ளன. ஆனால் அகிம்சைக்கும் குடிசைத் தொழில்கட்கும் சின்னமாகப் பிந்தியது விளங்குகிறது. மக்கள் உழைப்பின் மேன்மைக்குச் சின்னமாக விளங்குவது கைராட்டினம்.

சிலர் வேலை செய்யமாட்டோம் என்று சோம்பித்திரிதலையும் சிலர் வேலையொன்றுமில்லையே என்று சோம்பித் திரிதலையும் ஒருங்கே ஒழித்து எல்லோரும் தத்தம் தேவைக்கு வேண்டிய அளவுக்குச் சரீரத்தால் உழைத்தே ஆகவேண்டும் என்ற தத்துவத்திற்கு சின்னமாக விளங்குவது கைராட்டினம்.

''மனிதன் தனது வியர்வை சிந்த உழைத்து ஜீவிக்கக் கடவான்'' என்று ஆதி மனிதனுக்கு ஆதிக் கடவுள்

போதித்ததாக வில்லிய நூலோர் கூறவில்லையா, அதே தத்துவத்துக்குச் சின்னமாக விளங்குவது கைராட்டினம். உலகிலேயுள்ள சகல பேதாபேதங்கள், கொடுமைகள், அசுரத் தன்மைகளாகியவற்றையும் அகிம்சா முறையில் போக்க முடியும் என்ற சித்தாந்தத்திற்குச் சின்னமாக விளங்குவது கைராட்டினம்.

கைராட்டினத்துக்குள்ள இத்தகைய குணாதிசயங்களால் தான் மகாத்மா நம்மைப் பிரதிதினமும் நூல்நூற்று வருமாறு கூறுகிறார். நிர்ாயுதபாணிகளாக நாம் இருப்ப தைப்பற்றி நாம் அஞ்சாது, நமது ஆத்மபலத்தில் நம்பிக் கைக்கொண்டு நூல் நூற்று, கதருடுத்தி—போலிக் கதரல்ல, —விலை மலிவாக விற்கப்படும் முரட்டுத் துணியல்ல—வியாபாரக் கூட்டம் சுத்தக் கதரெனக் கூறும் வஞ்சகப் பொருளல்ல—இதுவும் கதர் தானே என்று ஏமாந்த சோண கிரிகள் வாங்கியுடுத்தி ஜம்பம் பேசும் துணியல்ல—ஞாபக மிருக்கட்டும்—சமயமறிந்து இதைச் சொன்னேன்—மீண்டும் ஞாபகமிருக்கட்டும்—வருவோமேயானுல் நாமும் நமது நாடும் விடுதலை பெறுவதல்லாமல், உலகிலே போரைத் தவிர்த்து நிலையான சமாதானமும்; சந்தோஷமும் ஏற்படு வதற்கு உதவியவர்களாவோம். மகாத்மாவைப்பற்றி நமது தேசீயக் கவி சுப்ரமணிய பாரதியார் பாடியுள்ளதையும் கேளுங்கள்!

1. வாழ்க நீ! எம்மான், இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வற்று அடிமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்றதாமோர்
பாரத தேசந்தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா! நீ வாழ்க!! வாழ்க!

2. அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலையார்ந்து செல்வம்,
இடிமையி லுயர்வு கல்வி
ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மையுற்றாய்!

3. கொடியவெந் நாகபாசத்தை மாற்ற
மூலிகை கொணர்ந்தவ னென்கோ!
இடிமின்னல் காக்கும் குடைசெய்தானென்கோ!
என் சொலிப் புகழ்வதிங்குனையே?
விடிவிலாத் துன்பஞ் செயும் பராதீன
வெம்பிணி யகற்றிடும் வண்ணம்
படிமிசைப் புதிதாச் சாலவுமெளிதாம்
படிக்கொரு சூழ்ச்சிநீ படைத்தாய்.

4. தன்னுயிர் போலே தனக்கழிவெண்ணும்
பிறருயிர் தன்னையுங் கணித்தல்
மன்னுயிரெல்லாங் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினைமற்றுங்
கிழிபடு, போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசியலதனிற்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான்!

5. பெருங்கொலை வழியாம் போர்வழி யிழந்தாய்
அதனுறுந் திறன் பெரிதுடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்றுநீ யறிந்தாய்

நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழையாமை'
நெறியினால் இந்தியாவிற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்க நல்லறத்தே.

சோம்பேறிப் பேச்சு

இவ்வளவும் கேட்ட பின்னரும் மனிதன் ஏன் அலுத்துப் போமளவு உழைக்க வேண்டும். சொற்பமாக உழைத்தால் போதாதா என்றொரு சந்தேகப் பேய் நம்முள்ளிருந்து ஆட்டும்.

எல்லாரும் சமமாக உழைக்க ஆரம்பித்தால், மனிதன் தனது வாழ்வுக்காக அலுத்துப்போகுமளவும் உழைக்கத் தேவையே இராது. இன்று ஒரு மிராசுதார், காலையில் சூரியனுடைய கதிர்கள் ஜன்னல் வழியாகப் புகுந்து அவரது கண்ணிமைக்குள் நுழைந்து, தூக்கத்தைக் கலைத்துப் புரட்டி எழுப்பிய பின்னர், சாவதானமாக எழுந்து வெளியே சென்று, பல் துலக்கி, நீராடி, பலகாரமுண்டு, பத்திரிகை படித்து முடித்து, பகல் போஜனமருந்திப் படுத்துறங்கி, மீண்டுமெழுந்து சிற்றுண்டி உட்கொண்டபின்னர், கிளப்புக் குச் சென்று சீட்டாடியோ, டென்னிஸ் பந்தாடியோ வாக்கிங் நடந்தோ, சினிமாவுக்குச் சென்றோ பொழுது, போக்கி மீண்டும் வீடு சேர்ந்தபின் இராப் போசனம் சாப் பிட்டு, ரேடியோ கேட்டுவிட்டு இனிய மனையாளுடன் சல்லாபித்து நித்திரா தேவியை ஆலிங்கனம் செய்வதையே தமது நித்திய கட்டளையாகக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறாக இவர் சொகுசான சோம்பேறி வாழ்க்கை நடத்தும் பொருட்டு எத்தனை பேர்கள் உழைத்து வரவேண்டு மென்பதை உன்னி நோக்குவோருக்கே உண்மை விளங்கும்.

மிராசுதாரின் வயல்களில் சிலர் உழவேண்டும்; சிலர் நாத்துகள் நடவேண்டும், சிலர் களையெடுக்க வேண்டும்;

சிலர் உரம் சேகரித்துக் கொண்டுவந்து குவிக்க வேண்டும்; சிலர் வாய்க்கால்களை யடுத்த வரப்புகளின் மீது தங்கள் தலை சாய்ந்தும் சாயாமலும் இரவெல்லாம் காவலிருந்து மடை திருப்பவேண்டும்; சிலர் ஆடுமாடுகளை மேய்க்க வேண்டும்! சிலர் நெல்லறுக்கவேண்டும்; சிலர் தானியத்தை உதிரடிக்க வேண்டும்; சிலர் வைக்கோலை உலரவைத்துப் போர்போட வேண்டும்; சிலர் நெல்லை விலைபேசி விற்று பணத்தைப் பாங்கி யில் கொண்டு செலுத்தவேண்டும்.

மிராசுதாரின் பங்களாவைச் சுற்றிலும் கூட்டிப் பெருக்க ஒருத்தி. குரோடன் செடிகளைக் காப்பாற்ற இருவர். கை கட்டி வாய்பொத்தி "கேட்டு" வாசலில் காவல்காக்க இருவர். சமையல்காரன் ஒருவன், பாத்திரங் கழுவ ஒருவன், பால் கறக்க ஒருவன், வேஷ்டி துவைக்க ஒருவன், விறகு பிளக்க ஒருவன், மேசை துடைக்க ஒருவன், படுக்கை விரிக்க ஒருத்தி, பரிமாற ஒருத்தி, எச்சலை யெடுக்க ஒருத்தி, தாம் பூலம் கொடுக்க ஒருத்தி, விசிறி வீச ஒருவன், கால் பிடிக்க ஒருவன், பட்சணம் செய்ய ஒருவன், பலகாரம் படைக்க ஒருத்தி, சந்தனம் பூச ஒருவன், ஜவ்வாதுப் பொட்டுவைக்க ஒருத்தி எனறிவ்வாறுக இவர் ஒருவர் வாழ இத்தனை பேர்கள் உழைத்து வருவது தகாதென்பதை ஒப்புக்கொண்ட பின் யாரும் அலுத்துப் போகுமளவும் உழைக்க வேண்டியிராது.

ஒவ்வொருவனும் தனது சக்திக்கும், விருப்பத்துக்கும் ஏற்ற அளவில், சமுகத்துக்கும் உபயோகமான வழியில் உழைத்தேயாகவேண்டும் என்ற நியமம் ஏற்பட்டுவிட்டால், பின்னர் உழைப்பின் சிரமம் குன்றிவிடும். இத்தகைய ஏற் பாட்டில் மனிதனுடைய ஆன்மா வளர்ச்சி யடையவும், கலைத்திறன் அபிவிருத்தியடையவும் வழிகளேற்படும்.

இயந்திர பூதம்

அடுத்தபடியாக ஒரு பூதம் நம்மில் புகுந்து தொல்லைப் படுத்துகிறது. மனிதன் ஏன் உழைக்கவேண்டும்? மனிதனது

உழைப்பைக் குறைத்து, மனிதனுக்கு பரிபூரண ஓய்வைக் கொடுக்க இயந்திரசாதனங்கள் இருக்கின்றனவே, அவற்றைக் கையாளுவதை விடுத்து, இக் கிழக்காந்தி எதற்காக கைராட்டையைச் சுற்றும்படியாகச் சொல்லுகிறார். மில்லுகளில் உற்பத்தியாகும் துணி எவ்வளவு பகட்டாக இருக்கிறது. விலை மலிவாக இருக்கிறது. நீடித்து உழைப்பதாகவும் இருக்கிறது. ஏழைகள் வாங்கி யுடுத்த ஏற்றதாகவும் இருக்கிறது. கதரோ உற்பத்தி செய்வது கடினம். விலையும் அதிகம், கரடுமுரடாக விருக்கிறது. சீக்கிரம் கிழிந்தும் போய்விடுகிறது. கிழிந்தால் தைக்கவும் முடிவதில்லை. தூக்கித் துவைக்கவும் முடிவதில்லை. சீக்கிரம் காய்வதுமில்லை. ஏழைகளால் வாங்கி யுடுத்தவும் முடியாது என்றெல்லாம் அப் பூதம் நமக்கு கீதோபதேசம் செய்கிறது. இந்த இயந்திர பூதந்தான் இன்று ஹிட்லரைக் காலனிகளுக்காகப் போரிடும்படி தூண்டித் துணைநிற்பது. இது மகா பயங்கரமான பூதம். இந்த பூதத்தைக் கொல்ல வல்லது கைராட்டினம் ஒன்றேயாகும்.

மகாத்மா கூறுவது ஒருபுறமிருக்கட்டும். "இந்தியாவின் தொழிற்சாலை" என்பதாக ஜயராஜ் பர்ட்வுட் என்பார் 1880-ம் வருஷத்தில் எழுதியுள்ள புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதைக் கவனியுங்கள்:

"தலைமுறை தத்துவமாக குற்றங்குறைகளற்ற ஒரு ஒழுங்கான முறையில் நேரடியான தொழிலனுபவம் பெற்று, எழில் மிக்க தொழிலை மாசறச் செய்துவரும் ஜனங்களுடைய வாழ்க்கை முறையில் நாம் தலையிட முயலுவதின் மூலம் பெரிய பொறுப்புக்காளாகிறோம். இந்தியாவுக்குள் இயந்திரங்களை நுழைப்பதினால் ஏற்படும் அபாயங்களை நாம் முக்கியமாக யோசிக்கவேண்டும்.

இயந்திரங்களை இந்தியாவுக்குள் நுழைப்பது அம்மக்களின் ஒழுக்கம் சீர்குலைந்து, பெருந் தீமைகளுக்கு இடமேற்பட்டுவிடும். மான்செஸ்டரிலும், மாகாணங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பஞ்சாலைகளின் போட்டியால் இந்தியாவி

லுள்ள கைத்தறிகள் க்ஷீணமடைந்து வந்தபோதிலும், இதர கைத் தொழில்கள் இன்னும் நல்ல நிலைமையிலேயே இருந்து வருகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் பண்டைய கைத் தொழில்கள் செவ்வனவே நடைபெற்று வருகின்றன.

மேட்டுப்பாங்கான நிலத்தில் அடைக்கப்பட்டுள்ள ஒரு இந்தியக் கிராமத்துக்குள் நுழைந்தவுடன் ஊரின் வெளிப் புறத்தில் குயவன் தனது சக்கரத்தினருகே வீற்றிருந்து, தனது கரங்களால் களிமண்ணை வனைத்து உருவாக்கி வரும் காட்சியைக் காண்பீர்கள்.

அவன் வீட்டைத் தாண்டி அப்புறம் சென்றால் மஞ்சள் நிறமுள்ள பூக்கள் பூத்து வனப்புடன் விளங்கும் பூவரச மரத் திற் கெதிற்புறமுள்ள குடிசையின் தாழ்வாரத்தில் நெசவுக் காரன் நாடாவை ஊடையினுள் ஒய்யாரமாக வீசி நெசவு செய்வதையும் காணலாம்.

இன்னும் சற்றே அப்புறம் சென்றால் பித்தளையாலும், செம்பாலும் பாத்திரங்களும், தட்டு தாம்பாளங்களும் தட்டித் தட்டி சரிப்படுத்தும் கம்மாளனைக் காணலாம். சற்று அதிக மான பூஸ்திதியுள்ள குடியானவனுடைய முற்றத்திலே ஆச்சாரி யொருவன் பொன்னாலும், வெள்ளியாலும் அழகான ஆபரணங்கள் செய்துகொண்டிருப்பான்.

மற்றோர் கோடியில் செக்கான் எண்ணையாட்டிக் கொண்டிருப்பான். குறவனும் குறத்தியும், கூடையும் முரமும் முடைந்துகொண்டிருப்பார்கள். கொல்லன் உலை வளர்த்து விவசாயத்துக்கு வேண்டிய கருவிகளைச் செய்துகொண்டிருப் பான். தச்சன் கலப்பை மூட்டுவான், பல தட்டு சாமான் களையும் செய்து முடிப்பான். ஊரையடுத்த தென்னந்தோப்பி லிருந்து தேம்பாகின் வாசனை கமகமவென்று வந்து கொண்டிருக்கும்.

மாலை நேரத்தில் மங்கையர் விதவிதமான வர்ணப் புடவைகளுடுத்திக் கொண்டு கேலியும் சிரிப்புமாக மாசறத் தேய்த்தால் பளிச்செனப் பகட்டி வீசும் செப்புக் குடங்களை யும், பித்தளைக் குடங்களையும் தாங்கியவர்களாய், ஊர்க் குளத்தினின்று தண்ணீர் மொண்டு ஒருவர் பின்னொருவராக வரிசை வரிசையாக கைவீசிக் கதைகள் பேசி வந்துகொண்டே இருப்பார்கள்.

மாலை மசங்கும் சமயம் குடியானவர்கள் தங்கள் பசுக் களை ஓட்டிக் கொண்டு வீடுவந்து சேருவர். நெசவாளி தன் பாவைச் சுருட்டிவைப்பான். லொட்டு லொட்டெனப் பாத் திரங்களை கம்மாளன் தட்டும் சப்தமும் ஓய்ந்துவிடும். குடிசை கள் தோறும் விளக்கேற்றப்படும். நாற்புறமிருந்து வாத்திய கோஷங்களும் பாட்டுகளும் கச்சேரிகளும் கிளம்பும். இரவு நெடுநேரம் வரையிலும் இராமாயணத்திலிருந்தும், மகா பாரதத்திலிருந்தும், பாட்டுகளைப் பாடி பாராயணம் செய்து வருவார்கள். மறுநாள் சூரியோதயமாவதற்குள் தங்கள் நித்யானுஷ்டானங்களை முடித்துவிட்டுத் தத்தம் தொழிலிலே நாட்டம் செலுத்த வாரம்பிப்பார்கள்.

இச் சித்திரத்தினின்று நமது பண்டைய கிராம வாழ்க்கை யின் வடிவம் நன்கு நம் மனத்தகத்தே தோன்றுகிறது. மக்கள் எல்லோருக்கும் அக்காலத்தில் வேலை யிருந்தது. அவர்கள் திடகாத்திரர்களாகவும் சந்தோஷமாகவும் தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். கிராமங்களில் குதூகலமும் கோலாகலமும் நிறைந்திருந்தன. சுறுசுறுப்பாகத் தொழில்கள் செய்து வாழ்வதில் உள்ள மெய்யான ஆனந்தம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. சமூகத்தில் சண்டை, சச்சரவு, மனக்கசப்பு ஆகியவைகளை விளைவிக்கும் சோம் பலுக்கு இடமில்லாதிருந்தது.

இம் மக்களின் கைத்தொழில்களை இயந்திர பூதம் பறித் துக் கொண்டது. இயந்திரத்துக்கு இருதயம் என்பது கிடை

யாது. மனிதர்களுடைய தொழிலைத் தான் பறித்து விடுவ தால், அவர்கள் படுந்துயர்களைப்பற்றிய சிந்தனை இயந்திரத் துக்குக் கிடையாது. பணம் திரட்டுவதற்கு இயந்திரம் ஒரு சரியான சாதனமே. பணமே அதன்மீது அதிகாரம் வகித்து நடத்துகிறது. எனவே பணமுள்ளவர்கள் இயந்திரங் களை நிறுவி, தங்கள் பணத்தைப் பெருக்கவே எண்ணு கிறார்கள். அதனால் மற்றவர்களுக்கு விளையும் தீமைகளைப் பற்றி அவர்கள் கிஞ்சிற்றும் எண்ணுவதே கிடையாது. இவர் கட்கு உலகத்தினுடைய க்ஷேமத்தில் அக்கறை கிடையாது. தங்கள் சொந்த தேசத்தின் நலன்களைப்பற்றியும் சிந்தனை கிடையாது. அவர்கள் நோக்கமெல்லாம் தாங்கள் பணம் சம்பாதித்துக் குவிக்கவேண்டும் என்பதொன்றுதான்.

இவ்வாறு இயந்திரங்களை அமைத்து, நமது தொழில் களைப் பறித்து, நம்மை சோம்பலுக்கும், வறுமைக்கும் ஆளாக்கிவரும் முதலாளிகட்கு நாம், நம்மையறியாமலே உதவி செய்துவருகிறோம். நம்முடைய உதவியைக்கொண்டே அவர்கள் பிழைத்து வருகிறார்கள். சில உதாரணங்கள் சொல்லுகிறேன், கேளுங்கள்.

ஜாவா தேசத்தினின்று இந்தியாவுக்கு ஏராளமான சர்க்கரை வந்துகொண்டிருந்தது. அச் சர்க்கரை மலிவாகவும், பகட்டாகவும் இருந்ததினால் நாம் அதனையே பிரியமுடன் வாங்கத் தொடங்கினோம். நமது செய்கையால் நமது நாட்டிலிருந்த கருப்பட்டியும், கரும்புச் சர்க்கரையும் காய்ச் சும் முக்கிய குடிசைத் தொழிலொன்று பரமபதமடைந்தது. அநேக மக்கள் தொழிலிழந்தனர். கள்ளுக்கடையும், குடியும் பெருக்கெடுத்தன.

பிறகு இந்தியாவிலும் ஆலைகள் அமைத்து முதலாளிகள் சர்க்கரை செய்ய ஆரம்பித்தார்கள். ஆனால், ஜாவா சர்க்கரை யைப்போல் மலிவாக விற்கமுடியாத காரணத்தால் அரசாங் கத்தை யணுகி, ஜாவா சர்க்கரைக்கு இறக்குமதி வரி விதிக்க

ஏற்பாடு செய்தார்கள். இதனால் ஜாவா சர்க்கரை விலையுயர்ந்தது, அதன் விற்பனையும் குன்றியது. ஜாவாவில் சர்க்கரைத் தொழிலும் நின்றது. அந் நாட்டில் அத் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்தியத் தொழிலாளரும் பிழைப்பு இழக்கலாயினர். ஜாவா சர்க்கரையின் விலையைவிட இந்தியச் சர்க்கரைக்கு நாம் ஒன்றுக்கு இரண்டாக விலை கொடுத்து வாங்கி வருகிறோம்.

இதைப்போலவே பஞ்சாலைத் தொழிலும் வெளிநாடுகளிலிருந்து வந்த மில்லாடைகளின் காரணமாக நமது பிரதான குடிசைத் தொழிலான நூல் நூற்றலும், நெசவும், அவை காரணமாகப் பிறதொழில்களும் மாண்டுபோயின. பின்னர் இந்தியாவிலேயே மில்லுகள் ஏற்பட்டன. பிரிட்டனிலிருந்து வரும் துணிகள் நீங்கலாக இதர நாடுகளிலிருந்து வரும் துணிகள்மீது பாதுகாப்பு வரிகள் விதிக்கப்பட்டதால் நாம் இந்திய மில் துணிகளுக்கு ஒன்றுக்கு ஒன்றரையாக விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. ஜப்பான் துணிகளுக்கு வரி விதிக்கப்படாமலிருந்தால் இன்று ஒரு ரூபாயுக்கு வாங்கும் துணியை நாம் முக்கால் ரூபாயுக்கு வாங்க முடியும். நமது கைத் தொழில்களை நாசம் செய்து, நம்மைப் பட்டினி போடுவது இந்திய மில்களாய் இருந்தாலென்ன, ஜப்பான் மில்களாய் இருந்தாலென்ன. நம்முடைய ஊசியால் நமது கண்ணைக் குத்தினால் நாம் பொறுத்துக் கொண்டு சும்மாவிருக்க முடியுமா?

நம்முடைய உதவியால் தலையெடுத்து, விருத்தியடைந்துள்ள இந்திய மில் துணிகளின்மீதும், ஜப்பான் துணிகளுக்கு விதித்துள்ளதுபோலவே, உள்நாட்டு உற்பத்தி வரியென ரூபாயுக்கு நாலணா விதித்து, அப் பணத்தைக் கதர்த் தொழில் அபிவிருத்திக்குத் தந்துதவக்கூடுமானால், மில் துணியைவிட கதர்த் துணியை மலிவான விலைக்கு விற்கமுடியும். அப்போது கதர் விலையதிகமெனும் பேச்சே இருக்காது. எங்கும் கதர் பரவும்; எல்லோரும் கதருடுத்து

வர். இன்று இந்திய மில்லுகளின் மூலம் 4 லட்சம் தொழி லாளர்களே பிழைத்து வருகின்றனர். கதர்த் தொழில் பெருகினால் 400 லட்சம் தொழிலாளர்கட்கு மிகவும் எளி தாக வேலை கொடுக்க முடியும்.

இன்று மில் துணி மலிவான விலைக்கு விற்கப்படுவதால் மட்டும் ஏழைகளுக்கு எவ்வித அனுகூலமும் இல்லை. அவர் கட்கு வேலையிருந்தால்தானே அவர்கள் விலை கொடுத்து துணியும் பிறவும் வாங்கமுடியும்? கதரியக்கம் பரவினால் அதன் மூலம் ஏழைகட்கு வேலையும் கிடைக்குமாதலால்— கதரால் பயனடைபவர்கள் ஏழைகளேயாவர். இம்மாதிரி யாக எல்லா மக்களும் பற்பல குடிசைத் தொழில்களில் ஈடு பட்டு, வேலைசெய்ய ஆரம்பித்த பின்னர், குடிசைத் தொழில் களுக்கு உதவியாகவும், குடிசைத் தொழில்களால் செய்ய முடியாத பெரிய தொழில்கள் செய்யவும் நாம் இயந்திர சாலை களையும், நமது தேவைக்கு ஏற்ற அளவிற்கு அமைத்துக் கொள்ளவும் கூடும்.

இயந்திரங்களிலே நெல் விளையாது, கேழ்வரகு விளை யாது, கத்திரிக்காயும் மிளகாயும் செய்ய முடியாது, ரோஜா மலராது, மல்லிகை முல்லையும் அரும்பெடுக்காது, பருத்தி வெடிக்காது, தயிர் வடையும், பகாளபாத்தும் செய்ய முடியாது. ஏராளமான பருத்தியை அரைத்து, உடைத்து, நூற்று, நெய்து இயந்திரங்களால் தள்ளிவிட முடியும். ஆனால், ஒரு சுளை பருத்தியை, ஒரு சின்ன பருத்தி விதையை இயந்திரங்களால் சிறஷ்டிக்க முடியாது.

நாம் நிலத்தை, கலப்பையாலோ, மோட்டார் டிராக்ட ராலோ, எருதுகள் கட்டியோ எண்ணெ வார்த்தோ, வெய்யில், மழை, குளிர், காற்று எனப் பாராமல் எருவிட்டு உழுது, விதைத்து, தண்ணீர் இறைத்து, குனிந்து, வளைந்து பாடுபட்டால்தான் பருத்தி விளையும். ஒரு கத்தரிச் செடியை வளர்க்க நாம் படாத பாடுபட்டுத்தானுக வேண்டும்.

இயந்திரங்களால் பிள்ளைகளை பெற்றுவிட முடியாது. பிசாசுகளையும், பூதங்களையும், ஒருகால் இயந்திரங்களால் சிருஷ்டிக்க முடியும். முந்தித் தவமிருந்தும் முந்நூறு நாள் சுமந்தும், தொந்தி சரியப் பெற்றெடுத்தும், பாலூட்டித் தாலாட்டித்தான் நமது பிள்ளைகள் பிறக்கவும், வளரவும் முடியும்.

முடிவுரை

மனிதன் வாழவேண்டுமானால் அவன் தன் சரீரத்தால் உழைத்தேயாகவேண்டும். இயந்திரங்களைக்கூட மனிதனே தன் கைகளைக்கொண்டுதான் முதலாவதாக நிர்மாணித்தான். மனிதனை இயந்திரங்கள் உண்டாக்கவில்லை. இயந்திரங்களை ஓட்டுகிறவனும் மனிதனே. மனிதனை இயந்திரங்களால் ஓட்ட முடியாது. ஆனால், இன்று ஹிட்லர் தனது இயந்திரப் படைகளின் உதவியைக்கொண்டு மனிதர்களையும், மக்கள் மனைவிகளையும் ஓட்டியும் வாட்டியும், சுட்டு வீழ்த்தியும் கொல்லுகிறான். தேசங்களையும், நாகரிக வாழ்க்கையையும், சுதந்திரத்தையும், மக்களின் கலையுணர்ச்சியையும் ஹிட்லர் என்ற அரக்கன் இயந்திர பூதங்களின் உதவியைக்கொண்டு நாசம் செய்து வருகிறான்.

கடந்த நூற்றைம்பது வருடங்களாக இயந்திர பூதங்களின் வாய்ப்பட்டு நாம் நமது கைத்தொழில்களை இழந்தோம். கலையிழந்தோம்; சுயேச்சை இழந்தோம்; வாழ்க்கை இன்பங்களைப் பறிகொடுத்தோம். வதைக்கும் வறுமையாலும் வாட்டும் பிணியாலும் நசுக்கப்பட்டோம். சோம்பல் என்ற மூதேவி நம் முதுகுகளிலும் ஏறிச் சவாரி செய்கிறாள். மந்த புத்தியும், அசட்டுத்தனமும், அவநம்பிக்கையும் நம்மில் வழிகிறது. நாம் இப்படியே இருக்கப்போகிறோமா? அன்பர்களே!

கண்ணை விழித்துப் பாருங்கள். ஆம். உங்கள் அகக் கண்ணை விழித்துப் பாருங்கள், சோம்பலை, சோம்புல் மனதை.

சோம்பல் உடலை, சோம்பல் எண்ணத்தை, சோம்பல் வாதத்தை, சோம்பல் வகுப்பு பேதத்தை, சோம்பல் அடிமைத்தனத்தை இன்றே, இப்பொழுதே, இக்கணமே உதறித் தள்ளுங்கள். கைராட்டைச் சுழற்றுங்கள்.

நீண்ட நேரமாக ஓயாது பேசி, உங்களை அலுக்க வைத்துவிட்டேன். இடுப்பு வலிக்கிறதா? உடலை வளைத்து நெட்டை முறிக்கவேண்டுமா? அப்படியானால் கைராட்டினத்தைக் கையிலெடுத்து நூல் நூற்கப் பழகுங்கள்.

உழையுங்கள்

உங்கள் உழைப்பை இத்தேசத்துக்கு நல்குங்கள். இதுவே நமது மந்திரம். இதன் மூலமே நாம் ஆன்ம பலம் பெற்று, நமது பாரதத் தாயின் அடிமைத் தளைகளை அகற்றி எறிய முடியும்.

'சோம்பல் மிகக் கெடுதி பாப்பா' என்று உங்கள் வீட்டுக்குப் போனவுடன் உங்கள் குழந்தையிடமும் சொல்லுங்கள்.

வந்தேமாதரம்!

திருநெல்வேலி ஜில்லா
ஸ்ரீவைகுண்டம் தாலூகா
மூன்ருவது அரசியல் மகாநாடு

ஏரல் 9-8-1940

தேசபக்தர்களே!

என்னை இம்மாநாட்டுக்குத் தலைவனுக நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். எனது மொழிகள் உங்கள் தேசபக்தியை தீவிரப்படுத்தட்டும்.

ஐரோப்பாவிலே

ஐரோப்பாவிலும், சைனுவிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மிகப் பயங்கரமான யுத்தத்தைப்பற்றி நான் விமர்சனம் செய்ய உத்தேசிக்கவில்லை. அப்போரிலே ஈடுபட்டுள்ள இருதரப்பார்களும் மனித சுபாவத்தை அடியுடன் இழந்து விட்டார்கள். கொடிய விலங்குகளிலும் கேவலமாகப் போரிடுகிருர்கள். இக் கோரமான யுத்தம் முடிவுபெற்று எந்தக் கட்சி ஜெயமடைந்தபோதிலும் உலகிலே சத்தியம், சமத்துவம், ஜனநாயக சுதந்திரம் தலையெடுக்கப் போவதில்லை. மனிதனை மனிதன் கொல்லும்படியான இந்த யுத்தம் மனிதனைக் கொடிய மிருகமாக்கி வருகிறது. அவனது மனதை இரும்பினும் கடினமுள்ளதாகச் செய்து வருகிறது. நல்லன எதுவும் அவனது சிந்தையில் எஞ்சி நிற்க முடியாமல் செய்து வருகிறது. மனிதன் கீழான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிருன். பழிவாங்கும் எண்ணத்துடன் இன்று

போர்புரிந்து வருகிறான். நாளை அவன் வெற்றிபெற்றாலும் சரி, தோல்வியுற்றாலும் சரி, அவன் மீண்டும், மேலும் பழி வாங்கும் குணம் அகலாமலேதானிருப்பான்.

அவன் கண்களில் கோபக்கனல் வீசிக்கொண்டேயிருக்கும். அவன் நெஞ்சம் படபடவென்று துடித்துக் கொண்டே இருக்கும். அவன் மனதிலே பொறாமை பொங்கி வழிந்துகொண்டே இருக்கும். தோற்றவனை எப்படிக் கசக்கிப் பிழிந்து பழிவாங்கலாம் என்றெண்ணுவான் ஜெயித்தவன். தன்னை ஜெயித்து அடிமை கொண்டவனை எப்படிக் கவிழ்க்கலாம் என்றெண்ணிக்கொண்டிருப்பான் தோற்றவன். இவ்வுலகம் இன்று பைசாசங்களின் ஆதிக்கத்துக்கு மாறிக் கொண்டிருக்கிறது. ஹிட்லரின் காலடியில் இன்று வீழ்ந்துள்ள ஐரோப்பாவின் பல பகுதிகளிலும், ஜப்பானின் மூர்க்கத்தனத்துக்கு ஆளான சீனாவின் பெரும்பாகங்களிலும் உள்ள மக்கள் படுந்துயரை எண்ணுங்கால் நமது நெஞ்சம் கலங்குகிறது.

நமது சொந்த நாட்டிலே

நமது நிலை என்னவாக இருக்கிறது? நமது கண்முன் பல தேசங்கள் தம் சுதந்திரத்தைப் பறிகொடுத்து வருகின்றனவென்பது உண்மைதான். ஆனால், நாம் பறிகொடுக்க வல்லது நம்மிடம் என்னவிருக்கிறது? நம்முடைய சுதந்திரத்தை நாம் பிரிட்டனுக்குப் பறிகொடுத்துப் பல்லாண்டுகள் ஆயினவே! இப்போரிலே நமது நாடும் பிணைக்கப்பட்டுள்ளது. ஆனால் இதன் முடிவிலே நாம் இழக்கவல்லது ஒன்றுமில்லையே. அப்படியிருந்தும் பிரிட்டன் நம்முடைய உதவியைக் கேட்கிறது. இரக்கமுடன் கேட்கவில்லை. அதிகாரத்துடன் கேட்கிறது. நாம் சுதந்திர புருஷன் என்ற நிலையில் கேட்கவில்லை—அடிமை மனிதன் என்ற நிலையில் கேட்கிறது. நீ உதவாவிட்டால் இப்போதிருக்கும் இந்த நிலைமையிலும் மோசமாய்ப் போவாய் என்று பயமுறுத்தி நம்மைக் கேட்

கிறது. இப்போதாவது என்னிடம் சுதந்திரம் கேட்கும் தைரியம் உனக்கிருக்கிறது. நான் தோற்றுவிட்டால் சுதந்திரத்தைப்பற்றி உன் மனதிலும், கனவிலும் உன்னால் நினைக்கவும் முடியாதென்று பயமுறுத்திக் கேட்கிறது நம்மை பிரிட்டன்.

நமக்குச் சுதந்திரம் உண்டா?

சுதந்திர நாட்டில் நாம் பிறக்கவில்லை. அடிமைகள் வயிற்றில் நாம் ஜனித்திருக்கிறோம். நித்தமும் பல அடிமைகளைப் பெற்றெடுத்துக்கொண்டு மிருக்கிறோம். பிரிட்டனுடைய ஏவுதலின்மீது எழுதப்பட்டு, நமது பாடசாலைகளில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்களில் நம் முன்னோர்களின் வீரதீர பராக்கிரமச் செயல்கள் யாதொன்றும் விஸ்தரித்துக் கூறப்படவில்லை.

நமது மூதாதையர் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்திருந்தார்களாம்! தம்மில் சதா சச்சரவு செய்து கொண்டிருந்தார்களாம்! பிரிட்டன் இந்நாட்டுக்கு வரப்பிரசாதமாக வந்ததாம்! கிளைவும், வாரன்ஹேஸ்டிங்ஸும் மகா சூரர்களாம்! வீர பராக்கிரமத்துடன் நமது முன்னோர்களை முறியடித்து இந் நாட்டைப் பிடித்தார்களாம்! சிப்பாய்க் கலகத்தை அடக்கினார்களாம். ஹால்வெல் ஞாபகச் சின்னத்தை வைத்தார்களாம்! சிவாஜியைக் கொன்றார்களாம்! திப்புவை வெட்டித் துண்டாக்கினார்களாம்! கட்டபொம்முவைக் கழுவில் ஏற்றினார்களாம்! சச்சரவுகளை அடக்கினார்களாம்! நாட்டிலே சமாதானத்தை நிலைநாட்டினார்களாம்! சட்டங்கள் இயற்றினார்களாம்! சட்டசபை ஏற்படுத்தினார்களாம். ரயில் பாதை போட்டார்களாம். தந்தி தபால் நிலைநாட்டினார்களாம். ஆஸ்பத்திரிகள் அமைத்தார்களாம். கச்சேரிகள் நிறுவினார்களாம். போலீஸ் படையைத் திரட்டினார்களாம். பட்டம் பதவிகள் வழங்கினார்களாம். ராஜ விசுவாசிகளாக நம்மை ஆக்கினார்களாம். பிரிட்டனிலிருந்து வெள்ளைப்

பட்டாளங்களைக் கொண்டு வந்து இங்கு வைத்திருக்கிறார்களாம். சமஸ்தானாதிபதிகளுடன் உடன்படிக்கை செய்திருக்கிறார்களாம். வகுப்புத் தீர்ப்புக் கூறியிருக்கிறார்களாம். வெள்ளைக்காரர்கள் முதல் கொண்டுவந்து போட்டு நாட்டை வளப்படுத்தி வருகிறார்களாம். இவ்வாறாக நம்மையும், நமது நாட்டையும் பத்திரப்படுத்தி அமைதியாக ஆட்சி நடத்தி வருகிறார்களாம்!

பிரிட்டனிலிருக்கும் மன்னன் நமக்குச் சக்ரவர்த்தியாம், அவரை நாம் வணங்க வேண்டுமாம். நம்முடைய தலைவிதி பிரிட்டிஷ் பார்லிமெண்டிடம் இருக்கிறதாம். நமது நாட்டுத் தலைவர்கட்கு மதிப்பில்லையாம். பிரிட்டனுடைய கொடியை நாம் உயர்த்திப் பிடிக்கவேண்டுமாம். நமது நாட்டுக்குச் சொந்தக் கொடியில்லையாம். பிரிட்டனுடைய பாஷையை நாம் பயிலவேண்டுமாம். இல்லாவிட்டால் உத்தியோகமில்லையாம். பிரிட்டனிலிருந்துதான் வைசிராய் வரவேண்டுமாம்; கவர்னர்களும் வரவேண்டுமாம். இதர பெரிய அதிகாரிகளும் வரவேண்டுமாம். அவர்கள் எல்லோரும் கொக்குபோல வெள்ளை வெளேரென்று இருக்க வேண்டுமாம். அவர்கள் இட்டதே இந் நாடெங்கும் சட்டமாம். அதை மீறினால் நமக்குச் சிறைவாசமாம்!

பாதுகாப்புத் திறமைதானுண்டா?

நமது கைகளில் துப்பாக்கி இல்லை. அதைக் கொடுத்தாலும் அதைச் சுடும் திறமையில்லை. நமக்கு இராணுவப் பயிற்சியில்லை. சேர்க்கப்பட்டுள்ள சிறிய பட்டாளத்திலும் வகுப்பு பேதம். அதை நடத்தும் யோக்யதையும் நமக்கில்லை. நமது ராணுவத்தின்மீதோ, நமது வரிப்பணத்தினால் வாழும் வெள்ளைப் பட்டாளத்தின்மீதோ நமக்கு அதிகாரமில்லை. நமது நாட்டுப் பொக்கிஷத்தின்மீது நமக்கு உரிமையில்லை. நமது நாட்டுத் தற்காப்பில் நமக்குப் பங்கும் பாத்யதையும் இல்லை. நாம் எந்த நாட்டவருடன் உறவு

கொண்டாடலாம் என்று சொல்லமுடியாது. நாம் யாருடனும் போர் தொடுத்துச் செல்லவும் முடியாது. இந்தியாவை விட்டு வெளியே சுதாவில் போகவும் முடியாது.

போலந்தின்மீது ஜெர்மனி போர் தொடுத்த மாத்திரத்தில் இந்தியாவும் போரில் சேர்க்கப்பட்டதாக நம்மைக் கேளாமலே, நமக்குத் தெரியாமலே வைசிராய் முடிவு செய்து விட்டார். எட்டு மாகாணங்களில் பொறுப்புடன் இருந்த மந்திரிகள் கேட்டும் பயனில்லை. அவர்கள் ராஜீனாமாச் செய்தும் பயனில்லை. "நாய்கள் குரைத்தாலும் பொதி மாடுகள் போய்க்கொண்டுதானிருக்கும்" என்று முன்பொரு இந்தியா மந்திரி சொன்னமாதிரி இந்தியாவிலே எதேச்சாதிகார ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது.

தொழில் வளர்ச்சியுண்டா?

நமது நாட்டில் தொழில் வளர்ச்சியில்லை. உலகத்தின் இதர பாகத்திலுள்ள வல்லரசுகள் தமது நாட்டு இயந்திரப் பொருள்களை இங்கு தங்குதடையின்றிக் கொண்டுவந்து குவித்து, நமது கிராமக் கைத்தொழில்களுடன் இழிவான முறையில் போட்டியிட்டு, நமது தொழில்களை நாசம் செய்து, நம்மைத் தீய சோம்பலுக்கும் கொடிய வறுமைக்கும் ஆளாக்கிவிட்டார்கள்.

இன்று பிரான்சு தேசத்தை ஹிட்லர் ஒரு விவசாய நாடாக்க உத்தேசித்து விட்டார் என்பதைக் கேட்ட மாத்திரத்தில் பிரிட்டனில் உள்ளவர்கள் கூப்பாடு போடுகிறார்கள்.

"பிரான்சின் தொழில் வன்மையெல்லாம் பாழாவதா? வீரம் பொருந்திய பிரெஞ்சு மக்கள் ஜெர்மனியின் விறகு வெட்டிகளாகவும், தண்ணீர் சுமப்பவர்களாகவும் ஆகப் போகிறார்களா? ஜெர்மனியின் இயந்திரத் தொழில்கள் வளம்பெறும் பொருட்டு பிரான்சு ஒரு விவசாய நாடு என்ற நிலைக்குத் தாழப்போகிறதா?" என்றெல்லாம் பிரிட்டனில் உள்ளவர்கள் ஓலமிட்டார்கள்.

பிரான்சுக்கு இனி நேரவிருக்கும் அக் கதி நமக்கு நேர்ந்து வருஷங்கள் நூற்றைம்பதுக்கு மேலாகி விட்டனவே. இந்தியா ஒரு விவசாய நாடென்பதாகப் பிரிட்டன் ஓயாது பறைசாற்றி வந்ததையும் வருவதையும் நாம் மறந்து விடவில்லையே.

இந்தியாவில் தொழிற்சாலைகளமைக்க வேண்டுமென்ற மாத்திரத்தில் பிரிட்டனிலுள்ளவர்கள், அது பொருளாதார மதியீனமென்று நமக்குப் புத்தி சொல்லுகிறார்களே. இயந்திரம் வைத்து தொழில் செய்ய ஆரம்பித்துவிட்டீர்களானால் உங்கள் மூலப் பொருட்களை யார் வாங்குவார்கள்? உங்கள் குடியானவர்களின் கதி என்னாவது என்றெல்லாம் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்களே. இந்தியாவுக்குத் தொழிற் திட்டங்கள் இதுகாறும் வகுக்கவில்லையே. விவசாயக் கமிஷன் தானே வந்தது! விவசாயத்தில் சிரத்தையுள்ள வைசிராய் பொலிவுக் காளைகளைப் பெருக்குவதில் அல்லவா முனைந்திருக்கிறார்!

இந்தியா வெறும் சந்தையா?

இங்கு விளையும் மூலப் பொருட்களை இங்கேயே பயன்படுத்திக்கொள்ள யாதொரு முயற்சியுங்காணோம். ஆதரவும் அனுசரணையும் இல்லை. விளைந்த பொருட்களை வாங்கிச் செல்ல இந்தியா, பிரிட்டனுக்கும் இதர நாடுகட்கும் ஒரு பண்ணையாக இருந்து வருகிறது. அந்நாடுகளில் வேலைசெய்து முடித்த பண்டங்களை மீண்டும் இங்கு கொண்டு வந்து விற்பதற்கு இந்தியா ஒரு நல்ல சந்தையாகவும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவின் ஏற்றுமதி (தங்கம் உள்பட) இறக்குமதி விவரங்களை இந்தியா கவர்ன்மெண்ட் வெகு அக்கறையுடன் பிரசுரித்து மிச்சங் காட்டி வருகிறது. இந்நாட்டில் வேலையற்றவர்களுக்கு வேலையும் தொழிலும் தேடிக் கொடுக்க நாளிதுவரையிலும் யாதொரு முயற்சியுங் காணோம்.

இந்தியாவில் ஒரு சைக்கிள் செய்ய வசதியுண்டா? ஒரு மோட்டார் கார் செய்யப்பட்டதுண்டா? ஒரு சிறிய கெடிகாரமாவது செய்ததுண்டா? எத்தனை கலைகள், எத்தனை தொழில்கள், நித்தமும் வளர்கின்றன மேற்கே! இந்தியாவில் நாம் ஒரு குண்டூசிக்கும் அந்நிய தேசத்தையே எதிர்பார்க்க வேண்டிய நிலைமையில் இருந்து வருவது நமக்கு கேவலமில்லையா? நம்முடைய இத்தகைய நிலைமைக்குக் காரணபூதமாகவுள்ள பிரிட்டனுக்கு வெட்கமில்லையா? நாம் சுதந்திரமின்றி, சுயராஜ்யமின்றி, அதிகாரமின்றி, அந்நியரின் கீழ் ஆண்மை குன்றி, அடிமைகளாய், வறுமையில் வாடியவர்களாய், ஆயுதமற்ற கோழைகளாய் வாழ்ந்து வருவதில் நமக்கு அவமானமில்லையா? பிரிட்டனுக்கு இந்தப் போரில் நாம் உதவினால் இக்குறைகளனைத்தையும் ஒருங்கே தீருமா?

நமக்குச் சுதந்திரம் கொடுக்க—அல்லது இந்தியா மந்திரியாய் இருக்கும் மிஸ்டர் அமெரி கூறியதைப் போல் சுதந்திரத்தை பிரிட்டன் கையிலிருந்து பறிக்க—பிரிட்டனுக்கு மனமில்லாதிருக்கும்போது நாம் எதற்காக இந்தப் போரில் இறங்க வேண்டும்? நமக்குச் சுதந்திரம் இருந்தால் அல்லவோ, அதனைப் பாதுகாக்க நமது உடலையும், பொருளையும், உயிரையும் தந்து போராடலாம். இரு கண்களுமற்ற குருடனுக்கு இருள் பகலானாலென்ன? பகல் இருளானாலென்ன? சுதந்திரமற்ற அடிமைகளின் நாட்டில் நாய்கள் புகுந்தாலென்ன? மாடுகள் போனாலென்ன?

நாமும் போராடுவோம்

எல்லோரும் தத்தம் சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருக்கையில் நாமும் நமது சுதந்திரத்துக்காகப் போராடியே தீரவேண்டும். நம்முடைய சுதந்திரத்துக்கு யார் தடையாய் இருக்கிறார்களோ அவர்களுடன் நாம் போர் தொடுத்தே தீரவேண்டும். இப்படிச் செய்ய நமது பலத்தை நாம் உணரவேண்டும். நமது பலத்தை நமது எதிரிகள்

உணருமாறும் செய்யவேண்டும். நமது சிந்தனையில் நமது அடிமை நிலை சதா இருந்து, நம்மை உறுத்திக்கொண்டே இருக்கவேண்டும். உலகத்திலுள்ள சகல வியாதிகட்கும் தலையாய வியாதி அடிமை நிலை என்பது. உலகத்திலுள்ள சகல துன்பங்கட்கும் தலையா யதுன்பம் அடிமை நிலை என்பது. உலகத்திலுள்ள சகல அவமானங்கட்கும் தலையாய அவமானம் அடிமை நிலை என்பது. உலகத்திலுள்ள சகல கொடுமைகளுக்கும் தலையாய கொடுமை அடிமை நிலையே யாகும்.

இன்று பிரிட்டன் இக்கொடுமையினின்று தன்னையும் தன் தேச மக்களையும் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு வெகு உக்கிரமாகப் போராடி வருகிறது. பிரிட்டனுடைய உதாரணத்தைப் பின்பற்றி நாமும் போராடியே தீரவேண்டும்.

ஆனால் யாருடன்?

இக்கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு பிரிட்டனிடமே இருக்கிறது.

போதும் இந்த அடிமை நிலைமை

நமது தேச பக்தியை பிரிட்டனால் அடக்க முடியாது. ஒருகால் ஹிட்லரால் முடியுமோ என்னவோ எனக்குத் தெரியாது. சுதந்திரத்தை விழையும் பிரிட்டனால் நமது சுதந்திர தாகத்தை ஒடுக்க முடியாது. நமது நாடும் பிரிட்டனைப் போலவே சுதந்திர நாடாக இவ்வுலகிலே இன்றே, இப்பொழுதே, இக்கணமே திகழவேண்டும் என்று நமக்குள்ள ஆர்வத்தை, விருப்பத்தை, மனோதிடத்தை, பிரிட்டனால் அசைக்க முடியாது. நமது உயிரை ஈந்தேனும் நமது மூதாதையர் இழந்த சுதந்திரத்தை நாம் மீட்டே தீருவோம். நம்முடைய இந்த வைராக்கியத்தை பிரிட்டனால் நசுக்க ஒரு போதும் முடியாது. நாம் சுதந்திர சபதம் எடுத்துக் கொண்டுவிட்டோம். இப்போது நடைபெறும் ஹிட்லரின்

யுத்தம் முடியுமுன்பே நாம் சுதந்திரம் அடைந்தே ஆக வேண்டும். அதனையடைய முடியாவிடில் நாம் அழிந்தேனும் போவோம். அடிமைகளாய் இனி அரைக்கணமும் உயிர் வாழமாட்டோம். சொல்லுங்கள் வந்தே மாதரம்!

பிரிட்டனுடைய கவலை

இன்று பிரிட்டன் ஜெர்மனியுடன் போர் புரிந்து கொண்டிருக்கிறது. இப்போரில் வெற்றி பெறத் தனது கப்பற் படைகளையும், ஆகாயப் படைகளையும், இதர இயந்திர சாதானங்களையும், உணவுப் பொருட்களையும், பிரிட்டன் பிரமாதமாக நம்பிக்கொண்டிருக்கிறது. ஆனால், இவைகளைக் கொண்டு மட்டும் பிரிட்டன் இந்த யுத்தத்தில் வெற்றிபெற எண்ணவில்லை. அமெரிக்காவிலே ரூஸ்வெல்ட் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதிலும் பிரிட்டன் அக்கறை காட்ட வேண்டியிருக்கிறது.

இந்தியாவைத் தன் ஆதீனத்திலிருந்து இழந்துவிடப் பிரிட்டன் தயாராக இல்லை. இந்தியா தனக்கு நண்பனாக மட்டும் இருந்தால் பிரிட்டனுக்குப் போதாது. இந்தியா தனக்கு அடிமையாகவே இருக்கவேண்டும் என்பதையே பிரிட்டன் விரும்புகிறது. பிரிட்டன் ஒருகால் இந்த யுத்தத்தில் தோற்றால் ஹிட்லர் இங்கிலாந்தை அரசாளப் போவதில்லை. ஆனால், இந்தியாவைத் தனக்குத் தந்துவிடும்படி நிச்சயமாகக் கேட்பான். அந்த நிலைமை ஏற்படக்கூடாதென்பதற்காகவே பிரிட்டன் இன்று தனது சுதந்திரத்தையும் பணயமாக வைத்துப் போராடத் துணிந்துள்ளது. அப்பேர்ப்பட்ட பிரிட்டன் இந்தியாவை இலேசில் தனது பிடிப்பிலிருந்து விட்டுவிடும் என்று யாரும் எண்ணிவிட முடியாது. பிரிட்டனின் அருகிலுள்ள அயர்லாந்தே திண்டாடித் திண்டாடித் தவிக்கும்போது இந்தியா பிரிட்டனுக்கு எம்மாத்திரம்?

ஆனால், இப்போரிலிருந்து பிரிட்டன் தன்னைக் காத்துக் கொள்ள ஒரே வழிதானுண்டு ஹிட்லரைத் தோற்கடிக்கவும் ஒரே வழிதானுண்டு. உலகிலே இனிப் போரே நிகழாதவாறு செய்யவும் ஒரே வழிதானுண்டு. அவ்வழி இதுதான்! இந்தியாவை பிரிட்டன் உடனே விட்டுவிடவேண்டும். இந்தியா பிரிட்டனுக்கு அடிமையாக இருக்கும் ஒவ்வொரு நாளும் பிரிட்டன் இப்போரிலே தோற்கும் நாளாகும் என்று நாம் பிரிட்டனை அன்புடன் எச்சரிக்கை செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இவர்கள் ஏன் கூத்தாடுகிறார்கள்?

இந்தியாவின் சுதந்திரத்தை பிரிட்டன் ஒப்புக்கொண்டு அதற்கு முதற்படியாக மத்திய சர்க்காரின் நிர்வாகத்தை பொறுப்புள்ள மந்திரிகளின் கையில் ஒப்படைக்கவேண்டுமென்றும், அவ்வாறு செய்தால் இந்தியாவின் தற்காப்பு விஷயத்தில் சகல முயற்சிகளையும் இந்தியர் மேற்கொள்ள முடியுமென்றும் பொருள் செறிந்த தீர்மானத்தை காங்கிரஸ் சமீபத்தில் நிறைவேற்றியுள்ளது நீங்கள் அறிந்ததேயாகும்.

இதைக் கண்ணுற்ற இந்நாட்டிலுள்ள சில ஆங்கிலப் பத்திரிகைகள் இந்தியாவின் பாதுகாப்பைப்பற்றித்தான் தீர்மானத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதே தவிர, பிரிட்டனுக்கு உதவுவதாக யாதொன்றுங் கூறவில்லையே என்பதாகக் கூத்தாடின. யுத்த விஷயத்தில் நடுநிலைமை வகிக்கக்கூடிய ஒரு மந்திரிசபையை அமைக்க இணங்குவது ஆபத்தாக முடியுமென்று வைசிராய்க்கு துர்ப்போதனையும் செய்யத் தொடங்கின. இந்த அற்ப சந்தேகத்தைப் போக்கி, பிரிட்டனுக்கும் உதவத்தான் போகிறோமென காங்கிரஸ் தலைவர் அறிக்கை வெளியிட்ட பின்னர், இப்பத்திரிகைகள் வாய் திறக்கவில்லை.

ஆனால், இந்நாட்டிலுள்ள வெள்ளையர்களின் பிரதிநிதியான மிஸ்டர் எப், இ. ஜேம்ஸ் என்பார், வழக்கம்போலத்

தனது இறுமாப்பான கருத்தை வெளியிட்டுவிட்டார். இந்தியா சுதந்திரம் கோரலாகுமா என்கிறார் இந்த வெள்ளையர் பெருமான்! மத்திய அரசாங்கத்தில் பொறுப் பாட்சி கேட்பது எவ்வளவு புரட்சிகரமான பேச்சு என்றும் தன் வாயைப் பிளக்கிறார் அதே கனவான். இவ் வெள்ளையர் கள் இவ்வாறு எழுதியும், பேசியும் வருவது நமது ரோஷத்தை அதிகப்படுத்துவதாகவே இருக்கிறது.

ஜின்னாவின் சீற்றம்

வெள்ளையர் நிலைமை இவ்வாறுயிருக்க, நமது இந்திய முஸல்மான்—மிஸ்டர் ஜின்னா—தான்தோன்றித் தலைவர் பெருமான், டில்லித் தீர்மானத்தைப் பார்த்ததும், "அரே! தேசீய சர்க்கார் என்பது ஹம்பக், அது இந்து மெஜாரிட்டி யில் கொண்டுபோய்விடும். நம்பள்கி பக்கிஸ்தான் தான் சரி" என்பதாக ஒரு அறிக்கை விடுத்திருந்ததையும் நீங்கள் பார்த் திருப்பீர்கள். இந்து மெஜாரிட்டிக்குப் பதிலாக முஸ்லீம் மெஜாரிட்டி ஏற்பட்டுவிட்டால் அதுவும் முஸ்லீம் லீகர் களின் மெஜாரிட்டி ஏற்பட்டுவிட்டால், அப்போது அது தேசீய மந்திரிசபை ஆகிவிடும் என்பது இவரது கருத்துப் போலும்!

ஒரு தேசத்தில் உள்ள ஜனங்களில் ஒரு சாரார் தங்கள் மதத்தின் பேரால் எப்படி மெஜாரிட்டியாக இருந்து ஆட்சி செய்யமுடியுமென்பது நமக்குத் தோன்றவில்லை. அரசியல் திட்டங்கள், வேலை முறைகள், அனுஷ்டானங்கள் ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டு உலகெங்கும் அரசியல் கட்சிகள் அமைக்கப்படும் இக்காலத்தில், மிஸ்டர் ஜின்னா மதத்தை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி செலுத்த ஆசைப்படுவது எவ்வளவு பேதமை!

இங்கிலாந்திலே மதவாரியாகப் பார்க்கும் போது கத்தோலிக்கர்களும், பிராட்டஸ்டண்டுகளும், யூதர்களும்

இருக்கிறார்கள். சாதிவாரியாகப் பார்க்கும்போது இங்கிலீஷ்காரர்களும், ஸ்காட்லாந்து வாசிகளும், வெல்ஸ்காரர்களும் இருக்கிறார்கள். ஆனால், இவர்கள் மதத்தின் பேராலோ, சாதியின் பேராலோ, மொழியின் பேராலோ பிரிந்து நின்று கட்சிகள் வகுத்துக் கொள்ளவில்லை. கன்சர்வேடிவ்கள், லிபரல்கள், தொழிலாளிகள், கம்யூனிஸ்டுகள் என்பதாக சமுதாயக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, கட்சிகளமைத்து, தேர்தலில் போட்டியிட்டு, ஆட்சி நடத்தி வருகிறார்கள்.

இன்று பிரிட்டனின் நிர்வாகத்தை இக்கட்சியனைத்திலு முள்ளவர்கள் ஒன்றுகூடி மந்திரிசபையமைத்து நடத்துகிறார்கள். இந்த சபை பிரிட்டிஷ் பார்லிமெண்டுகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இருந்து வருகிறது.

இந்தியாவிலும் இதைப்போலவே சர்வகட்சிகளும் அடங்கிய ஒரு தேசிய சர்க்காரை ஏற்படுத்தவேண்டுமென்றே காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானம் கூறிற்று. இதனை இந்து மெஜாரிட்டியென ஜின்னா குறைகூறியது எவ்விதம் பொருந்தும்?

இதுவா இஸ்லாம் போதிக்கும் வேதம்?

ஜின்னாவின் பொருத்தமற்ற சந்தேகத்தை விளக்கி காங்கிரஸ் தலைவர் மௌலானா அபுல் கலாம் ஆஸாத் ஜனாப் ஜின்னாவிற்கு ஒரு தந்தி அனுப்பியிருந்ததையும் நீங்கள் அறிவீர்கள். அந்தத் தந்திக்கு ஜின்னா அனுப்பிய பதில் தந்தி அவருடைய அந்தஸ்திற்குச் சிறிதும் ஏற்றதாக இல்லை. யாதொரு கல்வி வாசனையும், நற்குண நற்செய்கையும், நற்குடிப் பிறப்பும், நல்லவர்களது கூட்டுறவும் இல்லாத ஒரு காட்டுமிராண்டி எவ்வாறு பேசுவானோ, அவ்வாறே இருந்தது மாபெருந்தலைவரெனப்படும் ஜின்னாவின் தந்தி. இப்பேர்ப்பட்ட சாதாரண லௌகீகமற்ற ஜின்னாவா இந்த

நாட்டையும், நமது ரத்தக் கலப்புள்ள இந்திய முஸ்லீம்களை யும் கரையேற்றப் போகிறார்? இவ்வாறு முறை தவறிப் பேசு வதுதானா அவர் சத்திய இஸ்லாமியத்திலிருந்து கற்றுக் கொண்ட வேதம்?

இவர் யாராய் இருக்கலாம்?

ஜனப் ஜின்னாவின் இந்த மூர்க்கத்தனத்தைக் கண்டு நாம் எவ்விதமான முடிவுக்கு வரவேண்டியவர்களாய் இருக் கிறோம்? இந்தியாவின் மாபெருந் தேசீய சபையின் தலைவரா கிய அறிஞர் அப்துல் கலாம் ஆஸாதுடன் யாதொருவிதமான பேச்சு வார்த்தையும் தான் நடத்தத் தயாராகவில்லையெனக் கூறும் இவர் யாராய் இருக்கக்கூடுமென்ற சந்தேகம் நம்முள் இயற்கையாகவே ஜனிக்கிறது. இவர் இத்தேசத்தின் சுதந் திரத்துக்குப் பரம சத்ருவாகவேதானிருக்க முடியும். வேறு விதமாய் இருக்கமுடியாது. இப்பேர்ப்பட்ட மேதாவியுடன் காங்கிரஸ் சமரசமாகப் போகவேண்டுமென பிரிட்டன் நம்மை இடித்துக் கொண்டிருப்பதன் கருத்துத்தான் என்ன? பிரிட்டனைப் பார்த்து, ஹிட்லருடன் சமாதானமாகப் போவென இன்றைய தினம் அமெரிக்கா சொல்லுமானால், அதன்பின்னே எவ்விதமான கருத்துகள் தொனிக்குமோ, அதற்கும் ஜின்னாவுடன் நாம் சமரசமாய்ப் போகுமாறு பிரிட்டன் சொல்லுவதற்கும் அதிக பேதம் இல்லை.

ஜின்னாவுக்கும் காங்கிரசுக்கும் இடையேயுள்ள பேதம் என்ன?

காங்கிரசுக்கும் ஜின்னாவுக்குமிடையே மலைக்கும் மடுவுக் கும் போன்ற வித்தியாசமிருந்து வருகிறது. காங்கிரஸ் இந்தியாவை ஒரு தேசம என்கிறது. ஜின்னா இந்தியா ஒரு தேசமல்ல என்கிறார். காங்கிரஸ் இந்தியர்களனைவரும் ஒரே தேசத்தினர் என்று சொல்லுகிறது. ஜின்னா இந்தியாவில் பல தேசத்தினர் இருப்பதாகச் சொல்லுகிறார். இந்துக்களும்

முஸ்லீம்களும் ஐக்கியமாக வாழவேண்டுமெனக் கூறுகிறது காங்கிரஸ். இந்துக்களும், முஸ்லீம்களும் ஒரு நாளும் சேர்ந்து வாழ முடியாதென்று கூறுகிருர் ஜின்ஞ.

இந்தியாவனைத்துக்கும் சுதந்திரமும், பொதுவான அரசியலமைப்பும், நிர்வாக ஒற்றுமையும் வேண்டுமெனக் கேட்கிறது காங்கிரஸ். இந்தியாவை இரண்டாகத் துண்டுபோட்டு முஸ்லீம் ராஜ்யம், இந்து ராஜ்யம் என்பதாகப் பிரிக்க வேண்டும் என்று சொல்கிருர் ஜின்ஞ.

இந்திய மக்களின் பிரதிநிதிகளாலே இந்தியாவின் அரசியல் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமெனக் கூறுகிறது காங்கிரஸ். இந்திய மக்களுக்குள்ள இந்தப் பிறப்புரிமையை ஆட்சேபிக்கிருர் ஜின்ஞ.

இந்திய முஸ்லீம்களில் பல்வேறு வகுப்பினர் ஜின்ஞவை எதிர்த்துங்கூட, தான்தான் இந்தியாவிலுள்ள எட்டுக்கோடி முஸல்மான்களுக்கும் ஏகப்பிரதிநிதி என்கிருர் அவர். தானே சர்வாதிகாரியெனவுங் கூறுகிருர். ஜனநாயகம் என்ற பேச்சைத் தன் காதால் கேட்கவும் கூடாதென்கிருர். தன்னைக் கேளாமல் இந்தியாவுக்கு எத்தகைய அரசியல் சீர்திருத்தமும் பிரிட்டன் வழங்கக்கூடாதென்கிருர். சுதந்திரம் என்ற வார்த்தையை நஞ்சாக எண்ணுகிருர்.

இப்படிப்பட்ட ஜின்ஞவுடன் சமரசப் பேச்சுக்கள் எந்த தேசபக்தனுலாவது நடத்தமுடியுமா என்பதை நீங்களே ஆலோசித்துப் பாருங்கள்! இந்தியாவை அந்நியர்களே ஆள வேண்டுமென்ற கொள்கையுடைய ஐந்தாம் படை வீரர்களான ராமசாமி நாயக்கர், கலிபுல்லா சாயபு, செட்டிநாட்டு முத்தையா, எம், சி. ராஜா, எ. பி. பாத்ரோ போன்றவர்களால்தான் ஜின்ஞவுடன் கொஞ்சிக் குலாவமுடியும். தேசத் துரோகிகளின் கூட்டத்துக்குத்தான் ஜின்ஞ மாபெருந் தலைவராகவிருந்து எதேச்சாதிகாரம் செலுத்த முடியும்

ஜின்னு இல்லாமலேயே, நாம் நமது சுதந்திரத்தைப் பெற்றாகவேண்டும்.

வரப்போகும் போராட்டம்

இந்தியாவிலே விரைவிலே போராட்டம் நடைபெறப் போகிறது. சுதந்திரத்துக்கும் அடிமைத்தனத்துக்கு மிடையே அப்போராட்டம் நடைபெறும். இந்நாட்டின் சுதந்திரத்தை — அப்பழுக்கற்ற பரிபூரண சுதந்திரத்தை— வேண்டுபவர்கள் எல்லாம் ஒரு கட்சியாகச் சேரப்போகிறார்கள். அவர்கள் காங்கிரஸில் சேர்ந்தவர்களாய் இருக்கலாம், அல்லது சேராதவர்களாயுமிருக்கலாம். இந்தியாவின் அடிமைத்தனத்தை விரும்புகிறவர்களெல்லாம் எதிர்க்கட்சியாகக் கூடப்போகிறார்கள். அதில் இந்நாட்டை ஆளுகிறவர்களும் ஆளப்படுகிறவர்களும் கலந்திருக்கலாம். உண்மையான போராட்டம் இனிமேல் நடக்கப்போகிறது. சுதந்திரக் கட்சிக்கு அகிம்சையும் சத்தியமும் ஆயுதமாகவிருக்கும். அவர்களுக்குச் சண்டையில் சன்மானமாக ஜின்னு போன்றவர்களிடமிருந்து வசவுகள் கிடைக்கும். அவருடைய ஐந்தாம் படை வீரர்களிடமிருந்து அடியும் உதையும் கிடைக்கும். லட்டிகளாலும், கத்திகளாலும் தாக்கப்பட்டு, சுதந்திர வீரர்கள் தங்கள் உயிர் துறக்க நேரிடும். அடிமைத்தனத்தை ஆதரிப்பவர்களுக்குச் சன்மானப் பட்டங்கள் கிடைக்கும். பதவிகள் கிடைக்கும். கொழுத்த சம்பளம் பெறும் உத்தியோகங்கள் கிடைக்கும். பக்கிஸ்தான், தமிழிஸ்தான் போன்ற திட்டங்கள் கிடைக்கும். பிரிட்டனுடைய ஆதரவும் சபாஷ் பட்டமும் கிடைக்கும்.

சோதனை காலம்

இந்தியாவின் சோதனைக் காலம் வரப்போகிறது. இந்தியர்கள் உடனே இரண்டு கட்சிகளாகப் பிரிந்துவிடவேண்டும். சாதியின் பேராலும் சமயத்தின் பேராலும் கூச்சலிடும் தேசத் துரோகிகளனைவரும் சாதி சமயங்களைத் தூர எறிந்து

விட்டு, இந்தியாவின் சுதந்திர தாகத்தையடக்க ஒன்று சேரப் போகிறார்கள். முஸ்லீம் ஜின்னாவும், நாஸ்திக நாய்க்கரும் ஒன்று சேரப் போகிறார்கள். வடக்கேயுள்ள முல்லாவும், தெற்கேயுள்ள சகுதனியும் கூடிக் குலாவப் போகிறார்கள். மதத்துக்கு ஆபத்து, சாதிக்கு ஆபத்து என்பதாகப் பொய்க் கூச்சலைக் கிளப்பிக் கொண்டு, தங்கள் பக்கவில் கக்ஸார்களையும், சம்மட்டி, மம்மட்டிகளையும் படைதிரட்டப் போகிறார்கள். ஹிட்லரைப் போன்று துள்ளியெழப் போகின்றார்கள்.

பழைய கோட்டைப் பட்டக்காரர்

இங்கிலாந்திலே சுதந்திரத்துக்காகப் போராடும் பிரிட்டன் இந்தியாவிலே இப்படியெல்லாம் சுதந்திர தாகத்தை எப்படி அடக்கமுடியும் என்பதாக யாரேனும் சந்தேகமுறலாம். அத்தகையவர்களுக்கு என்னுடைய ஜில்லாவிலே நடந்த ஒரு ருசிகரமான சம்பவத்தைச் சொல்லுகிறேன்.

சென்ற சட்டசபைத் தேர்தலின்போது பழைய கோட்டைப் பட்டக்காரர் என்பவர் காங்கிரஸுடன் போட்டியாக நின்றார். இவர் கொங்கு வேளாள சமூகத்தின் தலைவர். சுமார் மூவாயிரத்துக்கு மேற்பட்ட பசுக்களை வைத்துக் காப்பாற்றும் புண்ணியசாலி. கள்ளங்கபடமற்ற குடியானவர். யாருடனும் சண்டை சச்சரவு, வம்பு வழக்குகளுக்குப் போகாதவர். கோவை ஜில்லாவிலே நல்ல செல்வாக்குள்ளவர். இப்பேர்ப்பட்டவரை தேர்தல் சனியன் பிடித்தது. அதுவும் காங்கிரஸுக்கு எதிராக.

இவருடைய தொகுதியில் காங்கிரஸ் கூட்டங்கள் நடைபெற வொட்டாமல் இவருடைய ஆட்கள் — இவருக்குத் தெரிந்தோ தெரியாமலோ — தப்பட்டை கொட்டினார்கள். கொம்புகள் ஊதினார்கள், காங்கிரஸ் தொண்டர்களை வைதார்கள். அடித்தும் உதைத்தும் இம்சை செய்தார்கள்.

என்ன செய்தும் இறுதியில் பட்டக்காரர் படுதோல்வி யுற்ருர் என்று நான் சொல்லவும் வேண்டுமோ?

ஆனல் இதுவல்ல நான் சொல்லவந்த விஷயம். தமது தொகுதியில் காங்கிரஸுக்கு எதிராக நின்று போராடிய அதே பட்டக்காரர், மற்ருெரு தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராக நின்றவருக்குத் துணை செய்யும்படி தமது ஆட்களை யனுப்பினர்; வண்டி வாகனங்களையும் கொடுத்து உதவினர். பட்டக்காரர் தொகுதியில் பச்சைப் பெட்டிக்கு ஜே! போட்ட அதே பட்டக்காரரின் ஆட்கள், பல்லடம் தொகுதிக்கு வந்து மங்களகரமான மஞ்சள் பெட்டிக்கு 'ஜே' என்ருர்கள்!

இது மிகவும் விசித்திரமாகத் தோன்றவில்லையா?

பிரிட்டனின் நிலைமை

இதே விதமான விசித்திரமான நிலைமையில்தான் பிரிட்டனும் இருந்து வருகிறது. பிரிட்டனிலே சுதந்திரத்தைப் பற்றி வானளாவப் பேசும் பிரிட்டன், இந்தியாவிலே அடிமைத்தனத்தை அகற்றத் தயங்குகிறது. பிரிட்டனிலே ஒரு நாட்டைப் பிறநாடு ஆக்கிரமிக்கக் கூடாது, என்று சொல்லும் பிரிட்டன், இந்தியாவிலே தனக்குள்ள ஆக்கிரமிப்புக் கொள்கையை விடமாட்டேன் என்கிறது. பிரிட்டனிலே சர்வாதிகார ஆட்சியை ஆட்சேபித்து ஜனநாயகம் பேசும் பிரிட்டன், இந்தியாவிலே சர்வாதிகாரத்தை அனுக்கிரஹித்து ஜனநாயக மந்திரிகளைத் துரத்திவிட்டது. பிரிட்டனிலே பேச்சு சுதந்திரத்தையும், பத்திரிகைகளின் அபிப்பிராயத்தையும் காப்பாற்றும் பிரிட்டன், இந்தியாவிலே அடக்கு முறைகளைக் கையாளுகிறது. பிரிட்டனிலே கட்சி பேதங்களைத் தொலைவில் வைத்துவிட்டு தேசிய சர்க்காரி அமைத்துள்ள பிரிட்டன், இந்தியாவிலே கட்சி பேதங்களுக்குத் தூபங்காட்டி வருகிறது. இது பிரிட்டனுடைய பட்டக்காரர் கொள்கையாகும்.

பிரிட்டனுடைய இவ் விசித்திரக் கொள்கைக்கு அத்தாட்சியாக லார்டு ஹாலிபாக்ஸின் பேச்சிலிருந்து சில பாகங்களை ஈங்கு ஆராய்வோம்:

ஹாலிபாக்ஸின் அலறல்

சென்ற மாதம் ஹிட்லர், "இனி எதற்காகப் போராட வேண்டும்? சமாதானமாகப் போனால் என்ன?" என்று கேட்டான். அவனுக்குப் பதில் கூறுமுகத்தான் லார்ட் ஹாலிபாக்ஸ் லண்டன் ரேடியோ மூலம் பேசினார். அப்பேச்சில் பிரிட்டனுடைய பட்டக்காரர் கொள்கை நன்கு புலனாகிறது. இந்தியாவின் சுதந்திரத்தைப் பற்றி மௌனம் சாதிக்கும் பிரிட்டன், ஹாலிபாக்ஸ் மூலமாக இங்கிலாந்திலே பேசுவதைக் கேளுங்கள்:

"சரணாகதி அடையும்படி ஹிட்லர் பிரிட்டனை அழைத்திருக்கிறார். யுத்தம் ஆரம்பமானதுமுதல் நடந்த ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சியையும் பற்றி உண்மைக்கு மாறாக ஹிட்லர் பேசியிருப்பதை விவரித்து நான் காலத்தை வீணாக்கப்போவதில்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை நாசம் செய்யத் தாம் விரும்பவில்லையென்று அவர் கூறுகிறார். ஆனால், அவரது பேச்சில், சமாதானம் நியாயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென்பது குறிப்பிடப்படவுமில்லை. ஐரோப்பாவிலுள்ள இதர நாடுகளுக்கு சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து ஒரு வார்த்தை கூறவில்லை. ஜெர்மனிக்காக அந்த உரிமையை அடிக்கடி வற்புறுத்தும் ஹிட்லர் இதர ஐரோப்பிய நாடுகள் விஷயத்தில் மௌனமாகவிருக்கிறார். பயத்தை உண்டு பண்ணுவது மட்டுமே அவரது ஒரே முயற்சியாகவிருக்கிறது. அவரது வாதங்கள் மிரட்டல்களே தவிர வேறல்ல. அவர் ஏதோ சாக்குபோக்குகளின் பேரில் அடிமைப்படுத்திய நாடுகளின் எதிர்காலத்

தைப்பற்றி மௌனம் சாதிப்பதே விசேஷம் வாய்ந்ததாகும்."

இவ் வார்த்தைகள் எவ்வளவு அழகாகவும் அர்த்த புஷ்டி நிறைந்ததாகவும் இருக்கிறதென்று பாருங்கள். பிரிட்டனையும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையும் நாசம் செய்யத் தாம் விரும்பவில்லையென்று ஹிட்லர் சொல்லியுள்ளது போதாது, ஐரோப்பாவிலுள்ள இதர நாடுகளின் சுயநிர்ணய உரிமையையும் ஹிட்லர் அங்கீகரிக்க வேண்டுமென்பதாக ஹிட்லருக்கு ஹிதோபதேசம் செய்யும் பிரிட்டன், இந்தியா விஷயத்தில் இந்த நியாயத்தை ஒப்புக்கொள்ள ஏன் மறுக்கிறது? ஹிட்லர் இவ் விஷயத்தில் மௌனம் சாதிப்பதாகச் சொல்லும் பிரிட்டன், இந்தியா விஷயத்தில் ஏன் மௌனம் சாதித்து வருகிறது?

ஹிட்லர் ஏதோ சாக்குப்போக்குகளின் பேரில் அடிமைப் படுத்தியுள்ள நாடுகளை அவனது பிடிப்பிலிருந்து விடுவித்து சுதந்திர நாடுகளாகக் காணவேண்டுமென்பதையே தனது யுத்த லட்சியமாக உலகினர் முன் பறைசாற்றி வரும் பிரிட்டன், இந்தியாவை அதன் 40 கோடி மக்களின் விருப்பத்துக்கு மாறாக ஏன் இன்னும் அடிமைப்படுத்தி வைத்துக் கொண்டிருக்க வேண்டும்? இந்தியாவுக்கு உடனே சுதந்திரம் கொடுக்காவிட்டாலும் இந்தியாவுக்கும் சுயநிர்ணய உரிமையுண்டு என்று வாயினுல்கூட ஒரு வார்த்தை சொல்ல ஏன் அஞ்சவேண்டும்?

ஹிட்லரை பிரிட்டன் தூக்கிப் பார்க்கும் அதே தராசில் பிரிட்டனை இந்தியா தூக்கிப் பார்க்க முடியாது என்பது பிரிட்டனின் எண்ணமா? ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுந்தான் சுதந்திரமும் சுயநிர்ணய உரிமையுமா? இந்தியா இவ்வுலகில் இல்லையா? இந்தியர்கள் மனிதர்கள் இல்லையா? சுதந்திரத்துக்குத் தகுதியில்லாத பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் "பறையர்களா" நாம்?

ரூஸ்வெல்ட்டும், ஸ்மட்சும்தானு உலகில் பெரியவர்கள்?

மேலும் லார்டு ஹாலிபாக்ஸ் பேசியுள்ளதைக் கேளுங்கள் :

"ஐரோப்பாவில் ஹிட்லர் அடிமைப்படுத்தி சுதந்திரத்தைப் பறித்த நாடுகள்மீது ஜெர்மனி ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்பதே அவரது நோக்கம். தேசங்கள் எவ்விதமிருக்கவேண்டுமென்று நாம் விரும்புவதிலுள்ள நமது நோக்கமும், பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட், ஜெனரல் ஸ்மட்சும் விவரித்துள்ளதற்கு ஒத்ததாக விருக்கிறது. இந்த நமது நோக்கமும் ஹிட்லரின் நோக்கமும் வெவ்வேறானவை."

ஹாலிபாக்ஸ் கண்களுக்கு ரூஸ்வெல்ட்டும், ஸ்மட்சும் தான் இந்த உலகிலே பெரிய மனிதர்களாகத் தென்படுகிறார்கள். ஏனெனில், சுதந்திர அமெரிக்காவின் தலைவரென்ற ஹோதாவில் ரூஸ்வெல்டினுடைய சகாயம் பிரிட்டனுக்கு வேண்டும். இந்த யுத்தத்தில் நடுநிலைமை வகிக்கவேண்டுமென்று கூச்சலிடும் தென்னுப்பிரிக்கா வெள்ளையர்களுக்கு எதிராக விருக்கும் ஸ்மட்சின் தயவும் வேண்டும். ஆனல் உலகிலுள்ள சகல மனிதர்களாலும் உயர்ந்தவரெனப் போற்றப்படும் மகாத்மா காந்தியின் விருப்பமும், நோக்கமும் பிரிட்டனுடைய கண்களுக்குத் துச்சமாகவே இருக்கிறது. இந்தியாவெனும் அடிமை நாட்டிலே, பிரிட்டனுக்கு அடிமையாகவுள்ள 40 கோடி மக்களிடையே காந்தியெனும் கோவணுண்டி அடிமையாகப் பிறந்து, பிரிட்டனுடைய சட்ட திட்டங்களுக்கு அடங்கி வாழ்ந்துவருவதால் காந்தியின் பேச்சு பிரிட்டனின் காதுகளில் ஏற வழியில்லை.

"நாம் யுத்தத்தை விரும்பியதே கிடையாது. அவசியமானதற்கு மேல் ஒருநாள்கூட யுத்தம் நடக்க வேண்டுமென்பதை இங்கு யாரும் விரும்ப

வில்லை. ஆனால் நமக்கும் மற்றவர்களுக்கும் சுதந்திரம் உறுதியாகும் வரை நாம் நமது போரை நிறுத்தமாட்டோம்"

என்கிறார் லார்டு ஹாலிபாக்ஸ். இந்தியாவின் சுதந்திரம் உறுதியாகும் வரை இந்தியர்களாகிய நாம் பிரிட்டனுக்கு இந்தப் போரில் உதவமாட்டோம் என்று காங்கிரஸ் சொல்லுவதில் என்ன தப்பு இருக்கிறது? பிரிட்டன் தோற்றால் இந்தியாவுக்குச் சுதந்திரமில்லையென்று சொல்லப்படுகிறது. பிரிட்டன் ஜெயித்தால் இந்தியாவுக்கு என்ன வரும்? கடந்த 150 வருடகாலமாகப் பிரிட்டன் கொழுப்பதற்கு இந்தியா உதவியளித்து வந்ததே அதனால் இந்தியா விடுதலை பெற்றுவிட்டதா என்று நாம் கேட்கக்கூடாதா?

நமது இஷ்டமும் அதுவே

"நாம் நமது இஷ்டப்படி நமது வாழ்க்கையை நடத்த விரும்புகிறோம்" என்று சொல்லுகிறார் லார்டு ஹாலிபாக்ஸ். நாமும் அதைத்தான் பிரிட்டனுக்குச் சொல்ல விரும்புகிறோம். ஜெர்மனியினுடைய தலையீடின்றி பிரிட்டன் வாழ விரும்புவதைப் போலவே, பிரிட்டனுடைய தலையீடின்றி இந்தியரும் வாழவே விரும்புகிறார்கள்.

"நாம் பேசுவதை ஜெர்மன் ரகசியப் போலீஸ் கேட்கிறதா வென்று திகிலுடன் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு வாழ விரும்பவில்லை" என்கின்றார் ஹாலிபாக்ஸ். நாம் பேசுவதை பிரிட்டனுடைய ரகசியப் போலீசும், பிரிட்டனுடைய ஏஜண்டுகளும் கேட்டுவிடுவார்களாவென்று திகிலுடன் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு பேசவும் வாழவும் இந்தியர்களாகிய நாமும் கொஞ்சங்கூட விரும்பவில்லை யென்பதை பிரிட்டன் அறியட்டும்.

ஜெர்மனியில் ஜனங்கள் தங்கள் மனச் சாட்சியை ஹிட்லரிடம் ஒப்புவித்து விட்டனர் என்பதாக ஹாலிபாக்ஸ் ஜெர்

மன் மக்களைப்பற்றிக் குறை கூறுகிறார். இந்தியர்களும் தங்கள் மனதை பிரிட்டனிடமோ ஜெர்மனியினிடமோ அடகு வைத்து வாழப் பிரியப்படவில்லை. ஹிட்லராவது ஜெர்மன் தேசத்தவன். ஆனால் இந்த பிரிட்டன் யார்? பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் எந்த விதத்தில் சம்பந்தம்? சாதி யொன்றா? சமயமொன்றா? மொழிதானென்றா? நிறந்தானென்றா? கொள்கைதான் ஒன்றா? பிரிட்டன் இதற்குப் பதில் சொல்லட்டும்.

பிரிட்டனுக்கு ஆசை இல்லையா?

"ஹிட்லர் முதலில் அதிகாரத்துக்கு வந்தபோது அவர் என்ன கூறினார்? தமது லட்சியங்கள் ஒரு வரம்புக்கு உட்பட்டனவென்று அறிவித்தார். பக்கத்து நாடுகள்மீது ஆக்ரமிப்பு நோக்கமில்லை யென்றார். ஜெர்மனியின் க்ஷேமாபிவிருத்தியே தமது ஒரே அலுவலென்றார். ஆனால், படிப்படியாக அவரது ஆசை வளர்ந்தது. இன்று அவர் பக்கத்து நாடுகளையெல்லாம் தமது பரிபாலனத்திற்குக் கொண்டுவந்துவிட்டார்" என்று அடுத்தபடியாகக் கூறுகிறார் லார்டு ஹாலிபாக்ஸ்.

கிழக்கிந்தியக் கம்பெனி யென்ற பெயரோடு பிரிட்டன் இந்தியாவுக்கு வந்தபோது என்ன சொல்லிற்று? இந்தியாவுடன் வர்த்தகம் செய்யவந்ததாகவே சொல்லவில்லையா? பின்னர் பிரிட்டனின் ஆசை படிப்படியாக வளரவில்லையா? பல சாக்குப்போக்குகள் சொல்லி காஷ்மீரத்திலிருந்து கன்னியா குமரி வரை இத்தேசத்தைப் பல பித்தலாட்டங்கள் செய்து தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரவில்லையா? பர்மாவைப் பிடிக்கவில்லையா? இலங்கையை விழுங்கவில்லையா? இப்போது இவைகளை விட்டுவிட மனமில்லாமல் இறுக்கமாகப் பிடித்துக்கொண்டில்லையா? இவ் விஷயத்தில் ஹிட்லர் என்ற ஜந்துக்கும் பிரிட்டனுக்கும் என்ன பேதமிருக்கிறதென்று என் புத்திக்கு எட்டவில்லை.

அடுத்தபடியாக "கிறிஸ்தவ மதத்தைக் காப்பதற்கான இந்த தர்ம யுத்தத்தில் நாமும் நமது மகத்தான டொமினியன்களும், தீய சக்திகளை எதிர்த்து உறுதியுடன் போரிட வேண்டும்" என்பதாகக் கூறியிருக்கிருர் அவர். கிறிஸ்தவர்கள் இங்கிலாந்தில் மட்டுமா இருக்கிருர்கள்? கிறிஸ்தவ தர்மம் பிரிட்டனுக்கு மட்டும் ஏகபோக வுரிமையா? இந்தியாவின்மீது பிரிட்டன் ஆதிக்கம் செலுத்திவருவது கிறிஸ்தவ தர்மமா? அபிசீனியாவின்மீது இத்தாலி படையெடுத்த போது இந்தக் கிறிஸ்தவ தர்மம் எங்கே ஓடி யொளிந்திருந்தது? சைனுவிலுள்ள கிறிஸ்தவர்கள்மீது ஜப்பான் ஆக்கிரமிப்பதைத் தடுக்க இக் கிறிஸ்தவ தர்மம் பர்மா பாதையை அடைத்ததற்குமேல் ஒன்றும் செய்ய முடியாதா? இக் கிறிஸ்தவ தர்மத்துக்கும் இந்தியாவிலுள்ள இந்து, முஸ்லீம், சீக்கிய, பார்ஸி, ஜைன, பௌத்த, கிறிஸ்தவ தர்மங்கட்கும் என்ன தொடர்பு இருக்கிறது?

ஒன்றுகூடுங்கள்

பிரிட்டனின் இத்தகைய பிதற்றல்களையும், ஹிட்லரின் உருட்டல்களையும் கேட்டு நாம் மிரளும் காலம் மலையேறி விட்டது. ஹிட்லரோ, முசோலினியோ, ஜப்பானே, இன்னும் எவனே இத்தேசத்தை நத்தி வந்தால் அவனை விரட்டும் சக்தி நம்முள் பெருகவேண்டும். இனி நாம் அரைக்கணமும் அடிமைகளாய் உலகில் வாழமுடியாது.

முதலில் நாம் பிரிட்டனுடைய பிடிப்பிலிருந்து விலக வேண்டும். இதனிமித்தம் நாம் சாதி சமய கட்சி வேறுபாடுகளை மறந்து ஒன்றுகூடவேண்டும். சுதந்திரக் கூச்சல் வானைப் பிளக்கவேண்டும். நமது மனேவுறுதியைக் கண்டு உலகம் திகிலடையச் செய்யவேண்டும். தேசீய உணர்ச்சி பொங்கவேண்டும். தேசத்துரோக வுணர்ச்சி வெந்து சாம்பலாகவேண்டும்.

இதோ, சுதந்திர நாதம் கேட்கிறது. உலகிலே போரையும், கொலையையும், அடிமை அதிகார வெறியையும் தொலைத்து, உலகிலே சாந்தமும், சமாதானமும், சந்தோஷமும், சுதந்திரமும், சத்தியமும், அஹிம்சா தர்மமும் நிலை நாட்ட அவதரித்துள்ள மகாபுருஷன்—மகாத்மா காந்தி—சிவகிராமத்திலிருந்து சுதந்திரச் சங்கை ஊதுகிறார். அச் சத்தம் உங்கள் காதுகளில் படவில்லையா? இன்னும் உறக்கமா? ஏ! இந்தியனே, அடிமைத்தளைகள் உன்னை உறுத்தவில்லையா?

ஆயுதம் இல்லை யென்ற ஏக்கமா? உயிரை இழக்க வேண்டும் என்ற கவலையா? சொத்தும் சுகமும் பறிபோய் விடுமே என்ற மனக்கலக்கமா?

இது நமது நாடல்லவா? இதனை நாமே ஆளவேண்டாமா? பெரு நோய் கண்ட உடலென்னாகும்? அழுகி யழுகிப் பார்ப்பாருக்கு அருவருப்புத் தரும் நிலைமை எய்துமல்லவா? இன்று நாமும் நமது நாடும் அடிமை யென்ற பெருநோய் வாய்ப்பட்டு, நமது கலை, மொழி, நாகரிகம், செல்வம், தொழில், மதம், ஆண்மை, தன்மதிப்பு அனைத்தும் அழிவுற்று உலகோர் அருவருத்து எள்ளி நகையாடும் நிலையில் இருந்து வாழ்வதிலும், சாவது மேலில்லையா? இந்நிலையை நாம் இனி அரைக்கணம் பொறுத்திருக்க முடியாது.

ஆயுதத்தை எடுங்கள்

இந்தியனே! நீ கோழையல்லவே! பலவானுயிற்றே! உண்மை உனக்குத் தெரியவில்லையா? சபர்மதி முனிவன் தந்த அஹிம்சை ஆயுதம் எங்கே? எடு அந்த ஆயுதத்தை. அது ஹிட்லரின் யுத்த தளவாடங்களைவிட வல்லமை வாய்ந்தது. அதன் சக்தியை இன்னும் நீ உணரவில்லையா? ஆன்மசக்தி யென்ற தொழிற் கூடத்தில் காய்ச்சப்பட்டு, சத்தியம் என்ற உருவத்தில் வார்க்கப்பட்டு, அஞ்சாமை யென்ற மருந்தும்,

தியாகம் என்ற குண்டுகளும் கெட்டிக்கப்பட்டுள்ள அப் புனித மான ஆயுதத்தின் தன்மையை நீ இன்னும் உணராதது ஏன்? உலகிலே போரைத் தவிர்த்து மனித சமுதாயத்தை ஒரே குடும்பம் போலாக்குவிக்கும் அம் மகத்தான ஆயுதம் அதுவா யிற்றே!

இந்தியனே, எழுந்து நில். கோழைத்தனத்தை விடு. சோம்பலைச் சுட்டெரித்து விடு. தைரியத்தோடு மார் விடைத்து, தோளுயர்த்தி, தலை நிமிர்த்தி கம்பீரத்துடன் முன்னடைந்து செல். "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" என்று சொல்.

வந்தே மாதரம்!

பாரதமும்-பாகிஸ்தானும்

பாகிஸ்தானின் ஆக்ரமிப்பைக் கண்டிக்கும் பொருட்டு 24—9—65ல் கோபிச்செட்டிபாளையத்தில் சுதந்திரக்கட்சி சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு.

இந்தியா ஒரு இஸ்லாமிய நாடாகத் திகழவேண்டுமென்று கடந்த ஓராயிரமாண்டுகளாகக் கண்டுவந்த கனவே பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் பாகிஸ்தானாகப் பலிதமாயிற்றென்பது ஆதியிலிருந்து பரதகண்ட வரலாற்றை நுட்பமாய் ஆராய்ந்தவர்களுக்குத் தெரியும்.

பரத கண்டத்தைத் துண்டாட வேண்டுமென்று இந்திய முஸ்லீம்களில் 100-க்கு 93 பேர்கள் வாக்களித்தனர். எனினும் முந்நூறு லட்சம் முஸ்லீம்கள் பாரதத்தில் வாழும்படியாக நேரிட்டுவிட்டது. இந்நிலை பாகிஸ்தானிலுள்ள முஸ்லீம்களின் நெஞ்சையுறுத்துகிறது. எனவே எப்படியும் எஞ்சிய பாரதத்தைப் பாகிஸ்தானாக மாற்றிவிட வேண்டுமெனத் துடியாய்த் துடிக்கிறார்கள். இதற்குச் சான்றாகப் பாரதம் முக்கூறாகத் துண்டிக்கப்பட்ட 1947-ம் ஆண்டு ஆகஸ்டு-செப்டம்பர் மாதங்களிலே, லாகூரின் தெருக்களிலே முஸல்மான்கள்,

> *Has ke liya Pakistan*
> *Lar ke lenge Hindustan*

> சிரித்துப் பெற்றோம் பாகிஸ்தான்—போர்
> தொடுத்துப் பெறுவோம் ஹிந்துஸ்தான்

என்று முழக்கியதோடு,

Dharthe nahi Mussalmanthuni
Yame kisise, thum poocho Alise

அஞ்சமாட்டார் முஸல்மான்கள் அகிலமெங்கிலும்
நீங்கள் அலியைக் கேளுங்கள்

என்றும் முரசு கொட்டினார்கள்.

பிரிவினையைத் தொடர்ந்தெழுந்த பயங்கரப் படுகொலை களும், இடம்விட்டுப் பெயர்ந்த மக்களின் கூக்குரல்களும் கேட்ட பின்னருங்கூடப் பாரதத் தலைவர்கள் பாகிஸ்தானி யரின் சதித்திட்டத்தையறியாது, வகுப்பு ஒற்றுமை என் பதையே தாரகமந்திரமாகக்கொண்டு, மீண்டும் மீண்டும் பாகிஸ்தானைத் திருப்தி செய்யும் முயற்சிகளில் ஈடுபடலாயி னர். ஆனால் பாகிஸ்தானத்து அதிபர்களோ தங்களுக்குப் பழக்கமான போக்கிரித்தனத்திலும், அவர்களிடம் குடி கொண்டுள்ள குண்டாத்தனத்திலும் மும்முரமாக ஈடுபட்டு, பாரதத்தைப் பயமுறுத்தியும், பாரதத்துக்குப் பற்பலவாறு துன்பங்களை ஏற்படுத்தியும், பாரதத்திடமிருந்து எவ்வெளவுக் கெவ்வளவு அதிகமான பலன்களை பறிக்கமுடியும் என்பதி லேயே தங்கள் கருத்தைச் செலுத்தி வந்தனர்.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தாலுங்கூட இத்தகைய துராக்கிரகச் செயல்களால் பாகிஸ்தான் எவ்வளவு அநுகூலங் களைப் பாரதத்திடமிருந்து பெற்றுள்ளதென்பது தெரியவரும். மகாத்மாவின் வற்புறுத்தலுக்கிணங்க பாரதம் ஐம்பத்தைந்து கோடி ரூபாயை பாகிஸ்தானுக்குக் கொடுத்த உடனடிப் பலனாகத்தான் பாகிஸ்தான் காஷ்மீரத்துள் ஆயுதந்தாங்கிய கலகக்காரர்களை அனுப்பியது. காஷ்மீர் மகாராஜா பாரதத் துடன் இணைந்தபின்னரும் பாகிஸ்தான் தொடர்ந்து படை யெடுத்துத் துராக்கிரகம் செய்தது.

இதன் விளைவாகச் சுமார் முப்பதினாயிரம் சதுர மைல் விஸ்தீரணம் கொண்ட பாரதப் பூமி பாகிஸ்தானின் வசமா யிற்று. பாரதம் மனது வைத்திருந்தால் பாகிஸ்தானின் படைகளை மிகச் சுலபமாக முறியடித்து, பாகிஸ்தானையே மீண்டும் பாரதத்துடன் இணைத்துவிடக் கூடிய சக்தியும்

வாய்ப்பும் அத்தருணத்தில் பாரதத்திடமிருந்தது. நாம் அப்படிச் செய்யாமல் ஐக்கிய நாடு சபையில் தாவாச் செய்தோம். ஆண்டுகள் பதினேழாகியும் பாகிஸ்தான் தான் கைப்பற்றிய பாரதப் பிரதேசத்தைக் கைவிடாமல், மீண்டும் மேலும் ஆக்ரமிப்பில் இறங்க ஆணவங்கொண்டுள்ளது.

இது நிகழ்ந்த இரண்டாண்டுகளுக்கப்புறம் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்த இந்துக்களை வெளியேற்றும் மனிதத் தன்மையற்ற காரியத்தை பாகிஸ்தான் மேற்கொண்டது. இதனுல் மேலும் ஐம்பது லட்சம் அகதிகள் பாரதத்துள் நுழைந்தனர். அவர்களைக் குடியேற்றிப் பராமரிக்கும் பெரும் பொறுப்பும் பாரமும் நமது தலைமேல் சுமத்தப் பட்டது. இத்தீச்செயலின் கரும பலனைப் பாகிஸ்தான் அனு பவிப்பதற்குப் பதிலாக நேரு-லியாகத் ஒப்பந்தம் ஏற்பட்டு, அதன் திரைமறைவில், பாகிஸ்தானை விட்டு வெளியேறிய இந்துக்களின் பல்லாயிரங்கோடி ரூபாய் மதிப்புள்ள நில புலன்களையும், இதர செல்வங்களையும் பாகிஸ்தான் கபளீகரம் செய்துகொண்டது.

இதற்குப் பிறகும் பாகிஸ்தான் ஐம்பது லட்சம் இந்துக்களைத் துன்புறுத்திக் கொன்று குவித்தும், வெட்டி வீழ்த்தியும் வெளியேற்றிவிட்டது. 1947ல் நாடு பிரிவினை யாக்கப்பட்ட பிறகு பாரதத்திலிருந்த முந்நூறு லட்சம் முஸ்லீம்கள் 1961-ல் ஐந்நூறு லட்சத்தை தாண்டிவிட்டனர். ஆனுல் பாகிஸ்தானில் 150 லட்சம் பேர்களாயிருந்த இந்துக் கள் இன்று 250 லட்சமாகப் பெருகியிருப்பதற்குப் பதிலாகத் தொண்ணூறு லட்சமாகக் குறுகியுள்ளனர். இதிலிருந்து பாகிஸ்தானிலுள்ள முஸ்லீம்கள் நரபட்சிணிகளாக வாழ் கின்றனர் என்பது தெரிகிறதல்லவா?

பாகிஸ்தான் மென்மேலும் அக்ரமங்கள் செய்து கொண்டே இருந்தாலும் அதைச் சாந்தப்படுத்துவதற்காக பாரதத் தலைவர்கள் சலிப்படையாது தொடர்ந்து பல நன்மைகள் செய்து கொண்டே யிருக்கிருர்களென்பதற்கு

1958-ல் நேரு அவர்கள் கராச்சி சென்று கையெழுத்திட்ட சிந்துநதிப் பாஸன ஒப்பந்தம் ஒரு எடுத்துக்காட்டாகும். அவ்வொப்பந்தப்படி 1971-ம் ஆண்டு வரைக்கும் பாகிஸ்தான் சட்லஜ், பீஸ், ரவி நதித்தண்ணீரைப் பாசனத்துக்கு எடுத்துக் கொள்வதென்றும், அதற்குள் பாகிஸ்தான் தனிக் கால்வாய்கள் கட்டிக் கொள்வதற்குப் பாரதம் 83 கோடி ரூபாய் கொடுப்பதென்றும் முடிவாயிற்று.

தண்ணீர்த் தகராறை இப்படித் தீர்த்த பின்னராவது பாகிஸ்தான் திருப்தி அடையுமென்றும், பாரதத்துடன் நேச பாவத்துடன் வாழுமென்றும், பாரதத்தலைவர் நம்பியதற்கு மாருகப் பாகிஸ்தான் தனது விரோத மனப்பான்மையை அதிகமாக வளர்த்துவிட்டது. அவ்வப்போது பாகிஸ்தானைச் சாந்தப்படுத்தச் செய்த நேரு-நூன் ஒப்பந்தம், ஷேக்-ஸ்வரன் சிங் ஒப்பந்தம், சமீபத்தில் செய்யப்பட்ட கச் ஒப்பந்தம் போன்ற பிரயத்தனங்களெல்லாம் கடலில் கரைத்த புளியாகி விட்டது. பாரதம் புரிந்த ஒவ்வொரு நற்செயலும், பாகிஸ்தானின் பேராசையை வளர்த்து-அதன் தீய எண்ணங்கட்குத் தூபமிட்டு, அந்நாடு தீச்செயல்கள் புரிய ஊக்கமளித்து வந்துள்ளது.

பாகிஸ்தானுடன் செய்துகொண்ட பாஸன ஒப்பந்தப் படி பாரதம் பாகிஸ்தானுக்கு ஆண்டுதோறும் எட்டு கோடி ரூபாய் கொடுத்து வருகிறது. ஆனால் பிரிவினையின்போது ஏற்பட்ட பொதுக்கடனில் பாகிஸ்தானின் பங்காகிய முந்நூறு கோடி ரூபாயில் ஒரு சல்லிக்காசைக் கூடப் பாகிஸ்தான் பாரதத்துக்குச் செலுத்தவில்லை. பாகிஸ்தானைவிட்டுப் பாரதத்தில் குடிபுகுந்த மைனாரிட்டிகளின் சொத்துக்களைப் பாகிஸ்தான் கபளீகரம் செய்து கொண்டதைப்பற்றி ஏற்கனவே சொன்னோம். இப்படியிருந்தும் பாரதத்துக்கு எதிராக உலகெங்கும் பொய்யும் புளுகும் நிறைந்த விஷமத்தனமான பிரச்சாரத்தைப் பாகிஸ்தான் கடந்த பதினெட்டாண்டுகளாக ஓய்வொழிச்சலின்றிச் செய்துகொண்டே இருக்கிறது.

பாகிஸ்தானின் சதித்திட்டம்

பாகிஸ்தான் ஏற்பட்டவுடனே அதன் தந்தையெனப் பட்ட முகமதலி ஜின்னு வெளிப்படையாக ஒன்றைச் சொன்னுர். அகண்ட இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை ஏற் படுத்தப் பாகிஸ்தான் ஒரு விசைப் பலகையாகப் பயன் படுமென்றதே ஜின்னுவின் திருவாக்கு.

இந்நிலையில் கம்யூனிசத்தைப் பரவவொட்டாது தடுக்க அமெரிக்கா பல காரியங்களைச் செய்துவந்துள்ளது. அவற்றில் ஐரோப்பாவில் நிறுவப்பட்டுள்ள நெட்டோ என்ற ஸ்தாப னம் ஒன்று. ஆசியாவில் சீட்டோ, சென்டோ என்றிரு ஸ்தாபனங்கள். இவை கம்யூனிசத்துக்கெதிரான கூட்டு இராணுவ நடவடிக்கை ஸ்தாபனங்களாகும். இவற்றில் பாகிஸ்தான் அங்கம் வகிக்கிறது. சீன அபாயத்தை தடுத்து நிறுத்தும்பொருட்டு அமெரிக்கா பாகிஸ்தானுக்கு இரண்டாயிரங்கோடி ரூபாய் பெறுமானமுள்ள யுத்த தள வாடங்களையும், இதற்குப் புறம்பாக இதர அபிவிருத்தி சாதனங்களையும் அளித்து வந்துள்ளது. இத்தளவாடங்கள் குவியக்குவியப் பாகிஸ்தானுக்குப் பாரதத்தின் மீதுள்ள பகையும், குரோதமும் பன்மடங்கு வளரலாயிற்று. மற்றும் எந்தப் பகைவனைத் தடுப்பதற்கு அமெரிக்கா இத்தளவாடங் களைக் கொடுத்ததோ அதே பகைவனுடன் பாகிஸ்தான் நேச உறவு கொள்ளவும் தொடங்கி விட்டது. இது ஈடு இணையற்ற துரோகச் செயலென்று நாம் சொல்லவும் வேண்டுமா?

அல்நாஷர் என்பான் ஒரு கூடை நிறையக் கண்ணுடிச் சாமான்களைத் தன் காலடியில் வைத்துக்கொண்டு பகற் கனவு கண்டான். இவற்றை விற்பேன். மேலும் கொள் முதல் செய்து செய்து, விற்று விற்று, பெருந் தனிகன் ஆவேன். வெண்புரவி மீதேறித் தெருவில் செல்வேன். இந் நாட்டின் அமீர் என்னைப் பார்ப்பார். தன் மகளை எனக்குக் கொடுப்பார், நான் அவளை இப்படி உதைப்பேனென்று

ஒரு உதை கொடுத்தான். அவன் கனவிற்குக் கருப்பொரு ளாயிருந்த கண்ணாடிச் சாமான்களெல்லாம் தெருவில் உடைந்து சிதறின.

இக்கதையை அயூப்கான் படித்திருக்கிறான். எனினும் அவனைப் பிடித்துள்ள அதிகாரப்போதையால், பேராசைப் பேய்வெறியால் மதியிழந்து, அமெரிக்கா தந்த தளவாடக் குவியலைக் கண்டு இறுமாந்து, ஹரே அல்லா! இந்த 400 டாங்கிகளையும் நான் அப்படியே செலுத்திக்கொண்டு சென்றால் எட்டே நாளில் டெல்லியைப் பிடித்துவிடுவேன். நான் டெல்லி சேர்ந்ததும் மயிலாசனத்தில் டெல்லி பாதுஷாவாக இப்படி அமர்வேன் என்று அமர்ந்தான். அவனுடைய பேராசைப் பளுவைத் தாங்க வொண்ணாது அமெரிக்கா தந்த பேட்டன் டாங்கிகளெல்லாம் அல்நாஷரின் கண்ணாடிச் சாமான்கள் போன்று சுக்கு நூறாகி விட்டன!

ஜம்மு, காஷ்மீரத்தினுள்ளே போர் நிறுத்த எல்லையைத் தாண்டி அவன் ஐயாயிரம் ஆயுதபாணிகளைச் சிவிலியன் உடையில், முன்னோடிகளாக அனுப்பி வைத்தான். அவர்களைக் கண்டதும் காஷ்மீர மக்கள் விரைந்தோடி அணைத்து ஆலிங்கனம் செய்வார்களென்று நம்பினான். அவர்களுக்கு விடுதலை வீரர்களென்றும் "ஜிப்ரால்டர்" படையென்றும் பெயர் சூட்டினான். நயத்தாலும், பயத்தாலும், பணத்தாலும் காஷ்மீர் மக்களை வசப்படுத்தி அம்முன்னோடிகள் நாசவேலைகள் பல செய்தவர்கள் என்று எண்ணினான். அதைத் தொடர்ந்து தனது டாங்கிகளையும், கவசப்படைகளையும், ஆகாய விமானங்களையும் காஷ்மீருக்குள் அனுப்பி அக்னூர் பாதையைத் துண்டித்துப் பாரதப்படைகளை வளைத்துப்பிடித்து நசுக்கிப் பொசுக்கிவிட எண்ணினான்.

எழுபது பேட்டன் டாங்கிகளும், ஒரு டிவிசன் பட்டாளமும், காஷ்மீருக்குள் நுழைந்தால் மின்னல் வேகத்தில் ஜம்மு காஷ்மீரைப் பிடித்துவிட முடியுமென அயூப் மனக்

கோட்டை கட்டினான். ஆனால் ஆண்டவன் சித்தம் அயூப் கானுக்கு ஒத்ததாயிருக்கவில்லை. வீரதீரமும் மதிநுட்பமும் கொண்ட பாரதப்படையினர் லாகூரை நோக்கிப் போர்முனை யொன்றைத் துவக்கினர். அம்முனை சயால்கோட் வரை விரிந்தது. இவ்விரிவுக்குள் நுழைந்த அயூப்கானின் டாங்கி களெல்லாம் நொறுங்கின. அவனுடைய படைகளெல்லாம் சிதறுண்டு ஓட்டம் பிடித்தன. அவன் உதவிக்கு அமெரிக்கா வையும், இந்தோனேசியாவையும், ஈரானையும், துருக்கியை யும், கூவிக்கூவி அழைத்தான். அவனைத் தூண்டிவிட்ட செஞ்சீனனும் தூரத்திலிருந்தே வேடிக்கை பார்த்தான். நினைக்குங்கேடு தனக்கே என்றபடி அயூப்கான் தான் வெட்டிய குழியில் தானே மாட்டிக்கொண்டு திகைத்தான்.

காஷ்மீரிலே அவன் செய்த தகடுதத்தங்கள் எத்தனை? கடந்த பதினெட்டாண்டுகளாக எத்தனை ஆயிரம் முறை போர் நிறுத்தக் கோடு தாண்டி வந்து சுட்டார்கள். பாரதத் துக்குச் சொந்தமான பூமியைச் சீனனுக்குத் தானமாகக் கொடுத்து அவன் நட்புறவைக் கொண்டாடினார்கள். அதற்குப் பிரதியுபகாரமாகச் சீனனது கையினால் டெல்லி மகுடத்தைத் தன் தலைமீது சூடிக்கொள்ள அயூப்கான் எண்ணினான். இப்போது கொள்ளிக் கட்டையால் தன் தலையைச் சொரிந்து கொண்டிருக்கிறான்.

காஷ்மீரத்திலே இருந்த தபிநாயகத்தின் தலைமயிரைக் களவாடச் செய்து, அதன் காரணமாக காஷ்மீரை ரணகள மாக்கத் திட்டமிட்டான். பக்துானிஸ்தான் வேண்டுமெனப் போராடும் பத்தானியர்களிடம் செருப்படி பட்டாலும் அயூப்கான் செருக்குலையாதிருந்தான். அச்செருக்கனைத்தும் நமது பாரத வீரர்கள் செருப்பின் கீழ் இன்று மிதிபட்டுப் போயிற்று.

இன்று நமது ஜவான்களின் வீரதீரமிக்க சாகஸச் செயல்களினாலே நாம் போர் ஓய்வு பெற்றிருக்கிறோம்.

மீண்டும் போராடுவோமென பூட்டோ பொரிந்திருக்கிறான். அவன் ஆயிரம் வருடம் போராடுவானாம். அவன் வாய் மதத்தை நமது படை வீரர்கள் நாற்பத்தெட்டே நாட்களில் தேய்த்து விட்டார்கள்.

நமது நெறியும், குறியும்

"சாதி மதங்களைப் பார்ப்போம். உயர் சன்மம் மித் தேசத்தில் எய்தினராயின், வேதியர் ஆயினும் ஒன்றே, அன்றி! வேறு குலத்தினர் ஆயினும் ஒன்றே" என்ற பாரதியாரின் பாரதத்தை நாம் பதினெட்டாண்டுகளாகச் சிருஷ்டித்து செயல்படுத்தி வாழ்ந்து வருகிறோம். பறையருக் கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை பெற்று விட்டோம். தீயினைக் கும்பிடும் பார்ப்பார், நித்தந் திக்கை வணங்குந் துருக்கர், கோயிற் சிலுவையின் முன்னே நின்று கும்பிடும் யேசு மதத்தார், யாரும் பணிந்திடும் தெய்வம் பொருள் யாவினும் நின்றிடும் தெய்வம் பாருக்குள்ளே தெய்வம் ஒன்று இதில் பற்பல சண்டைகள் வேண்டாமென்று முடிவு செய்துவிட்டோம்.

ஆம்; நமது பாரதம் சர்வ மதத்தினருக்கும் பொதுவான தென்று முரசு கொட்டி வருகிறோம். நாம் உலக சமாதானத் தையே விரும்புகிறோம். பிறர் மண்ணின் மீது நமக்கு ஆசை இல்லை. பாகிஸ்தானோடு நாம் நல்லுறவையே விரும்புகிறோம் என்பதைச் சொல்லிலும் செயலிலும் காட்டிவந்திருக்கிறோம். காந்தியடிகளின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நாம் சத்தியம், தருமம், அகிம்சையாகிய நெறிகளில் செல்லும் நமது விருப் பத்தையும், அத்துறையில் நமது முயற்சியையும் ஒளிவு மறைவின்றிக் காட்டி வந்திருக்கிறோம். அப்படியிருந்தும் பாகிஸ்தானதிபர்கள், நாம் இந்து சாம்ராஜ்யத்தை ஸ்தா பிக்கப் போராடி வருவதாகவும், அண்டை அயலிலுள்ள நாடுகளைக் கவர எண்ணுவதாகவும் பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றனர்.

இத்தகைய பொய்ப்பிரசாரத்துக்குச் செஞ்சீனன் என்ற வஞ்சகன் தூபம் போட்டு வருகிறான். இந்தோனேசியா, இரான், துருக்கி போன்ற சில துர்ப்பாக்கிய நாடுகள் செவி சாய்த்து வருகின்றன.

பன்றிகள் முன் முத்துக்களைப் போடாதீர்கள். அவை அவற்றைக் காலால் தேய்த்துவிடுமென யேசுவானவர் சொல்லியிருக்கிறார். அதற்கொப்பாகப் பஞ்சசீலம் பேசிய சீனனும், நமது தாய் நாட்டில் வாழும் பாகிஸ்தானனும் நமது நட்புரைகளையெல்லாம் உதாசீனம் செய்து விட்டார்கள்.

பல்லாயிரம் வீரர்கள் தங்கள் உயிரைத் திரணமாக மதித்து, இரத்தம் சிந்தித் நமது தாய்த்திரு நாட்டின் மானத்தைக் காக்கப் போராடியுள்ளனர். எண்ணற்ற ஊர் களையும், மக்களையும், புண்ணிய ஸ்தலங்களையும், கோவில்கள் மசூதிகளையும் பாகிஸ்தானியர் கண்மூடித்தனமாகக் குண்டு கள் வீசி நாசமுறச் செய்திருக்கின்றனர். போர் நிறுத்தம் செய்வதென ஐக்கிய நாட்டுச் சபையில் சம்மதித்த பின்னரும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகும் ஆயிரம் ராத்தல் எடையுள்ள வெடி குண்டுகளை அமிருதசரஸ் நகரின் மீது வீசிப் பாழ்படுத்தி நமது மக்களின் மனதைப் புண்ணாக்கி யிருக்கின்றனர். இத்தனை விலை கொடுத்துக் காத்த இச் சுதந்திரம் வெறும் கேலிக்கூத்தாக இருக்கக் கூடாது. பாகிஸ்தானப் பேய்கள் மீண்டும் பாரதத்தின் மீது காலடி யெடுத்து வைக்கவொண்ணாதபடி நமது எதிர்கால நடவடிக் கைகள் இருக்க வேண்டும். பாகிஸ்தானுக்கும், செஞ்சீன னுக்கும் இனிமேல் யாரும் பரிந்து பேசாதிருக்கச் செய்ய வேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு என்ற குலநாசச் செயலை உட னடியாகக் கைவிடவேண்டும். உணவு உற்பத்தியில் நமது முழுக் கவனத்தையும், உழைப்பையும் செலுத்தி ஒரு கதிர்

விளையுமிடத்தில் ஒன்பது கதிர்கள் விளையச்செய்யவேண்டும். தாராளமாக மக்களைப் பெற்றுத் தகுந்த உணவு கொடுத்து அவர்களைப் பீமசேனர்களாக வளரச் செய்யவேண்டுமே யன்றிக் கருவைச் சிதைக்கும் கொடிய செயலைத் தவிர்த்தாக வேண்டும். நமது மக்களுக்குப் படைக்கலப் பயிற்சியும், நவீனப் போர்ப்பயிற்சியும் கல்வி முறையோடு கலந்தளிக்க வேண்டும். நாடெங்கும் போர் முரசு கொட்டிக்கொண்டே இருக்க வேண்டும். நமக்கு ஆபத்துக்குதவும் நண்பர்கள் யாரெனத் தேர்ந்தெடுத்து அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாக நாம் நடந்து கொள்வதோடு, ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் நமது உறவைப் பலப்படுத்த வேண்டும்.

இரும்பைக் காய்ச்சி இங்கே உருக்கவேண்டும். அவை பிறநாட்டுக்கு அனுப்பாமல் இங்கேயே உழவுக்கு வேண்டிய கருவிகளையும், போருக்கு வேண்டிய ஆயுதங்களை யும் செய்து மலை மலையாகக் குவிக்க வேண்டும். நாம் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டிருந்தால் நமது ஜன சங்கை வெகுவாகக் குறைந்துவிடும். பாகிஸ்தானியர் ஆளுக்கு இரண்டு பெண்டாட்டிகள் கட்டி, மாட்டையும் எருமையும் அடித்துக் கொன்று தின்று டஜன் கணக்கில் பிள்ளைகளைப் பெற்றுப் பாரதத்தின்மீது படையெடுக்கப் பட்டாளம் சேர்த்து விடுவார்கள். சீனனும், பன்றிகள் பல குட்டிகள் போடுவது போன்று போட்டுக் கொண்டிருந்ததால் தான் இமயமலையைத் தாண்டிப் பாரதத் தாய்க்குப் பலி கொடுக்கப் பல்லாயிரம் பேர்களை நிறுத்தி வைத்திருக்கிறுன்.

நமது தலைவர்கள் அல்நாஷர் திட்டங்களைப் போட்டு, அவற்றை நிறைவேற்றச் சக்தியற்று அலைந்து திரியாமலும் நமது தலைமீது அநியாய வரிகளைச் சுமத்தி விலைவாசிகளை உயர்த்தாமலும் இருக்க வேண்டும். இந்நாட்டில் இன்று உற்பத்தியாகும் பொருட்களின் விலைக்குச் சமமான வரிகள் போடப்பட்டுள்ளதால்தான் நூறுக்கு நூறு விலைகள் உயர்ந்து கள்ள மார்க்கட்டும், கள்ளப்பணமும், கள்ளத்தனமும்

பெருகி வந்துள்ளதென்பதையும், அதனால் மக்களின் ஒழுக்கம் குறைந்து வந்துள்ளதென்பதையும் தெளிவாக அறிய வேண்டும்.

இந்நிலையில் நமது கண்களில் இருக்கும் உத்திரத்தைக் கவனியாது, பிறர் கண்களில் இருக்கும் துரும்பையெடுக்கச் சென்ற மதிமூடன் போன்று, நாம் நமது குற்றங்குறைகளையும், ஊழல்களையும் களைந்தெறிய முற்படாமல் உலகுக்கு உபதேசம் செய்யப் புறப்பட்டு, அதனால் பல நாட்டினரின் நட்பையிழந்து விட்டோம். இந்த டாம்பீகத் துறையை நாம் கைவிட்டால்தான் இந்நாட்டுக்கும் உலகுக்கும் நன்மை தேடியவர்களாவோம்.

உதாரணமாக, வியட்நாமில் போர் நிறுத்தம் செய்யுமாறு நாம் டெல்லியிலிருந்து அறிக்கைகள் விட்டது போதாதென்று, மாஸ்கோவிற்கும், பெல்கிரேடிற்கும், கெய்ரோவுக்கும் லண்டனுக்கும் பறந்தோடிச் சென்று அறிக்கைகள் விட்டோம். இப்போது நம்மீது பாகிஸ்தானனும், சீனனும் போர்தொடுத்து விட்டதால் நாமும் போர்புரிய வேண்டிய நிலைமைக்குள்ளாவோம் என்பது நமக்குத் தெரியவில்லை. தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியுமெனப் பெரியவர்கள் சும்மாவா சொன்னார்கள்? இனிமேலாவது நாம் ஊருக்குபதேசம் செய்வதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

காஷ்மீரை ஒரு தங்கத்தாம்பாளத்தில் வைத்துப் பாகிஸ்தானுக்குக் கொடுத்துவிட்டால், நம்மிரு நாடுகளுக்குமிடையேயுள்ள பிரச்சனைகள் யாவும் தீர்ந்துவிடுமென நம்மில் சிலர் இன்னும் எண்ணிக்கொண்டிருப்பது விந்தையாக இருக்கிறது. இருபதாண்டுகளுக்கு முன்னர் இந்தியாவைப் பிரித்துக் கொடுத்து விட்டால் இந்து முஸ்லீம் பிரச்சனை சுமுகமாகத் தீர்ந்துவிடுமென நாம் மனப்பால் குடித்தோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

பிரிவினையால் பிரச்சனைகள் பெரியதாயிற்றே ஒழியக் குறைந்துவிடவில்லையென்பது அநுபவ வாயிலாகக் கண்ட பின்னும், சில சர்வோதயக் கோமாளிகளின் மதிமயக்கம் தீர வில்லை. அவர்கள் பூதானம், கோதானம் சம்பத்தானம் என்பதாக உளறிக் குளறுபடி செய்துகொண்டே இருக்கிறார் கள். கடைசியில் இவர்கள் தருமத்தையும், தாய் நாட்டை யும், சத்தியத்தையும், பெற்ற தாயையும், கட்டிய பெண்சாதி யையும் கூடத் தானமாகக் கொடுத்துவிடும்படி உபதேசம் செய்யவும் பின்வாங்க மாட்டார்கள். கர்ணனிடம் அவன் செய்த புண்ணியத்தையெல்லாம் தானமாகக் கேட்கப்பட்ட நாட்டில்தானே இவர்களும் தோன்றியிருக்கிறார்கள். ஆதலால் அதில் அதிசயம் ஒன்றுமில்லை.

காஷ்மீர் நமக்கேதான் சொந்தம் என்பதில் நாம் உறுதி யாக நிற்க வேண்டும். அயூப்கான் ஐயாயிரம் முஸல்மான் களிடம் பணத்தைக் கொடுத்து ஊடுருவல் செய்தும் காஷ்மீர மக்கள் உறுதியுடன் பாரதத்தைக் காத்து நின்றதைக் கண்ட பின்னராவது நமது மயக்கம் தெளிந்திருக்க வேண்டும். காசூர்ப் போர்முனையிலே ஹவில்தார் அப்துல் ஹமீது காட்டிய சாகசத்தைக் கண்ட பிறகாவது நமது சந்தேகம் தெளிந்திருக்க வேண்டும். இவ்விஷயத்தில் நாம் தளரா உறுதியுடன் நின்றால்தான் யுத்தகளத்தில் பலியான நமது வீரர்களின் ஆன்மா ஆறுதல் அடையும். அவ்வீரரின் பெற்றோரும், உற்றார் உறவினரும், மனைவியும், மக்களும் சிந்திய கண்ணீர் விலைபெறும். உலகமே ஒன்றாகத் திரண் டெழுந்து நின்றாலும் நாம் நிலைபிசகாது உறுதியுடன் நிற்க வேண்டும்.

காஷ்மீரில் வாக்கெடுப்பதற்கு இசைவதைவிட, நாம் இந்தியா முழுவதிலுமே வாக்கெடுக்க இசைவது மேன்மை யாக இருக்கும். நாம் எல்லோரும் ஒரே நாட்டவர் என்பது உறுதியான பின்னர் ஒரு பகுதியில் வாக்கெடுப்பது என்றால் அதுவும் பாகிஸ்தானத்தின் கொடிய எண்ணத்தை

ஐயந்திரிபற உணர்ந்த பிறகு இசைந்தால் நாம் வாழ்தலில் வாழாமையே உலகுக்கு நன்மை பயப்பதாயிருக்கும். பாரத நாட்டில் ஒரு பகுதியைப் பிரித்துக் கொடுத்துவிட்டு உயிர் வாழ்வதைவிட, பாரதநாடு முழுவதையுமே முழுசாகக் கொடுத்துவிடுவதால் பெரிய இழிவோ, இழப்போ அதனால் ஏற்பட்டு விடாது.

இன்று நாம் காஷ்மீரத்தைப் பிரித்துக் கணித்தால் நாளை பாரதம் முழுவதுமே சின்னாபின்னமாகிவிடுமென்பதற்கு யாரிடமும் ஜோஸ்யம் கேட்க வேண்டாம். இன்று காஷ்மீரம் பாகிஸ்தானின் கைகளுக்கு மாறினால், அடுத்த சில ஆண்டுகளில் நாம் பாஞ்சாலத்தையும், பின்னர் உத்திரப் பிரதேசத்தையும், மஹாராஷ்டிரத்தையும், பீஹார், ஒரிசா, ஆந்திரா, கர்னடகா, கேரளம், தமிழ்நாடு ஆகிய சகலத்தையும் ஒவ்வொன்ருகப் பாகிஸ்தானுக்குப் பறிகொடுத்துவிட்டு அப்புறம் என்னுவோம் என்று சிந்தனை செய்து பாருங்கள்.

நாம் செய்ய வேண்டுவதென்ன?

பதினெட்டாண்டுகளுக்கு முன் வகுப்புவாதிகளின் கோஷத்திற்கும், கொலைபாதகச் செயல்களுக்கும் பயந்து, இந்தியா முழுவதற்கும் விடுதலை பெறுவதற்குப் பதிலாக முக்கால் இந்தியாவுக்கு விடுதலை பெறச் சம்மதித்தோமல்லவா, அதன் பலனை இன்று நேற்றல்ல, கடந்த பதினெட்டாண்டுகளாகவே அனுபவித்து வருகிறோம். இவ்வாண்டுகளில் நாமடைந்த துயரும், அவமானமும் ஒருபுறமிருக்க கடந்த ஆகஸ்டு ஐந்தாந் தேதியிலிருந்து செப்டம்பர் இருபத்திமூன்றும் தேதி வரை நாமனுபவித்த அநுபவங்கள் நமக்கு மீண்டும் மீண்டும் ஏற்படாதிருக்க வேண்டுமானால் நாம் பாகிஸ்தானுக்கு ஒரு அங்குல நிலமும் கொடாமல், அது அக்கிரமமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் அஸாத் காஷ்மீரை விடுவித்தாக வேண்டும். காஷ்மீர மக்களுக்கு பாரதத்தின் மீதுள்ள விஸ்வாசத்தை அவர்கள ஐயந்திரிபறக்

கடந்த நாற்பத்தெட்டு நாட்களில் நடந்த பாரத-பாகிஸ்தான் போரின்போது அமெரிக்கனும், பிரிட்டனும், நமது நாட்டிலுள்ள சந்தேகப் பிராணிகளும், தெள்ளத் தெளிய அறியுமாறு காட்டிவிட்டார்கள் என்பது உறுதி.

இரண்டாவதாகப் பாகிஸ்தானிலிருந்து பிரவேசித்துள்ள ஊடுருவல்காரர்களையும், பாராசூட் பேயர்களையும் நாம் கண்டுபிடித்து அவர்களைக் காவலனிடம் ஒப்புவிக்க வேண்டும்.

மூன்றாவதாகப் பாகிஸ்தானிலுள்ள மைனாரிட்டிகளின் பாதுகாப்புக்கும் சரியான பராமரிப்புக்கும், நாம் பாகிஸ்தானிடமிருந்து உத்திரவாதம் பெற வேண்டும்.

நான்காவதாகப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து பாரதத்துள் புகுந்துள்ள மக்கள் குடியமர்ந்து வாழ்வதன் பொருட்டுக் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள குல்னா, ராஜசஹியாகிய இரண்டு ஜில்லாக்களையும் நாம் கேட்டுப் பெற வேண்டும். 1950-ம் ஆண்டிலேயே சர்தார் வல்லபாய் படேல் இக்கோரிக்கையை விடுத்தார். நாமும் ஓயாது கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். ஆம் ஒவ்வொரு நாளும் இக்கோரிக்கையை நாம் வானொலியில் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

ஐந்தாவதாக பக்டூனிஸ்தான் கோரும் பத்தான்களுக்கு நாம் நம்மாலியன்ற உதவியனைத்தும் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் கொடுப்பதோடு, நாமும் ஓய்வொழிச்சல் இல்லாமல் பாகிஸ்தானுக்கு தொல்லைகள் கொடுத்துக் கொண்டே இருந்தால்தான், பாகிஸ்தான் தன் வாலைச் சுருட்டிக் கொண்டு சும்மா இருக்கும்.

உடும்பு பிடிக்கப் போனவன் உடும்பு தன் கையை விட்டால் போதுமெனக் கதறுவது போன்று, காஷ்மீரைப்

பிடிக்கப்போன பாகிஸ்தான், காஷ்மீர் தன் கையை விட்டுப் போனால் போதுமென்று கதறும்படி நாம் செய்யவேண்டுமே யல்லாது, நாம் பாகிஸ்தானுடைய போக்கிரித்தனத்துக்கு உபசாந்தி தேடிக் கொண்டிருக்கக்கூடாது. போர் நிறுத்த எல்லைக் கோட்டுக்கப்பால் நாமும் நமது பகுதியிலுள்ள காஷ்மீரிகளை அனுப்பி அங்குள்ள மக்கள் கிளர்ச்சி செய்யு மாறு தூண்ட வேண்டும். முள்ளை முள்ளால்தான் களைந்தாக வேண்டுமென்ற முன்னோர் கண்டுணர்ந்து கூறிய உண்மையை நாமும் கடைப்பிடித்தாக வேண்டும்.

அவனுதைத்தபோதுதான் நாமும் உதைக்க வேண்டு மென்ற சட்டத்தையும், அவன் பிடித்த இடமெல்லாம் அவனுக்கே தத்தமென்ற திட்டத்தையும் விடுத்து, அவன் உதைப்பதற்கு முன் நாமும் அவனை உதைப்போம் என்ற பயத்தை அவன் மனதில் ஏற்படுத்தி, அவன் பிடித்த இடத் தையெல்லாம் மரியாதையாக விட்டுவிடத் திட்டம் போட வேண்டும்.

ஜெய் ஹிந்த்!

திருச்சி மாவட்ட சுதந்திரக் கட்சி 3-வது அரசியல் மாநாடு

கரூர்—28-8-1966

பெரியோர்களே!

அரசியல் வாழ்விலிருந்து விலகி, எஞ்சிய வாழ்நாளை அமைதியுடன் கழிக்கவெண்ணிய என்னை, ஊழின் வலிமை யானது பிடரியைப் பிடித்து உந்திக்கொண்டு வந்து உங்கள் முன்னிலையில் நிறுத்தியுள்ளது. இந்த வாய்ப்பினைப் பெறற்கரிய பேறெனக் கருதிப் பணியாற்றுவேனாக. எனக்கு இப் பெருமையளித்த வரவேற்புக் கமிட்டியினர்க்கு எனது மனமார்ந்த நன்றி கூறுகின்றேன்.

நாம் பெற்ற சுதந்திரம்!

நமது நாடு சுதந்திரம் பெற்றுப் பத்தொன்பதாண்டுகளாகிவிட்டன. தப்புகள் செய்வதற்கு நமக்குச் சுதந்திரம் வேண்டுமென்று அந்த நாட்களிலே நாம் வீறுகொண்டு போராடினோம். நாம் சொன்னசொல் தவறாமல், சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து தப்புகள் மேல் தப்புகளாகச் செய்து வருகிறோம். அவற்றின் விளைவாக இன்று நம் நாட்டிலே பெரியதொரு பொருளாதாரப் பூகம்பம் தோன்றியுள்ளது. இனிமேலாகினும் நாம் திருந்தாவிட்டால் நமது கதி என்னாகும்?

சுயராஜ்யம் நமது பிறப்புரிமையென்று அக்காலத்தில் நாம் முழக்கினோம். சுயராஜ்யப் போராட்டத்திலே முன்னின்று நம்மை அழைத்துச் சென்ற மகாத்மா காந்தி நாம்

விழைந்த சுயராஜ்யம் எத்தகையதென வரையறுத்துக் கூறவில்லை. அதற்கொரு விளக்கம் தந்து, வரையறுத்துக் கோடுகள் கட்டி, எதிர்காலச் சந்ததியாரை அவர் கட்டுப் படுத்த விரும்பவில்லை போலும்.

சுயராஜ்யத்திற்கு மகாத்மா விளங்கந் தரவில்லையாயினும் அவர் தம் கருத்திற்கொண்ட சுயராஜ்யம் எத்தகையதென்றறியப் போதுமான ஆதாரங்கள் அவரது பேச்சிலும், எழுத்திலும் பொதிந்து கிடக்கின்றன.

மனித வர்க்கத்தின்மீது மகாத்மா பூண்டிருந்த அபார நம்பிக்கை செப்புந்தரமன்று. அரசாங்கத்தினிடத்தில் அவர் அத்தகைய நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

ஒவ்வொரு மனிதனும் அவனது மனப் பழக்கத்தின்படியே வாழ்க்கை நடத்துகிறுன் என்பதை அவர் கண்கூடாகக் கண்டும், ஒவ்வொரு மனிதனும் அவனவனது சுதந்திரமான எண்ணப்படியே வாழ்க்கை நடத்த அனுமதிப்பதுதான் சிறந்ததெனஅவர் சந்தேகமறக் கருதினுர். ஒரு மனிதன் பிறமனிதனைச் சுரண்டுவதையும் ஒரு மனிதன் மனம் நோவப் பிற மனிதன் வாழ்வதையும், எவ்வளவு தூரம் குறைத்தும், தவிர்த்தும் வாழ்க்கை நடத்த முடியுமென்பதை நிர்ணயிக்கும் பேராற்றலும், பண்பாடும், சிந்தனு சக்தியும், நல்லெண்ணமும் மனிதன் வாய்க்கப் பெற்றவன் என்ற திடமான நம்பிக்கை மகாத்மாவிடம் குடிகொண்டிருந்தது.

ஆனுல் அரசாங்கம் அதிகபட்சமான அதிகாரம் வகிப்பதை அவர் வெறுத்தார். அந்நிலை கண்டு அஞ்சினுர். மக்களை மக்கள் சுரண்டி வாழும் தீயபழக்கத்தை சட்டங்கள் மூலம் அரசாங்கத்தால் ஓரளவு குறைக்க முடியுமாயினும், மக்கள் சமுதாயத்தின் சகலவிதமான முன்னேற்றத்திற்கும், உயர்ந்த பண்பாட்டிற்கும், அடிப்படை ஊற்ருக அமைந்துள்ள மனிதனின் தனித்தன்மையை—Individuality—ஒரு

மனிதனைப் பிற மனிதர்களிடமிருந்து பிரித்துக் காட்டும் அற்புத சக்தியை—தனி மனித சுதந்திரத்தை—அரசாங்கம் அழித்துவிடுமென அவர் பெரிதும் அஞ்சினார்.

உலகிலே எண்ணற்ற மக்கள் பிறர் பொருட்டுத் தங்கள் உடல் பொருள் ஆவியனைத்தும் தத்தம் செய்துள்ள தியாகப் பெருவாழ்வை, மகோன்னத மனோநிலையை, மனித வரலாற்றில் ஊடுருவி ஒளிர்வதைக் காணமுடியும். ஆனால் ஏழை மக்களின் தனிப் பெரும் நலனுக்காகவே ஆட்சிபுரிந்த அரசு ஒன்றையேனுங் கண்டதுண்டா, காணமுடியுமாவென்று மகாத்மா கடாவினார்.

ஆண்டவனிடத்திலே அவருக்கு அசையாத நம்பிக்கையிருந்தது. வாய்மையே கடவுள் என்றார். சகலத்திலும் சத்தியத்தையே காண விழைந்தார். உள்ளும் புறமும் அகிம்சை வழி நின்றால்தான் சத்தியத்தைக் காண முடியுமென்றார். அகிம்சை வழி நிற்க ஆன்ம பலம் தேவை என்றால் ஆன்ம பலம் பெறுவதற்கு நல்லொழுக்கம் வேண்டுமென்றார். நல்லொழுக்கம் திகழ அன்பும், அறனும், அய்ம்புலனடக்கமும் தேவை என்றார்.

கள்ளம், கபடம், காமக்குரோதம், மதமாச்சர்யம் என்ற மாசுகள் நீங்கப்பெற்று, டாம்பீகத்தையும், படாடோபத்தையும் அறவே கைவிட்டு எளிய வாழ்க்கையும் உயரிய சிந்தனையும் மேற்கொண்டு, மக்கள் சேவையே ஆண்டவனுக்காற்றும் சேவையென மனதிற்கொண்டு வாழ்வதே வாழ்க்கையென்றார்.

கடையனும் கடைத்தேற வழி காணவேண்டுமென்றார் இலட்சியம் எவ்வளவு பெரிதாயினும், அதனையடையும் மார்க்கமும் பரிசுத்தமாய் இருக்க வேண்டுமென்றார்.

ளிற் பெரும்பாலோர் வாழும் கிராமங்களின் நலனையே முன்னிறுத்திப் பாடுபட வேண்டுமென்றார்

வாழ்க்கைக்கு இன்றியமையாத விவசாயத்திற்கும், கிராமக் கைத்தொழில்களுக்கும் முன்னிடம் தரவேண்டுமென்றார்.

கிராம மக்களுக்குச் சத்தான உணவும், குடியிருப்பு வசதியும், தொழில் நுணுக்கமும் கிடைக்க வழி வகை செய்ய வேண்டுமென்றார்.

நிர்வாகச் செலவையும், வரிப்பளுவையும் குறைக்க வேண்டுமென்றார். அரசியல் அமைப்பும் கட்டுக்கோப்பும் கிராமங்களை அஸ்திவாரமாகக் கொண்டிருக்க வேண்டு மென்றார். சாதமும் குழம்பும் கலந்துண்பதைப் போன்று விவசாயமும் கைத்தொழிலும் ஒன்றுடனொன்று இணைந்து நடைபெறச் செய்ய வேண்டுமென்றார்.

இவ்வாறாகப் பொய்யும், புனைசுருட்டும், தண்டமும், கொலையும், போரும் பூசலும், லஞ்சமும் சூதும், வஞ்சனையும் வாதும், சுரண்டலும் ஊழலும் நிறைந்து, சோர்வும் இருளும் மண்டியிருந்த அரசியல் வாழ்வில், தெள்ளிய ஒளியும், தெளிந்த அறிவும், இணையில் ஈகையும், ஏழையர்பால் இரக்கமும், சேவையும் பணிவும், தியாகமும் தூய்மையும், நட்பும் உறவும், பக்தியும் பண்பும், அகிம்சையும் வாய்மையும் பெருகச் செய்து, அச்சமும் அயர்வும் போக்கி, நம்மைச் சுதந்திர மனிதர்களாகப் புதுக்கி வைத்தார். நாமும் சுய, ராஜ்யம் பெற்றோம்.

செயற்கரிய செய்த பெரியார்

அத்தனை நற்பண்புகளையும் அவர் வாய்ப்பேச்சால் அன்றித் தமது வாழ்க்கையில் நடத்திக் காட்டிய உத்தமர் அல்லவா? அவர் தமக்கென ஒரு செப்புக்காசையும் வைத்துக் கொள்ளவில்லை. தமது புத்திரர்களுடைய எதிர்கால வாழ் வைப்பற்றியும் அவர் கவலை கொள்ளவில்லை. அவரது தர்ம பத்தினியார் மீது ஒரு மூக்குப் பொட்டும் விட்டு வைக்க வில்லை. அவருக்கெனச் சொந்த வீடோ, நிலபுலன்களோ,

பிற உரிமைகளோ அவர் வைத்துக் கொள்ளவில்லை. முழங் கால் மூடுமளவுக்கு ஒரு ஒற்றை ஆடை மட்டும் அணிந்திருந் தார். சுகபோக வாழ்வைத் துறந்து சேவா கிராமத்தில் ஒரு மண் குடிசையைத் தம்மிருப்பிடமாகக் கொண்டார். மூன்றும் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்தார். மூன்று அணுச் செலவில் தினசரி வாழ்க்கை நடத்தினர். தில்லிமா நகருக்குச் சென்றால் பங்கிகள் (தோட்டிகள்) காலனியில் தங்கினர்.

பல பொது ஸ்தாபனங்கள் நிறுவி, அவற்றிற்குத் தலைமை தாங்கி நடத்தினர். ஒவ்வொரு சல்லிக்காசுக்கும் சரியான கணக்குகள் சமர்ப்பித்தார். பிறர் செய்த குற்றங்களுக்காகத் தம்முடலை வருத்தித் தவங்கிடந்தார், நாடோறும் ராட்டையில் நூல் நூற்றார். ஓய்விலாது உழைத்தார்.

அவரது பிறந்த நாளன்று ஊர்வலங்கள் நடத்தப்பட வில்லை; வளைவு தோரணங்கள் கட்டப்படவில்லை. வாண வேடிக்கைகள் நடைபெறவில்லை, பிறந்தநாள் கேக்குகள் வெட்டப்படவில்லை. சல்லிக்காசும் ஊதாரித்தனமாகச் செலவு செய்யப்படவில்லை. அந்நாளில் நூற்பு வேள்வி நடைபெற வேண்டுமென்றார். உபவாசமிருந்து ஆண்டவனை வழிபட வேண்டுமென்றார். அரிஜனங்கள் வாழும் சேரி களைச் சுத்தம் செய்யுமாறு கூறினர். ஏழைகளுக்குப் பட்டி தொட்டிகள் தோறும் பட்டினங்களெங்கும் அந்நாளில் அன்ன மளிப்பதைப் பொதுமக்கள் தங்கடனாகக் கொண்டனர்.

ஒரு சம்பவம்

அவர் அகில பாரத சர்க்கா சங்கத்தின் தலைவராக இருந்தார். நான் அச்சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளையின் காரியதரிசியாகப் பணியாற்றினேன். எனது சொந்தப் பணத்திலும் சொந்தச் செலவிலும் ஒரு கார் வைத்துக் கொண்டிருந்தேன். தமிழ்நாடு முழுவதும் பல ஊர்களுக்

கும், பல கிளைகளுக்கும் காரில் பிரயாணம் செய்வது அக் காலத்தில் மிக எளிதாகவும் சிக்கனமாகவும் இருந்தது. மூவாயிரம் ரூபாய்க்கும் அக்காலத்தில் ஒரு புத்தம் புதிய கார் கிடைக்கும். ஒரு காலன் பெட்ரோலின் விலை அன்று சென்னையில் பதினைந்தணாவாக இருந்தது. தரித்திர நாராயணர் களுக்குச் சேவை செய்யும் ஒருவன் காரேறிச் சென்றால் அவனுக்கும், அவன் சேவை செய்பவர்களுக்குமிடையே ஒரு பிரிவு காணப்படுமாதலால் கார் வைத்துக்கொள்ளவேண்டா மென மகாத்மா எனக்கு அறிவுறுத்தினார். அவர் சொற்படி நான் காரை கைவிட்டேன்.

சர்க்கா சங்கம் எனது நிர்வாகத்தின் கீழ் வந்த முத லாண்டில் அறுபதினாயிரம் ரூபாய் நிகர லாபம் காட்டினேன். நிர்வாகத் திறமையினாலும், பல துறைகளில் சிக்கனத்தைக் கையாண்டதாலும் இலாபம் காட்ட முடிந்ததென்பதை ஒப்புக்கொண்ட போதிலும், அந்த இலாபத்தின் நன்மையை நூற்பவர்களும், நெய்பவர்களும், கதருடுத்துபவர்களும் அடையச் செய்ய வேண்டுமென்றே மகாத்மா விரும்பினார். அவர் விரும்பியவாறே அத்தொகையும், அதற்குப் பிந்திய ஆண்டுகளில் கிடைத்த இலாபமனைத்தும், நூற்போர், நெய் வோர் நலனுக்காகவும், பஞ்சு விலை ஏற்ற இறக்கத்தை சமம் செய்வதற்காகவும் ஒதுக்கப்பட்டது.

ஒருமுறை ஒரு நிர்வாகப் புகைச்சல் காரணமாக நான் என் பதவியை இராஜினாமாச் செய்தேன். என்னை விடுவிக்கச் சங்கர்லால் பாங்கரும் பம்பாயிலிருந்து வந்திருந்தார். ஆனால் இராஜாஜி நான் விலகுவதை விரும்பவில்லை. சேவா கிராமம் சென்று மகாத்மா காந்தியை நேரில் பார்க்குமாறு கடிதங் கொடுத்து அனுப்பினார். உண்மையறிந்த மகாத்மா எனது இராஜினாமாக் கடிதத்தைக் கிழித்தெறிந்துவிட்டு, அவருடன் உட்கார்ந்து உணவருந்துமாறு சொன்னார். நான் வர்தாவில் சேத் ஜம்னலால் பஜாஜ் இல்லத்தில் எனது உணவை முடித்துக்கொண்டு வந்ததாகத் தெரிவித்தேன். அப்படி

யாளுல் ஒருநாள் தங்கியிருந்து சாப்பிட்டுவிட்டுப் போமாறு தெரிவித்தார். உடனே கஸ்தூரிபா அம்மையாரைக் கூப்பிட்டு நாளை பகல் அய்யாமுத்து இங்கு உணவருந்த வருவான். அரிசி இருக்கிறதா என்று கேட்டார். அடுத்த நாள் அம்மையார் எனக்கு அரிசிச் சோறே படைத்தார்!

திருப்பூர், காந்திநகரில், சர்க்கா சங்கத்துக்குப் பதிமூன் றுயிரம் ரூபாய் செலவில் ஒரு கோடவுன் கட்டவேண்டு மென்று மகாத்மாவுக்குக் கடிதம் எழுதினேன். ஏழைகள் பணத்தைக் கல்லிலும் காரையிலும் முடக்குவதைத் தாம் விரும்பவில்லையென்று அவர் தெரிவித்தார். நான் கோபித்துக் கொண்டு என் வேலையை ஒப்புக்கொள்ளுமாறு தந்தி கொடுத் தேன். மாஜி விளம்பர மந்திரி எஸ். இராமநாதன் என்னிட மிருந்து 1941-ல் பொறுப்பேற்றுக் கொண்டார். இராஜாஜி எனது செய்கையை ஆதரிக்கவில்லை.

பொதுக் காரியங்களில் மகாத்மா எவ்வளவு அக்கறையும் கண்காணிப்புங் காட்டினுர் என்பதை இச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றதல்லவா?

சுதந்திரம் வந்தபின்

சுதந்திரம் வந்தபின் காங்கிரசைக் கலைத்துவிடுமாறு மகாத்மா கூறிய யோசனையைக் காங்கிரசுக்காரர் நிராகரித்து விட்டனர். அதன் பலாபலனைத்தான் இன்று நாம் அநுபவித்து வருகிறோம்.

ஆளுங்கட்சியின் அறியாமையாலும், ஆணவத்தாலும் பொதுமக்கள் கஷ்ட நஷ்டமுற்று, நாடு நாசமடைந்த போதிலும், காங்கிரஸ் ஆட்சியின் தவறுகளையே மூலதன மாகக் கொண்டு ஒரு மாபெருங்கூட்டம் இன்புற்று வருகிறது.

கொழுத்த சம்பளமும் கிம்பளமும் பெறும் அதிகாரிகள், மாதம் பத்தாயிரம் இருபதாயிரம் ஏப்பமிடும் மந்திரி பிரதானிகள், திட்டப் பணத்தைக் கொள்ளையடிக்கும் கண்ட்

ராக்டர்கள், எண்ணற்ற இதர படைகள், இறக்குமதி ஏற்று மதி லைசென்ஸ்களையே பேரம் செய்து பணம் சம்பாதிப்பவர் கள், பெர்மிட்டுகளும் கோட்டாக்களும் பெற்றுக் கொள்ளை யடிப்பவர்கள், தரக்குறைவான பொருட்களை உள் நாட்டில் உற்பத்தி செய்து ஏகபோக உரிமையுடன் எடுத்து கொள்ளை யடிப்பவர்கள், மோட்டார்களை டெலிவரி எடுத்த மறுநாளே மேல் விலைக்கு விற்றுப் பணம் சம்பாதிப்பவர்கள், கண்ட்ரோல் பொருட்களைக் கருப்புச் சந்தையில் விற்பவர்கள், கிடப்ப தெல்லாம் கிடக்கட்டும் கிழவியைத் தூக்கி மணையில் வை யென்று அயல் நாடுகளுக்குத் தூது செல்லும் பேர்வழிகள், தேர்தல் காலங்களிலே ஓட்டுச் சேகரிக்கும் கங்காணிகள், மேல் சபைகளில் நியமனம் பெற்று அலங்காரமாக வீற்றிருக் கும் புதுக் கவிக்குஞ்சரங்கள், அரசாங்க விளம்பரத்தைக் கொண்டே நடைபெறும் பத்திரிகைகள், அரசாங்கத்தைப் போற்றி வயிறு வளர்ப்பதையே தொழிலாகக் கொண்ட பத்திரிகை ஆசிரியர்கள், உத்தியோகங்களுக்கும் உத்தியோக உயர்வுகளுக்கும் தூது செல்வதையே தொழிலாகக் கொண்ட பிரமுகர்கள், மாவட்ட நிலையில் அதிகாரிகளின் வாலையும் காலையும் பிடித்துக் காரியங்களைச் சாதித்து கைக்கூலி பெறும் கதர்குல்லாக்காரர்கள், காங்கிரஸ் சர்க்காரின் டம்பாச்சாரித் தனத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் சமூகநல இலாகா களிலும் பஞ்சாயத்து யூனியன்களிலும் யாதொரு வேலையும் கவலையுமில்லாது தூங்கும் சோம்பேறிகள், மாதர் நல இலாகாவில் உள்ள அலங்கார பூஷணிகள், சர்க்காரின் பொதுத்துறை ஸ்தாபனங்களில் வேலை செய்யாமலே சம்பளம் வாங்கும் கால்சட்டைக்காரரர்கள் அவ்விளிபக்கக் கூட்டத்தில் அடங்குவார்கள்.

இவர்கள் எல்லோரும் சர்வ சாதாரணமானவர்கள். இவர்களைக் காட்டிலும் மேலானவர்கள் அடங்கிய உயர் படையொன்றுமிருக்கிறது. அப்படையில் பட்னுயக்குகள், பக்ஸிகுலாம் முகமதுக்கள், கெய்ரோன்கள், கிருஷ்ணமாச் சாரிகள், குப்தாக்கள் போன்ற V.I.P. கள் எண்ணற்றவர்.

மகாத்மா காந்தி உயிரோடிருந்த காலத்தில் கதரைக் கட்டிக்கொண்டு காட்சிக்கு எளியராய், இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா என்றிருந்தோர் பல்லோர்கள் இன்று இவர்கள்தானா அவர்கள் என்று அதிசயிக்கும்படி ஊழ் வினையால் மாறிவிட்டார்கள்.

மண்குடிசையில் வாழ்ந்த மகாத்மாவுக்கு வாரிசாக வந்த பண்டிதர் நேருவே தீன்மூர்த்தி பங்களாவைத் தனது வாஸஸ்தலமாகக் கொண்டு, அதன் பராமரிப்புக்குத் தினம் இருபத்தையாயிரம் செலவு செய்ததாக ராம்மனோஹர் லோகியா கூறினார்.

பண்டித நேரு வெளிநாடு சென்றபோதெல்லாம் தம் முடன் ஒரு படை திரட்டிக்கொண்டு போனதோடல்லாமல், தமது சொந்த மகள் இந்திராவையும் உதவிக்கு அழைத்துச் சென்றார். புலிக்குப் பிறந்தால் நகம் இல்லாமலா போகும்? இந்திரா அம்மையார் அண்மையில் அமெரிக்கா சென்றபோது தமது முடி அலங்காரத்தைக் கவனித்துக் கொள்ள தில்லியிலிருந்து பூரி எனும் பெயர் பூண்ட ஆரணங்கை அழைத்துச் சென்றதாக 'இன்சைட்' பத்திரிகைச் செய்தி கூறுகிறது!

தீன்மூர்த்தி பங்களாவையும், அதன் விலைமதிக்க வொண்ணாத நிலப்பரப்பையும், பூங்காவையும் நேருவின் நினைவுக்காக அர்ப்பணித்துவிட்டு, அதன் பராமரிப்புக்குப் பல்லாயிரம் ரூபாய் செலவு செய்வதோடல்லாமல், அந்நிய நாடுகளெங்கிலும் நேருவின் பிரபல்யத்தை விளம்பரப் படுத்த புகைப்படக் கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. அமெரிக்காவிலும், கெய்ரோவிலும் இந்திரா காந்தி அப்படக் காட்சி சாலைகளை அண்மையில் திறந்து வைத்ததாகப் பத்திரிகையில் படித்தோம். தில்லிமா நகரத்திலே வீடு வாசல் இல்லாமல் இருபதாயிரம் பேர்கள் தெருக்களிலே வாசம் செய்கிறார்களாம். அப்பஞ்சை மக்களுக்குத் தீன்மூர்த்தி

பங்களாவைத் திறந்து விட்டிருந்தால் எவ்வளவு சிறப்பாக இருந்திருக்கும்!

லால்பகதூர் சாஸ்திரி பிரதமராயிருந்தபோது ஒரு சிறிய பங்களாவில் குடியிருந்தார். இந்திரா காந்திக்கு அங்கே குடி புகப் பிரியமில்லை. டெல்லியிலுள்ள ஐதராபாத் மாளிகைமீது அவர் கண் வைத்திருக்கிறராம். அம்மாளிகையில் தற்போதிருக்கும் அரசாங்க அலுவலகங்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதென்ருல் மாதாமாதம் பல்லாயிரம் வாடகை கொடுக்கவேண்டும். மற்றும் இந்திரா குடியேறுமுன் ஐதராபாத் மாளிகையை அலங்கரிக்க மூன்று லட்சம் செலவாகுமாம்!

மகாத்மா காந்தியின் காலடியில் உட்கார்ந்து உபதேசம் பெற்றவர்களே இப்படி டாம்பீகமும் ஊதாரிச் செலவும் செய்வார்களாளுல் மற்றவர்களைப் பற்றிப் பேச நமக்கு வாயெங்கே?

நமது காமராசர்

ஆம்! தில்லிக்கு ராசாவானுலும் தல்லிக்கு மகன்தானே! அவர் நமது மதிப்பிற்குரிய காமராசர்தான். நமது நண்பரும் பழைய சகாவும்தான். அவர் நான்குமுழ வேட்டியோடும் அரைக்கை சட்டையோடும் ரஷியாவில் காட்சியளித்தது நமக்குப் பெருமையளிக்கிறது. ஆளுல், அவர் சென்றவாண்டிலும், இந்த வாண்டிலும் பல லட்சக்கணக்காக ரூபாய் செலவழித்துத் தமது பிறந்த நாளை ஊர்வலத்தோடும், அணிவகுப்போடும் மஹா ஹிட்லர் போன்று கொண்டாடியதை நம்மால் பாராட்ட முடியவில்லையே! இச் செய்கை மூலம் அவர், குரங்கு தான் கெட்டதுமில்லாமல் வனத்தையும் சேர்த்து அழித்து விட்டதுபோல நடந்து கொண்டாரேயன்றி, நமது தற்கால எதிர்கால சந்ததிகளுக்கு

ஒரு நல்வழி காட்டவில்லை. உலகெங்கும் பலாத்காரத்திலும், படாடோபத்திலும் உழன்று திரியும் சர்வாதிகாரிகளல்லவா இத்தகைய ஊர்வலங்களும் அணிவகுப்புகளும் நடத்துவார்கள். காந்தி வழி நிற்பவர்களுக்கு இது ஏற்றதாகத் தெரியவில்லையே. ஆர்ப்பாட்டங்களில் நம்பிக்கை கொண்ட கம்யூனிஸ்டுகளுக்கும், இதர கட்சியினர்க்கும் இவர் செய்கை தூபம் போடுவது போலல்லவா இருந்தது.

முன்பெல்லாம் காமராசர் அதிகம் பேசமாட்டார். காரியத்திலேயே கண்ணாக இருப்பார். ஆனால் இப்போது பேசவும் கற்றுக்கொண்டார். அதிலும் பிறரை ஏமாற்றும் ஏமாற்றுப் பேச்சுகளில் அவர் கை தேர்ந்தவராகிவிட்டார்.

திருச்சியில் ஒரு பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதைக் கேளுங்கள்!

"ஒரு ஏழை மனிதனுடைய வீட்டுச் சுவர் இடிந்து போச்சு. அதைக் கட்டுவதற்கு அரை மூட்டை சிமெண்ட்டுக்காக அவன் ஒரு நாள் முழுவதும் சுற்றிக் கிடைக்காமல் அலுத்துப்போய்த் தன் வீட்டுத் திண்ணையில் வந்து உட்காருகிறான். அப்போது எதிர் வீட்டுக்காரன் ஒரு லாரியில் ஐம்பது மூட்டை சிமெண்டை கொண்டுவந்து இறக்குவதைப் பார்க்கிறான். அவன் பணக்காரன்! அரை மூட்டைக்கலைந்த ஏழையின் வயிறு எப்படி எரியும்! இந்த அநியாயத்தைப் போக்கத் தான் சோசலிஸம் வரணும்னேன்."

எப்படி வாய்ச்சாலம் பார்த்தீர்களா? இப்பேச்சில் எவ்வளவு பித்தலாட்டம் நிறைந்திருக்கிறது. திருடியவன் ஐயோ திருட்டுப் போய்விட்டதே என்று அலறுகிற மாதிரியல்லவா இருக்கிறது.

"ஏம்பா; சிமெண்டு கன்ட்ரோலே எடுத்துப்புடேன்" என்று எவனும் அக்கூட்டத்திலே துணிந்து கூறவில்லை,

கோயமுத்தூரில் ஒரு காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் பேசும்போது காமராசர் சொல்லுகிறார்:—

"ஏழைக் குடியானவன் அரும்பாடுபட்டு இரவும் பகலும், மழையிலும், வெய்யிலிலும், சேற்றிலும், புழுதியிலும் உழைக்கிறான். அவன் உழைக்காவிட்டால் நாம் பட்டினி கிடக்க வேண்டியதுதான். அப்படியிருக்க அவன் நிலத்துக்கு வரி போடலாமா?" என்றவுடன் காமராசருக்கு ஜே என்ற கோஷம் வானைப் பிளக்கிறது.

"ஏம்பா, நிலவரியை எடுத்து விடும்படி ஒரு சட்டம் செய்வதுதானே" என்று ஒரு முட்டாள் பயலும் அந்தக் கூட்டத்தில் துணிந்து கூறவில்லை!

மற்றொரு அதிசயமான காட்சியைக் கேளுங்கள். சென்னையில் ரயிலை விட்டிறங்கி காமராசர் பிளாட்பாரத்தில் நடந்து வருகிறார். அங்கே ஒரு சோடா விற்கும் பையன் நின்று கொண்டிருக்கிறான். காமராசர் அப்பையனை அணுகி அவன் தலையைத் தடவிப் பார்த்து,

"ஏம்பா தலைக்கு எண்ணெய் தடவலை" என்கிறார். அப் பையன் சிரிக்கிறான்.

"சோடா விற்றால் தினம் எம்பாத்து துட்டு கிடைக்கும்" என்று கேட்கிறார். அவன் எட்டணாத் துட்டு கிடைக்குமென்றான்.

"உன் அப்பாவுக்கு என்ன வேலை" அடுத்த கேள்வி.

"ரிக்ஷா இழுக்கிறார்."

"என்ன கிடைக்கும்?"

"தினம் ஒரு ரூபா அம்பிடும்!"

"அப்படியா! ஐயோ பாவம்" என்று நகர்கிறார்.

அவர் சென்ற பிறகு சோடா விற்கும் பையனைப் பார்த்து மற்ருெருவர்:

"ஏம்பா! இவரு என்ன வானத்திலிருந்து குதிச்சு வந்தாரா. அல்லது சீமையிலிருந்து இப்பத்தான் கப்பலை விட்டு இறங்கி வராரா. எல்லாம் புதுசாப் பாக்கிறமாதிரி கேட்டுட்டுப் பூராரே" என்று சொல்லிச் சிரித்தாராம்!

சேலத்திலே ஒரு கூட்டத்தில் பேசும்போது காமராசர் சொல்லுகிருர்:-

"யானைக்கு ஒரு கவளம் தவறி நிலத்தில் விழுந்தால் அது ஒரு கோடி எறும்புக்கு உணவாகும்; பணக்காரன் ஒருவேளை சாப்பாட்டைக் குறைத்தால் அநேக ஏழைகளுக்கு உணவாகும்" என்று.

இவருடைய ஜன்மநாள் உற்சவத்தில் வீணுக்கப்பட்ட நாற்பது லட்சம் ரூபாயைக் கொடுத்திருந்தால் ஒரு ஊருக்கே ஒரு வருஷத்துக்கு உணவாகுமேயென்று இவர் சாவதானமாகச் சிந்தித்துப் பார்த்தால் உணருவார்.

இப்படியெல்லாம் காமராசர் செய்வதையும், சொல்வதையும் மக்கள் கேட்டு வாளாவிருப்பது ஊழின் வலிமையல்லவா?

நமது ஐந்தாண்டுத் திட்டங்கள்

கடந்த பதினைந்தாண்டுகளில் நமதாளுங்கட்சியார் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு "நிறைவேற்றி" யிருக்கிருர்கள். இத்திட்டங்கள் போட்ட திட்டக் கமிஷனுக்குச் செலவாக ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய். இத்திட்டங்களுக்குச் செலவானது சுமார் இருபதிணுயிரம் கோடி ரூபாய். இதன் பலனுக நமது தேசிய வருமானம் 3.3 சதமும், நமது மக்களின் சராசரி வருமானம் 1.14 சதமும் உயர்ந்திருக்கின்றன.

இவற்றால் நமது உணவு உற்பத்தி பெருகிற்றா? தொழில் வாய்ப்புகளேனும் பெருகிற்றா? உற்பத்தி உயர்ந்ததா? பற்றாக்குறை நீங்கியதா? பஞ்சம் தீர்ந்ததா? இல்லை.

பணப்புழக்கம் பெருகிற்று. கரன்ஸி நோட்டுகள் அதிகரித்தன. கடன்சுமை உயர்ந்தது. ரூபாயின் மதிப்புக் குறைந்தது. நமது கும்பி காய்ந்தது. நமது நாணயம் கப்பலேறிப் போய்விட்டது. ஒரிசாவில் மக்கள் பட்டினியால் கூட்டங்கூட்டமாக மடிந்தார்கள்.

நாம் வாங்கியுள்ள கடனுக்கு வருஷா வருஷம் வட்டி நானூறு கோடி ரூபாய்! ரூபாயின் மதிப்புக் குறைவால் அது 668 கோடியாக உயரும். நாடோறும் கப்பல் கப்பலாக உணவு தானியங்கள் வந்திறங்குகின்றன. அவற்றிற்கு வருடம் அறுநூறு கோடி ரூபாய்!

நமது வரிச்சுமை உயர்ந்துகொண்டே போகிறது. பணக்காரர்களுக்குத்தான் வரி போடுவதாகச் சொல்லப்படுகிறது. பணக்காரர் ஏழைகளைச் சுரண்டச் செய்து, அச்சுரண்டல் பணத்தில் அரசாங்கம் பங்கு போட்டுக் கொள்வதால் யாருக்கு என்ன பயன்? ஒருவனைத் திருடச் சொல்லி அவனிடம் பங்கு பெறுவது போலல்லவா இருக்கிறது?

விலைவாசிகள் விஷம்போல் ஏறிவிட்டன. தனி மனிதனும் தனிக் குடும்பமும் வரவையும் செலவையும் சரிக்கட்ட முடியாமல் தத்தளிக்கின்றன.

திட்டங்களின் பேரில் இத்தனை கோடி வாரி இறைக்கப் பட்டும், நமது நாட்டுப்புறங்களில் ஒரு சின்னஞ்சிறு தொழிலும் புதிதாக ஆரம்பிக்கப்படவில்லை. அப்பழைய ஏரும், பழைய ராட்டும், பழைய கஞ்சியும்தான் நாம் கண்ட பலன். நவீன விஞ்ஞானத்தின் உதவி நமது வியசாயத்துக்கும்,

கிராமத் தொழில்களுக்கும் உயிரூட்டவில்லை. ஏழைக் குடியானவனுடைய வாழ்க்கைத்தரமுயர எத்தகைய புது முயற்சியும் செய்யப்படவில்லை. வெள்ளைக்காரன் காலத்தில் பூட்டப்பட்ட மின்சாரப் பம்புசெட்டுகளைக் கண்டுதான் கிராமவாசிகள் பூரிப்படைகிறார்கள். திட்டங்களுக்காக வாரியிறைக்கப்பட்ட பணமெல்லாம் எங்கே யாரிடம் போய் ஒளிந்து கொண்டதெனக் காங்கிரஸ் தேவதைகளுக்கே தெரியவில்லை.

பெரிய பெரிய அரசாங்க மாளிகைகள் கட்டுவதற்கு மட்டும் மூவாயிரம் கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. சென்றவாண்டில் அந்நிய நாட்டிலிருந்து ஐம்பத்தி மூன்று லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சீட்டுக் கட்டுகள் இறக்குமதியாயினவாம்!

பெரிய பெரிய கனரகத் தொழிற்சாலைகள் பல கட்டப்பட்டிருப்பது உண்மைதான். அவற்றிலே பிரமாண்டமான இயந்திரப் பூதங்கள் பூட்டப்பட்டிருப்பதும் உண்மைதான். அவ்வியந்திரங்கள் முழுமையும் முழு மூச்சில் வேலை செய்தால், அவ்வேலையைச் சமாளிக்க எத்தனை ஆட்கள் தேவைப்படுமோ அத்தனையாட்களையும் திறப்பு விழாத் தினத்தன்றே பெரும்படையாகத் திரட்டி விட்டார்கள் என்பதும் உண்மைதான். அடிப்படையினர் குடியிருக்கப் பலகோடி ரூபாய் செலவழித்துப் பெரிய பெரிய நகரங்களைச் சகல நவீன வசதிகளுடன் நிர்மாணித்து விட்டார்களென்பதும் உண்மைதான். அப்புதிய நகரங்கள் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகத் திகழ்கின்றவென்பதும் உண்மைதான்.

ஆனால்,

ஆம் ஆனால், அத்தொழிற்சாலைகள் எதிலும் நாளது வரை முழுமையாக வேலை துவக்கப்படுவதற்குப் போதுமான மூலப்பொருட்கள் இல்லை. தேவையான இயந்திர சாதனங்களும் இல்லை, எரிபொருட்களும் இல்லை. தொழில் நுணுக்

கம் தெரிந்த நிர்வாகிகளும் இல்லை. அவற்றைச் சரிக்கட்ட அந்நியச் செலவாணியும் இல்லை. இவர்கள் போட்ட மதிப்பீட்டிலும் அவை அடங்கவில்லை. அவற்றைத் திட்டமிட்டவர்களின் மண்டையிலே போதுமான மூளையும் இல்லை. இவையே போடப்பட்ட முதலீட்டுக்கு ஏற்றபடி தொழிலுற்பத்தியாகாமல் தடைப்பட்டுள்ளகாரணங்களாகும். இவற்றை நான் சொல்லவில்லை. அரசாங்க அறிக்கைகளே சொல்லுகின்றன.

வங்கத்திலே சிந்திரி உரச்சாலை யென்பதொன்றுண்டு. அதற்கு வேண்டிய கச்சாப் பொருட்களின்மையால் அது கட்டிய நாளிலிருந்து இன்னும் முழு உற்பத்தி தொடங்கவில்லை. ஆனுல் அதை நம்பி ஜப்பானிலிருந்தும் மேற்கு ஜெர்மனியிலிருந்தும் வந்துகொண்டிருந்த உர சப்ளையை நிறுத்திவிட்டார்கள். வெளிநாட்டு உரம் இந்தியா வந்து சேரப் பதினறு ரூபாய். உள்நாட்டு உரம் நாற்பது ரூபாய்!

ராஞ்சி என்னுமிடத்தில் Heavy Engineering Corporation 176 கோடி ரூபாய் மூலதனமிட்டு நமது சர்க்கார் நிர்மாணித்திருக்கிருர்கள். அதிலே வருடமொன்றுக்குமூன்றரைக் கோடி ரூபாய்க்குத்தான் உற்பத்தியாகிறதென்று சுதந்திராக்கட்சி அங்கத்தினர் என். தண்டேகார் சென்ற பட்ஜட் கூட்டத்தின்போது பார்லிமெண்டிலே சுட்டிக் காட்டினுர்.

176 கோடிக்கு நூற்றுக்குப் பத்து சதம் வட்டி கணக்கிட்டால் ஒன்றேமுக்கால் கோடியாகிறது. தேய்மானம் பத்து சதம் கழித்தால் ஒன்றேமுக்கால் கோடி. இரண்டும் சேர்த்தால் மூன்றரைக் கோடி. எனவே வட்டிக்கும் தேய்மானத்துக்கும் சரிகட்டும் அளவுக்கு உற்பத்தியாகிறது. மூலப் பொருளின் கிரயத்தையும் நிர்வாகச் செலவையும் எதிலிருந்து சரிகட்டுவது? மக்களின் வரிப்பணத்திலிருந்து அல்லது கடன் வாங்கும் பணத்திலிருந்துதானே சரிகட்ட

வேண்டும். இந்தியா திவாலாகாமல் என்ன செய்யும்? இந்தப் பொதுத் துறையைத்தான் தாம் விடப் போவதில்லை யென்று காமராசர் மாஸ்கோ சென்று முழங்கினர்!

திட்டக் காலத்திலே நிர்மாணிக்கப்பட்ட எல்லாத் தொழிற்சாலைகளும் கிட்டத்தட்ட இதே நிலையில்தான் வேலை செய்கின்றன. எண்ணெய்ச் செலவே அல்லாமல் பிள்ளை பிழைக்கிற வழியைக் காணோம் என்று பாட்டி சொல்லுகிற மாதிரி. கோடி கோடியாகப் பணம்தான் பாழாகிறதே தவிர நாடு உருப்படியாகும் வழியைக் காணோம்.

சுதந்திராக்கட்சி திட்டம் போடுவதை எதிர்க்கிறதென்று காங்கிரஸார் தலைவர் காமராசர் கூட்டங்கள் தோறும் சொல்லுகிறார். அவர் சொல்வதைக் கேட்கும் பாமர ஜனங் களும் அடடா என்கிறார்கள்.

ரூர்கலா பிலாய்...........போன்ற கனரகத் தொழிற் சாலைகள் இன்னும் முழு வேலை ஆரம்பிக்காத நிலையில் இருக்கும்போதுபொக்காராவில் மற்றொரு இரும்பாலை கட்டப் போகிறோமென்று மந்திரி சுப்பிரமணியம் மார்தட்டிப் பேசினர்.

ஒருவன் ஒரு பெண்டாட்டி கட்டினன். அவளுக்கு வயிற்றுவலி. இரண்டாவதொருத்தியைக் கட்டினன். அவளுக்கு இடுப்புவலி. மூன்றாவதொருத்தியைக் கட்டி னன்; அவளுக்கு ஒரு கால் இல்லை. கடைசியில் நான்காவ தொருத்தியைத் தேடிப் பிடித்துக் கட்டினன். அவளுக்கு ஒரு கை இல்லை. இதே நிலையில் நமது திட்டக் கமிஷன் நான்காவது திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது. அவர்கள் போட்டுள்ள திட்டப்படி பொக்காராவுக்கு அடுத்தவாண்டில் நூறுகோடி ரூபாய் செலவாகுமென்று தண்டேகார் கூறி யிருக்கிறார். ஷாஜஹான் தாஜ்மஹாலைக் கட்டி வைத்துள்ள

மாதிரி நமது சர்க்காரும் திட்டக் கமிஷனும் பல தொழிற் சாலைகளைக் கட்டிக் காட்சிப் பொருளாக வைத்திருக்கிறார்கள்.

சர்க்காரின் பொதுத்துறையில் போடப்பட்டுள்ள மொத்த முதலீட்டின்மீது நூற்றுக்கு அரை சதவிகிதம் தான் இலாபம் தேறியிருக்கிறது. ஆனால் இத்தொகை யனைத்தும் தனியார் துறையில் முடக்கப்பட்டிருந்தால் அவர்கள் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய வரியனைத்தும் செலுத்திப் பல்லாயிரங்கோடி ரூபாய் பெறுமான பொருட்களை உற்பத்தி செய்து, நூற்றுக்கு ஆறரை சதம் இலாபமும் காட்டி தேசத்தின் சுபீட்ச நிலையை உயர்த்தியிருப்பார்கள். ஆனால் அது ஜனநாயக சோசலிஸம் அல்லவே!

ரூபாயின் மதிப்புக் குறைந்ததேன்?

சர்க்காரின் பூதாகரமான திட்டங்களை நிறைவேற்ற அந்நிய நாடுகளிலிருந்து இயந்திரங்களும் இதர பொருட்களும் தேவைப்படுகின்றன. அவற்றை வாங்குவதற்கு நமக்கு அந்நியச் செலவாணி, அதாவது பிற நாட்டு நாணயங்கள் வேண்டும். அதைச் சம்பாதிப்பதற்கு நமது நாட்டிலிருந்து, நமது தேவைக்கு அதிகப்படியான பொருட்களை ஏற்றுமதி செய்யவேண்டும். ஆனால் நமது தேவைகளைப் பூர்த்தி செய்யப் படாதிருக்கும் நிலையில் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது எப்படி? சுண்டக்காயில் கடிப்பதெத்தனை, கொடுப்பதெத் தனை? அதைக் கடிக்க முயன்றால் நமது கைதான் கடிபடும். எனினும் நமது தேவைகளைக் குறைத்துக்கொண்டு ஏதாவது மிச்சப்படுத்தி நாம் ஏற்றுமதி செய்தால் அப்பொருட்களுக்கு நாம் கோரும் விலை அந்நிய நாடுகளில் கிடைப்பதில்லை. ஏனெனில் நமது பொருட்களின் விலை உலக மார்க்கட்டு நிலவரத்தைக் காட்டிலும் நூற்றுக்கு எழுபது ரூபாய் கூடுதலாக இருக்கிறது. உதாரணமாக நமது நாட்டில் சர்க்கரையின் விலை டன் ஒன்றுக்கு 1200 ரூபாயாக இருக்கிறது. ஆனால் வெளிநாட்டு நிலவரம் ரூபாய் நானூறுக்கும் குறைவாயிருக்

கிறது. எனவே நமது பொருட்களை அந்நிய நாடுகளில் விற்க வேண்டுமானால் அதன் விலையை ஒன்றுக்குப் பாதியாகக் குறைத்தாக வேண்டும். அக்காரணம் பற்றியே ரூபாயின் மதிப்பைக் குறைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

ரூபாய் மதிப்புக் குறைந்ததால் நாம் அந்நிய நாடுகளில் வாங்கும் சாமான்களுக்கும் அதிக விலை கொடுக்க வேண்டியதாயிற்று. இதுகாறும் ஐந்து ரூபாய்க்கு ஒரு அமெரிகன் டாலர் பெறுமான சாமான் நமக்குக் கிடைத்து வந்தது; இனிமேல் ஏழரை ரூபாய் கொடுத்தால்தான் அந்தச் சாமான் நமக்குக் கிடைக்கும்.

இந்த நிலைமை சீர்ப்படவேண்டுமானால் அரசாங்கம் போட்டுள்ள அசகாயசூரத் திட்டங்கள் நமக்குச் சுயபலம் வரும்வரை நிறுத்தி வைக்கப்படவேண்டும். பிறர் உதவியை எதிர்பார்ப்பவன் அசகாயசூரனாக முடியாது. அது போலவே பிறர் உதவியை எதிர்பார்த்துக்கொண்டு நமது சக்திக்கு மீறிய திட்டங்களைப் போட்டால் வெற்றி பெற முடியாது.

நமது நிலைமைக்கும், சக்திக்கும் ஏற்றதும், நடைமுறைக்கு சாத்தியமானதுமான திட்டங்களைத்தான் நாம் போடவேண்டும். அவற்றையும் பொதுமக்களின் பணத்தையும், திறனையும், உழைப்பையும் பயன்படுத்தும் அளவிலும் முறையிலுந்தான் செய்யவேண்டுமேயல்லாது தொட்டதிலெல்லாம் அரசாங்கம் தலையிடக்கூடாது. பொது ஜனங்களால் நிறைவேற்ற முடியாத காரியங்களில்தான் அரசாங்கம் பிரவேசிப்பதென்ற வரையறை வேண்டும்.

தொழில் வளர்ச்சியடைவதற்கு அநுகூலமாக ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, ஏற்றுமதி, இறக்குமதி வரிகளையும் குறைக்கவேண்டும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் உள்ள ஏகபோக உரிமைகள் ரத்து செய்யப்படவேண்டும். தொழிலும் உற்பத்தியும் பெருகத்தக்க சூழ்நிலையை அரசாங்கம் உண்டாக்கிப் பொதுமக்களுக்கும் ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதாயிருந்தால் ஊழலும், லஞ்சப்

பழக்கமும் கள்ளச்சந்தையும் மறைந்து சன்மார்க்கம் நாட்டில் நிலவ வாய்ப்புக்கள் ஏற்படும். சர்க்கார் தங்கள் நிர்வாகச் செலவில் சிக்கனத்தை ஏற்படுத்தி அதிகாரிகளுடைய அசிரத்தையையும், கெடுபிடிகளையும் நீக்கிவிட்டால், யாராண்டா லென்ன என்ற எண்ணத்தோடு மக்கள் நிம்மதியாக வாழ்க்கை நடத்துவார்கள்.

கிராமங்கள் தோறும் சிறிய சிறிய தொழில்களை நவீன முறையில், பிறர் சுரண்டுதலின்றி, ஒவ்வொரு குடும்பமும் தானே நிர்வகிக்கும் விதத்தில், ஏற்ற கருவிகளைச் செய்து வழங்கவேண்டும்.

இவையெல்லாம் நிறைவேற்ற இப்போது ஆட்சியில் உள்ளவர்கள் மாறவேண்டும்.

சிறுகக் கட்டிப் பெருக வாழ்வோம்

சிறுகக் கட்டிப் பெருகவாழ் என்பது நமது நாட்டின் உபதேச மொழிகளில் ஒன்றும். சென்னையிலுள்ள சேரிகளையெல்லாம் இடித்துத் தகர்த்துப் புதுக்கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமெனச் சிலர் சொல்வார்கள்.

சேரிகளை அழிக்கவும் வேண்டாம். இடிக்கவும் வேண்டாம். அவற்றை அழகுறச் செய்யுங்கள் என்று இராஜாஜி சொல்வார். சேரிகளிலே நல்ல ரோடுகள் போடுங்கள். மின்சார விளக்குகள் போடுங்கள். குடித்தண்ணீர் கிடைக்கச் செய்யுங்கள். குப்பை கூளங்களை அகற்றுங்கள். மேடு பள்ளங்களைத் திருத்திக் காய்கறித் தோட்டமாக்குங்கள். ஒவ்வொரு குடிசையின் முன்பும் பந்தலிட்டு பூக்கொடிகளை வளரவிடுங்கள். ரேடியோ வையுங்கள், பாடசாலையும், பால் பண்ணையும் ஏற்படுத்துங்கள். பண்டகசாலையும் தொழிற் கூடமும் உண்டாக்குங்கள். அதுவே போதுமென்பார் இராஜாஜி.

தூரந் தொலைவிலுள்ள மச்சு மாளிகைகளைக் காட்டிலும் சென்னை நகரத்துக்குள்ளிருக்கும் குச்சுகளே மேல் என்பார்கள் அங்குள்ள ஏழை மக்கள்.

மகாத்மா காந்தியும் அப்படித்தான் சொல்வார். பெரிய பெரிய நகரங்களையும், ஆடம்பரமான கட்டிடங்களையும், ஆரவார மிகுந்த நடவடிக்கைகளையும் அவர் விரும்பமாட்டார். குடியிருக்கப் போதுமான அளவுள்ள குடிசைகளையும், இயற்கை எழில் நிறைந்த சோலைகளையும், நீர்வளம் மிக்க கழனிகளையும், காய்கறிப் பண்ணைகளையும், பசுக்க நிறைந்த சாலைகளையும், சீரமைத்த கிராமங்களையுந்தான் அவர் பெரிதும் விரும்பினார்.

அளவுக்கு மிஞ்சிய செல்வத்தையும், படாடோபத்தையும் அவர் விரும்பவில்லை. அளவற்ற செல்வம் ஓரிடத்தில் குவியும்போது, அங்கே பொறாமையும், புகைச்சலும், பூசலுந்தான் விளையுமென்றும், பகைவர்களும் அந்த இடத்தைத்தான் குறிவைத்துத் தாக்குவார்களென்றும், திருடர்களும் அங்குதான் மொய்ப்பார்களென்றும், ஆனால் செல்வம் பரவலாக எங்கும் அளவுடன் வியாபித்திருந்தால் இத்தகைய தீங்குகளுக்கு இடமிராதென்றும் மகாத்மா கருதினார்.

செல்வம் ஒரே இடத்தில் குவியக்கூடாது என்பது போன்றே அரசியல் அதிகாரமும் ஒரே இடத்தில் குவியக்கூடாதென்பதும், அதுவும் அளவு கடந்து இருக்கக்கூடாதென்பதும் மகாத்மாவின் எண்ணமாகும். அதிகாரம் கீழிருந்து மேல் நோக்கிப் பரவலாக வியாபிக்கவேண்டும், ஒரே இடத்தில் குவிந்திருந்தால் அங்கு சர்வாதிகாரமும், சர்வாதீனமும், கொடுமையும், கொடுங்கோன்மையும் நிறைந்தாகிவிடுமென அவர் அஞ்சினார்.

செல்வம், அதிகாரம் ஆகியவற்றைப் போலவே பொருளாதாரமும் ஒரே இடத்தில் குவியாமல் பரவலாக இருக்க வேண்டுமென்று மகாத்மாவின் எண்ணமாகும். பொருள் எங்கு உற்பத்தியாகிறதோ அதே இடத்தில் அது விநியோகமும் செய்யப்படவேண்டும். அவ்வாறு செய்யப்படும்போது இடைத் தரகர்களும், ஏகபோக உரிமையாளர்களும், சுரண்டுகின்றவர்களும் ஒழிவதோடு, எண்ணற்ற போக்குவரத்து இடர்கட்கும் தட்டுப்பாடுகட்கும், இடமின்றி இருக்கும்.

பேராசைக்கும், சுரண்டலுக்குமிடமில்லாத வகையில் நவீன விஞ்ஞானத்தின் துணைகொண்டு, சைக்கிள்கள் போன்றும், சிங்கர் தையல் இயந்திரங்கள் போன்றும் தனி மனிதர்களாலும், தனிக் குடும்பத்தார்களாலும், இயக்கக் கூடிய விதத்தில் சகல கிராமத் தொழில்களும் நடைபெறுவதற்குரிய நவீன சாதனங்கள் நிர்மாணிக்குமாறு அவர் பொறி வல்லுனர்களைக் கேட்டதுண்டு. இவ்வாறு அமையும் தொழிற் கருவிகள் விவசாயத்துக்கும், விவசாயிக்கும் உறுதுணையாக அமைவதோடு, கிராம மக்கள் பிறர் கையை எதிர்பாராமல் சுய மதிப்போடும், சுதந்திரத்தோடும் வாழ வகை செய்யுமென அவர் கருதினூர்.

மகாத்மாவின் இந்தச் சீரிய கருத்துக்களைத்தான் சுதந்திரக்கட்சி பிரதிபலிக்கிறதே அல்லாமல், சூழ்ச்சிக்காரர்களும், சுயநலவாதிகளும் சொல்லுகிறபடி சுதந்திரக்கட்சி பிற்போக்கான எந்தக் கொள்கையையும் பிரதிபலிக்கவில்லை. மகாத்மா உயிருடனிருந்த காலத்தில் அவரைப் பிற்போக்காளரென்றும், கடிகாரத்தின் முள்ளைப் பின்னுக்குத் தள்ளுகிறூரென்றும், இவர்கள் வாய் கூசாமல் சொன்னவர்கள் தான்.

ஆளுங்கட்சியை மாற்றவேண்டும்

இந்தத் தலைமுறையில் பூர்த்தியாகுமா, இதற்கடுத்த தலைமுறையில் நிறைவேறுமா, அல்லது மூன்றாந் தலைமுறையில் முழுப் பலன் கிடைக்குமா என்றையுறத்தக்க நிலையில் மூன்று திட்டங்களைப் பூட்டியதோடல்லாமல் நான்காவதொரு திட்டத்தையும் ஆரம்பிக்க ஆளுங்கட்சியார் திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறூர்கள். அத் திட்டத்திற்கு இருபத்தையாயிரங் கோடி ரூபாய் வேண்டுமாம்!

1950-51ல் 910 கோடியாகவிருந்த செலவினங்கள் சென்றவாண்டில் 5300 கோடியாக உயர்ந்திருக்கிறது. 1955-56ல 767 கோடியாகவிருந்த வரித்தொகை சென்றவாண்டில் 2800 கோடியாகக் கூடியுள்ளது.

இப்போதே வரவுக்குமேல் ஆண்டொன்றுக்கு 2500 கோடி ரூபாய் செலவு செய்து வருவது போதாதென்று நான்காவது திட்டத்துக்கு மேலும் ஆண்டொன்றுக்கு ஐயாயிரம் கோடி ரூபாய் செலவு! இவர்களை ஆட்சியில் நீடித்து வைத்திருந்தால் கோழி முட்டையில் அரிசி அளக்க வேண்டிய காலம் வந்து சேரும். மூன்று திட்டங்களின் விளைவாக குவின்டால் முப்பத்தாறு ரூபாயுக்கு கிடைத்திருந்த அமெரிக்கன் கோதுமைக்கு இப்போது ஐம்பத்தாறே முக்கால் ரூபாய் கொடுக்கவேண்டியதாகிவிட்டது.

வீடு பற்றி எரிந்துகொண்டிருக்கும்போது, அத்தீயை அணைப்பதற்கு ஒருவன் கிணறு வெட்ட ஆரம்பித்ததைப் போன்று, பசியால் நமது வயிறு பற்றி எரிந்துகொண்டிருக்கையில் இவர்கள் பொக்காரா இரும்பாலை கட்டப்போகிறார்களாம்! இவர்கள் இரும்பு உற்பத்தி செய்து, இரும்பைக் கொழுவாகச் செய்து, அக்கொழுவைக் கலப்பையில் மாட்டி ஏரையும் பூட்டி உழுது வயலைச் சேருக்கி, சேற்றில் நடவாக்கி அது விளைந்து, அறுத்தெடுத்து, அறைத்துத் தீட்டிப் புடைத்து உலையேற்றுவதற்குள் நமது மக்கள் சுடுகாட்டில் நிம்மதியாகச் சயனித்திருப்பார்கள்!

இவர்கள் நெல்லறுவடை செய்பவர்கள் அல்ல; இவர்கள் பண அறுவடை செய்பவர்கள். வேகிற வீட்டில் பிடுங்கியது இலாபமென்று வாழ்க்கை நடத்துகின்றவர்கள். இவர்கள் நமது மக்களையும் நமது நாட்டையும் அந்நிய நாட்டினருக்கு அடகு வைத்துப் பணந்திரட்டிக் கிடைத்தவரை இலாபமென்று சுருட்டிக்கொண்டு போகும் சூதாடிகள். இவர்களைப் பதவியில் விட்டு வைத்திருந்தால் நமது ரூபாயின் மதிப்பு மேலுங் கீழே போகும். நாமும் நமது நாடும் மீளாப் படுகுழியில் விழவேண்டி இருக்கும்.

குழந்தைகள்மேல் இருக்கும் நகைகளைத் திருடுகின்றவர்கள் அக்குழந்தைகளுக்கு மிட்டாயும் பழமும் வாங்கிக் கொடுப்பார்கள். இவர்கள் இலவசக் கல்வி தருகிறோம்.

இலவச உணவு தருகிறோம். இலவச உடை தருகிறோமென்று சொல்லி நமது உடைமைகளையெல்லாம் வரியாகத் திருடு கிறார்கள். எலும்பைக் கடிக்கும் நாயின் வாயிலிருந்து வடியும் இரத்தத்தை, அந்நாய் தான் குடிக்கும் எலும்பிலிருந்து வருவ தாக எண்ணி மகிழ்வதுபோல, இம்மக்களும் தங்கள் இரத்தம் உறிஞ்சப்படுவதையறியாது, எல்லாம் சர்க்காரின் கருணைப் பிரவாகமென்று எண்ணி ஏமாறுகிறார்கள்.

கடந்த பத்தொன்பதாண்டுகளாக நாம் பார்த்து அனுப வித்துவிட்டோம். காங்கிரஸ் ஆட்சியின்கீழ் நாடு கொழுக்க வில்லை. நாட்டு மக்கள் கொழுக்கவில்லை. நாட்டு வளம் கொழிக்கவில்லை. ஆளுங் கட்சியார்களும், அவர்கள் காலை வருடுந் தாஸர்களுந்தான் கொழுத்து வருகிறார்கள்.

ஒரு காங்கிரஸ்காரரர் தான் பிறந்த நாளைக் கொண் டாடப்பத்தாயிரம் சைக்கிள்களை ஊர்வலமாகவிட்டானென் றால், அவர்களடைந்துள்ள கொழுப்பை எடை போட்டுப் பார்க்க முடியுமா? திருச்சியில் ஆர்ச்சொன்று 2500 ரூபாயிலே அறுபத்திரண்டு ஆர்ச்சுகள் போட்டார்களாம். மற்றொன்று பதினைந்தாயிரத்தில் போட்டார்களாம்! இங்கிலாந்திலே எலிசபெத் இராணிக்குப் போட்டார்களா? போடுவார்களா? அமெரிக்காவிலே ஜான்சனுக்குப் போட்டார்களா? போடு வார்களா?

இந்த ஆர்ப்பாட்டங்களையெல்லாம் ஜனங்கள் பார்த்து பிரமிப்படைந்து அவர்களுக்கே ஓட்டுப் போடுவார்கள் என்பது அவர்களது எண்ணமாயிருக்கலாம். ஹிட்லர்களும், முசலோனிகளும் இப்படித்தானே ஊர்வலங்களும் அணி வகுப்புகளும் நடத்தினார்கள்? இறுதியில் அவர்கள் என்ன வானார்கள்?

இந்தக் காங்கிரசையும், காங்கிரஸ்காரர்களையும் நம்மால் திருத்த முடியுமா?

குடிகாரர்களைக்கொண்டு எப்படி மதுவிலக்குத் திட் டத்தை நடத்த முடியாதோ, விபசாரிகளைக்கொண்டு எப்

படித் தாம்பத்ய வாழ்க்கை நடத்த முடியாதோ, திருடர்களைக்கொண்டு எப்படித் தெய்வ வழிபாடு நடத்த முடியாதோ, கசடர்களைக்கொண்டு எப்படி கல்லூரிகள் நடத்த முடியாதோ, அப்படியே தன்னறிவும், சொல்லறிவும், செய்திறனும், அகத்தூய்மையும், வாய்மையும், வல்லமையுமற்று டாம்பீக, அநாகரிக, ஊழல் மலிந்த கொள்ளைக்காரர்கள் நிறைந்த காங்கிரஸ் கட்சியை வைத்துக்கொண்டு நாம் இந்த நாட்டின் நிர்வாகத்தை சேமமுற நடத்த முடியாது.

மகாத்மா காந்தி காங்கிரசைக் கலைத்துவிடுமாறு சொன்னார். அவர்கள் கேட்கவில்லை. அடுத்த தேர்தலில் மக்கள் தான் மகாத்மாவின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். அப்படிச் செய்தால்தான் மகாத்மாவின் ஆத்மா சாந்தியடையும்.

நமக்குக் கடன் கொடுத்தவர்களுக்கு நாம் வாழைப் பழத்தையும், பாட்டா கம்பெனி செருப்பையும், திருப்பதியில் செரைக்கப்படும் மயிரையும் கொடுத்துச் சரிக்கட்ட முடியாது.

நாம் நெற்றி வியர்வை நிலத்தில் கொட்டப் பாடுபட வேண்டும். உற்பத்தியைப் பெருக்கவேண்டும். நமது மக்களின் பசியையும், பிணியையும் போக்கவேண்டும், ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு குடிசையும், ஒரு தொழிற்சாலையாக மிளிரச் செய்யவேண்டும். அமெரிக்காவுக்கு நாம் கோதுமையும், அரிசியும், ஆடையும், பிறவும் ஏற்றுமதி செய்து நமது கடன்களைத் தீர்க்கவேண்டும்.

அண்டை அயல் நாட்டவருடன் நாம் நட்பை வளர்க்க வேண்டும். நமது எல்லைகளைக் காக்கவேண்டும். அன்பும், அறனும், சகோதர உணர்ச்சியும் நம்முள் வளர்ந்தோங்க வேண்டும்.

இவ்வனைத்தும் செய்ய ஆண்டவனின் அருள் பாலிப்பாராக! வணக்கம்.